# அசோகனுடைய சாஸனங்கள்

குமபகோணம் கவர்ன்மெண்ட் காலெஜ்
சரித்திர ஆசிரியர்
R. ராமய்யர், M.A., L.T., அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டு,
அவதாரிகை குறிப்புரை முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றன.

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1925
ரிஜிஸ்தர் செய்தது

PRINTED AT
THE CAXTON PRESS
MADRAS.

# முகவுரை

அசோகனது சாஸனங்கள் உலக சரித்திரத்திலேயே ஒரு புதுமை எனலாம். ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களும் வேறு பலவித புராதன லிகிதங்களும் நமக்கு இப்புவியின் பல பாகங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன; ஆயினும் தன் பிரஜைகளின் க்ஷேமத்தின் பொருட்டு, தர்மோபதேசங்களை எழுதிவைத்த அரசனை நாம் வேறெங்குங் கண்டிலேம். இந்த லிகிதங்கள் இந்திய சரித்திரத்தில் மிகவும் ஏற்றமுடைய தஸ்தாவேஜுகள். முதலாவது, இவற்றைவிடப் பழைமையான லிகிதங்கள் அநேகமாக இந்தியாவிற் கிடையா. இவற்றின் கருத்தை அறியும் பொருட்டுச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் இந்தியாவிற் சிலாசாஸன ஆராய்ச்சிக்குத் தொடக்கமாகும். இரண்டாவது, இவற்றிற் காணப்படும் லிபி (எழுத்து) நம் நாட்டில் தற்காலம் உபயோகப் படுத்தப்படும் பல எழுத்துக்களின் ஆதியை விளக்குகிறது. மூன்றாவது, பௌத்த மத சரித்திரத்தை விளக்க இச்சாஸனங்கள் இன்றியமையாதன. நான்காவது, இந்த லிகிதங்களிலுள்ள பாஷை கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் வடஇந்தியாவில் பேசப்பட்டு வந்த மொழியானது வடமொழியோடும் பிராக்ருத நடைகளோடும் எவ்வித ஒற்றுமை வேற்றுமைகளை உடையனவாயிருந்தன என்பதை விளக்கும். இலக்கியமாகக் கருதுமிடத்தும் அசோக சாஸனங்கள் மிகச் சிரேஷ்டமானவைகளே. இவற்றிற் பெருந்தன்மையுடைய ஓர் அரசன் இதயத்தைக் காண்கிறோம்; அவனுடைய உள்ளத்தின் உயர்வும் கனிவும் எவரையும் வியப்படையச் செய்யுமென்பதிற் சந்தேகமில்லை.

இச்சிறு புஸ்தகத்தை வாசிக்கும் அன்பர் யாவரும் இந்திய சரித்திரத்தைப்பற்றிய ஆராய்ச்சிகளிற் பிரியம் கொள்ளத் தூண்டப்படலாம். ஏனென்றால், சரித்திரத்தின் மூலாதாரமாயுள்ள தஸ்தாவேஜுகளைத் தாமே படித்து விஷயங்களை ஆய்வது மிகவும் இன்பமான காரியமாயிருக்கவேண்டும். எவ்வளவு விரிவாக எழுதப்பட்டிருக்கும் சரித்திரப் புஸ்தகங்களைப் படிப்பதும் இதற்கு நிகராகாது.

இப்புஸ்தகத்தில் அவதாரிகை சற்று விரிவாக அமைந்திருப்பது ஒரு குறையாகாதென்று கருதுகிறேன். அசோகன் சரிதை, ஆட்சிமுறை, அக்காலத்துப் பெருமையைத் தெரிவிக்கும் அறிகுறிகள் முதலியவற்றை விவரிப்பது இச்சாஸனங்களின் முக்கியத்தை உணருவதற்கு அவசியமானதால் அவதாரிகையில் இவ்விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

சாஸனங்களின் மொழிபெயர்ப்பு, இங்கிலீஷ் பெயர்ப்புக்களை மட்டும் அனுஸரித்திராமல் மூலத்தோடும் ஒப்பிட்டுச் சீர்திருத்தப்பட்டிருக்கிறது. பலவித இயற்கை வித்தியாசங்கள் நிறைந்திருந்தபோதும் இந்தியாவில் நுட்பமான ஒற்றுமை உள்ளூறப் பரவியிருப்பதுபோல, இந்தியமொழிகளுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது. உதாரணமாக, ஸம்ஸ்கிருதம் பிராகிருதம் மூலமாக வந்த சொற்கள் பல பாஷைகளுக்கும் பொதுவாக உள்ளன; இஃதன்றி, வாசகரீதியிலும் அணியிலும் ஒற்றுமை காணப்படுகின்றது. ஆதியில் இந்நாட்டுப் பாஷையொன்றில் எழுதப்பட்ட இலக்கியத்திற்கு மற்றொரு இந்தியமொழியிற் செய்யப்படும் பெயர்ப்பு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பைவிட மேன்மையாயிருப்பது இயல்பன்றோ? ஆகையால் அசோக சாஸனங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பைவிட மூலத்தின் போக்கை விளக்க ஏற்றதாயிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் அஃது ஆசிரியன் குற்றமேயன்றி வேறன்று; கருத்து விளங்குவதற்குச் சிறிதும் கஷ்டமின்றியும் சிலசமயம் தன்னை அறியாமலும் மூலத்திலுள்ள சொற்கள் இத் தமிழுரையில் வந்திருப்பது இவ்வபிப்பிராயத்துக்குச் சான்றாகும்.

இவ்வித பிரயத்தனங்களிற் கிடைத்த உதவிகளைக் கூறுவது மரபு; இஃது எனது பிரியமான கடமையாகவுமிருக்கின்றது. சென்னை சர்வகலாசாலையின் இந்திய சரித்திர ஆசிரியராகிய டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் புத்தகத்தின் எழுத்துப் பிரதியைப் பரிசோதித்துச் சில குற்றங்குறைகளைத் தீர்த்துள்ளார்கள். திருவனந்தபுரம் கிரந்த பரிபாலனாலயத்தைச் சேர்ந்த ம-ா-ா-ஸ்ரீ ஹரிஹரசாஸ்திரிகள் எனக்கு முதலில் இம் முயற்சிக்கு ஊக்கத்தைக் கொடுத்தார். மற்றும் பல நண்பர்கள் இதன் எழுத்துப்பிரதியையோ அல்லது அச்சுப் பிரதியையோ

வாசித்துப் பல குறைகளைத் தீர்த்திருக்கின்றனர். இங்கிலீஷில் அசோகனைப்பற்றிய வியாசங்களும், புஸ்தகங்களும், விசேஷமாக ஸ்ரீ. வின்ஸெண்ட் ஸ்மித்தின் "அசோகன்" என்ற புஸ்தகமும் ஸ்ரீ பூலரின் சாஸன மொழிபெயர்ப்பும் எனக்கு மிகுந்த உபயோகமாயிருந்தன. இந்தியன் ஆன்டிக்குவரி முதலிய ஆராய்ச்சிப் பத்திரிகைகளில் அசோக சாஸனங்களில் வரும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் முதலியவற்றின் கருத்தைப் பற்றிப் பல வாதங்கள் வந்துள்ளன. இவற்றையும் நான் இயன்றவாறு உபயோகப்படுத்தி யிருக்கிறேன்.

70-ம் பக்கத்திலுள்ள சித்திரமும் 150-ம் பக்கத்திலுள்ள கல்வெட்டும் "எப்பிக்ராபியா இந்திக்கா" VIII, V ம் வால்யுங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

சாஸனங்களின் மூலத்தையும் தேவநாகர எழுத்திலோ கிரந்த எழுத்திலோ எழுதி இத்துடன் பிரசுரஞ் செய்யவேண்டுமென்ற என் விருப்பம் விரைவில் கைகூடுமென்று நினைக்கிறேன். மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்பிடச் சௌகரியப்படுமாறு ஒவ்வொரு சாஸனமும் மூலத்தில் இத்தனை வாக்கியங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்று அதன் கீழுள்ள குறிப்புக்களிற் காட்டப்பட்டிருக்கின்றன. அசோக லிகிதங்கள் 'எப்பிக்ராபியா இந்திக்கா' I, II, III, V, VIII வால்யுங்களிலும் இந்தியன் ஆன்டிக்குவரி XIX, XX, XXII வால்யுங்களிலும் ஆங்கில எழுத்திற் பிரசுரமாயிருக்கின்றன. கல்கத்தா யூனிவர்ஸிட்டியின் பதிப்பு இச்சாஸனங்களை கைக்கு அடக்கமாக ஒரு சிறு புத்தகமாக்கியிருக்கிறது. இவற்றில் ஆங்கில எழுத்தில் எழுதிப் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கும் மூலத்தை இத்தமிழ் மொழிபெயர்ப்புடனும் அச்சிட உத்தேசிக்கின்றேன்.

# பொருளடக்கம்

## அவதாரிகை

I. இந்தியாவின் பூர்வசரித்திர ஆராய்ச்சி
சரித்திர அறிவின் வளர்ச்சி. பூர்வ இந்திய சரித்திரத்தின் ஆதாரங்கள். அசோகனது சாஸனங்களின் கருத்தை விளக்கிய ஆராய்ச்சிகள் ... 1—8

II. அசோகன் சரிதை :—
மகததேசத்தின்பெருமை. பிந்துசாரன். அசோகனைப் பற்றி ஐதிஹ்யங்களிலிருந்து கிடைக்கும் விவரங்கள். அரசன் பட்டாபிஷேகம். கலிங்கயுத்தம். பௌத்தமதத்தின் ஸ்பர்சம். தீர்த்த யாத்திரைகள். துறவி அரசு நடத்திய விந்தை. தர்மப்பிரசாரம் செய்தல். வெகு தூரத்துள்ள ஐந்து அரசருடன் உறவு. இதிலிருந்து கிடைக்கும் "ஸமகாலத்துவம்." குணதிசை உலகம் குடதிசை உலகத்தைச் சந்தித்தது. ஆஜீவகர்களுக்குக் குகைகள் செய்தல். ஸ்தம்ப சாஸனங்களைப் பிரசுரஞ்செய்தல். பௌத்த மகாஸபை. அசோகன் குணம். அசோகனுக்குப்பின் வந்த மோரிய அரசர். ... 8—30

III. அசோகன் தர்மம் :—
அசோகன் காலத்தில் பௌத்த மதத்தில் ஏற்பட்ட மாறுதல்கள். பௌத்த சங்க சபைகள். மூன்றுவது சங்க சபை. ஸன்மார்க்க போதனையே பௌத்த மதத்தின் ஸாரம் எனல். மூட நம்பிக்கைகளைக் கண்டித்தல். ஜீவ இம்ஸை நிவாரணம். சுவர்க்கத்தில் நம்பிக்கை. அசோகனுக்குப்பின் பௌத்த மதத்தில் ஏற்பட்ட மாறுதல்கள். ... 31—43

IV. அசோகன் அரசாட்சி :—
அசோகன் துரைத்தனம் முன்னிருந்ததன் தொடர்ச்சியே. அரசனது புது நோக்கங்கள். சமரஸபாவம். க்ஷேமாபிவிர்த்திக்கான புது ஏற்பாடுகள். விவசாயம். கட்டிடங்கள், சாஸனங்களிற் கூறப்படும் அதிகாரிகள். அநுஸம்யானம். அசோக ஏகாதிபத்தியத்தின் விரிவு. ... 43—58

V. அக்காலத்துப் பழம்பொருள்கள் :—
இவற்றிலும் பழமையானவை இந்தியாவில் கிடையா. அசோகனுடைய வேலைகள். இவற்றின் தற்கால அறிகுறிகள். ஸ்தூபங்கள். ஸாஞ்சிஸ்தூபம். பர்ஹூத் ஸ்தூபம். கயை ஸ்தூபம். ஸ்தூபங்களில் உண்டான மாறுதல்கள். குகைகள். ஸ்தம்பங்கள். இவற்றின் சிற்பத்திறமை. இந்தச் சிற்பத்தைப் பற்றிய மதிப்பு. ... 58—69

VI. அசோக எழுத்து :—
இருவித புராதன லிபிகள். பிராம்மி லிபி இந்திய எழுத்துக்களுக்கு மூலாதாரம். இந்திய பாஷைகளுக்கு லிபி ஏற்பட்ட விதம். கரோஷ்டி லிபி ... 69—73

VII. பிரியதர்சி அரசன் கல்வெட்டுக்கள் :—
இவற்றின் பாகுபாடு. இவற்றின் தன்மை. வாசகரீதி. சாசனங்கள் அல்லாத லிகிதங்கள். லிகிதங்களின் பிரிவு. அசோக லிகிதங்களின் பாஷை. இலக்கணக் குறிப்பு. ... 73—80

---

சாஸனங்கள்

i. உப சாஸனங்கள். .. 83— 87
ii. பாப்ரு சாஸனம். ... 88— 90
iii. பதினான்கு சாஸனங்கள். ... 91—119
iv. கலிங்க சாஸனங்கள். .. 120—127
v. ஸ்தம்ப சாஸனங்கள். ...128—145
vi. ஸார்நாத் சாஸனம். ...146—148
vii. ஸ்மாரக லிகிதங்கள். ...149—151
viii. இராணி காருவாகியின் லிகிதம். 152
ix. தானப்பிரமாண லிகிதங்கள். ...153—154

## அனுபந்தம்

i. கால அட்டவணை. ...157—158

ii. பௌத்தமறை நூல்கள் ...159—173

iii. இதர பாஷைகளில் அசோக சாஸனங்களின் பதிப்புகள். ...174—175

அட்டவணை. ...177—191

---

## சித்திரங்கள்.

1. லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம் ... 66

2. ஸார்நாத் ஸ்தம்பத்தின் சிகரம் ... 70

3. அசோக சாஸனங்களுள்ள ஸ்தலங்களைக்காட்டும் இந்தியா படம் (எதிரே) .. 80

4. பிராம்மி எழுத்து, கரோஷ்டி எழுத்து ... 81

5. ரும்மின்தேயீ லிகிதம் ... 150

# பிழைத்திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 11 | ளுக்குக் கிடையில் | ளுக்கிடையில் |
| 9 | 12 | முனிவருன் | முனிவரின் |
| 18 | 18, 19 | ரும்மின்தேயின் | ரும்மின்தேயீயின் |
| 20 | 20 | ஏகாதிபத்தியத்துக் குப்பட்ட | ஏகாதிபத்தியத்துக் குட்பட்ட |
| 22 | 8 | விருஷத்தின் | விருக்ஷத்தின் |
| 33 | 11 | ஐந்தாம் | நான்காம் |
| 37 | 25 | பிராசாரர் | பிரசாரர் |
| 38 | 'மார்ஜின்' | திபௌத்த | பௌத்த |
| 40 | 3 | எட்டாம் | ஒன்பதாம் |
| 48 | 12 | இரண்டாராயிரம் | இரண்டாயிரம் |
| 83 | 9 | காணப்படுகிறது | காணப்படுகின்றன |
| 95 | 7 | கி. பி. | கி. மு. |
| 104 | 11 | பற்றலாம். | பற்றலாம் ; |
| 106 | 3 | இச்சாஸனங்கள் | இச்சாஸனங்களில் |
| 122 | 15 | சோம்பறுற்றோர் | சோம்பலுற்றோர் |
| 128 | 11 | நிராவணச் | நிவாரணச் |
| 130 | 17 | அந்த மகாமாத்திரர் | அந்தமகாமாத்திரர் |
| 131 | 15 | தேன் ; | தேன். |
| 137 | 22 | பக்ஷங்களில் | பக்ஷங்களிலும் |
| 148 | 19 | ஊர்களுக்கும் | ஊர்களிலும் |
| ,, | 20 | பிரதேசங்களுக்கும் | பிரதேசங்களிலும் |
| 152 | 3 | களில் | களின் |
| 153 | 24 | உள்ளத்தில் | உள்ளவற்றில் |
| 174 | 12 | ஸௌரேந்திரநாத் | ஸுரேந்திரநாத் |
| ,, | 18 | விஸ்மித் | ஸ்மித் |

# அசோகனுடைய சாஸனங்கள்

## அவதாரிகை

### I. இந்தியாவின் பூர்வ சரித்திர ஆராய்ச்சி

இந்தியாவின் பூர்வ சரித்திரமானது மானிட ஜாதியின் முன்னேற்றத்தை விளக்குவதற்கு மிக அரிய சாதனமாம். இந்திய சரித்திரத்திலுள்ள அரச பரம்பரையில் அசோகன் ஓர் நடுநாயகமாக விளங்குகின்றான். இவனுடைய விநோதமான சாஸனங்களைப் படித்துணர இவ்வரசனைப்பற்றிய எல்லா விஷயங்களையும் முன்னுரையாகக் கூறுவது அவசியமெனக் கருதுகிறோம்.

நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்வரையும் மேனாடுகளில் இந்தியாவின் பூர்விக சரித்திரத்தைப்பற்றி மிகக் குறைவான அறிவுதான் இருந்தது. அப்போது முகம்மதியர் வருகைக்கு முன்னுள்ள காலத்தின் சரித்திரத்தை யாரும் தெரிந்து கொள்ளவில்லை. கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில், மேல் நாட்டார் ஸம்ஸ்கிருத இலக்கியம் என்ற மகாசமுத்திரத்தின் ஆழத்தையும் விரிவையும் உணர ஆரம்பித்தனர். ஆயினும், உலகத்தின் சரித்திரத்தில் இந்திய சரித்திரமானது மிகவும் முக்கியமான பாகமென்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. நம்

நாட்டு வித்துவான்களோ, சரித்திரம் என்ற விஷயத்தை ஆழ்ந்த படிப்பும் ஆராய்ச்சியும் அவசியமான ஒரு சாஸ்திரமாகக் கருதவில்லை. மேனாட்டாரோ, தமது பிரகிருதி சாஸ்திரத் தேர்ச்சியிலும் நாகரிகத்தின் மேன்மையிலும் தாமே மயங்கித் தங்களுக்குப் புவியில் எவரும் நிகரில்லையென்றும் மற்ற ஜாதியாரின் சரித்திரம் உலகத்தின் முற்போக்குக்கு அவசியமில்லையென்றும் நினைத்து இறுமாப்படைந்திருந்தனர். ஓர் புது தினம் உண்டாவது போல மெள்ள மெள்ள இருள் அகன்று இப்போது ஒரு புது உணர்ச்சி பரவிவருகிறது. இந்த நூறு வருஷங்களுக்குக் கிடையில் இந்தியாவின் சரித்திரம் உலகத்தின் முன்னேற்றத்துக்கு எவ்வளவு அவசியமானது என்பதை அறிஞர் உணர்ந்து வருகின்றனர்.

சரித்திர அறிவின் வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் நாகரிகத்தைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கிற்று. அதன் பிறகும் பல வருஷங்களுக்கு நம் தேசத்தின் பூர்வ சரித்திரம் உள்ளே பிரவேசிக்க வழியில்லாத பெருங் காடாயிருந்தது. விரிவான புராணக் கதைகளும் தர்ம சாஸ்திரங்களும் தத்துவ வேதாந்தக் கிரந்தங்களும் ஐதிஹ்யங்களு மல்லாமல், காலநிர்ணயமுள்ள விவரங்கள் இச் சரித்திரத்தில் காணப்படவில்லை. தொடக்கம், முடிவு, எல்லை முதலிய யாதொரு அளவுமில்லாமலும் கால வரையறை யில்லாமலும் தொகுக்கப்பட்ட புஸ்தகங்கள் இந்தியாவின் சரித்திரமாய் விளங்கின. இப்படிப்பட்ட காட்டினூடே நுழைந்து செல்ல நமது "புராதனவஸ்து சாஸ்திரிகள்" ஓர் வழியை அமைத்திருக்கிறார்கள்.

புராதன வஸ்து சாஸ்திரம் என்றால் என்ன? பண்டைக்கால நிலைமையின் அறிகுறியாக இத்தேசம் முழுமையிலும் பரந்து கிடக்கும் இடிந்த கோயில்கள், பாழான நகரங்கள், இன்னும் சிதையாத மற்ற சாதனங்கள், புதையலாய் நமக்கு அகப்படும் பற்பலவித நாணயங்கள், செப்புப்பட்டயங்கள், கல்வெட்டுகள், ஸ்தம்பங்கள், பிரதிமைகள் முதலிய வஸ்துக்களை "புராதன வஸ்து"† என்று நாம் இங்கு கூறுவோம். இவற்றிலிருந்து நம் ஆராய்ச்சியின் பயனாக நமக்குக் கிடைத்திருக்கும் அறிவே புராதன வஸ்து சாஸ்திரம்*.

**பூர்வ இந்திய சரித்திரத்தின் ஆதாரங்கள்** பூர்விக இந்திய சரித்திரத்தின் ஆதாரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவது, ஐதிஹ்யம். அதாவது இந்தியாவிலுள்ள எல்லாவித கிரந்தங்களிலும் அடங்கிய விவரங்கள். சுருதி, ஸ்மிருதி, வேதாங்கங்கள், இதிகாஸம், புராணம், என்ற பலவகைக் கிரந்தங்களையும் இப்பிரிவில் நாம் அடக்குகிறோம். இந்தக் கிரந்தங்களைப்போலவே இவற்றில் அடங்கிய சமாசாரங்களும் அளவற்றவை.

இரண்டாவது, அந்நிய நாட்டார் இந்தியாவைப்பற்றித் தம் தம் பாஷைகளில் எழுதி வைத்துள்ள விவரங்கள். அலக்ஸாந்தருடனும் அதற்குப் பின்னும் வந்த யவன தூதர்களும் யவன தேசாந்தரிகளும் பாஹியன், யுவன்சுவங், இத்ஸிங் முதலிய சீன தேசாந்தரிகளும், தாங்கள் இத் தேசத்தில் கண்டதும் கேட்டதுமான செய்திகளை எழுதிவைத்திருக்கிறார்கள். அவை யாவும் அகப்படவில்லையாயினும் கிடைத்தவரையிலும் இவ்வாதாரங்கள் கால நிர்ணயத்துக்கு மிக முக்கியமானவை.

† Antiquities=புராதன வஸ்துக்கள். * Archaeology.

மூன்றாவது, புராதன வஸ்துசாஸ்திரம். இதில் மூன்று முக்கியமான உட்பிரிவுகள் உண்டு. (i) பழைய கட்டடங்களைச் சோதனை செய்வதிலிருந்தும் சிற்பங்களில் காலத்துக்குத் தக்கபடி ஏற்படும் வித்தியாசங்களைக் கவனிப்பதிலிருந்தும் உண்டாகும் அறிவு. (Architecture and Sculpture). (ii) பாறையிலும் கோயில்களின் கற்சுவரிலும் செப்புப் பட்டயங்களிலும் வரைந்து காணப்படும் லிகிதங்களைப் படிப்பதனால் கிடைக்கும் அறிவு. (Epigraphy). (iii) பழையகாலத்து நாணயங்களைப் பரிசோதனை செய்வதன் பயனாக உண்டாகும் அறிவு (Numismatics). முதலாவது பிரிவைச் சேர்ந்த ஐதிஹ்யம் என்ற ஆதாரத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ள விவரங்கள் அளவற்றவையானாலும் அவற்றை ஒழுங்கு பண்ணிக் காலத்தின்படி வரிசைப்படுத்தியது, புராதன வஸ்து ஆராய்ச்சியின் உதவியும் அந்நிய நாட்டார் எழுதி வைத்துள்ள விவரணங்களின் உதவியுமே. இதன்றி இக்காரியம் அசாத்தியமாயிருந்திருக்கும். புராதன வஸ்து சாஸ்திரத்தின் உதவி பூர்விக இந்தியாவின் சரித்திரத்துக்கு எவ்வளவு முக்கிய ஆதாரமாகுமென்று உணர அசோகனது சாஸனங்கள் தக்க சான்றாகும்.

அசோகன் என்ற பெயருடைய ஓர் அரசன் இந்தியாவில் ஆண்டதாக இந்துக்களுக்கு நூறு வருஷங்களுக்குமுன் வரையும் கொஞ்சமும் தெரியாமலிருந்தது. ஏறக்குறைய ஆயிர வருஷங்களாக அவன் பெயர் இந்தியரின் ஞாபகத்திலிருந்து மாய்ந்து போயிருந்தது. வட இந்தியாவின் பல பாகங்களில் நின்றிருந்த அசோக ஸ்தம்பங்களை மு

அசோகனது சாஸனங்களின் கருத்தை விளக்கிய ஆராய்ச்சிகள்

காலத்திலிருந்த ராக்ஷசரின் வேலையென்று நம் ஜனங்கள் கூறிவந்தனர். ஸ்தம்பங்களிலும் பாறைகளிலும் எழுதப்பட்டிருந்த லிகிதங்களுக்கு ஒருவருக்கும் பொருள் தெரியவில்லை. இப்படி இருக்கையில் 1834ஆம் வருஷம் ஈஸ்டு இந்தியாக் கம்பனியாரின் நாணயப் பரிசோதனை அதிகாரியாகிய ஜேம்ஸ் ப்ரின்ஸெப் என்பவருக்கு அபூர்வமான பழைய நாணயங்கள் பல கிடைத்தன. இந்த நாணயங்களின் ஒரு பக்கத்தில் க்ரீக் லிபியிலும் மற்றப் பக்கத்தில் அப்போது இந்தியாவில் வழங்கிவந்த இருவகை லிபி ஒன்றிலும் வாக்கியங்கள் எழுதப் பட்டிருந்தன. இப்படிப்பட்ட நாணயங்களை த்விபாஷை நாணயங்கள் * என்று நாம் சொல்லலாம். இந்த நாணயங்கள் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் கி. மு. 200 முதல் கி. பி. 100 வரையும் ஆண்டுவந்த க்ரீக் அல்லது யவன அரசர்களால் அடிக்கப்பட்டவை. க்ரீக் பாஷையிலும் க்ரீக் லிபியிலும் இந்த நாணயங்களைச் செய்த அரசர்களின் பெயரும் விருதுகளும் இவற்றின் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருந்தன. ஐரோப்பிய வித்துவான் ஆனதினால் ஜேம்ஸ் ப்ரின்ஸெப்புக்கு க்ரீக்கில் எழுதப்பட்டிருக்கும் விவரங்களை வாசித்து அறிந்துகொள்வது எளிதாயிருந்தது. நாணயங்களின் மறுபக்கத்தில் எழுதியிருப்பது க்ரீக்கில் எழுதப்பட்ட விவரங்களே யென்று அவர் ஊகித்தார். அறியப்படாத இருவகை லிபிகளின் ஒவ்வொரு எழுத்தையும் மறுபக்கத்திலுள்ள க்ரீக் லிபியோடு ஒத்துப்பார்த்து அவ்வெழுத்துக்கள் இன்னின்ன ஒலிகளைக் குறிக்கின்றன வென்று எடுத்துக் காட்டும் பட்டிகை ஒன்றை ப்ரின்ஸெப் தயார்செய்தார். ஸ்தம்பங்

* Bi-lingual coins.

களிலும் பாறைகளிலும் வெட்டப்பட்டிருந்த லிகிதங்களில் த்விபாஷை நாணயங்களில் காணப்படும் இந்திய லிபிகளே உபயோகப் படுத்தப்பட்டிருப்பது பின்பு தெரியவந்தது. பழைய கல்வெட்டுக்களை வாசித்து அறிந்துகொள்ளப் பிரின்செப்பின் பட்டிகை மிகுந்த பிரயோஜனமாயிற்று. ஆயினும் லிகிதங்களின் கருத்து விளங்குவது அதிகக் கஷ்டமாயிருந்தது.

அசோகனது சாஸனங்களைப்படிக்க முயன்றவரில் முதல்வரும் இந்த ப்ரின்ஸேப் தான். ஆங்கிலமொழியில் பிரசித்திபெற்ற "ராஜபுத்திர சரித்திரம்" எழுதிய கர்னல் டாட் (Colonel Tod) இவரைப் பின்பற்றி கிர்நார் என்ற இடத்திலுள்ள லிகிதங்களைப்படிக்க முயன்றார். முதலில் இந்த லிகிதங்களின் கருத்து ஒருவருக்கும் தென்படவில்லை. பியதஸி என்ற ஓர் அரசனால் எழுதப்பட்ட லிகிதங்கள் இவை என்று மட்டும் தெரியவந்தது. ஆனால் பல சமுசயங்கள் உண்டாயின. சில லிகிதங்களில், தேவானும் ப்ரியன் (= தேவர்களுக்குப் பிரியமானவன்) என்று அரசனின் விருது பெயராக உபயோகிக்கப்பட்டிருந்தது. மற்ற லிகிதங்களில் பியதஸி என்ற பெயர்மட்டுந்தான் காணப்பட்டது. வேறு லிகிதங்களில் பியதஸி என்ற பெயருக்கு 'தேவானும்பிரியன்' என்ற பதம் விருதாக உபயோகப்பட்டிருந்தது. இவ் விவரங்களிலிருந்து பல கேள்விகள் பிறந்தன: இந்தப் பியதஸி எவர்? பியதஸி ஒருவரா பலரா? பியதஸி என்ற பெயர் சிறப்புப்பெயரா, அல்லது பொதுப்பெயரா? பியதஸியும் தேவானும்பிரியனும் வெவ்வேறு மனிதர்களா, அல்லது இரண்டும் ஒரே மனிதனின் பெயரா? இப்படிப்பட்ட கேள்விகளுக்குச் சில வருஷங்களாக விடை கிடைக்கவில்லை.

பிறகு புராதனவஸ்து சாஸ்திரிகளும் மற்றுள்ள வான்களும் பல துறைகளில் ஆராய்ச்சிவேலையைன்று தொடங்கினர்கள். ஐரோப்பியருள் ஸ்ரீ. கன்னிங்ஹாமீத் (Cunningham) பர்ஜெஸ், (Burgess) பூலர் (Bühler) ஸெனர்ட், (Senart) போர்னுப் (Burnouf) என்போரும், நம்மவருள் ஸ்ரீ. ராமகிருஷ்ண பந்தர்க்கர், பகவன்லால் இந்திராஜீ, ராஜேந்திரலால் மித்திரர், என்ற வித்வான்களும் அசோக சாஸனங்களின் கருத்தை விளக்குவதற்குப் பிரயாசப்பட்டார்கள். பழைய லிபிகள் எல்லாம் வாசிக்கப்பட்டன; புராதன வஸ்துக்கள் சோதனை செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டன; லிகிதங்கள் சரியான நகல்களுடனும் மொழிபெயர்ப்புகளுடனும் வியாக்கியானங்களுடனும் பிரசுரஞ் செய்யப்பட்டன; ஹிந்து, ஜெயின பௌத்த மதங்களைச்சார்ந்த கிரந்தங்கள் விவேசன புத்தியுடன் படிக்கப்பட்டமையால் அவற்றிலிருந்து பூர்விக சரித்திரத்துக்குப் பல ஆதாரங்கள் ஏற்பட்டன; அசோகன் என்ற பெயருடைய அரசன் ஒரு காலத்தில் இந்தியா முழுவதையும் ஆண்டு வந்தவனென்றும் அவனுக்குப் பியதஸி என்ற விருது இருந்ததென்றும் பௌத்தக் கிரந்தங்களிலிருந்து தெரியவந்தது. பௌத்தர்களது தெய்வ பாஷையாகிய பாலிக்கும் அசோக சாஸனங்களின் பாஷைக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம் வெளியாயிற்று. லிகிதங்களில் கூறப்பட்டிருக்கும் பியதஸி, தேவானும் பிரியன், தேவானும்பிரியனை பியதஸி, எல்லாம் ஒரே மனிதனைக் குறிக்கின்றன வென்றும், பெயரில் என்ன மாறுபா டிருந்தபோதிலும் இந்த லிகிதங்கள் வாசக ரீதியில் ஒரே மனிதனின் வாக்கியங்களென்று நிச்சய மாய்ச்சொல்லக்கூடிய ஒற்றுமையையுடையன வென்றும்,

களிஃ

ளிஃலாரும் அறியலாயினர். கடைசியாக, கி. பி. 1915ம் ஸூல் ரெய்ச்சூருக்கு அருகிலுள்ள மாஸ்கி என்ற ஊரில் கிடைத்த அசோகக் கல்வெட்டில் அசோகன் என்ற பெயரே வரைந்திருப்பது தெரியவந்ததும் இந்த லிகிதங்களை எழுதியவன் எவன் என்ற சங்கை முற்றிலும் நீங்கி விட்டது.

## II. அசோகனின் சரிதை

**மகததேசத்தின் பெருமை.**

கி. மு. நான்காம் நூற்றாண்டில் மகததேசம் வட இந்தியாவிலுள்ள தேசங்களில் முதன்மையை அடைந்திருந்தது. இந்நாட்டை ஆண்டுவந்த நந்தர் என்ற அரசர்கள் இழிவு குலத்தோராகக் கருதப்பட்ட போதிலும் பராக்ரமசாலிகளாகவும் யுத்தசைன்னியங்களிலும் தளவாடங்களிலும் வலிமை மிகுந்தவராகவுமிருந்தனர். அகநானூறு என்ற பண்டைத் தமிழ் நூலிலுள்ள ஒரு பாட்டில் இவ் வமிசத்தினர் "பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்" என்று சிறப்பித்துக் கூறப்பட்டிருத்தலை இங்கு குறிப்பிடுவது தகுதியாகும். இந்த நூற்றாண்டின் இறுதியில், அதாவது சுமார் கி. மு. 325ம் ஸூல், மகதநாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டது. சாணக்கியன், விஷ்ணுகுப்தன், கௌடல்யன், கௌடில்யன் என்ற பெயர்களையுடைய ஓர் பிராமண மந்திரியின் சூழ்ச்சிகள் காரணமாக நந்தர் அரசுரிமையை இழக்கவும் சந்திரகுப்தன் என்ற மௌரியவம்சத்தினன் அரசனாகவும் நேர்ந்தன. சந்திரகுப்தன் எல்லா வட இந்திய ராஜ்யங்களையும் கைப்பற்றி யாவற்றையும் ஒரே குடையின்கீழ்க் கொண்டுவந்தான். அதற்கு முன் இத்தகைய விசால

மான ஏகாதிபத்தியம் இந்தியாவில் ஏற்படவில்லையென்று நாம் சொல்லலாம். சந்திரகுப்தனின் வரலாற்றை விரித்துரைப்பது நம் விஷயத்துக்குப் புறமாயினும் கௌடல்யனால் எழுதப்பட்ட "அர்த்தசாஸ்திரம்" என்ற நூலைப் பற்றி இவ் வவதாரிகையின் மற்றொரு பாகத்தில் கூறுவது அவசியம். இந்த நூல் இக்காலத்துக்கு முன்னும் பின்னுமுள்ள துரைத்தனத்தின் அமைப்பையும் ராஜீய நோக்கங்களையும் நன்றாக விளக்குகிறது.

ஜெயின நூல்களில் சந்திரகுப்தன் இருபத்தையாண்டு (கி.மு. 325-301) அரசு நடத்தியபிறகு உலகவாழ்க்கையில் வெறுப் படைந்து பத்திரபாகு என்ற ஜெயின முனிவருன் சீடனை தாகவும் அம் முனிவருடன் தக்கணம் சென்று பன்னிரியாண்டு தவம்புரிந்து கடைசியில் பட்டினி விரதமூலமாகத் தமது உடலைக் களைந்ததாகவும் கூறப்படுகின்றன. மைசூர் சமஸ்தானத்தில் சந்திரகிரி என்ற இடத்தில் இவ் வைதிஹ்யங்களைக் குறிப்பிடும் கல்வெட்டுகளும் சிற்பங்களும் காணப்படுகின்றன.

**பிந்துசாரன்.**

மௌரிய வம்சத்து இரண்டாவது அரசனை பிந்துசாரன் அசோகனுடைய தந்தையாதலால் இவனைப்பற்றிப் பௌத்தக் கிரந்தங்களில் சில ருசிகரமான கதைகள் காணப்படுகின்றன. இவற்றில் உண்மையைத் தேடி அறிவது கஷ்டமாயிருக்கிறது. இவன் காலத்தில் ஆட்சி முறையில் விசேஷ மாறுதல்கள் ஏற்படவில்லையாயினும் ராஜ்ய காரியங்கள் ஒழுங்காக நடந்தேறினவென்றும், தக்ஷிணம் மௌரியரின் ஏகாதிபத்தியத்தில் ஐக்கியமடைந்தது இக்காலத்திலென்றும் கூறுவதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. சந்திரகுபதன் காலத்தில் இந்தியாவுக்கும் ஸிரியா முதலிய குணதிசை நாடுகளுக்கும் நே-

உறவு ஏற்பட்டது; இவ்வுறவு பிந்துஸாரன் காலத்திலும் நீடித்து வந்தது. பிந்துஸாரன் யவனருடைய விஞ்ஞான சாஸ்திரங்களை வியந்து, இவற்றின் சூக்ஷ்மத்தைத் தெரிந்துகொள்ள, ஸிரியா தேசத்து அரசனிடம் தேர்ந்த வித்துவான்களைத் தனக்கு அனுப்பிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டதாக ஒரு க்ரீக் வரலாறு இருக்கின்றது. இவன் இருபத்தேழு வருஷங்கள் அரசுபுரிந்து பின் மரணமடைந்தான் (காலம், கி. மு. 301-273)

**அசோகனைப் பற்றி ஐதிஹ்யங்களிலிருந்து கிடைக்கும் விவரங்கள்.**

அசோகனுடைய ஜீவிய சரிதைக்கு அவனது சாஸனங்களையும் புராதன ஆராய்ச்சியால் தெரியவந்திருக்கும் சில செய்திகளையும் நாம் முக்கிய ஆதாரமாய் வைத்துக் கொள்ளலாம். அசோகனைப்பற்றிய ஐதிஹ்யங்கள் இரண்டு சார்பிலிருந்து வந்திருக்கின்றன. (i) திவ்யாவதானம் என்ற ஸம்ஸ்கிருதக் கிரந்தத்திலுள்ள வட இந்திய ஐதிஹ்யம். (ii) சிலோன் தீவிலுள்ள பௌத்தரின் இதிகாஸ கிரந்தங்களாகிய தீபவம்சம், மஹாவம்சம் என்பனவற்றிலிருந்து கிடைக்கும் சிலோன் ஐதிஹ்யம். இந்த இரு சார்பு ஐதிஹ்யங்களிலிருந்து அசோகனைப்பற்றித் தெரியவரும் செய்திகள் எல்லாம் நாம் ஒப்புக்கொள்ளக் கூடியவனவா யிருக்கவில்லை. ஆனால் அவை முற்றிலும் தள்ளத்தக்கவையுமல்ல. இந்துக்களுடைய புராணங்களில் பூர்வசரித்திர விஷயமான பல செய்திகள் அடங்கியிருப்பினும் அங்கு அசோகனுடைய அரசாட்சியைப்பற்றி ஒரு விவரமுமில்லை. பண்டைய அரசரின் பெயர்களுக்கிடையில் அசோகனுடைய பெயரும் இருப்பது ஒரு மேன்மையாமோ? பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற ராஜதரங்கிணி என்ற

காச்மீர சரித்திரத்தில் அசோகனுடைய சில வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. காச்மீர நாட்டின் பல கோயில்களும் அரண்களும் அசோகனால் ஆக்கப்பட்டவையென்று குறிப்பிடப்படுகின்றது. எவ்விதமும், நமக்கு பௌத்த ஐதிஹ்யங்களைவிட உறுதியான சரித்திரசாதனங்களில்லையென நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். சாஸனங்களில் குறிப்பிடாமலும் பௌத்த ஐதிஹ்யங்களி லிருந்துமட்டும் தெரிய வருவதுமான செய்திகளுக்குப் பின் புராதன வஸ்து ஆராய்ச்சியிலிருந்து அத்தாட்சி அகப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணம் பின் கூறுவோம் *. ஆயினும் சாஸனங்களில் சொல்லப்பட்டிருப்பதற்கு விரோதமாயிருக்கிற விவரங்களையும் விநோதக் கற்பனைகளென்று வெளிப்படையாய்த் தெரிகின்ற செய்திகளையும் நாம் உண்மைச் சரித்திரமாய் ஒப்புக்கொள்ள முடியாது. இப்படிப்பட்ட கட்டுக்கதைகளை இங்கு விரித்துக் கூறுவது அனாவசியமென்று நமக்குத் தோன்றுகிறது.

அசோகனின் இளமைப் பருவத்தைப்பற்றிய விவரங்கள் யாவும் ஐதிஹ்யங்களில் மட்டுமே உள்ளன. அசோகன் பிந்துஸாரனின் மூத்தமகனல்ல. பட்டத்துக்கு அதிக பாத்தியதையுடைய பல சகோதரர் அவனுக்கிருந்தனர். ஆயினும் அவனது புத்திநுட்பமும் சாமர்த்தியமும் பற்றி அவனுக்கு முக்கியமான அரசாங்க அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. அவன் முதலில் தக்ஷசிலா என்ற மாகாணத்தின் அதிபனாய்ச் சிலகாலம் வேலைசெய்தபின் உஜ்ஜெயினியின் அதிபனாக நியமிக்கப்பட்டான். பிந்துஸாரன் தேகவியோகமானவுடன் அசோகன் பாடலிபுரத்தை அடைந்து உபராஜன் என்ற பட்

* கீழ் 20-ம் பக்கம் பார்க்க.

டத்துடன் ராஜ்யத்தின் தலைமையை வகிக்க ஆரம்பித்தான். நான்கு வருஷங்களுக்குப்பின் அசோகன் பட்டாபிஷேகம் செய்து கொண்டான்.

இச் செய்திகளை நாம் நம்பலாம்; ஆனால் அசோகன் சிங்காதனத்தைக் கைப்பற்றுவதற்குத் தொண்ணூற்றென்பது சகோதரரை அவர் மனைவி மக்களுடன் கொலைசெய்தானென்றும் ஜனங்களைப் பல விதத்தில் கசக்கிப் பிழிந்தானென்றும் கூறுகின்ற கதைகள் உண்மையென்று தோன்றவில்லை. இவ் விஷயங்கள் அசோகனுடைய குணத்தைப்பற்றிச் சாஸனங்களைப் படிப்பதிலிருந்து நமக்கு ஏற்படும் அபிப்பிராயத்துக்கு முற்றிலும் முரண்படுகிறது. மேலும், பெருந் துஷ்டனை ஒருவன் திடீரென்று வெகு புண்ணியவானாய் விடுவது இயற்கையல்ல. பக்தியின் அனுகுணத்தால் மனிதனின் உள்ளம் சீரடையுமென்பது உண்மையே. அசோகனும் புத்தருடைய "சுவிசேஷத்தை'ச் செவியுற்றதினால் பல பழைய தீய வழக்கங்களையும் சுபாவங்களையும் தவிர்த்துத் தர்மாத்மாவாய் மாறியிருக்கலாம்.

ஆனால் அசோகன் முதலில் மிகக் கெட்டவனாகவும் கொடுங்கோல் அரசனாகவும் இருந்தான் என்பதும் பின் திடீரென்று பெரிய முனிசிரேஷ்டனானான் என்பதும் இயற்கை யல்ல. சரித்திர சம்பவங்கள் ஐதிஹ்யங்களில் கூறப்படும்பொழுது அவை இவ்விதம் திரிந்துபோகின்றன. ஒரே ஒரு அரசன், மிக மூர்க்கனாகவும் கெட்டவனாகவும் இருந்தவன், தர்மத்தைச் சிரவணம்செய்த மாத்திரத்தில் ஸன்மார்கத்தின் உருவேபோன்ற பரிசுத்த மனிதனாய் விட்டானென்ற செய்தி தர்மத்தின் மேன்மையையும் குணத்தையும் எடுத்துக் காட்ட எவ்வளவு நேர்த்தி

யான் கதை! தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் தொகுக்கப்பட்ட இதிகாசங்களுக்கு இக் கதைகள் எவ்வளவு உசிதமாயிருக்கின்றன! சரித்திர சம்பவங்கள் தர்மீய நோக்கத்துடன் எழுதப்படும் புராணங்களில் இவ்வித மாறுதல் அடைதல் இயற்கையல்லவா?

இக் காரணங்கள்பற்றி நம்முடைய முடிவு என்னவென்ருல், அசோகன் தன் அரசாட்சியை ஆரம்பித்த பொழுது கொடுங்கோலனுயிராமல் தனது வீரபராக்ரமத்தில் நம்பிக்கையும் வேட்டையாடுதல் முதலிய வியாயாமங்களில் அபிலாஷையும் அயல் நாடுகளை ஜயிக்க வேண்டுமென்ற நோக்கமுமுடைய சாதாரண அரசனுயிருந்தான். புத்த பகவானுடைய காற்று அவன்மேல் அப்போது அடிக்காததால் ஆகார விஷயமாகவும் தெய்வ ஆராதனைக்காகவும் அரசனுடைய அரண்மனையில் பிராணிவதை நடந்து வந்தது*. அசோகனுடைய பதினைன்காவது பட்டாபிஷேக வருஷத்தில் எழுதப்பட்ட ஐந்தாம் சாஸனத்திலிருந்து அரசனுடைய சகோதர சகோதரிகள் அப்போது வாழ்ந்து வந்தனரென்று நாம் அறிகிறோம். அதனால் அசோகன் தனது உறவினர் யாவரையும் கொலைசெய்த விவரம் நம்பத்தக்கதல்ல. பிந்துஸாரன் இறந்ததும் அசோகன் உடனே அடுத்த அரசனுவதற்குத் தடை யிருந்தது உண்மையாயிருக்கலாம்; சகோதரர்களுக் கிடையில் சண்டை சச்சரவுகள் நடந்திருக்கலாம்; இவ்வளவுதான் நாம் ஐதிஹ்யத்திலிருந்து கிரகிக்கக் கூடியது. அரசுரிமை கைபற்றியதைக் குறித்துள்ள மற்ற விவரங்கள் உண்மையெனத் தோன்றவில்லை.

*. முதற்சாஸனம்.

**அரசனின் பட்டாபிஷேகம்**

அசோகன் நாலு வருஷம் இளவரசனாக அரசாட்சி நடத்தியபின் தனக்குப் பட்டாபிஷேகம் செய்துகொண்டான். 'பியதஸி முடிசூடிய இத்தனை வருஷங்களான பின்' என்று பல சாஸனங்களில் அரசன்காலத்தில் நடந்த பல சம்பவங்களுக்குக் காலம் கூறப்பட்டிருக்கிறது. அதனால் அசோகன் கருத்துப்படித் தான் பட்டாபிஷேகம் செய்துகொண்ட தினமே தனது ஆட்சியின் ஆரம்பதினம் போலும். அத் தினத்தில் வருஷாவருஷம் உற்சவம் கொண்டாடப்பட்டது. அப்போது மரண தண்டனை விதிக்கப்பெற்ற குற்றவாளிகளில் சிலரை விடுதலைசெய்வது வழக்கம்*.

**கலிங்க யுத்தம்**

அசோகனுடைய ஜீவிய சரிதையில் கலிங்க யுத்தம் மிக முக்கியமான சம்பவமாகும். அவனுடைய ஒன்பதாவது பட்டாபிஷேக வருஷத்தில் அரசன் கலிங்க தேசத்தைக் கைப்பற்றுவதற்காகப் படையெடுத்தான். தனது ஏகாதிபத்தியம் இமயமலை முதல் தெற்கே பாலாறு வரையும் இடைவிடாமல் தொடர்ந்திருப்பதற்குக் கலிங்கர் நாடு மட்டும் விலக்காயிருந்தது. இப் பிரதேசம் ஒரு மூலையிலிருந்ததினாலும் அடர்த்தியான காடுகளால் சூழப்பட்டிருந்ததினாலும் அது அசோகனின் முன்னோரால் ஏகாதிபத்தியத்தோடு சேர்க்கப்படவில்லை. இக் குறையைத் தீர்ப்பதற்கு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அசோகனுடைய எண்ணமும் கைகூடிற்று. ஆனால் அவன் மற்ற அரசரைப்போல் தனது வெற்றியில் சந்தோஷமடையவில்லை. யுத்தத்துக்கு இயற்கையான கொலையும் கொடுமையும் கஷ்டங்களும் அவன் மனத்தில் திகிலைச்

* ஐந்தாம் ஸ்தம்ப சாஸனம்.

செய்தன. பெரியதோஷம் செய்தோமே யென்று அவனுக்கு ஏக்கம் பிடித்தது. சுயமாகவே அசோகன் இரக்கமுள்ளவன்; அதோடுகூட இதே சமயத்தில் அரசன் பௌத்த தர்மத்தைக் கேட்கவும் நேர்ந்தது. அவன் தான் படும் பச்சாத்தாபத்தைப் பதின்மூன்றும் சாஸனத்தில் கண்ணுங் கண்ணீருமாய் எழுதிவைத்திருக்கிறான். எவ்வளவு பெரிய லாபத்துக்காயினும் இனிமேல் ஒரு போதும் யுத்தம் செய்வதில்லை யென்று அசோகன் பிரதிக்ஞை செய்தான். அப்பிரதிக்ஞை காப்பாற்றப் பட்டது அவனது நிஷ்கபடமான சுபாவத்தை விளக்குகிறது.

எப்படியாயினும் கலிங்கதேசம் ஜயிக்கப்பட்டது; நடந்துபோன காரியம் அவனால் மாற்றக்கூடியதா யிருக்கவில்லை. புதிதாக ஜயிக்கப்பட்ட ஜனங்களைப் பாது காப்பதற்கும் அவர்களின் அருகாமையிலுள்ள காட்டு ஜாதியாரைச் சம்ரக்ஷணை செய்வதற்கும் அதிகாரிகளுக்கு விசேஷ எச்சரிக்கை செய்யப்பட்டது. கலிங்க தேசத்து அதிகாரிகளுக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை இன்னதென்று கலிங்க சாஸனங்கள் என்ற லிகிதங்களி லிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

**பௌத்த மதத்தின் ஸ்பர்சம்**

அசோகன் முடிசூடிய ஒன்பதாமாண்டு முதல் அவனுக்குப் பௌத்த தர்மத்தில் பக்திச்ரத்தை அதிகரித்துக்கொண்டே வந்தது. இம் மாறுதலுக்குக் கலிங்க யுத்தத்தின் கொடுமை மட்டு மல்ல காரணமென்று தோன்றுகிறது. உபகுப்தன் என்ற துறவி அரசனுக்குப் புத்தரின் சுவிசேஷத்தை உபதேசித்தாரென்று வட இந்திய ஐதிஹ்யங்கள் சொல்லுகின்றன. சுகந்த வஸ்துக்கள் செய்யும் குப்தன் மகன் உபகுப்த னென்று இவர்பெயர் விரித்துரைக்கப்

படுகிறது. இத்துறவி விவேகமும் பரிசுத்தமும் நிறைந்திருந்தாரென்றும் புத்தருக்குப்பின் பௌத்த சங்கத்தின் தலைமை ஸ்தானத்தை வகித்த ஆசாரியருள் ஐந்தாவதாக நின்றாரென்றும், வெகுநாள் அசோகனுக்குக் குருவாகவும் துணைவராகவும் வாழ்ந்து வந்தாரென்றும் சொல்லபபடுகின்றன. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவில் சஞ்சாரஞ்செய்த யுவன்சுவங் என்ற சீன யாத்திரிகன் இததுறவியின் ஞாபகச் சின்னங்களாகக் கட்டப்பட்ட விஹாரங்கள் ஸிந்து தேசத்திலும் வட மதுரையிலும் செழித்திருந்தன வென்று கூறுகிறான். சிலோன் ஐதிஹ்யத்தில் இவர் பெயர் மோகலீபுத்திர திஸ்ஸன் என்று கூறப்படுகின்றது.

அசோகன் பௌத்த தர்மத்தில் ஈடுபட்டு முதலில் உபாஸகன் என்ற நிலைமையைக் கைக்கொண்டான். உபாஸகன் என்பது இல்லறத்தில் ஒழுகும் பௌத்தருக்குப் பெயர். இரண்டரை வருஷங்களுக்குப்பின், அதாவது அரசன் முடிசூடிய பன்னிரண்டாம் வருஷத்தில், அவன் காட்டிய ஊக்கம் தனக்கே திருப்திகரமா யிருக்கவில்லை. முன்னிலும் அதிக ஊக்கத்துடன் தர்மத்தைத் தழுவி யொழுக வேண்டுமென்று அவன் நிச்சயித்தான். இப்படி ஒரு வருஷமான பின் அரசன் பௌத்த ஸங்கத்தையே அவலம்பித்தான். இது நிகழ்ந்தது அரசனுடைய பதின்மூன்றாம் பட்டாபிஷேக வருஷத்தில். இவ்வருஷமும் இதற்கு முன்னும் பின்னுமுள்ள வருஷங்களும் அசோகனின் ஜீவிய சரிதையில் மிகவும் முக்கியமானவை. அவனுடைய எல்லாச் சீர்திருத்தங்களும் நன் முயற்சிகளும் இவ்வாண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன. அரண்மனைச் சமையல் அறையில் மாமிச வகை தவிர்க்கப்பட்டது ஜீவ இம்ஸையும் பிராணிவதையும் ராஜத்

துரோகமாகக் கருதப்படுமென்று ஜனங்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். தனது தர்மத்தின் கொள்கைகளைக் கற்களிலும் ஸ்தம்பங்களிலும் எழுதி அவற்றை எல்லோருக்கும் தெரியப்படுத்தவேண்டுமென்று அரசன் நிச்சயித்தான். வேட்டையாடுதல் முதலிய பழைய பொழுது போக்குகள் தவிர்க்கப்பட்டன. அதற்குப் பதிலாக அவன் புண்ணிய ஸ்தல யாத்திரைகள் செய்யத் தொடங்கினான். ஆங்காங்குள்ள ஞானசிரேஷ்டர்களைத் தரிசிப்பதும், தர்மத்தைப் போதிப்பதும், தர்ம விவாதங்களை நடத்துவதுமே அரசனுடைய பொழுதுபோக்காயிற்று. அரசனுடைய வாழ்நாட்களில் இப்படிப்பட்ட புனித யாத்திரைகள் பல ஏற்பட்டன.

**தீர்த்த யாத்திரைகள்**

இவற்றில் பிரதானமானது அசோகனின் இருபத்தோராவது பட்டாபிஷேக வருஷத்தில் நடந்த யாத்திரை. பாடலிபுரத்திலிருந்து புத்தரின் சுதேசமாகிய கபிலவஸ்துவுக்குச் செல்லும் பாதையில் இப்போது ஏழு ஸ்தம்பங்கள் காணப்படுகின்றன. இந்த ஸ்தம்பங்களிற் சிலவற்றில் அசோக சாஸனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டில் ஒருவித லிகிதமுமில்லை. இந்த ஸ்தம்பங்கள் முன்சொல்லப்பட்ட தீர்த்தயாத்திரையின் ஞாபகச் சின்னங்களென்று நாம் ஊகிக்கிறோம். ஐதிஹ்யத்தின்படி அசோகன் இந்த யாத்திரையில் உபகுப்தனையும் அழைத்துச் சென்றான்போலும். அவர்கள் முதலில் புத்தரின் பிறப்பிடமாகிய லும்பினி கிராமத்தைத் தரிசித்தார்களாம்; பின்னர், கபிலவஸ்து நகரத்தையும், புத்தர் பூர்ணஞானம் அடைந்த இடமாகிய புத்தகயாவையும், அம்மகான் தமது தர்ம சக்கரத்தைச் சுழற்ற ஆரம்பித்த ஸார்நாதத்தையும், அவர் கடைசியாய் பரி

நிர்வாணமடைந்த குசிநகரத்தையும், அவர் தர்மப் பிரசாரம் செய்துகொண்டு பலகாலம் வசித்துவந்த ஸ்ராவஸ்தியையும் இவைகளல்லாமல் வேறு இரண்டு க்ஷேத்திரங்களையும் அவர்கள் தரிசித்தார்களாம். புத்தரின் பிறப்பிடமாகிய லும்பினி தற்காலம் ரும்மின்தேயி என்று அழைக்கப்படுகிறது. இந்த க்ஷேத்திரத்தை அசோகன் தரிசித்ததின் அறிகுறியாய்நாட்டப்பட்ட ஸ்தம்பம்,வெகு காலமாக மறைந்து கிடந்தது; அது சமீபகாலத்தில் திரும்பவும் உத்தாரணம் செய்யப்பட் டிருக்கிறது. அசோகன் இந்த ஊரிலிருந்த ஜனங்களுக்கு நிலத்தீர்வையைக் குறைத்தானென்று ரும்மின்தேயி ஸ்தம்பத்திலுள்ள லிகிதம் நமக்குத் தெரிவிக்கின்றது. அசோகன் இதே சமயத்தில் கோனகமனன் என்ற பூர்வபுத்தரின் க்ஷேத்திரத்தைத் தரிசனம்செய்து அங்கிருந்த ஸ்தூபத்தைப் புதுப்பித்து ஒரு ஸ்தம்பத்தையும் நாட்டியசெய்திகள் ஐதிஹ்யத்தில் கூறப்படவில்லையாயினும் சிலா சாஸன பரிசோதனை மூலமாக நாம் தெரிந்துகொள்ளுகிறோம். இச்செய்திகள் எழுதப்பட்டிருக்கும் ஸ்தம்பமும் ரும்மின்தேயின் அருகிலிருந்து நமக்கு அகப்பட்டிருக்கிறது. இவ்விவரங்கள் அசோகனது தர்மம் எத்தன்மையது என்று தீர்மானிக்க உபயோகமானவை.

நேப்பாளத்தின் தலைநகரமாகிய காத்மாண்டு அல்லது லலிதாபட்டணம் அசோகனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அங்கு அரசன் பல கோயில்கள் கட்டினானென்றும் அரசன் மகள் சாருமதி அவனுடன் அங்குச் சென்று தன் தகப்பனாரின் வேலைக்கு உதவியாயிருந்து பின் அங்கேயே நிலைத்திருந்தாளென்றும் ஐதிஹ்யத்தில் கூறப்படுகின்றன. இப்பட்டணம் ரும்மின்தேயியின் அருகிலுள்ளதால் இந்நகரத்தின் ஸ்தாபனம்

ரும்மின்தேயி லிகிதத்தில் குறிப்பிட்டிருக்கும் அரசனின் இருபத்தொன்ரும் பட்டாபிஷேக வருஷத்திலேயே நடந்திருக்கலாம்.

**துறவி அரசு நடத்திய விந்தை**

தனது பன்னிரண்டாவது பட்டாபிஷேக வருஷத்தில் அரசன் பௌத்த ஸங்கத்தைச் சேர்ந்ததால் அவன் சந்நியாஸி ஆனுன். கடைசிவரையும் அவன் இந்த ஆசிரமத்திலிருந்து மாறவில்லைபோலும். கி. பி. ஏழாவது நூற்ருண்டின் இறுதியில் இந்தியாவில் சஞ்சரித்த இத்ஸிங், துறவியுடையணிந்த அசோகப் பிரதிமையைக் கண்டதாக எழுதுகிருன். ஆனல் ஐதிஹ்யங்களிலும் சாஸனங்களிலும் அசோகனுடைய மனைவிமார்கள் குறிப்பிடப்படுகின்றனர். பிக்ஷுவானபின் தன் ராஜ்ய காரியங்களை அசட்டைசெய்தானென்றும் வட ஐதிஹ்யத்தில் கூறப்படுகிறது. தலையைச் சிரைத்துக் காஷாயவஸ்திரமுடுத்த அரசன் எப்படி சிங்காதனத்தில் வீற்றிருந்தானென்றும் ராஜ்ய காரியங்களைக் கவனித்தானென்றும் நமக்கும் சந்தை உண்டாகிறது. அசோகனுடைய சாஸனங்கள் இந்த சம்சயத்தை முற்றிலும் நிவிர்த்திசெய்கின்றன. "எனது கடமையாக ஏற்பட்டுள்ள வேலையில் நான் காட்டும் ஜாக்கிரதை எனக்கு ஒருபோதும் திருப்திகரமாகிறதில்லை. ஸர்வ ஜனங்களின் அபிவிர்த்திக்காக சதா உழைப்பது என் கடமை." "எவ்விடத்திலும் ஜனங்களின் வழக்குகளை விசாரணைசெய்ய நான் தயாராயிருக்கிறேன்." இப்படிப் பேசும் அரசன் தன்கடமையை அசட்டைசெய்தானென்று சொல்வதை நம்புவது எப்படி? துறவறமும் உலக நன்மைக்குரிய பிரவிர்த்தியும் ஒன்றுக்கொன்று முரணல்லவென்று பகவத்கீதையில் வற்புறுத்தப்படும் கொள்கையே அசோகன் கொள்கைபோலும்.

மேலும், சாஸனங்களில் அரசனுடைய ராணிகளேயும் பிள்ளைகளையும்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. துறவியான பின் அரசன் அவர்களுடன் வாழவில்லையென்று நாம் அனுமானஞ்செய்து கொண்டாலும் அவர்களுடைய யோகக்ஷேமங்களை அவன் கவனித்துவந்தானென்பது தெளிவு †. அசோகன் கடைசிவரையும் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தானென்று நாம் கூறுவது மிகையன்று. இப்படிப்பட்ட ஊக்கமுடைமை, அரசருக்கு இன்றியமையாததென்று கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்திற் கூறப்பட்டிருப்பதால் அசோகன் இவ்விஷயத்தில் தம் முன்னோர்வழியை அனுசரித்து வந்தானன்றி வேறில்லை.

தர்மப் பிரசாரம் செய்தல்

ஸங்கத்திற் சேர்ந்தபின் அரசன் ஊக்கமுடைமை முன்னிலும் அதிக விசாலமடைந்தது. துரைத்தனக் காரியங்களில் மட்டும் தனது ஊக்கத்தை நிறுத்திக் கொள்ளாமல் உலகமெங்கும் தர்மப்பிரசாரஞ்செய்யவேண்டுமென்ற அவா அசோகனைப் பற்றியது. தனது ராஜ்யத்தினுள்ளும் வெளியிலும் தர்மப் பிரசாரம் நடத்தினன் அவனது ஏகாதிபத்தியத்துக்குப்பட்ட யவனர், காம்போஜர், நாபகதேசத்து நாபபந்தியர், போஜர், பிதேனிகர், ஆந்திரர், புலிந்தர், ராஷ்டிரிகர், காந்தாரர் முதலிய ஜனங்களுக்குப் பல தர்ம ஆசிரியர் அனுப்பப் பட்டனர். அந்த ஜனங்கள் அசோகன் போதனையை அன்புடன் கேட்டார்களென்று நாம் ஊகிக்கலாம்.

தர்ம போதனைகள் செய்யப்பட்ட பிரதேசங்களின் பெயரும் அந்தந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட ஆசிரியரின் பெயரும் சிலோன் ஐதிஹ்யத்தில்* கூறப்பட்

† ஐந்தாம் சாசனம்.

* மகாவம்சம், அத். 12.

டிருக்கின்றன. கன்னிங்ஹாம் துரை 1873-ம் ஸாஞ்சியின் அருகேயுள்ள ஏராளமான புராதன வஸ்துக்களைச் சோதனை செய்தபோது பௌத்த முனிவரின் எலும்புகள் நிக்ஷேபிக்கப்பட்ட பாத்திரங்கள் அகப்பட்டன. இரண்டு பாத்திரங்களின் புறத்தில் "ஹிமவந்தப் பிரதேசத்தின் ஆசாரியனாகிய காசியப கோத்திரன் சாம்பல்" என்றும், "ஹிமவந்தப் பிரதேசத்தின் ஆசாரியனாகிய மஜ்ஜிமன் சாம்பல்" என்றும் லிகிதங்கள் காணப்பட்டன. மகாவம்சத்திலும் இப்பெயர்களுடைய ஆசாரியர் அசோகன் காலத்தில் இமயமலை அல்லது ஹிமவந்தப் பிரதேசத்தில் தர்மத்தைப் போதித்தனரென்று கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஸுவர்ணபூமி, அல்லது ஸோவனபூமி என்று கூறப்படும் பர்மா தேசமும் அசோகன் தூதர் மூலமாக பௌத்த தர்மத்தைச் செவியுற்றதென்று இங்கு சொல்லப்படுகிறது. அசோகனுடைய ராஜ்யத்துக்கு உட்படாத வேறு பல தேசத்தார் அசோகன் மூலமாகவே பௌத்த தர்மத்தை அறிந்தனரென்பது உண்மையே. தென் இந்தியாவில் சுதந்திர அரசர்களாயிருந்த சோழர் பாண்டியர், ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர் நாடுகளில் தர்மபோதனைகளும் தர்மீயமான உபகாரச் செய்கைகளும் நடந்துவந்தன. சிலோன் தீவிலுள்ள ஜனங்களும் முதன் முதல் புத்தரின் ஸந்தேசத்தைக் கேட்டது அசோகன் மூலமாகவே. அசோகனுடைய சகோதரன் மகேந்திரனும், சகோதரி ஸங்கமித்திரையும் இங்கு தர்மப் பிரசாரஞ் செய்யும்பொருட்டு அனுப்பப்பட்டார்களென்று இதிகாஸங்கள் கூறுகின்றன. தென் இந்தியாவிலும் இவர் பௌத்த தர்மத்தைப் பரவச் செய்தனர்போலும். மகேந்திர விஹாரம் என்ற பெயருடைய மடம் ஒன்று தென்

ணாட்டில் இருந்ததாக யுவன்சுவங் கூறுகிறான். மகாவம்சத்தின்படி இவ்விருவரும் அசோகனுடைய மக்களாம்.

ஏறக்குறைய அசோகன் காலத்தது என்று அனுமானிக்கப்படும் சிற்பம் ஒன்றில் சிலோனில் பௌத்த மதத்தைப் பிரசாரஞ்செய்த விஷயம் குறிப்பிட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. ஸாஞ்சி ஸ்தூபத்தின் ஓர் வாசலின் உத்தரக்கல்லில் உயரமான ஓர் மனிதன் யானையிலிருந்து இறங்குவதையும் போதிவிருக்ஷத்தின் கிளை அம்மரத்தினின்று ஒடிக்கப்பட்டு அம்மனிதனிடம் கொடுக்கப்படுவதையும் விளக்கிக்காட்டும் சிற்பம் ஒன்றுண்டு. போதிவிருக்ஷத்தின் கிளை சிலோனுக்கு தேவர் பிரியனான திஸ்ஸன் என்ற அரசன் காலத்தில் கொண்டுவரப்பட்ட செய்தி சிலோன் இதிகாஸங்களில் மிக விமரிசையாகக் கூறப்பட்டிருக்கிறது. முன் கூறப்பட்ட சிற்பம் இந்தச் சம்பவத்தின் அறிகுறியா யிருக்கலாமன்றோ?

அசோகனால் தர்மப்பிரசாரம் செய்யப்பட்ட நாடுகளுள் மிக முக்கியமானவை அறுநூறு யோஜனைக்கப்பாலுள்ள ஐந்து அரசரின் நாடுகள். ஆசியா ஐரோப்பா ஆப்பிரிக்காக் கண்டங்கள் ஒன்றுக்கொன்று சந்திக்கும் பிரதேசங்களை ஆண்டுவந்த அரசர் இவர். இங்கு கிரீக்கு ஜாதியாருடைய நாகரிகம் மிகுந்திருந்தது. அலக்ஸாந்தர் என்ற மாஸிடோணியா தேசத்துப் பராக்ரம வீரன் கி. மு. 335-ல் தனது திக்விஜயத்தை ஆரம்பித்து நூற்றுக்கணக்காய் ராஜ்யங்களை ஜயித்து இந்தியாவுக்கும் படையெடுத்துவந்த விவரங்கள் சாதாரணமாய்த் தெரிந்தவையே. அவ்வீரன் பராக்கிரமத்தால் ஏற்பட்ட ஏகாதிபத்யம் அவனுடைய முடிவுடன் சீர்குலைந்தது. அலக்ஸாந்தரின் முக்கிய போர்வீரர்கள் அப்போது அந்த

வெகு தூரத்துள்ள ஐந்து அரசருடன் உறவு.

ஏகாதிபத்தியத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். பதின்மூன்றும் சாஸனத்தில் கூறியிருக்கும் ஐந்து அரசர்களின் ராஜ்யங்கள் அலக்ஸாந்தரின் ஏகாதிபத்தியத்திலிருந்து உண்டானவை. சாஸனத்தில் ஐந்து அரசரின் பெயர் மட்டும் கூறப்பட்டிருக்கிறது. இவருடைய காலமும் தேசமும் பின் வருமாறு:

| ஐந்து அரசருக்குச் சாஸனங்களில் வந்துள்ள பெயர். | இவ்வரசரின் ஐரோப்பியப் பெயர். | இவர் ஆண்டு வந்த தேசம் | காலம் கி. மு. |
|---|---|---|---|
| அன்டியோக்க | இரண்டாம் ஆண்டியாக்கஸ் (தியாஸ்) | ஸிரியா | 261–246 |
| துலமாய | ப்டாலமியாஸ் (பைலாடெல்பாஸ்) | எகிப்து | 285–247 |
| அன்தேகின | அண்டிகோனஸ் (கொனடஸ்) | மாஸிடோணியா | 277–239 |
| மக | மகாஸ் | கைரீனே | 285–258 |
| அலகஸூதர | அலக்ஸாந்தர் | எப்பைரஸ் | 272–258 |

ஸிரியா தேசத்துக்கும் மோரியரின் ஏகாதிபத்தியத்துக்கும் ஸெல்யுக்கஸ் காலத்திலிருந்தே நேசபாவம் இருந்துவந்தது. மெகாஸ்தனிஸ் போன்ற யவன தூதர்கள் மோரிய ராஜதானியில் யவன அரசரின் காரியங்களை நோக்கிவந்தனர். அதனால் அசோகன் இந்த அயல் அரசருக்கும் தனக்கும் மிக அருமையென்று தோன்றிய சுவிசேஷத்தைத் தெரிவித்தது ஆச்சரியமில்லை. அசோகன் இங்கு தர்மத்தைப் போதித்ததுடன் திருப்தியடையாமல் வைத்தியசாலைகளையும் மிருக ஆஸ்பத்திரிகளையும் ஸ்தாபித்து அவற்றைப் பரிபாலித்து வந்தான்.

இதிலிருந்து கிடைக்கும் ஸமகாலத்துவம்.

அசோகனுடைய சாஸனங்களில் ஐந்து அரசர் கூறப்பட்டிருப்பது பூர்விக இந்திய சரித்திரத்தின் காலநிர்ணயத்துக்கு மிகவும் முக்கியமான ஆதாரமாயிருக்கிறது. இந்த ஐந்து அரசர்களும் சேர்ந்து ஜீவித்திருந்தது நான்கு வருஷங்கள் மட்டுமே. இத் தூரதேசங்களுக்கு அசோகன் தூதரை அனுப்பியது தனது பன்னிரண்டாவது பட்டாபிஷேக வருஷத்திலென்று சாஸனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அதனால் அசோகனுடைய பன்னிரண்டாவது வருஷத்தை நாலு வருஷங்களுக்கு அதிகம் முன்பின் போகாமல் நாம் நிச்சயிக்கலாம். கி. மு. 258-ஸில் அசோகனும் இந்த ஐந்து அரசர்களும் ஒருமித்து ஜீவந்தராயிருந்தனர். இதை ஸமகாலத்துவம் (Synchronism) என்று சொல்லலாம். இந்த ஸமகாலத்துவத்திலிருந்து அசோகனுடைய ராஜ்யபாரகாலத்தையே நாம் தீர்மானிக்கலாம். இதல்லாமல் மற்றொரு ஸமகாலத்துவமும் பூர்விக இந்திய சரித்திரத்துக்கு மிகவும் முக்கியம்; அதாவது கிரீக்கு பாஷையிலுள்ள அலக்ஸாந்தர் வீரன் சரிதைகளில் ஸந்திரகோட்டாஸ் என்ற இந்திய அரசன் பெயர் கூறப்பட்டிருப்பது. இந்த ஸந்திரகோட்டாஸ் முத்திராராக்ஷஸம் என்ற சம்ஸ்கிருத நாடகத்தின் பாத்திரனை சந்திரகுப்தன் என்ற மோரிய வம்ச ஸ்தாபகன்தான் என்ற அநுமானம் பூர்விக இந்தியா சரித்திரத்தில் முதலாவது ஏற்பட்ட ஸமகாலத்துவம். இரண்டாவதாக ஏற்பட்ட ஸமகாலத்துவம் அசோகன் சாஸனங்களொன்றில் ஐந்து தூரதேசத்து அரசர்கள் கூறப்பட்டிருப்பதே.

அசோகனுக்கு ஐந்து மேனாட்டு அரசருடன் ஏற்பட்ட உறவானது இந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு ஓர்

ஸமகாலத்துவத்தை அளித்திருப்பதன்றி வேறு விதத்திலும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஓர் விஷயமாகும். பௌத்தமதமானது பின் காலங்களில் கீழ்ஆசியாவில் பிரபலமானதுபோல மேல் ஆசியாவில் பிரபலமாகவில்லை. ஆயினும் இப்பிரதேசங்களிலும் அசோகனுக்குப் பின் சில நூற்றாண்டுகள் பௌத்த சமயத்தின் காற்று வீசியது. பௌத்த ஆலயங்களும் மடங்களும் ஏற்பட்டன. இந்தியாவுக்குப் புறம்பான நாடுகளில் கடுமையான நியமங்களும் தவமுமுடைய பல துறவிகள் சஞ்சாரஞ் செய்வதும் வசித்துவருவதும் சகஜமாயின. இதனால் மேனாடுகளிலும் இவ்விதத் துறவிசங்கங்கள் ஏற்பட்டு, வாழ்வு துன்பமே, என்ற கொள்கையும், புனர்ஜன்மத்தில் நம்பிக்கையும், புலால் உண்ணாமை யோகாப்பியாசங்கள் முதலிய வழக்கங்களும் வெகுவாகப் பாராட்டப்பட்டன. இம்மாறுதல்களுக்கு மூலகாரணம் இப்பாகங்களில் அசோகன் செய்த தர்மப்பிரசாரமே. கிறிஸ்தவ மத ஸ்தாபகராகிய இயேசு கிறிஸ்து பாலஸ்தீன் நாட்டில் அவதரித்தபோது அங்கே இந்தியருடைய அத்தியாத்ம சாஸ்திரங்களும் துறவறங்களும் செல்வாக்கடைந்திருந்தன. இதிலிருந்து ஒரு சரித்திர உண்மை விளங்குகிறது. அதாவது, பூகோளப் படத்தில் தூரத்தாலும், பாஷையினாலும், காடு மலை கடல் முதலிய இயற்கையின் தன்மைகளாலும் அதிகமாகப் பிரிக்கப்பட்ட நாடுகளுக்கிடையிலும் ஆதிகாலங்களிலிருந்து பண்டமாற்றுதல் மட்டுமன்று, எண்ணங்களின் கொடுத்துவாங்கலும் நடந்தேறினவென்பதே. இப்போது இந்தியாவில் ஐரோப்பிய நாகரிகமும் இந்நாட்டு நாகரிகமும் சந்தித்திருப்பதுபோல எகிப்து, ஸிரியா, பாலஸ்தீன் முதலிய

துணைத்திசை உலகம் தடதிசை உலகத்தைச் சந்தித்தது.

தேசங்களில் கி. மு. மூன்று, இரண்டு, ஒன்றுவது நூற்றுண்டுகளில் குணதிசை உலகம் குடதிசை உலகத்தோடு சந்தித்தது.

ஆஜீவகர்களுக்குத் குகைகள் செய்தல்

அசோகனின் பதின்மூன்றும் ஆண்டிலும் இருபதாம் ஆண்டிலும் இப்போது கயையின் அருகில் காணப்படும் மூன்று குகைகள் வெட்டப்பட்டன. இந்தக் குகைகள் கடுந்துறவிகளாகிய ஆஜீவகர்களுக்கு தானம் செய்யப்பட்டவை. இதை நாம் அசோகன் ஆளுகையில் விசேஷ சம்பவமாகக் கொள்ளவேண்டியதில்லை. அவனால் செய்யப்பட்ட மற்ற பல தான தர்மங்களின் லக்ஷியங்கள் அழிந்துபோயின, இவை மட்டும் நிலை நிற்கின்றன, அவ்வளவே.

ஸ்தம்ப சாஸனங்களைப் பிரசுரஞ்செய்தல்

இருப்பத்தேழாவது இருப்பத்தெட்டாவது பட்டாபிஷேக வருஷங்களில் அசோகனுடைய ஏழு ஸ்தம்பசாஸனங்கள் வரையப்பட்டன. அசோகனுடைய அரசாட்சியின் தன்மையை அறிந்துணர இவை மிகவும் முக்கியமானவை. இவற்றில் ஏழாவது ஸ்தம்ப சாஸனம் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. இதில் அசோகனால் செய்யப்பட்ட எல்லாச் சீர்திருத்தங்களுடையவும் மதிப்புரை இருக்கிறது. இவ்வகை லிகிதங்கள் எழுதப்பட்டுள்ள 'தூண்கள்' அசோகனால் முன்னமேயே நாட்டப்பட்டிருக்கலாம். அவனுடைய முன்னோர்களும் இப்படிப்பட்ட ஸ்தம்பங்களை நாட்டியிருக்கலாம். அரசன் முடிசூடிய இருபத்தோராம் வருஷத்தில் நடந்த தீர்த்தயாத்திரையின் ஞாபகச்சின்னமாக நாட்டப்பட்ட ஸ்தம்பங்களைப்பற்றி முன்னே கூறினோம். சில ஸ்தம்பங்கள் முதலில் கீர்த்தி ஸ்தம்பங்களாக நாட்டப்பட்டிருக்

கலாம். அசோகன், தான் ஜனங்களுக்குத் தெரிவிக்கக் கருதிய விஷயங்களை இவற்றிலெல்லாம் எழுதவேண்டுமென்று தீர்மானித்தான்.

பௌத்த மகா ஸபை

அசோகன் காலத்தில் கடைசியாக நடந்த சம்பவம் மூன்றுவது பௌத்த மகா சபையாயிருக்கவேண்டும். சிலோன் ஐதிஹ்யத்தில் இந்த மகா சபை அரசனது பத்தொன்பதாமாண்டில் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இது சரியென்று தோன்றவில்லை. இருபத்தேழாவது அல்லது இருபத்தெட்டாவது பட்டாபிஷேக வருஷத்துக்கு முன் இந்த மகா ஸபை நடந்திருந்தால் அத்தனை முக்கியமான சம்பவம் ஏழாம் ஸ்தம்பசாஸனத்தில் கூறப்படாமலிராது. ஆனதால் ஸபை நடந்தது கி.மு. 240-ல் ஆயிருக்கலாம். இது எவ்வாண்டில் நடைபெற்றதாயினும், மூன்றுவது மகா ஸபை பௌத்த சமயத்தின் வளர்ச்சியில் மிகவும் முக்கியமான துறை என்பதில் ஐயமில்லை. இதை விளக்குவதற்குப் பௌத்த ஸங்கத்தின் முன் சரித்திரம் சற்று உணர்வது அவசியம். இச்சங்கங்களின் வரலாற்றை அடுத்த அதிகாரத்தில் எடுத்துரைப்போம்.

அசோகன் குணம்

சாஸனங்களில் பிரதிபலித்துக் காணும் தோற்றமே அசோகனுடைய உண்மையான உருவமென்று முன்னே கூறினோம். இங்கு அரசனுடைய கொள்கைகளும் மனமும் பளிங்கிற்போல் விளங்குகின்றன; அவன் உள்ளத்தில் துறவியின் பக்தி சிரத்தையும் அரசனின் ஞானமும் ஊக்கமும் ஒருங்கே கலக்கின்றன. மனிதனைக் கணித்தாலும் அரசனைக் கணித்தாலும் அசோகன் மேன்மை குன்றுவதில்லை. அரசனைக் கணிக்குமிடத்து, அசோகனுடைய போர் செய்யாவிரதமும் மதங்கள்பால் சமமான பார்வை

யும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கனவாம். ஸ்ரீ. வின்ஸென்ட் ஸ்மித் என்ற பிரசித்திபெற்ற இந்திய சரித்திர ஆசிரியர் அக்பரையும் அசோகனையும் சீர்தூக்கி எழுதுகிறார்.* மதங்கள் விஷயத்தில் இவ்விருமன்னரின் சமதிருஷ்டியும் எச்சமயத்தாருக்கும் ஒன்று போல் சுரந்த அன்பு மாதரவும் மெச்சத்தக்கனவே. இவ்விஷயத்தில் இவ்விரு சுடர்களின் ஒளியும் நிகரெனினும், புறச்சமயங்களைப் பழிப்பவரிடையில் தோன்றி வளர்ந்த அக்பருடைய சமதிருஷ்டி அசோகனதைவிட விசாலமும் பெருமையுமுடையதென நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆயினும், முன் கூறிய ஆசிரியர் குறிப்பிடுவதுபோல, அக்பர் புத்திக்கு யுத்தங்களைத்தவிர்த்து தர்மத்தைமட்டும் பரவச்செய்வதென்பது பேதைமையாகத்தோன்றுமேயன்றி வேறில்லை. அசோகனோ, அயல் நாடுகளைக் கைப்பற்றுவதின் கொடுமையைத் தனது ஆளுகையின் தொடக்கத்திலேயே உணர்ந்தான், அக்பர் அசோகனுடைய பதின்மூன்றாவது சாஸனத்தைப் படித்திருந்தால் அவனைப் பயங்கொள்ளியாகவே கருதியிருப்பர். அரசர் பூமியில் பேராசையைத் தவிர்க்கவேண்டுமென்பது அக்பர் புத்திக்கே எட்டவில்லை. இக் கசப்பான அரிய உண்மை தற்காலத்தில் பல ராஜாங்க நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்வுண்மையை உணர்ந்ததே அசோக ராஜனுடைய அழியாப் புகழாம்.

அரசனாயிருந்தும் மனிதனுக்குரிய லக்ஷியங்களை மறக்காது, சுக போகங்களில் மயங்காது வாழ்ந்துவந்த மன்னர் மிகச் சிலரே. சரித்திரமூலமாகிய ஆதாரங்களில் மிகுந்த வித்தியாசமுள்ளபோதிலும், கபடமற்ற உள்ளத்திற்கும் எல்லோர் காட்சிக்கும் எளியனாயிருக்க

* The Oxford History of India by V. A. Smith p. 115.

வேண்டுமென்ற ஆர்வத்திற்கும் தனது கடமைகளில் ஓயாக்கவனத்திற்கும் அறநெறியைத் தழுவும் சிரத்தைக் கும் அசோகனை ரோமராஜ்யத்தின் சக்கரவர்த்தியான மார்க்கஸ் ஒளரேலியஸ் என்ற மகானுடன் ஒப்பிடலாம். ஊன் தவிர்த்தல், கொல்லாமை, ஆடம்பரமற்ற வாழ்க்கை முதலிய நோன்புகளைக் கைக்கொண்டவரும் துறவியாக அரசு நடத்தியவரும் சிலருண்டு. ஆனால் அவர் மற்றப்படி அசோகனுக்கு ஒப்பாகாராதலின் அவரை இங்குக் குறிப் பிடவேண்டிய அவசியமில்லை. அவன் பௌத்த நூல் களில் அருகன் என்ற ஆன்மீய நிலைமையை அடைந்தா னென்று சொல்லப்படுகிறது. அசோகன் ஒரு மகா புருஷனென்று நாமும் கூறலாம். அப்படியிருந்தும் அவன் கர்வமடைந்ததாகத் தோன்றவில்லை. அவனுடைய கர்வமின்மைக்கு பாப்ருசாஸனம் சான்றாகும். தான் ராஜாதிராஜனாயிருந்தும் அவ்வூரிலுள்ள பிக்ஷுக்களுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் அரசன் தனது நமஸ்காரத்தை அவர்களுக்குச் சமர்ப்பித்து எழுதத்தொடங்குகிறான். ஆன்ம பரிசீலனை எவருக்கும் அவசியமென்று வற்புறுத் தும் மூன்றாம் ஸ்தம்பசாஸனமும் இங்கு பிரத்தியேக மாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வித உயர்ந்த சுபாவங் கள் அமைந்தவனாயிருந்தும் அக்காலத்துப் பாமர ஜனங் களுக்கு அசோகனுடைய மேன்மையைவிட அவனது மடமை தான் நன்றாகப் புலப்பட்டது. நன்மையில் நம்பிக்கையற்ற உலகமானது, அரசன் அறநெறியைப் பரவச்செய்வதில் கொண்ட உற்சாகத்தையும் எல்லோரும் நன்கறிந்த நற்போதனைகளை வற்புறுத்துவதில் காட்டிய ஊக்கத்தையும் அவனுடைய பேதைமைக்குத் திருஷ் டாந்தமாகக் கொண்டது. அவன் தனக்குப் பெருமை யெனக் கருதிய தேவானம்பிரியன் என்ற விருதானது பிற்

காலங்களில் சம்ஸ்கிருத மொழியில் மூடனென்னும் பொருளில் வழங்குவதும் வியக்கத்தக்கதே.

அசோகனுடைய விசாலமான நோக்கங்களும் எண்ணங்களும் கைகூடவில்லை. ஆயினும், இது அரசனின் குற்றமென்று கூறுவது தவறு. முயற்சி மட்டுமே மனிதனுக்கு உரியது. எண்ணங்களின் வெற்றி அல்லது தோல்வி இயற்கையிலுள்ள வேறுபல நிமித்தங்களைப் பொறுத்திருக்கிறது. இவை ஏகோபித்தால் மனிதனின் நோக்கங்கள் கைகூடுகின்றன. அதனால் அசோகனுடைய எண்ணங்கள் கைகூடவில்லையென்பது அவன் புகழைக் குறைக்கவில்லை. தர்மத்தைப் போற்றுவதில் ஏற்பட்ட ச்ரத்தையிலும், மதவிஷயமான சண்டைகள் ஓய்ந்து மடிந்துபோகவேண்டுமென்ற நோக்கத்திலும், ஜனங்கள் ஒற்றுமையுடனும் சுபிக்ஷத்துடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்துவரவேண்டுமென்ற கோரிக்கையிலும், ஜனங்களுடைய க்ஷேமம் அரசனுடைய நடத்தையைப் பொறுத்திருக்கிறதென்ற உண்மையின் உணர்ச்சியிலும் அசோகனுடைய சரிதை மானிடருக்குப் பெரிய மலையிலக்காயிருக்கிறது.

**அசோகனுக்குப் பின் வந்த மோரிய அரசர்**

நாட்டின் க்ஷேமத்தைப் பலவாறு வளரச் செய்துகொண்டு அசோகன் முப்பத்தேழு வருஷங்கள் ஆண்டபின் காலகதியை அடைந்தான். அரசனுடைய இறுதிக் காலம் கி. மு. 232 என்று கணக்கிடப்படுகிறது. அசோகனுக்குப் பல குமாரர் இருந்தனர். மகததேசத்தில் அசோகன் பேரனான தசரதன், அசோகனுக்குப் பின் அரசனானான். இவன் தன் மூதாதை செய்துள்ள குகைகளின் அருகில் ஆஜீவகர்களுக்கு மூன்று குகைகளைச் செய்திருக்கிறான். இதுதான் இவனைப்பற்றி நமக்

குத் தெரிந்தது. ஸம்பிரதி என்ற பெயருடைய அசோகனின் மற்றொரு பேரன் ஜயினமதத்தைப் பரிபாலித்ததாக அந்த மதத்தாருக்கிடையில் பெரும்புகழ் பெற்றானென்று ஜயினக் கிரந்தங்கள் கூறுகின்றன. அசோகனுடைய ஸந்ததியார் அவனது தர்மசிந்தையையோ திறமையையோ பின்பற்றவில்லை. தன் ஸந்ததியாருக்கென்று சாஸனங்களில் எழுதப்பட்டிருக்கும் எச்சரிக்கைகள் கவனிக்கப்படவில்லையென்று நாம் ஊகிக்கலாம். புராணங்களிலுள்ள வம்சாவளியின்படி அசோகனுக்குப்பின் வந்த மௌரிய அரசர் அறுவர். அவர் மகத ராஜ்யத்தை கி. மு. 232 முதல் 185-வரையும் ஆண்டு வந்தனர். அப்போது ஏகாதிபத்தியத்தின் பல பாகங்கள் வேறுபட்டு சுதந்திர ராஜ்யங்களாய் மாறின. இதுவன்றி, இவ்வரசரைப் பற்றி நமக்குத் தெரிந்ததும் கொஞ்சமே. அவற்றை இங்கே எடுத்துச்சொல்லவேண்டிய அவசியமுமில்லை. கடைசியாக பிருஹத்ரதன் என்ற மோரியனிடமிருந்து புஷ்யமித்திரன் என்ற சுங்க வம்சத்து அரசன் ராஜ்ய லக்ஷ்மியைக் கைப்பற்றிக் கொண்டான். அதற்குப் பின்னும் மௌரியர் பாடலீபுரத்தில் சிற்றரசராய் வாழ்ந்தனர்.

## III. அசோகன் தர்மம்

அசோகனால் கூறப்படும் தர்மம் எப்படிப்பட்டது, புத்தரின் மதத்தைப் பிரசாரம் செய்வதில் அவன் எவ்வளவு தூரம் பயனடைந்தான் என்ற விஷயங்களை நாம் தனியாக ஆராய்வது அவசியம். பௌத்த மதத்தின் வளர்ச்சியில் மட்டுமல்ல, இந்தியாவின் ஸமய சரித்திரத்தில் அசோகனுடைய ஸ்தானம் மிக முக்கியமானது.

அசோகன் மதங்களுக்கெல்லாம் ஸர்வ சம்மதமான

காலங்கமார்க்கத்தையே தர்மம் என்ற சொல்லினுல் குறிக்

ளில் வ

**சோகன் காலத்தில் பௌத்த மதத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்**

கிருன். ஆயினும் அவன் புத்தருடைய மதத்தில்விசேஷபற்றுள்ளவனுயிருந்தானென்பதில் ஐயமில்லை. அவன் எட்டுப் படிகளுடைய ஸம்போதி என்ற ஞான மார்க்கத்தை வழிபட்டதாக ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது (எட்டாம் சாஸனம்). மற்ருெரிடத்தில் அரசன் பௌத்தமதத்தின் மும்மணியாகிய புத்தன், தர்மம், ஸங்கம் என்பதைத் தான் சரணமடைவதாகச் சொல்லப்படுகிறது (பாப்ரு சாஸனம்). இதே சாஸனத்தில் அரசன் சில பௌத்தக் கிரந்தங்கள் விசேஷ ஒளியுடையனவென்று தான் மதிப்பதாகக் கூறுகிருன். ஒன்பதாவது பட்டாபிஷேக வருஷத்தில் அரசன் புத்தரின் கொள்கை மிகச் சிரேஷ்டமென்று உணர்ந்து பதின்மூன்ரும் ஆண்டில் ஸங்கத்தில் சேர்ந்துகொண்ட விவரங்களை முன் சொன்ேனும்.

அரசன் பௌத்த ஸங்கத்தின் ஓர் அம்சமானதும் அதுபற்றி அவனுக்குப் பௌத்த ஸங்கத்தின் தலைமை ஸ்தானம் ஏற்பட்டதென்று நாம் ஊகிக்கலாம். பௌத்த மகா ஸபைகளில் எல்லாருடைய வாக்கும் சமமான மதிப்புள்ளதென்ருலும், அசோகன் தனது ஏகாதிபத்தியத்தின் செல்வத்தையும் செல்வாக்கையும் பௌத்த ஸங்கத்துக்கு உரிமையாக்கியதால் அவனுக்கு ஸங்கத்தில் விசேஷ கௌரவம் ஏற்பட்டிருக்கவேண்டும். அரசனின் சகோதர சகோதரிகளும் புத்திரரும் புத்திரிகளும் ஸங்கத்தைச் சேர்ந்தனரென்று ஐதிஹ்யத்தில் சொல்லப்படுகிறது. அதனுல் பௌத்த மதத்துக்கு அதிக மகிமையுண்டாயிற்று. இப்போது பூமியில் பௌத்த மதம் கோடிக்கணக்கான ஜனங்களின் மதமாயிருப்பது அசோக

னுடைய உழைப்பின்றி நடந்திராது. புத்தரின் மரணத்துக்குப் பின் அவருடைய ஸங்கம் கொஞ்சங்கொஞ்சமாக வட இந்தியாவில் பரவி வந்தது. அசோகனது உழைப்பின் பயனாக அது இந்தியா முழுமைக்கும் முக்கிய மதமாயிற்று. இந்தியாவுக்குப் புறமேயும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் புத்தரின் மதத்தைச் சரணமடைந்தனர். 'எங்கும் தர்மத்தின் ஜயபேரிகை முழங்கிற்று. பல நூற்றாண்டுகளாக ஒருபோதும் சம்பவியாத விசேஷம் பியதஸி அரசன் தர்மத்தைப் பின்பற்றியதால் சம்பவித்தது தர்மத்தின் வெற்றி எங்கும் தெரியவந்தது' (ஐந்தாம் சாஸனம்) இவ்வசனங்கள் தனது காலத்துக்குப் பின் பௌத்த மதம் அடையப்போகும் கீர்த்தியையும் புகழையும் தனது அகக்கண்ணால் அரசன் உணர்ந்து கூறியவைபோலிருக்கின்றன.

அரசனுக்கு ஸங்கத்தின் தலைமை ஸ்தானம் ஏற்பட்டதால் பல விசேஷக் கடமைகள் ஏற்பட்டன. ஸங்கத்தின் காவலனாக அவன் அதில் கட்சிகளும் கொள்கைவேறுபாடுகளும் வராமல் காக்கவேண்டியதாயிற்று. ஆசாரங்களைக் காப்பாற்றவும், புத்தரின் வாக்கியங்கள் எவையென்று தீர்மானஞ்செய்யவும், மதக்கொள்கைகளை ஆராயவும் அரசன் ஒரு மகாஸபை கூட்டிய விஷயம் முன்னமே சொன்னோம். அதல்லாமல், பிக்ஷுக்களை எச்சரிக்கை செய்தல், ஸ்தூபங்களைக் கட்டுவித்தல், விஹாரங்களைப் பாதுகாத்தல், காட்டுஜாதியாருக்குத் தர்மத்தைப் போதித்தல், நாட்டிலுள்ள பௌத்த ஸங்கங்களைப் பரிபாலித்தல், அதன் கிளைகளில் சண்டைச்சச்சரவுகளைத் தவிர்த்தல் இவையெல்லாம் அரசன் கவனிக்கவேண்டிய விஷயங்களாயின.

அசோகன் காலத்துக்கு முன்னுள்ள பௌத்தசங்க சபைகளின் வரலாற்றை இங்கே சுருக்கிக் கூறுவது தகும்.

கௌதம புத்தர் வாழ்ந்திருந்த நாளளவும் அவர்தாமே ஸங்கத்தின் அதிபதியாகவும் குருவாகவும் எல்லா பௌத்தத் துறவிகளுக்கும் மலையிலக்காகவும் இருந்தார். அவர் ஸங்கத்தைச் சேர்ந்தோருடைய நடையுடைபாவனைகளை நேர்வழியில் நிறுத்தப் பல விதிகளை ஏற்படுத்தினாராயினும் துறவிகளின் சுதந்திரத்தை அனுவசியமாய்க் கட்டுப்படுத்தவில்லை. பிக்ஷுக்கள் சதா ஆசாரியர்களை வழிபட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் நன்றென்று கௌதமர் நினைக்கவில்லை. எவரும் தாமே தமக்கு வழிகாட்டியாயிருக்கவேண்டுமென்று அவர் தமது சரமோபதேசத்தில் எல்லோரையும் வற்புறுத்துகிறார். ஸங்கத்தைச் சேர்ந்தோர் யாவரையும் ஒரு சமூகத்தாராகக் கட்டுப்படுத்தவேண்டுமென்று அவர் முயற்சி செய்யவில்லை; ஆயினும் ஒற்றுமை உணர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய ஏற்பாடுகள் ஸங்கத்தில் இல்லாமலிருக்கவில்லை. தங்களுக்கிடையில் பரஸ்பர வெகுமானமும் நம்பிக்கையும் வளருவதற்காக "பாடிமோக்ஹம்" என்ற சடங்கு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் நடந்து வந்தது. பௌர்ணமியன்று இரவு ஓரிடத்தில் தங்கியிருக்கும் பிக்ஷுக்கள் எல்லோருங்கூடி தங்கள் தங்கள் நடத்தையில் சம்பவித்த குற்றங் குறைவுகளை மற்றோருக்குக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொள்வது வழக்கம். இதன்றி வேறு விதத்தில் ஒரு துறவி மற்றத் துறவிக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியமிருக்கவில்லை.

பௌத்த சங்க சபைகள்.

கௌதமபுத்தர் வாழ்ந்திருந்த நாளளவும், அவருடைய அடுத்த சீஷர்கள் காலத்திலும் புத்தரின் பெருமையும் பரிசுத்தமும் பௌத்த ஸங்கத்தைப் பிளவுகளிலிருந்து காப்பாற்றின. காலக்கிரமத்தில் இந்த ஒற்றுமை

உணர்ச்சியின் வலி குன்றியது. நூறு வருஷங்களுக்குள் பௌத்த ஸங்கமானது பன்மையிலேயே, 'ஸங்கங்கள்,' என்று கூறவேண்டிய ரீதியில் பல பிரிவுகளாய் மாறிற்று. பல பிரமுகர்கள் இந்த ஸ்திதியைக் கண்டு வியசன மடைந்தனர். கொள்கை வேறுபாடுகளை நீக்கவும் ஜீவிதத்தில் ஒற்றுமையையும் ஒழுங்கையும் ஏற்படுத்தவும் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இவற்றுள் மகா ஸபைகளைக் கூட்டியது மிகவும் முக்கியமானது.

முதலாவது மகாஸபை புத்தர் இறந்தவுடன் ராஜக்கிருஹம் என்ற நகரில் நடைபெற்றது. புத்தர் சரமாரியாய்ப் பொழிந்த தர்மோபதேசங்களையும் நுட்ப வாதங்களையும் இனிய சம்பாஷணைகளையும் உலகம் ஒரு போதும் இழந்துவிடாவண்ணம் காப்பாற்றவேண்டுமென்று ஸபை தீர்மானஞ் செய்தது. இவற்றைத் திரட்டுவதற்காக புத்தருடன் நெருங்கிப் பழகிய சிஷ்யர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். பௌத்த தர்மத்தின் தத்துவங்களைப்பற்றி அப்பொழுதே அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டனவென்று நாம் அனுமானிக்க இடமிருக்கிறது. ஆனால் அவை பகிரங்கமாகவில்லை. ஸங்கத்தை ஒன்றாகக் கட்டுவதற்கேற்ற ஏற்பாடுகளும் சில செய்யப்பட்டன. ஸபையானது எல்லா பிக்ஷுக்களும் அனுசரிக்கவேண்டிய சட்டங்களைப் பிரசுரஞ்செய்தது. ஸங்கத்தில் சேர்ப்பதற்குள்ள சடங்கு (இதற்கு உபஸம்பதம் என்று பெயர்) நிச்சயிக்கப்பட்டது. ஆயினும் ஸங்கத்தை ஏகோபிக்கச்செய்த ஏற்பாடுகள் கைகூடவில்லை.

புத்தருக்குப் பின் அவருடைய ஆப்த சிஷ்யர்கள் ஞானப்பொக்கிஷமென்று மற்றோரால் கருதப்படுவது இயல்பே. இவர்கள் கூறியவை புத்தரின் சுய வசனங்களாகக் கருதப்பட்டு, இந்தப் பிரதம சிஷ்யர்களின் சிஷ்யர்க

ளால் மனப்பாடஞ் செய்யப்பட்டன. இந்து மதக் கிரந்தங்களைப் போலவே பௌத்தப் பிரபந்தங்களும் வாய்மொழியாகக் குருசிஷ்ய பரம்பரையில் நிலைநின்று வந்தன. ஆனால் பிரதம சீஷர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதங்கள் இருந்தமைபற்றி பௌத்தருக்குள் பிளவுகள் ஏற்படத்தொடங்கின. கௌதமரிறந்த நூறு வருஷங்களுக்குப் பிறகு கொள்கைவேறுபாடுகளும் ஆசாரவேறுபாடுகளும் உண்மையான மதப் பிரபந்தங்கள் எவையென்ற சமுசயமும் மேலிட்டிருந்தன. இக்குறைகளைப் பரிகாரஞ்செய்ய மதத் தலைவர்கள் மற்றொரு மகா ஸபை கூட்டினர். இந்த இரண்டாவது பௌத்த மகா ஸபை வெய்சாலியில் நடந்தது. ஸங்கத்தில் ஏற்பட்டிருந்த பல உட்பிரிவுகளால் ஸபையின் நடவடிக்கைகள் முற்றுப்பெறவில்லை. அதன் வேலை சிதைந்தது; பல எதிர் ஸபைகள் கூடின; பிரபந்தங்களை நிச்சயிப்பதும் திரட்டுவதும் சாத்தியமில்லாமல் போயின. இரண்டாவது ஸபையால் குழப்பம் அதிகரித்ததல்லாமல் வேறு குண முண்டாகவில்லை.

ஆகவே அசோகன் சிங்காதனமேறிய காலத்தில் பௌத்த ஸங்கத்தில் குற்றங்கள் மலிந்திருந்தன. ஆசாரங்களிலும் கொள்கைகளிலும் வியவஸ்தை இருக்கவில்லை, மதப் பிரபந்தங்கள் எவையென்று தீர்மானமாகவில்லை. இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்த பிக்ஷுக் கூட்டங்கள் தங்களுக்கு உசிதமென்று தோன்றிய செய்கைகளையும், சரியென்று தோன்றிய கொள்கைகளையும் கைக்கொண்டிருந்தனர். பாடிமோக்ஹம் என்ற சடங்கு கூடச் சரியாக எங்கும் நடைபெற்று வரவில்லையென்று ஸார்நாத் சாஸனத்திலிருந்து நாம் ஊகிக்கலாம்.

மூன்றாவது பௌத்த மகா ஸபை அசோகனுடைய

கடைசிக்காலத்தில் பாடலிபுரத்தில் குக்குடாராமம் என்று பெயர் வழங்கிய பௌத்த மடத்தில் மோகலீ புத்திரதிஸ்ஸன் என்ற ஆசாரியனின் தலைமையின்கீழ் நடைபெற்றது. இந்தியாவில் எல்லாப் பாகங்களிலிருந்தும் பிக்ஷுக்கள் வரவழைக்கப்பட்டனர். ஸபையின் நடவடிக்கைகள் முற்றுப்பெற ஒன்பது மாதங்கள் சென்றன. ஸபையின் அங்கத்தினர் எல்லோரும் சமம் என்ற விதியின்படி காரியங்கள் தீர்மானிக்கப்பட்டனவாதலால் இத் தீர்மானங்களில் அசோகனுடைய சுய அபிப்பிராயங்கள் காணப்படுகின்றனவென்று நாம் எண்ண இடமில்லை. ஆயினும், அரசனும் பிக்ஷுவானதுபற்றி ஸபையின் நடவடிக்கைகளில் அவன் சம்பந்தப்பட்டிருக்கலாம்.

**மூன்றாவது சங்க சபை**

இந்த ஸபையில் மிக முக்கியமான காரியங்கள் செய்யப்பட்டன. தீய ஆசாரங்களும் தப்பான கொள்கைகளும் கண்டனஞ் செய்யப்பட்டன. மதக்கிரந்தங்கள் எவையென்று தீர்மானஞ் செய்யப்பட்டு த்ரிபிடகம் என்று பெயருடைய மூன்று பௌத்தப் பிரபந்தத்தொகுதிகளும் இச்சமயம் வரிசைபடுத்தப்பட்டன. தப்பான கொள்கைகளைத் தவிர்க்கும் பொருட்டு கதாவஸ்து என்ற கிரந்தம் ஸபைத் தலைவரால் இயற்றப்பட்டது. திரட்டப்பட்ட கிரந்தங்கள் முற்றிலும் பாராயணஞ் செய்யப்பட்டன. இப்புவியின் பல பாகங்களுக்கும் தர்மத்தைப் போதிக்கப் பிரசாரர்களை அனுப்பவேண்டுமென்று தீர்மானித்து ஸபையோர் அதற்கவசியமான போதகர்களையும் தெரிந்தெடுத்தனர்.

ஸபையின் தீர்மானங்களை உறுதிசெய்ய அரசனுடைய செல்வாக்குத் தாங்குதலாய் இருந்ததனால் இம்மூன்றாவது மகாசபை முந்திய சபையைப்போல் சண்டையிலும்

குழப்பத்திலும் முடியவில்லை. ஸார்நாத் ஸ்தம்பத்தி லுள்ள சாஸனம், இந்த ஸபையின் தீர்மானத்தை அமு லுக்குக் கொண்டுவரவே என்பது தெளிவு. ஸாஞ்சி ஸ்தம்பத்திலும் பிரயாகை ஸ்தம்பத்திலும் இதே கட்டளை பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்த மூன்று வது மகா ஸபையின் நடவடிக்கைகள்கூட பௌத்த ரிடையில் ஸர்வசம்மதமாயிருக்கவில்லைபோலும். ஏனென் றால் இந்த ஸபை கூடிய விஷயமேனும் வட இந்திய ஐதிஹ்யத்தில் கிடையாது. இதிலிருந்து மிகப் பிரபலமான அபிப்பிராய பேதங்கள் பௌத்தருக்குள் இருந்தன வென்று நாம் ஊகிக்கலாம். இது ஹீன யானம் மஹா யானம் என்ற இரு பெரும் மதப்பிரிவுகளின் தொடக் கத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

மஹாயானம், ஹீனயானம் என்ற சொற்கள் முறையே பெருங்கப்பல் என்றும் சிறுகப்பல் என்றும் பொருள்படும். மஹாயான மதத்தார் தமது மதத்தை, பிறவிக்கடலைக் கடப்பதற்கு முற்றிலும் நம்பக் கூடிய பெருமரக்கலத்தோடு ஒப்பிட்டு, எதிர்க் கக்ஷியாரின் சமயத்தை, வேகமாய்ச்செல்வதும் ஆனால் அபாயகர மானதுமான சிறுபடகோடு ஒப்பிட்டதிலிருந்து இச் சொற்கள் உண்டாயின.

**ஸன்மார்க்க போதனையே திபௌத்த மதத் தின் சாரமெனல்**

எல்லா மதங்களும், ஜீவன், பிரகிருதி, ஈசுவரன், புனர் ஜன்மம், கர்மபந்தம், மோக்ஷம் என்ற விஷயங்களைப்பற்றிப் பிரத்தியேக அபிப் பிராயங்களுடையன. அசோகனுடைய சாஸனங்களில் அவன் இவற்றைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அசோக னுடைய அபிப்பிராயப்படி தர்மம் என்பது இப்படிப்பட்ட மதக்கொள்கைகளன்று. "எல்லோரையும் காப்பாற்றக்

கூடியது எதுவோ அதுவே தர்மம்", என்ற அச்சொல்லின் உட்கருத்தே தர்மத்தின் லக்ஷணமென்று அசோகன் உணர்ந்தான். அவன் கொள்கைப்படி புத்தபகவானின் மகிமை என்னவென்றால், எல்லா மனிதருக்கும் உயர் நன்னெறியை வழிபடுதல் அவசியம் என்று வற்புறுத்தியதே. நன்னடக்கையும் நல்லெண்ணங்களுமே கடவுள் வழிபாடு. மற்ற மதங்களுடையவும் ஸாராம்சம் ஸன்மார்க்கபோதனை தானென்று அசோகன் எண்ணினதால் மதச்சண்டைகளின் இழிவையும் அந்நியமதங்களைத் தூஷிப்பதின் கெடுதலையும் அவன் நன்குணர்ந்தான்.

அசோகன் தர்மம் என்ற சொல்லினால் என்ன கருத்தைக் குறிப்பிடுகிறானென்று ஐந்து ஆறு சாஸனங்களில் கூறப்பட்டிருக்கிறது. தாய் தந்தையருக்கு வெகுமதிப்பு, வயோதிகர் ஞானசிரேஷ்டர்களுக்கு மரியாதை, ஏழைகளுக்கும் பிராமணர் சமணர் முதலானோருக்கும் ஈகை, அடிமைகள் சேவகர்களிடம் அன்பு, ஜீவஜந்துக்களிடத்தில் இரக்கம், அஹிம்ஸை, அதாவது சகல ஜீவராசிகளிடத்தும் அனுதாபம், புலால் உண்ணாமை, வாய்மை, பிறர் மதங்களைத் தூஷணை செய்யாமை, சமரஸபாவம், இவைதான் தர்மமென்று அசோகன் வற்புறுத்துகிறான்.

**மூடநம்பிக்கைகளைக் கண்டித்தல்**

ஆயினும் அசோகனின் மதம் சில விஷயங்களில் பாமர ஜனங்களுடைய கொள்கைகளோடு முரண்பட்டது. "மனிதனின் மனப்போக்கும் இச்சைகளும் பலவிதமாக வேறுபட்டிருக்கின்றன: சில மதஸ்தர் என்சாஸனைகளை முற்றிலும் பின்பற்றலாம், மற்ற வகுப்பார் என்சாஸனைகளின் சில பாகங்களைப் பின்பற்றலாம்." என்று ஏழாம் சாஸனத்திலும், "ஸ்திரீஜனங்கள்

இழிவும் அர்த்தமற்றதும் நிஷ்பிரயோஜனமுமான நானு வித சில்லறைச் சடங்குகளைச் செய்கிறார்கள்.'' என்று எட்டாம் சாஸனத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து மற்றமதங்கள் எவ்வளவு தூரம் ஸன்மார்க்க போதனையை அனுஸரிக்கின்றனவோ அவ்வளவே அவை உண்மையென்றும், ஸ்திரீ ஜனங்கள் வீடுகளில் செய்யும் மந்திர கருமங்கள் இழிவென்றும் அரசன் மதித்ததாக நமக்குத் தெரியவருகிறது. ஆனால் அசோகன் இந்த அபிப்பிராயங்களை அடிக்கடி எடுத்துரைத்து ஜனங்களின் மனத்தைப் புண்படுத்தவில்லை. அதுமட்டுமன்று, அவன் எல்லா மதங்களைச்சேர்ந்த துறவிகளுக்கும் ஞானிகளுக்கும் பூஜை மரியாதைகள் செய்தான்.

ஜீவ இம்சை நிவாரணம்

அசோகனுடைய நோக்கங்கள் நாளடைவில் விரிந்து கொண்டே வந்தனவென்பதும் முன் சொல்லிய விவரங்களிலிருந்து நாம் ஊகிக்கலாம். ஜீவவதையைப்பற்றி அரசன் கொண்டிருந்த அபிப்பிராயங்களும் மாறுதல் அடைந்தன வென்று தோன்றுகிறது. அரசனின் ஆளுகையின் தொடக்கத்தில் ஜீவவதை பலியிடுதல் முதலிய வழக்கங்கள் முற்றிலும் தவிர்க்கப்பட்டனபோலும். தான் அமிதமான உற்சாகத்துடன் இவ்விதம் பிரவர்த்தித்ததாகப் பின் உணர்ந்து இருபத்தேழாவது பட்டாபிஷேக வருஷத்தில் அரசன் ஜீவ வதையைக் குறைப்பதற்கும் அனுவசியமான ஜந்து இம்ஸையை நிவாரணஞ் செய்வதற்கும் மட்டுமே எத்தனித்தான்.

சுவர்க்கத்தில் நம்பிக்கை

சாஸனங்களில் மனிதன் சுவர்க்கத்தை அடைய வேண்டுமென்றும், எவருக்கும் இம்மையில் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவதின் பயன் மறுமையில்

சுவர்க்கசுகமென்றும் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருப்பது வியப்பாயிருக்கிறது. புத்தர் போதித்த சதுர் ஆர்ய ஸத்தியமும், எட்டுவகைத்தியானங்களும் மனித வாழ்வின் முடிவாகிய நிர்வாணமும் அசோகனால் மறக்கப்பட்டனவா? இல்லை. ஆனால் காலக்கிரமத்தில் பௌத்த மதத்தில் உண்டான மாறுதல்களுக்கு அசோக சாஸனங்கள் அறிகுறியாயிருக்கின்றன. அசோகன் தனது பிரஜைகளுக்கு நற்குண நற்செய்கைகளின் அவசியத்தை வற்புறத்த எண்ணியதால் அவ்வழியில் நடப்பதின் பயனான சுவர்க்கத்தைப் பற்றியும் அவனுக்கு எடுத்துரைப்பது அவசியமாயிற்று. சுவர்க்கமென்பதுதான் பாமர ஜனங்களின் பிரவிர்த்திகளுக்கு ஏற்ற தூண்டுதல் என்று அசோகன் உணர்ந்தான்போலும். கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்திலும் இக்கொள்கை விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கௌதம புத்தரும் சுவர்க்கானுபவத்தைப் பற்றிக் கூறுவது தப்பிதமாக நினைக்கவில்லை. ஆனால் அவருடைய முக்கியமான உத்தேசம், ஆசை மோகம் முதலிய கட்டுக்களை அறுத்துத் தள்ளக்கூடிய பலவான்களை ஒன்று சேர்த்துத் திரட்டி அவரை ஒரு சங்கமாகச் சேர்க்க வேண்டுமென்பது. அதற்கிணங்க அவர் வெகுவாகப் பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி என்ற துக்கங்களையும் அவற்றின் கொடுமையையும், அவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஏற்ற நிவிர்த்திமார்க்கத்தையும் பற்றிப் போதித்தார். ஆனால் அவர் சாதாரண ஜனங்களிடம் இவ் விஷயங்களைப்பற்றிப் பேசாமல் அன்பு, வாய்மை, ஈகை என்ற குணங்களின் மேன்மையைப்பற்றிப் பேசினார்.

புத்தர் காலத்துக்குப் பின் அவர் சிஷ்யர்கள் பிரவிர்த்தி நிவிர்த்தி என்ற இருவிதமார்க்கங்களின் வேற்

றுமையைப்பொருட்படுத்தாமல் தர்மம் என்பது நிர்வாணத்தையடையும் வழியென்று ஸ்தாபித்தனர். அதனால் பௌத்த ஸங்கத்தில் இல்லறத்தாருக்கு இடமில்லாமற் போயிற்று. அசோகன் இக்குறையை உணர்ந்தான்போலும். அதனால் அவன் தர்மம் என்பது ஸன்மார்க்கவழியே யன்றி வேறில்லையென்று முறையிட்டான். ஆயினும் அவன் இல்லறத்தாருக்குப் பௌத்தர் என்ற பெயர்கொடுத்து அவரை ஒரு பிரத்தியேக சமூகத்தாராகச் செய்யவில்லை. தற்காலம் கிறிஸ்து முகம்மதிய மதங்களைப்போல பௌத்தமதம் பல குடும்பத்தாருக்குப் பிறப்பு இறப்பு கலியாணம் முதலிய சடங்குகளை நடத்திவைக்கப் புரோகிதர்களைத் தயார்செய்யவில்லை. அதனால் நாளடைவில் புத்தருடைய ஸன்மார்க்க போதனைமட்டும் இந்தியாவின் ஜனங்களுடைய வாழ்வில் ஊள்ளூறப்பரவி யதனுடன் கலந்து போயிற்று.

அசோகனுக்குப் பின் பௌத்த மதத்தில் ஏற்பட்டமாறுதல்கள்

இந்தியாவின் புறத்தில் புத்தருடைய மதம் வேறுவிதம் விகஸித்தது. திபெத் சீனு ஜப்பான் என்ற நாடுகளில் பௌத்தமதம் நிரீசுவரவாதம் அனுத்மவாதம் முதலிய கொள்கைகளை இழந்து கடவுளிடம் நம்பிக்கையுள்ளமதமாய் மாறிற்று. புத்தன் என்ற பதம் முன் ஒரு காலத்திலிருந்த ஞானியின் பெயராயிராமல் யாவரும் தமது முயற்சியால் அடையக்கூடிய ஆன்மீயநிலைமையின் பெயராக சேர்ந்தது. கௌதம புத்தருக்கு முன்னும் பின்னும் அநேகர் புத்தாயிருக்கின்றனர் என்ற கொள்கை பரவிற்று. பூர்வபுத்தர் இருந்த விஷயத்தை அசோகனும் ஒப்புக்கொண்டான் என்பது முன்னே சொன்னேம். இப்படி, படிப்படியாக மஹாயானம் என்ற

பௌத்தமதபேதம் உண்டாயிற்று. புத்தன் என்ற பதம் கடவுளின் வேறு ஒரு பெயராகவும் பரிண மித்தது. சிலோன் தீவிலும் பர்மாவிலும் தற்காலம், பரவியிருக்கும் பௌத்தமதத்துக்கு ஹீனயானம் என்று பெயர். ஹீனயானமதத்தார் மஹோதத்துவங்களைப் பற்றியவரையிலும் பிராசீன பௌத்தக் கொள்கைகளையே போதித்து வருகின்றனர்.

## IV. அசோகன் அரசாட்சி

அசோகன் துரைத்தனம் முன்னிருந்ததன் தொடர்ச்சியே.

நாம் மௌரிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சிமுறையைப் பற்றி விரிவாக எழுதக்கூடும். சந்திர குப்தனுடைய காலத்தில் அவனுடைய ராஜதானியில் பல வருஷங்களாக வசித்துவந்த யவனதூதன் மெகாஸ் தனிஸ் தன் சுதேசம் சென்றதும் தான் கண்டனவும் கேட்டனவுமான செய்தி களைத்திரட்டி, இந்திய விவரணம், என்ற புஸ்தகத்தை அமைத்தான். இதன் சில பாகங்களே இப்போது, நமக்கு அகப்படுகின்றன; ஆயினும், மோரிய அரசாட்சி யின் தன்மை, இந்திய ஜனங்களின் ஒழுக்க வழக்கங்கள் நாட்டின் நீர் நிலவளம் முதலிய பல விஷயங்களை நாம் அவற்றிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். கௌடல்யன், சாணக்கியன், விஷ்ணுகுப்தன் என்று பலவாறு பெயர் கூறப்படும் ராஜதந்திர நிபுணன் சந்திர குப்தனுடைய மந்திரியாயிருந்தானென்றும், அவனது சகாயத்தாலேயே சந்திரகுப்தன் சிங்காதனத்தைக் கைப்பற்றினனென்றும், கௌடல்யனால் இயற்றப்பட்டதென்று மதிக்கப்படும் அர்த்தசாஸ்திரம் என்ற ஒரு நூல் உண்டென்றும் நாம் முன்னே கூறினோம். பிற்காலங்களில் இந்நூல் தர்ம

விரோதமென்று கருதப்பட்டதால் வித்வான்கள் இதன் ஆராய்ச்சியைப் பல நூற்றாண்டுகளாக அசட்டைசெய்தனர். ஆயினும் சிலவருஷங்களுக்குமுன் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இப்புஸ்தகத்தின் பிரதி கிடைத்திருக்கின்றது. இப்பிரதி கிடைத்ததுமுதல் இந்த அர்த்தசாஸ்திரத்தின் ஆசிரியன், காலம், இதன் முதல் நூல்கள், இதிலுள்ள விஷயங்கள் முதலியன பலவித ஆராய்ச்சிகளுக்குக் காரணமாயிருக்கின்றன. கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்திலிருந்து தெரியவரும் விவரங்களை ஏறக்குறைய சந்திரகுப்தனுடைய ஏகாதிபத்தியத்தின் தன்மையாகக் கொள்ளலாமென்று அறிஞர் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

மெகாஸ்தனிஸ் எழுதியுள்ள புஸ்தகத்தின் பாகங்களையும் கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்தையும் இசைத்து நோக்குமிடத்து மோரிய அரசாட்சி, தொடக்கத்தில் எவ்விதம் நடை பெற்றது என்பது விளங்குகின்றது. பூர்வ இந்திய சரித்திரத்தில் வேறு எக்காலத்திற்கும் இத்தகைய நுட்பமான விவரணம் கிடைப்பதில்லை. அது மட்டுமல்ல, இதற்கு ஒப்பான விவரணத்தைக் காண்பதற்கு நாம் கி. பி. பதினாறும்நூற்றாண்டுவரையும் பிரயாணஞ்செய்யவேண்டும். அக்பர் காலத்ததான 'ஆயின்-இ-அக்பரீ' என்ற துரைத்தனவிளக்கத்தில் மட்டுமே நாம் இத்தகைய விவரங்களைக் காணலாம்.

ஆயினும் சந்திரகுப்தனுடைய துரைத்தனத்தை விவரிப்பது இவ்வியாசத்திற்குப் புறம்பானது. அசோகனுடைய புதிதான ராஜீய நோக்கங்களை விளக்குவதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே இவற்றைப்பற்றி இங்குக் கூறுவது சாத்தியம். அசோகனுடைய காலத்தில் ஏகாதிபத்தியத்தின் பெருமை ஒருவிதத்திலும் குன்ற

வில்லை. ராணுவபலத்திலும், நிர்வாக அதிகாரிகளின் திறமையிலும், தேசத்தில் வசித்துவந்த அந்நியநாட்டாரை ஆதரித்துப் போற்றும் நாகரிகத்திலும், வியாபார அபி விர்த்தியிலும், கைத்தொழிற்பெருக்கத்திலும் அசோகனது ஆளுகை முன்னிருந்ததைவிடக் கொஞ்சமுங் குறை வடையவில்லை. பாடலிபுரத்தைச் சுற்றிய மத்தியப் பிரதேசத்தைத் தவிர்த்து மற்றப் பாகங்கள் நான்கு மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டு இளவரசர்பலரால் காப் பாற்றப்பட்டுவந்தன. அசோகனுடைய காலத்தில் இம் மாகாணங்களாவன —1. தக்ஷசிலா அல்லது தக்கசிலை யைத் தலைநகராகவுடைய வடமேற்கு மாகாணம். 2. உஜ் ஜெயினியைத் தலைநகரமாகவுடைய மாளவதேசம் 3. தொஸாலியைத் தலைநகரமாகக்கொண்ட கலிங்கம். 4. சுவ ர்ணகிரியைத் தலைநகராகக்கொண்ட தக்கணமாகாணம். இம்மாகாணங்களில் காரிய நிர்வாகத்திற்குப் பல மந்திரி களும் படிப்படியாகப் பலவித அதிகாரிகளும் இருந்தனர். மெகாஸ்தனிஸ் சொல்லியிருப்பதுபோல, முக்கியமான நகரங்களிலும் ராணுவத்திலும் ஐந்துமெம்பர்கள் அடங் கிய கமிட்டியார் வேலைசெய்து வந்தனர். ஏகாதிபத்தியத் தின் துரைத்தனமானது பல சக்கரங்களையுடைய பெரிய இயந்திரத்தை யொத்திருந்தது.

**அரசனது புது நோக்கங்கள்.**

அசோகனுடைய துரைத்தனம் மேற்கூறியபடி பல விதத்தில், முன்னோராஜ்யத்தில் ஏற் பட்டிருந்த துரைத்தனத்தின் தொடர் ச்சி யாயிருந்தபோதிலும் அரசியலில் அவனுக்குப் புதிய நோக்கங்கள் இருந் தன. அவன் துரைத்தனம் என்ற இயந்திரத்தில் அனுவசியமாய்க்கையிட்டுக் கஷ்டங்களில் சிக்கிக்கொள்ள வில்லை யாயினும் துரைத்தனம் என்பது உயிர் உணர்வு,

கண்ணோட்டம் முதலிய மானிடகுணங்களின் வலிக்குட்படாத வெறும் இயந்திரமாயிருப்பது நன்றல்லவென்று கருதினன். அவனுடைய சுயவாக்கியங்களில் இருந்தே அரசன் நோக்கங்களை நாம் தீர்மானிக்கலாம். 'தர்மத்தினலேதான் பரிபாலனம் உண்டு; தர்மத்தினலேதான் ஒழுங்குண்டு; தர்மத்தினலேதான் சௌக்கியமடையலாம்' (முதல் ஸ்தம்பசாஸனம்). தனது அரசியல் தர்மம் என்ற அடிவாரத்தின்மேல் கட்டப்படவேண்டுமென்று அவன் ஆசைப்பட்டதாக இவ்வாசகம் நமக்கு அறிவிக்கின்றது. 'எல்லா மனிதரும் எனது மக்கள்; எனது குழந்தைகுட்டிகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் எல்லாவித சந்தோஷ சௌபாக்கியங்களும் உண்டாகவேண்டுமென்று நான் ஆசைப்படுவது போலவே எல்லாமனிதருக்கும் அனுக்கிரகங்களைக் விரும்புகிறேன்'' "எவருக்கும் என்னைப்பற்றிக் கொஞ்சமும் அச்சம்வேண்டாம்; நிச்சயமாய் என்னல் அவர்களுக்கு வியசனம் உண்டாகாது. சந்தோஷம் மட்டுமே உண்டாகும். அரசன் எதையும் கூடுமானவரையில் க்ஷமையுடன் பொறுத்துக்கொள்ளும் சுபாவமுடையவன்'' (கலிங்க சாஸனம்). இவ்வாக்கியங்களும் அசோகனுடைய ஆட்சியின் தன்மையை விளக்க எற்றதாயிருக்கின்றன. தினமும் ஆகாயத்தை நோக்கி வசித்துவரும் நம் நாட்டு ஜனங்களைப்போல மன்னவன் கோலை முற்றிலும் நம்பி அக்காலத்துக்குடிகளும் வாழ்ந்து வந்தனர். அசோகன் மகிமை என்னவென்முல், அவன் குடிகளின் க்ஷேமத்தில் தனக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பை நன்கு உணர்ந்தான் என்பதே.

நினைத்த காரியங்களில் ஜயம் ஒன்றே அரசர் க்வனிக்கவேண்டுவது, பொய்மையும் சூதும் பேராசையும்

அரசியலுக்கு இயல்பு என்பது கௌடல்யனுடைய கொள்கைபோலும். அவன் அரசர்களை தேவர்களுக்குச் சமானமாக உயர்த்தி அவர்களுக்குச் சாதாரண மனிதர்க்குரிய தர்மநியாயங்கள் அமையா என்று உரைத்தான். அசோக சாஸனங்களிலுள்ள பல வாக்கியங்கள் இக் கொள்கையை மறுத்துரைப்பதற்கு எழுதப்பட்டவை போல் ஒலிக்கின்றன. ஜனங்களின் நடத்தைக்கு மாதிரியாக வாழவேண்டுவது அரசன் கடமை என்று பல இடங்களில் கூறப்படுகின்றன (உதாரணம்; இரண்டாம் ஸ்தம்ப சாஸனம், ஏழாம் ஸ்தம்ப சாஸனம்.) "முன்னே மனிதர் தேவர்களை அனுசரித்து ஒழுகவில்லை, இப்பொழுது ஜம்பூத்தீபத்தில் மனிதர் தேவர்களை அனுசரித்து ஒழுகுகின்றனர். இது என்னுடைய உழைப்பின் பயன்...... சிறியோரும் பெரியோரும் [நல்வழியில்] உழைத்து வரவேண்டும்" என்று அசோகன் தனது பிரஜைகளுக்கு வற்புறுத்துகிறான் (முதல் உபசாஸனம்).

**சமரஸபாவம்.** பதினான்கு முக்கிய சாஸனங்களில் பன்னிரண்டாம் சாஸனம் சமரஸ பாவத்தின் லக்ஷணத்தையும் அதன் அவசியத்தையும் அதற்கு விரோதமான மனப்பாங்கையும் நன்றாக விளக்குகிறது. எல்லாச் சமயங்களிலும் உயர்ந்த கொள்கைகளும் உயர்நன்னெறியில் ஒழுகும் மானிடர்களுமுண்டென்று மற்றச் சாஸனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பன்னிரண்டாம் சாஸனம் பொன்னெழுத்திற் பொறிக்கும் தகைமைத்து. அசோகன் எல்லா மதங்களையும் வெகுமதித்து, பல மதத்தினரையும் ஒன்றுபோல் காப்பாற்றிவந்தான். ஜனங்களிடையில் பரஸ்பர சிநேகமும் ஒற்றுமையும் வளர்ந்துவந்தன. தன் அயலான் எம்மதத்தானயினும்சரி அவனுடன்

கூடிவாழலாம் என்னும் உண்மையும், மதக்கொள்கைகள் பற்றி ஒருவனுடைய நன்னடக்கை போய்விடாதென்ற உண்மையும், பலகாலம்வரையும் ஐரோப்பாவிலுள்ள ஜனங்களால் உணரப்படவில்லை. வாள்முனையைக்காட்டி மனிதரைப் பயமுறுத்தி மதக்கொள்கைகள் பிரசாரம் செய்யப்பட்டிருக்கின்றன. கொள்கை வேறுபாடுகளுக்காகப் பலர் உயிருடன் நெருப்பிலிடப்பட்டு பொசுக்கப்பட்டனர். நாட்டில் ஒரேவிதமான மதக்கொள்கைகளே நடமாடவேண்டுமென்ற ஆசை பல அரசரையும் மதகுருமார்களையும் அநியாயச் செய்கைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் தூண்டுகோலாயிருந்திருக்கிறது. அதனால், இரண்டாரயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஓர் இந்திய அரசன், ஜனங்கள் மதக்கொள்கைகளுக்காகச் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாதென்றும், நானாவிதமதத்தினர் பரஸ்பர வெகு மதிப்புடனும் அன்புடனும் அடுத்தடுத்து வாழ்ந்து வரலாமென்றும், எல்லாமதங்களிலும் சிரேஷ்டமான தத்துவங்கள் உண்டென்றும் கூறியிருப்பது ஆச்சரியமல்லவா? மதங்கள் விஷயத்தில் அசோகன் காட்டிய சமதிருஷ்டி ராஜதந்திரத்தின் அம்சமென்று நாம் நினைக்க இடமில்லை. இது அசோகனுடைய உயர்ந்த மனோபாவத்தையே குறிப்பிடுகின்றது. அக்காலத்து இந்திய ஜனங்களும் ஸமயச்சண்டைகளைக்கொள்ளாது சமரஸ பாவத்தை ஆதரித்தனர் எனலாம். "ஓர் ஜாதியாரின் நாகரிகத்தை மதிப்பதற்கு அவர் விஞ்ஞானசாஸ்திரங்களில் அடைந்திருக்கும் தேர்ச்சியும் நீர் நெருப்பு காற்று முதலிய இயற்கைச் சக்திகளை அடக்கியாளும் திறமையும் அல்ல அளவுகருவிகள், சமஸரபாவத்தின் முதிர்ச்சியே சரியான அளவுகருவி." என்று ஓர் சரித்திர ஆசிரியர் கூறுகிறார். இவ்வபிப்பிராயம் சரியெனின், இருநூறு

வருஷங்களுக்கு முன்கூட ஐரோப்பிய தேசங்களில் ஏற்படாத உயர்ந்த நாகரிகத்தை கி. மு மூன்றாம் நூற்றாண்டிலேயே நம் தேசத்து ஜனங்கள் அடைந்திருந்தனர்.

**க்ஷேமாபி விர்த்திக்கான ஏற்பாடுகள்**

ராஜ்யத்திற் சுபிக்ஷத்தைப்பெருக்கவும் ஜனங்களின் க்ஷேமத்தின்பொருட்டும் பல ஏற்பாடுகள் அசோகனாற் செய்யப்பட்டன. அரசன் கூறியுள்ள வாக்கியங்களாலேயே இவற்றை நாம் உரைக்கலாம். "தேவர் பிரியனான பியதஸி ராஜனால் ஆளப்பட்ட எல்லாப் பாகங்களிலும் ...... அதுமட்டுமன்று ..... அயல் அரசர் நாட்டிலும் எல்லா இடங்களிலும் அரசன் சிகித்ஸைக்காக இருவித ஏற்பாடுகள் செய்திருக்கிறான். அஃதாவது, மனிதருக்கு வைத்தியசாலை, மிருகங்களுக்கு வைத்தியசாலை என்பனவே. மேலும், மனிதருக்கு உபயோகமானதும் மிருகங்களுக்கு உபயோகமானதுமான மருந்து மூலிகைகள் எவையோ அவை கிடைக்கும் இடங்களிலிருந்து கிடைக்கா இடங்களுக்கு கொண்டுவரப்பட்டுப் பயிராக்கப்படுகின்றன. கனி. காய் கிழங்குகளும் வரவழைக்கப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன....... பாதைகளில் கிணறுகள் வெட்டவும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்படுகின்றன" (இரண்டாம் சாஸனம்). "நான் மாந்தோப்புக்களை வளர்க்கப்பண்ணியிருக்கிறேன். அரைக்குரோசத்துக்கு ஒருதடவை கேணிகள் வெட்டிச் சாவடிகள் கட்டப்பட்டிருக்கின்றன. மிருகங்களுக்கும் மனிதருக்கும் சுகத்தைக் கொடுக்கும் பொருட்டு நான் பல தண்ணீர்ப் பந்தல்களை ஏற்படுத்தியிருக்கிறேன்" (ஏழாம் ஸ்தம்பசாஸனம்). இவ்வித ஏற்பாடுகள் அசோகனுக்கு முன்னிருந்த அரசர்களாலும் செய்யப்பட்டிருக்கலாமாயினும் இவ்விவரம் அசோகன் புகழைக் குறைக்காது.

4

அசோகனால் ஜனங்களுக்கு நியாயம் கிடைக்குமென்று உறுதிமொழி கூறப்பட்டது.

"அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (56-5)

என்ற திருவள்ளுவர் வசனத்தின் உண்மையை அசோகன் உணர்ந்தான்போலும். அநியாயமான சிக்ஷை, சிறைசெய்தல் முதலிய குற்றங்கள் அரசாட்சி செய்வோருக்கு இயல்பே. இவ்வித குற்றங்களை நிவிர்த்திசெய்யும் கடமையை அசோகன் தான் புதிதாக நியமித்த தர்ம மகாமாத்திரர் என்ற அதிகாரிகளிடம் ஒப்பித்தான்: ராஜ்யத்தில் வேலைபார்த்து வந்த பலவித அதிகாரிகளுடைய கடமையில் கவனமின்மை அல்லது கள்ளம் நேருமாயின் அது சக்கரவர்த்திக்குச் செய்யப்படும் பெருந்துரோகமென்று அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். அவர்கள் தம் நிலைமைதவறி நடக்கிறார்களாவென்று தெரிந்துகொள்ள ரகசியமாக ஒற்றர்கள் பலர் அனுப்பப்பட்டனர். சக்கரவர்த்தி ஜனங்களுக்கு அளித்த வாக்குத்தத்தங்களும் பிரதிக்ஞைகளும் அடிக்கடி உரக்கப் படிக்கப்பட்டன; கற்களில் எழுதி விளம்பரம் செய்யப்பட்டன (கலிங்கசாஸனம்). "நகர அதிகாரிகள் அகாரணமாய் மனிதரைச் சிறைசெய்தல் இம்சித்தல் முதலிய தீய வழக்கங்களைத் தவிர்ப்பதற்காக இச்சாஸனம் வரையப்பட்டது". இப்படிக்கு ஒரு சாஸனத்தின் முடிவில் வரைந்திருப்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

**விவசாயம்**

தற்காலத்திலும் முற்காலங்களிலும் மண்ணை உழுது பயிரிட்டு ஜீவனஞ் செய்வோரே தேசத்தின் க்ஷேமத்திற்கு அஸ்திவாரம் போன்றவர். அசோகன் வேளாண்மக்களின் வேண்டுதல்களை மறக்கவில்லை யென்பதற்கு அவனுடைய

மொழியிலிருந்தே நமக்கு ஆதாரம் கிடைக்கவில்லையாயினும் வேறொருவழியாக வெகு இன்பகரமான ஆதாரம் அகப்பட்டிருக்கின்றது. கத்தியவாட் அல்லது குஜராத் எனப்படும் தீபகற்பத்தின் நடுவில் கிர்நார் என்ற ஒரு மலை உண்டு. அங்குள்ள பாறையில் அசோகனுடைய பதினான்கு சிலாசாஸனங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. முன் அப்பாகத்தை ஆண்டுவந்த வேறு பல அரசரின் லிகிதங்களும் அங்கிருக்கின்றன. கி. பி. 150-ம் வருஷம் அங்கே அரசாட்சி செய்த ருத்ரதாமன் என்ற க்ஷத்ரப அரசன் எழுதியுள்ள லிகிதத்தில் அசோகனது பெயரும் அவன் விவசாயத்திற்காகச்செய்த வேலையொன்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சுதர்சன ஏரி என்ற பெரிய ஏரி ஒன்று பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தது. ருத்ரதாமன் காலத்தில் அவ்வேரி பலவிதமான சீர்கேடுற்று விவசாயிகளுக்கு உதவாதிருந்தது. அவன் சுதர்சன ஏரியைச் சீர் திருத்தி அதற்குப் புதிய கால்வாய்களும் சீப்புக்களும் அமைத்த விவரங்களே அவனுடைய கல்வெட்டின் விஷயம். ஆயினும் அந்த லிகிதத்தில் ருத்ரதாமன் சுதர்சன ஏரியின் பூர்வ சரித்திரத்தையும் குறிப்பிடுகிறான். அது சந்திரகுப்தன் காலத்தில் முதலில் வெட்டப்பட்டதென்றும், ஆனால் அப்போது ஜலத்தைப் பாய்ச்ச அவசியமான கால்வாய்கள் யாவும் பூர்த்தியாக வெட்டப்படவில்லையென்றும், அசோகன் கால்வாய்களை வெட்டிச் சில சீப்புகளையும் அமைத்தானென்றும் இங்குக் கூறப்படுகின்றன. அசோகன் இப்பிரதேசத்தில் துஷாஸ்பன் என்ற யவன அரசனைத் தனது பிரதிநிதியாக வைத்து இக்காரியங்களைச் செய்து முடித்தானாம்.*

* எபிக்ராபியா இந்திக்கா (Epigraphia Indica) Vol. viii. பக்கம், 36.

**கட்டிடங்கள்**

அசோகனால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களும் மடங்களும் கி. பி நான்காம் நூற்றாண்டில் பாஹியன் என்ற சீனயாத்திரிகன் இங்கு வந்த காலத்திலேயே எண்ணிறந்தனவென்று கருதப்பட்டன. பௌத்த மதத்தாருக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பிரயோஜனப் படுகின்ற பல கட்டிடங்களும் ஸ்தாபனங்களும் அசோகனாற் செய்யப்பட்டன. பாடலிபுரத்தில் ஏறக்குறைய ஆயிரம் பிக்ஷுக்களுக்கு அன்ன வஸ்திரங்கள் அளித்து அவரைக் காப்பாற்றிவந்த அசோகாராமம் என்ற பௌத்தமடம் ஏற்பட்டிருந்தது. அதன் அருகிலுள்ள நாலந்தா என்ற ஊர் பல சாஸ்திரங்களும் கலைஞானங்களும் தழைத்த பெரிய வித்தியாபீடமாய் விளங்கிற்று. தக்ஷசிலையின் கல்விப் புகழும் குன்றாது பெருகியது. ஜனங்களுக்கு இடையில் எழுதி வாசிக்கக் கூடிய திறமை அபூர்வமாயிருக்கவில்லையென்பதற்கு அசோக சாஸனங்களே சான்றாகும்.

**சாஸனங்களிற் கூறப்படும் அதிகாரிகள்**

அசோகசாஸனங்களிற் பலவகை அதிகாரிகளின் பெயர் கூறப்படுகின்றது. அதிகாரிகளின் பெயர் எவ்விதங்களில் வருகின்றது என்பதை ஓர் பட்டிகையில் எழுதி விளக்கலாம்.

| சாஸனங்களிற் கூறப்படும் ராஜ அதிகாரிகள். | இவர்களைக் குறிப்பிடும் சாஸனங்கள். |
|---|---|
| 1 தர்மமகாமாத்திரர் | 5-ம் சாஸனம் 7-ம் ஸ்தம்பசாஸனம். |
| 2 ரஜூகர் | 3-ம் சா. 4-ம் ஸ்தம்பசா. |
| 3 ப்ராதேசிகர் | 3-ம் சாஸனம். |
| 4 மகாமாத்திரர் | ஸார்நாத் சா. இராணிகாருவாகியின் லிகிதம். கலிங்க சாஸனங்கள். 6-ம் சாஸனம். முதல் உப சா. 7-ம் ஸ்தம்பசாஸனம். |

| சாஸனங்களிற் கூறப்படும் ராஜ அதிகாரிகள். | இவர்களைக் குறிப்பிடும் சாஸனங்கள். |
|---|---|
| 5 அந்தமகாமாத்திரர் | முதல் ஸ்தம்பசாஸனம் |
| 6 புலிஸர் | 1, 4, 7-ம் ஸ்தம்பசாஸனங்கள் |
| 7 விருசபூமிகர் | 12-ம் சா. |
| 8 ஸ்திரீ மகாமாத்திரர் | 12-ம் சா. |
| 9 தூதர் | 13-ம் சாஸனம். |
| 10 யுக்தர் | 3-ம் சா. |
| 11 ஆயுக்தர் | இரண்டாம் கலிங்கசா. |
| 12 வியோஹாலகர் | முதல் கலிங்கசா. |
| 13 வ்யூதர் | முதல் உபசா. 7 ம் ஸ்தம்பசா. |
| 14 பதிவேதகர் | 6-ம் சாஸனம். |

இவ்வதிகாரிகளுடைய ஸ்தானங்களையும் வேலைகளையும்பற்றி, சாஸனங்களிலிருந்துமட்டும் நாம் அறிந்துகொள்வன சிலவே. கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்தையும் அக்காலத்ததான வேறு நூல்களையும் ஆழ்ந்து ஆராய்வோமெனில் இவ்விஷயம் இன்னும் நன்கு விளங்கலாம்.

அசோகன் முடிசூடிய பதினன்காவது பட்டபிஷேக வருஷத்தில் தர்மமகாமாத்திரர் என்ற புது உத்தியோகம் சிருஷ்டிக்கப்பட்டது (ஐந்தாம் ஸ்தம்ப சாஸனம்). இவர்கள்வேலை தர்மத்தைப் பிரசாரம் செய்வதும் காப்பாற்றுவதும் ஜனங்களுக்கு உபகாரம் செய்வதும் தானதர்மங்களை நடத்திவைப்பதுமே. இவ்வதிகாரிகளுக்குத் தனிப் பிரதேசம் கொடுக்கப்படவில்லையென்று தோன்றுகிறது. எப்போதும் பிரயாணஞ்செய்து, ஸர்வ வியாபகமாயிருந்து, எல்லோருக்கும் நன்மைகளைச் செய்து, அனாதைகளுக்கு அன்னவஸ்திரங்கள் அளித்துக் காப்பாற்றி காட்டுஜாதியாருக்கும் குறவரைப்போல அலைந்து திரிந்து

வாழ்கின்ற ஜனங்களுக்கும் தர்மத்தைப் போதித்து வர வேண்டுவதே தர்மமகாமாத்திரரின் அலுவல் என்று கூறப்படுகிறது.

ரஜுகர் என்பவர் மாகாணங்களின் தலைவராயிருந்தனர். அர்த்தசாஸ்திரத்தில் இவர்களை ஸ்தானிகர் என்று கூறப்பட்டிருக்கிறது. இவர்களின் ஆளுகையில் அடங்கிய பிரதேசத்திற்குச் சாஸனங்களில் "ஜனபதம்" என்று பெயர் கூறப்படுகின்றது. இதன் ஜனத்தொகை அனேகலக்ஷம் என்று சொல்லப்படுகின்றது. ஜனபதத்தின் துரைத்தனத்தில் ரஜுகருக்கு முன்னிலும் அதிக சுதந்திரத்தை அசோகன் அளித்ததாக நான்காம் ஸ்தம்பசாஸனம் கூறுகின்றது. ப்ராதேசிகர் என்பவர் ரஜுகரின் கீழுள்ள நிர்வாக அதிகாரிகளாம். மகாமாத்திரர் என்ற பதம் இவ்விருவகை அதிகாரிகளுக்கும் மற்றும் பலருக்கும் பொருந்தும் பொதுப் பெயர். புலிஸர் அல்லது புருஷர் எனப்படுபவர் அரசன் காரியதரிசிகள் போலும். மற்ற அதிகாரிகளின் வேலையை மேல்நோக்கி அவரைச் சோதனை செய்வது இவர் வேலையென்று நாம் ஊகிக்கலாம். அந்தமகாமாத்திரர் என்ற அதிகாரிகள் காட்டுஜாதியாரையும் எல்லைப்பிரதேசங்களிலுள்ள அநாகரிக ஜனங்களையும் கவனித்து வந்தனர். அரசனுடைய பொறுமையைச் சோதிக்கக் கூடிய தொந்தரவுகள் இந்த ஜனங்களிடமிருந்து வந்துகொண்டிருந்தனவென்று பதின்மூன்றும் சிலாசாஸனத்தில் குறிப்பிடப்படுகின்றது. பதிவேதகர் என்பவர் அரசனுடைய அரண்மனையில் விசாரணைக்காக வரும் வழக்குக்களைக் கவனிக்கவேண்டிய அதிகாரிகளாம். விஷயத்தை உடனுடன் அரசனுக்குத் தெரிவித்து நியாய விசாரணையை நடத்தி, வழக்குகளைத் தீர்ப்புச்செய்வது இவர்களுடைய அலுவல் எனலாம்.

விருச்பூமிகர் என்றும் ஸ்திரீமகாமாத்திரர் என்றும் பெயர்பெற்ற அதிகாரிகள் பன்னிரண்டாம் சாஸனத்திற் கூறப்படுகின்றனர். ஆனால் பெயர் கூறப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்திலிருந்து அவர்களுடைய அலுவல் ஊகிக்கக் கூடவில்லை. வியோஹாலகர் என்பவர் நகர அதிகாரிகள் போலும். யுக்தர் ஆயுக்தர் என்பவர் கீழ்த்தர அதிகாரிகள். வ்யூதர் என்பவர் துறவிகளாகிய தர்மப் பிரசாரர்கள் போலும். சாஸனங்களில் வருகின்ற சொற்களுள் வ்யூதர் என்ற பதத்தைவிட அதிகமாகப் பண்டிதர்களுக்கு இடையில் பலவித வாதப்பிரதிவாதங்களுக்குக் காரணமாயிருக்கும் பதம் வேறு இல்லையென்று சொல்லலாம்.

அனுஸம்யானம்

அனுஸம்யானம் என்ற ராஜீய ஸ்தாபனத்தைப்பற்றி மூன்றும் சாஸனத்திலும் கலிங்க சாஸனத்திலும் கூறப்படுகின்றது. இதன் கருத்தென்னவென்பதை வித்வான்கள் இன்னும் நிச்சயித்துக் கூறவில்லை. அதிகாரிகள் ஸ்தல மாறுதல், சுற்றுப்பிரயாணம் செய்துவருதல் என்ற பொருள் இங்குப் பொருத்தமுள்ளதாக நமக்குத் தோன்றவில்லை. ஒவ்வொரு பிரதேசத்தினுடையவும் முக்கியமான காரியங்களைத் தீர்மானஞ்செய்ய அதிகாரிகள் ஜனங்களை அல்லது ஜனத்தலைவர்களை ஓரிடத்தில் வரவழைத்து அவருடன் ராஜீய விஷயங்களைப்பற்றிப் பேசுவதே அனுஸம்யானம் என்று சில வித்வான்கள் கூறுவது பொருந்துமென்று தோன்றுகிறது. மூன்றும் சாஸனத்தின்படி அனுஸம்யானத்தின் நோக்கமாவது, "அதிகாரிகள் தங்கள் வேலையைச் சரிவர முடிப்பதும் தர்மத்தை எல்லோருக்கும் போதிப்பதுமே". பாடலிபுரத்தைச் சுற்றி அனுஸம்யானமானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும், உஜ்ஜயினி தக்ஷசிலா மாகாணங்களில் மூன்று ஆண்டு

களுக்கு ஒருமுறையும், தொஸாலி மாகாணத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடந்து வந்ததென்று சொல்லப்படுகிறது. இச்சொல்லுக்கு நாம் கொள்ளும் கருத்து சரியாயின், அசோகன் ஆளுகை முற்றிலும் ஏக சக்ராதிபத்தியமா யிருக்கவில்லை யென்றும் ஜனங்களுடைய சம்மதத்துடன் பல காரியங்கள் நடந்தனவென்றும் ஊகிக்கலாம்.

துரைத்தனத்தில் மெகாஸ்தெனிஸ் கூறியிருப்பது போன்ற கமிட்டிகள் அமைந்திருந்தனவென்றும் சாஸனங்கள் அறிவிக்கின்றன. கணு, பரிஷத், நிகாயா முதலிய நிர்வாக சபைகள் மூன்றும்சாஸனத்திலும், பன்னிரண்டாம் சாஸனத்திலும், வேறிடங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் அமைப்பும் கடமைகளும் என்னவென்று விளங்கவில்லை.

அசோகனுடைய பெருமை அவனுடைய ராஜீய நோக்கங்களிற் பிரதிபலிக்கின்றது. அவ்வரசனுடைய புதிய ராஜீய நோக்கங்களும் அவனால் துரைத்தனத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தங்களும் அவனுக்குப்பின் நிலைநின்றதாகத் தோன்றவில்லை. அசோகனுடைய சந்ததியார் அவனுடைய உற்சாகத்தையும் உயர்நோக்கங்களையும் உரிமையாகக் கொள்ளவில்லை. ஆயினும் அசோகனின் அரசாட்சி எக்காலமும் உலகசரித்திரத்தில் முக்கிய இலக்கியமாயிருக்கும் என்பது தெளிவு.

**அசோக ஏகாதிபத்தியத்தின் விரிவு**

அசோகக் கல்வெட்டுகள் அகப்படும் இடங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு அசோகனுடைய ஏகாதிபத்தியத்தின் விரிவை நாம் ஏறக்குறையத் தீர்மானிக்கலாம். மேலும், சந்திரகுப்தனுடையகாலத்தில் ஏகாதிபத்தியம் அடைந்திருந்த விரிவிலிருந்து அசோகன்

காலத்தில் ஏகாதிபத்தியத்தின் விரிவு குறைவுபடவில்லை. பர்மாவைத் தவிர்த்துள்ள இந்திய ராஜ்யத்தைவிட அசோகன்ராஜ்யம் அதிக விரிவாயிருந்தது. அதில் தென் கோடியிலுள்ள தமிழ்நாட்டு மூவேந்தரும் அங்குள்ள வேறு அரசரும் உட்படவில்லை; ஆயினும் தற்காலத்தில் இந்தியாவுக்குப் புறமாயிருக்கும் பலூச்சிஸ்தானம், அப்கானிஸ்தானம் அதற்கு அப்பாலுள்ள ஹிந்துக்குஷ் மலைத்தொடர்வரையுமுள்ள பிரதேசம் இவை அசோகன் ஸாம்ராஜ்யத்தில் அகப்பட்டிருந்தன. வடக்கே காச்மீரமும் நேப்பாளமும் கிழக்கே அஸ்ஸாம் வரையுமுள்ள நாடுகளும், தெற்கே மைசூர் வரையுமுள்ள தக்கணமும் அந்த ஸாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. ராஷ்டிரிகர், பிதேனிகர், புலிந்தர், ஆந்த்ரர் முதலிய ஜனங்கள் அசோகனுடைய ஆதிபத்தியத்துக்கு உட்பட்டவர்களாயிருந்தாலும் அவர்கள் அதிக சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர். இந்தியாவின் புறமே மத்திய ஆசியாவிலுள்ள கோபிப்பாலைவனப்பிரதேசத்துள்ள கோட்டான் அல்லது சீனதுர்க்கிஸ்தானம் அக்காலத்தில் வளமும் நாகரிகமும் தழைத்த தேசமாயிருந்தது. இப்பிரதேசம் அசோகன் ஆளுகைக்கு உட்பட்டிருக்கவில்லையாயினும் எக்காரணத்தாலோ அசோகனுடைய செல்வாக்கு அங்கு அதிக வலிமையுடையதாயிருந்தது. அதற்கு அசோகனுடைய தர்மப்பிரசாரம் அல்லாமல் வேறு காரணங்களும் இருக்கலாம். வியாபாரப் போக்குவரவு முற்காலங்களிலேயே ஏற்பட்டிருந்தது. அசோகன் காலமுதல், கல்வி கேள்விகள் விஷயமாகவும் அதிகமான போக்குவரவு ஏற்பட்டன. அசோகன் மகனான குனாலன் கோட்டான் ஜனங்களால் அரசனாகத் தெரிந்தெடுக்கப்பட்டானென்றும் பௌத்த மதம் அவன் மூலமாக அப்பக்கங்களில் பரந்ததென்றும்

திவ்யாவதானத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்பிரதேசம் அக்காலத்தில் செழித்தோங்கிய பல ஸ்தூபங்களாலும் விஹாரங்களாலும் விளங்கியதாக யுவன்சுவங் கூறுகிறான்.

## V. அக்காலத்துப் பழம்பொருள்கள்

இவற்றிலும் பழமையானவை இந்தியாவில் கிடையா

நமக்கு அகப்பட்டுள்ள பண்டைக்காலச் சாமான்களில் அசோகன் காலத்துக்கு முற்பட்டவை அதிகமில்லை. இந்தியாவின் பழைய சரித்திர ஆராய்ச்சிக்கு இஃது ஒருபெருங்குறைவே. எகிப்து, அஸ்ஸிரியா, கிரீஸ், க்ரீட் முதலிய தேசங்களில் கி. மு. 2000 அல்லது 2500 வருஷங்களுக்கு முன்னுள்ள பழம்பொருள்கள் அகப்பட் டிருக்கின்றன. ஆனால் மழை மிகுதியினாலும் இந்தியாவின் சீதோஷ்ணநிலையின் விசேஷத்தாலும் அவ்வளவு புராதனமான பொருள்கள் நம் நாட்டில் அதிகமாக அகப்படவில்லை. அசோகன் காலத்துக்கு முன் வீடுகளும் அரண்மனைகளும் கோயில்களும் எல்லாவித கட்டிடங்களும் மரத்தினாலேயே செய்யப்பட்டன. இவ்விஷயம் நம் நாட்டில் மிகப்புராதனமான பொருள்கள் அகப்படாததற்கு வேறு ஒருகாரணம். அசோகன் காலத்தில் அல்லது அதற்குச் சற்று முன்புதான் இந்திய ஜனங்கள் கட்டிடங்களுக்குக் கற்களை உபயோகிக்கத் தொடங்கினர். அசோகன் கற்களை மரக்கட்டிடங்களுக்கு உபகரணமாக உபயோகப்படுத்தியிருக்கலாம்.

அசோகனுடைய வேலைகள்

அசோகனால் கட்டப்பட்ட கட்டிடங்கள் எண்ணிறந்தனவென்ற ஜனங்களின் நம்பிக்கையைக் குறிப்பிட்டு, பாஹியன் என்ற சீனயாத்திரி, மூன்றே மூன்று வருஷங்

களிற் கண்களுக்குத் தென்படாத யக்ஷர் கின்னரர் போன்ற தெய்வங்களின் உதவியைக்கொண்டு அரசன் எண்பத்துநாலாயிரம் ஸ்தாபனங்களைக் கட்டுவித்ததாகக் கூறுகிறான். அசோகனால் கட்டப்பட்டவை ஸ்தூபங்கள் மட்டுமல்ல; காச்மீரத்தின் தலைநகரமாகிய ஸ்ரீநகரும் நேப்பாளத்தின் தலைநகரமாகிய லலிதாபட்டணமும் அசோகனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று முன்னே சொன்னோம். நாலந்தாவும் இக்காலத்தில் உற்பத்தியாயிற்று.

**இவற்றின் தற்கால அறிதறிகள்**

பாட்னாவின் சமீபம் அசோகன் அரண்மனை இருந்ததென்று சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. 1913 ஹூல் பம்பாய் நகரத்துக் கோடிஸ்ரீமான்களாகிய டாட்டா வம்சத்தாரின் பணஉதவியின் காரணமாக அங்கே புராதனவஸ்து ஆராய்ச்சி தொடங்கப் பட்டது. தலைஸ்தானத்துள்ள ஸபாமண்டபம் ஆஸ்தான மண்டபம் முதலிய கட்டிடங்களின் அடையாளங்கள் பல தரையைத் தோண்டிப் பார்த்ததில் அகப்பட்டன. பாரசீக தேசத்துப் பழைய அரண்மனைகளின் சிற்ப விசேஷங்கள் இங்கும் காணப்படுகின்றன; ஆதலால் இங்குள்ள வேலைப்பாடு பாரஸீக சிற்பிகளுடைய தாயிருக்க வேண்டுமென்று அனுமானிக்கப்படுகிறது.

ஒருகாலத்தில் அசோகனுடைய கட்டிடங்கள் இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும் மிகுந்திருந்தன. அசோகனுக்குப் பிற்காலத்தில் மகததேசத்துக்கு பிஹார் என்று பெயர் வந்த காரணம் அந்நாடு முழுவதும் பௌத்த விஹாரங்களால் நிறைந்திருந்தமையே எனலாம். ஆனால் தற்காலம் அசோகனால் கட்டப்பட்ட கட்டிடங்கள் இவ்வுலகத்திலுள்ள பல மாயைகளைப்போல

அழிந்து மறைந்துபோயிருக்கின்றன. அவற்றின் அறி குறியாய்க் கிடைத்துள்ள புராதன வஸ்துக்களை இங்கு விவரிப்போம்.

ஸ்தூபங்கள்

ஸ்தூபம் என்றால் பௌத்த மதத்தைச்சேர்ந்த பெரியோருக்குக் கல்லினால் கட்டப்படும் சமாதி. இதை, பௌத்தர் பள்ளியென்றும் கூறலாம். முனிவரின் சாம்பலை ஸ்தூபத்தின் மேற்புறத்தில் அடக்கம் செய்வார்கள். உருவத்தில் ஸ்தூபம் ஒரு பெரும் கோளத்தின் பாதியை உயர்ந்த பீடத்தின்மேல் கவிழ்த்ததுபோலிருக்கும். ஸ்தூபம் கருங்கல்லினாலோ சுட்ட செங்கற்களாலோ கட்டப்பட்டதாயிருக்கலாம். ஸ்தூபத்தின் புறமே விளக்குமாடங்களும் வேறு அலங்காரங்களும் இருக்கும். மேற்புறத்தில் இங்கிலீஷ் எழுத்து T போன்ற அடையாளமும் அதற்குமேல் பரந்த ஒரு குடையும் காட்டப்பட்டிருக்கும். தொண்டர் ஸ்தூபத்தைப் பிரதக்ஷிணம் செய்துவர பிராகாரமும், பிராகாரத்தின் நான்கு புறமும் பெருங் கற்களினால் செய்யப்பட்ட வேலியும் வேலியின் புறமே கோபுரவாசல்களைப்போல மிக்க அலங்காரமாய்ச் செய்யப்பட்ட வாசல்களும் சிதைவுபடாத ஸ்தூபங்களில் காணலாம் இப்படிப்பட்ட ஸ்தூபம் ஒன்று நல்ல ஸ்திதியில் ஸாஞ்சி என்ற ஊரில் இருக்கிறது. இவ்வூர் மத்திய இந்தியாவைச்சேர்ந்த போபால் சம்ஸ்தானத்தில் உள்ளது. அங்கு இரண்டு மூன்று ஸ்தூபங்கள் இருக்கின்றன. அவற்றிற் பிரதானமான ஸ்தூபம் அசோகன் காலத்தது என்று அனுமானிக்கப்படுகிறது. வாசல்கள் பின் கட்டப்பட்டவையாயினும் முதலாவது க்ஷேத்திரம் பூராவும் மரத்தினாற் கட்டப்பட் டிருக்கலாம். பிற்காலத்து அரசர் தமக்கு இயன்றவாறு இதேவேலைகளைக்கற்களில் செய்திருக்கலாம்.

ஸாஞ்சியிலுள்ள பிரதான ஸ்தூபம் ஆதியில் சுமார் எழுபத்தெட்டடி உயர்ந்திருந்தது. தற்காலம் அதன்மேலுள்ள அலங்காரங்கள் போய்விட்டன; ஆதலால் அது ஐம்பத்துநான்கு அடி உயரமிருக்கிறது. இக்கட்டிடத்தின் மிக அழகான வேலைப்பாடு நான்கு திசைகளையும் நோக்கி நிற்கும் வாசல்களாம். இவை முப்பத்துநான்கு அடி உயர்ந்து மிகக் கம்பீரமான தோற்றத்துடன் விளங்குகின்றன. இவ்வாசல்களின் மேல்பாகத்திற் கல்லினாற் பலதோரணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இலேசான மரக்கட்டையைக் கையாளுவதில் தச்சனுக்கு எவ்வளவு கைலாகவமும் திறமும் நுட்பமும் ஏற்படலாமோ அப்படிப்பட்ட லாகவமும் நுட்பமும் நாம் அங்குள்ள கல்சிற்பங்களில் காண்கிறோம். சில வாசல்கள் பிற்காலத்தவையாயிருந்தாலும் அந்த ஸ்தூபத்தை அசோகன்காலத்துச் சிற்பத்திறமைக்கு மாதிரியாக நாம் வைத்துக் கொள்ளலாம்.*

ஸாஞ்சி ஸ்தூபம்

பர்ஹூத் என்ற ஊரிலுள்ள ஸ்தூபமும் அசோகன் காலத்ததே. இது ஸாஞ்சிக்குச் சுமார் இருநூறு மைல் கிழக்கே உள்ளது. ஸ்தூபம், சுட்ட செங்கற்களினால் செய்யப்பட்டது; ஆயினும் புறமுள்ள கல்வேலியின் கற்களில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் மிக அருமையானவை. வேலியிலுள்ள கற்களெல்லாம் அக்காலத்து நடை உடை பாவனைகளை விளக்கும் சிற்பங்களால் நிறைந்திருக்கின்றன. ஜாதகக் கதைகள் என்பவை கௌதம

பர்ஹூத் ஸ்தூபம்

*. ஸ்ரீ. ரிஸ் டேவிட்ஸ (Rhys Davids) என்பவரால் எழுதப்பட்ட "பௌத்த காலத்து இந்தியா" (Buddhist India) என்ற புஸ்தகத்தில் இக்காலத்துச் சிற்பங்களின் படங்கள் பல இருக்கின்றன.

புத்தருக்கு அவருடைய முன் ஜன்மங்களில் ஏற்பட்ட அனுபவங்களைக் கூறும் கதைகளென்று பௌத்தர்களால் கருதப்படுகின்றன. அவைகளிற் பல குரங்கு, யானை, முதலை, மான், காகம், கோழி முதலிய பிராணிகளைப் பற்றிய ஈஸாப்பின் கதைகள் போன்றவை. பர்ஹூத் ஸ்தூபத்தின் வேலிக்கற்களிலுள்ள சிற்பங்கள் பல ஜாதகக் கதைகளையும் புத்தரின் வாழ்நாட்களில் நடந்த சம்பவங்களையும் விளக்கச் செதுக்கப்பட்ட சித்திரங்களாம். அச் சிற்பங்களின் கீழ், "மிகஜாதகம்," "நாக(யானை)ஜாதகம்" "ஷட்தந்தி ஜாதகம்," "ஹம்ஸ ஜாதகம்," "கின்னர ஜாதகம்," "குக்குட ஜாதகம்," "மகாதேவ ஜாதகம்" "ஜனகராஜ ஜாதகம்" என்று சிற்பத்தின் விஷயம் கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றது. இக் கல்வெட்டுகள் இந்தியாவின் வேறு பல பாகங்களிற் காணப்பட்ட சித்திரங்களின் கருத்தை விளக்க மிகவும் உபயோகப்பட்டன.

**ஸார்நாத் ஸ்தூபம்**

காசியின் அருகில் உள்ள ஸார்நாதத்தில் 1905 வருஷத்தில் புராதன வஸ்து ஆராய்ச்சி தொடங்கியபோது அங்குப் புதைந்து கிடந்த ஸ்தூபம் தெரியவந்தது. அந்த ஸ்தூபம் ஸாஞ்சி ஸ்தூபத்தை விடப் பெரியது; செங்கல்லினாற் கட்டப்பட்டது.

**கயை ஸ்தூபம்**

புத்த கயையில் அசோகனால் கட்டப்பட்ட ஸ்தூபம் பல நாள் வரையில் இருந்தது. அந்த ஸ்தூபத்தின் புறவேலியிலுள்ள கற்கள் மட்டும் இப்போது அங்குக் காணப்படுகின்றன. அசோகனுடைய கட்டிடங்களின் அவசிஷ்டங்களுடன் அதற்குப் பிற்காலத்து வேலைப்பாட்டின் பாகங்களும் கலந்து கிடக்கின்றன.

அசோகன் காலத்திற் புத்தருக்கு விக்ரகங்கள்

கிடையா. ஆனல் புத்தருடையவும் அவருடைய தர்மத்தினுடையவும் அறிகுறியாகச் சில அடையாளங்கள் இருந்தன. தொண்டர் இந்த அடையாளங்களை வணங்கி வந்தனர். அவற்றில் முக்கியமானது போதி விருக்ஷம். மிருகங்களாலும் மனிதர்களாலும் தெய்வங்களாலும் விருக்ஷங்கள் வணங்கப்படுவதை ஸாஞ்சி, பர்ஹூத் இங்குள்ள சிற்பங்களில் நாம் மிகுதியாய்ப் பார்க்கலாம். சக்கரங்களும் வெகுவாக கற்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை புத்தர் தர்மத்தை உலகத்திற்குப் போதிக்கத் தொடங்கியதின் அறிகுறி. இரண்டு காலடியிணைகள் சித்திரிக்கப்பட்டு அவற்றைச் சுற்றி நிற்கும் பலர் இவற்றைப் போற்றி வணங்கும் சிற்பத்தையும் சில இடங்களிற் காணலாம். இதுவும் புத்தரின் சின்னமே. மஹாயான பௌத்தமதம் இந்தியாவிற் பிரபலமானதும் ஸ்தூபங்கள் புத்தரின் கோயில்களாய் மாறின. புத்தருக்குப் பலவிதப் பிரதிமைகள் ஏற்பட்டன. ஸ்தூபத்தின் புறக்கல்லின் நடுவில் புத்தருடைய உருவம் செதுக்கப்பட்டு நமது இந்துக் கோயில்களில் நடப்பதுபோல அதன் முன் பூஜை அபிஷேகம் தூபதீபங்கள் முதலிய சடங்குகளும் நடக்கத் தொடங்கின. ஸ்தூபத்தையே மற்றொரு பெரிய அறையின் ஓரத்தில் கட்டி முழுவதும் ஒரு பௌத்தக் கோயிலாய் மாற்றப்பட்டது. இப்படிப்பட்ட கோயில்களே சைத்தியம் அல்லது பள்ளி எனப்படும்.

ஸ்தூபங்களில் உண்டான மாறுதல்கள்

அசோகனல் குடையப்பட்ட குகைகளைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. மிக உறுதியான கருங்கல்லில் பல துறவிகள்சேர்ந்து வாசம் செய்யும்படி விசாலமான அறைகள் மலையோரங்களில் குடையப்பட்டிருக்கின்

குகைகள்

றன. உட்புறம் மிக நன்ருய் இழைக்கப்பட்டிருக்கிறது.

அசோகனல் நாட்டப்பட்ட ஸ்தம்பங்கள், அவனுடைய அரசாட்சிக்கு மிக உயர்ந்த ஞாபகச் சின்னங்களென்று சொல்லலாம். அசோகன் காலத்துக்குமுன்னமே இப்படிப்பட்ட ஸ்தம்பங்கள் இருந்தனவென்று சாஸனங்களிலிருந்து தெரியவருகிறது.* அசோகன் காலத்துக்குப்பின்னும் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தம்பங்கள் பல உள்ளன. நூறுவருஷங்களுக்கு முன்கூட இப்போதிருப்பதிலும் பல அதிகமாயிருந்தன. இத்தகைய தூண்களின் பெருமையைச் சாதாரண ஜனங்கள் உணராமல் அவை தாறுமாருய் உபயோகிக்கப்பட்டன. ஸ்தம்பங்களின் துண்டுகள் சாலைகளில் பரப்பும் சரளை அடித்துச் சமப்படுத்த ரூலர்களாகவும் கரும்பாலையில் உரல்களாகவும் உபயோகப்படுத்தப்பட்டன.

இப்போது காணப்படும் அசோக ஸ்தம்பங்கள் பன்னிரண்டு. அவற்றில் பத்து ஸ்தம்பங்களில் அசோகனுடைய லிகிதம் காணப்படுகிறது. இரண்டில் ஒரு லிகிதமுமில்லையாயினும் ஸ்தம்பங்கள் அசோகன் காலத்தவையே. ஹிந்துஸ்தானப் பிரதேசத்துக்கு வெளியில் எங்கும் அசோகனுடைய ஸ்தம்பங்கள் கிடைத்தில.

| அசோக ஸ்தம்பங்களின் விவரம் | அங்கு காணப்படும் லிகிதங்கள் |
| --- | --- |
| 1. டில்லி - தோப்ரா ஸ்தம்பம். | ஸ்தம்பசாஸனங்கள் 1-7 |
| 2. டில்லி - மீரத் ஸ்தம்பம். | ஷை. 1-6 |
| 3. பிரயாகை ஸ்தம்பம் | ஸார்நாத் சாஸனத்தின் பகுதி. ராணிகாருவாகியின் லிகிதம். ஸ்தம்பசாஸனங்கள் 1-7 |

* முதல் உபசாஸனம் ரூபநாத் பாடம். 7-ம் ஸ்தம்பசாஸனம்.

| அசோக ஸ்தம்பங்களின் விவரணம் | அங்குக் காணப்படும் லிகிதங்கள் |
|---|---|
| 4 ஸார்நாத் ஸ்தம்பம். | ஸார்நாத் சாஸனம். |
| 5. ஸாஞ்சி ஸ்தம்பம். | ஷை சாஸனத்தின் பகுதி. |
| 6. ரும்மின்தேயி ஸ்தம்பம். | ஸ்மாரக லிகிதம் ஒன்று. |
| 7. நிக்லீவா ஸ்தம்பம. | ஷை மற்றொன்று. |
| 8. லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம். | ஸ்தம்ப சாஸனங்கள் 1. 6. |
| 9. லௌரியா அரராஜ் ஸ்தம்பம். | ஷை. |
| 10. ராம்பூர்வா ஸ்தம்பம். லிகிதமுள்ளது. | ஷை. |
| 11. ராம்பூர்வா ஸ்தம்பம் லிகிதமில்லாதது. | |
| 12. பக்ஹிரா ஸ்தம்பம் லிகிதமில்லாதது. | |

எல்லா ஸ்தம்பங்களும் வேலைப்பாட்டில் ஒன்று போலிருத்தலால் அவற்றைப் பொதுவாய் விவரிக்கலாம். ஸ்தம்பத்திற்கு அடியில் சதுரமான பீடமும், மேலே விசித்ரமாய்க் கண்டாமணி போன்ற சிகரமும், சிகரத்தின்மேல் வட்டமாகவோ சதுரமாகவோ உள்ள ஓரடி கனமுடைய தட்டும், அத்தட்டின்மேல் ஒன்று அல்லது, இரண்டு, மூன்று, அல்லது நான்கு சிங்கங்களுடைய பிரதிமை ஸ்தம்பத்தின் மகுடமாகவும் இருக்கின்றன. சில ஸ்தம்பங்களில் மகுடம் விருஷபம் அல்லது கருடன் பிரதிமையா யிருக்கின்றது. இவற்றின் உயரம் 40 அல்லது 50 அடி.

**இவற்றின் சிற்பத்திறமை**

அதிகமாய்க் கெடாமலும் சுவஸ்தானத்திலும் இருக்கும் அசோக ஸ்தம்பங்கள் இரண்டு மூன்றே. மறுபக்கத்தில் காணப்படும் லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம் மிக அழகானது. அதன் சிகரம் ஔரங்கஸீப் காலத்திற் குண்டு பட்டு கொஞ்சம் சிதைவுபட் டிருக்



லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம்.

கின்றது; ஆயினும் ஸ்தம்பத்தின் அழகு கெடவில்லை. பக்ஹிரா ஸ்தம்பம் இதைவிடப் பெரிதாயினும் வேலைப் பாட்டில் இதுவே சிறந்தது. இதன் உயரம் 40 அடி. சிகரம் மட்டும் சுமார் 7 அடி. மத்திய பாகம் உருக்கோ வெண்கலமோ என்று மயங்கும்படி இழைக்கப்பட்டிருக் கிறது. சிகரத்தின் மேலுள்ள தட்டு வட்டவடிவம். அதன் விளிம்பில் அன்னங்கள் தம் இரையைக் கொத்தித் தின்னுவதைக் காட்டும் சித்திரம் வெகு அழகாய்ச் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தம்பம் சன்னார் மலை யிலுள்ள கருங்கல்லினால் ஆக்கப்பட்டது அங்கிருந்து எப்படி இதை வெட்டி வேறாக்கினார்கள்? எந்தக் கல் தச்சர் இதைச் செதுக்கி இழைத்தனர்? எந்தச் சிற்பிகள் இதன் சிகரத்தைச் சித்திரித்தனர்? இக் கேள்விகளுக் குச் சரியான விடை நாம் இங்குச் சொல்ல முடியாது. ஆனால் இப்பணிசெய்தோர் யாவருக்கும் கைமுடுகு உரிய தென்று நாம் சொல்லலாம்.

ஸமீபத்திற் கிடைத்துள்ள ஸார்நாத் ஸ்தம்பத்தின் சிகரம் மிகவும் சிரேஷ்டமான வேலைப்பாடு அமைந்தது. அதன் படத்தை 70-ம் பக்கத்தில் காணலாம். ஸ்தம் பத்தின் மகுடம் நான்கு சிங்கங்கள் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு தர்ம சக்கரத்தைத் தமது முதுகில் சுமந்து கொண்டிருப்பதுபோல் உள்ளது சிங்கங்கள் ஜீவனுள் ளன போலவும் மிகக் கம்பீரமாகவும் இருக்கின்றன.

இந்தச் சிற்பத்தைப் பற்றிய மதிப்பு

அசோகன் காலத்துச் சிற்பங்களின் குணகுணங் களை வித்வான்கள் பலவிதமாக நிதா னிக்கிறார்கள். பெர்ஸியா தேசத்து அரசர்களும் தம் நாட்டில் ஸ்தம்பங் களை நாட்டினர். அவற்றை அசோக னுடைய ஸ்தம்பங்களுக்குப் பலவிதத்திலும் ஒப்பிடலாம்.

அசோகன் அரண்மனையும் மற்றக் கட்டிடங்களும் இந்திய சிற்பிகளின் வேலை யல்லவென்றும் கட்டிடங்களின் வேலைப் பாட்டில் இந்தியாவுக்கு அந்நியமான தேசங்களுக்குரிய அலங்காரங்கள் காணப்படுவது இதற்குச் சான்று என்றும் அபிப்பிராயங்கள் புராதன வஸ்துசாஸ்திரிகள் கூறுகின் றனர். நாம் இதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஏனென் றால், ஸ்தம்பங்களிலும் கட்டிடங்களிலுமுள்ள அலங் காரங்கள் இந்தியாவுக்கு அந்நியமானவை யென்று ஸர்வ ஸம்மதமாய் நிரூபிக்கப்படவில்லை. எல்லாத் தேசங்க ளுக்கும் இயற்கையான ஸங்கீதமும் இலக்கியமும் இருப் பதுபோலச் சிற்பமும் இயற்கையாகவே ஏற்படுகிறது. அடுத்தது காட்டும் பளிங்கு போல சிற்பங்களும் அந்தந்த நாட்டாரின் வாழ்வையும் மனோபாவங்களையும் பிரதிபலிக்கச்செய்கின்றன. இந்தியாவுக்குமட்டும் இப் படிப்பட்ட சுயமான சிற்பம் இல்லையென்று சொல்ல முடியுமா?

இந்தியா கவர்ன்மெண்டின் புராதனவஸ்து பரிசோத கரில் முக்கியராகிய டாக்டர் மார்ஷல் துரையும் அசோகன் காலத்துச் சிற்பம் அந்நிய மனிதரின் வேலையென்று மதிக் கின்றார்; ஆனாலும் சிற்பங்களின் வேலைப்பாட்டை அதிக மாக மெச்சி எழுதுகிறார். அவர் ஸார்நாத் ஸ்தம்பத்தைப் பற்றி எழுதியிருப்பது பின் வருமாறு: "பூர்வ காலத்து வேலைகளுள் இவ்வளவு உயர்ந்த மனோதர்மமும் சிற்பத் திறமையும் காணப்படும் வேலை வேறு எத்தேசத்தும் கிடையாது என்று நான் சொல்லத் துணிகின்றேன்." இந்த மதிப்பு ஸார்நாத் ஸ்தம்பத்தின் சிகரத்துக்குமட்டு மன்று, பொதுவாக எல்லா அசோக ஸ்தம்பங்களுக்கும் அமையுமென்பது நமது துணிபு. அசோகன் காலத் துக்குமுற்பட்ட சிற்பம் அதிகமாக அகப்படவில்லை; ஆயினும்

நாம் முதலாவதாக இந்தியாவின் சிற்பத்தை நோக்கும் போது அது குழந்தைப் பருவத்ததா யிராமல் ஆரம்பத் திலேயே பூர்ண யௌவனத்துடன் காணப்படுகிறது. இதிலிருந்து நம் நாட்டில் சிற்பத்தின் அபிவிர்த்தி வெகு காலத்துக்கு முன்னமே தொடங்கிவிட்டதென்றும் அசோகன் காலத்துக்குமுன் மரவேலையில் அடைந்த திறமை, கடைசியாகக் கல்வேலைக்கு உபயோகப்படுத்தப் பட்டதென்றும், இப்படிப்பட்ட சாதனத்தின் வேறுபாட் டினால் சிற்பத்தின் மேன்மை அதிகக் குறைவுபடவில்லை யென்றும் இந்திய சிற்ப அபிமானிகள் கூறுகின்றனர்.

## VI. அசோக எழுத்து

**இருவித புராதன லிபிகள்**

அசோகன் காலத்தில் உபயோகிக்கப்பட்ட லிபி இருவகைப்படும். (i) பெரும்பாலான இந்திய பாஷைகளைப்போல் இடது பக் கத்திலிருந்து வலது பக்கத்துக்கு எழு தப்படும் ப்ராம்மி லிபி. (ii) மற்றொன்று ஹிந்துஸ் தானியைப்போல வலது பக்கத்திலிருந்து இடது பக்கத் துக்கு எழுதப்படும் கரோஷ்டி லிபி. ப்ராம்மி லிபியை இந்தியாவிலுள்ள எழுத்துக்களுக்கெல்லாம் தாய் என்று சொல்லலாம். பெரும்பாலான அசோக சாஸனங்கள் இந்த லிபியிலேயே எழுதப்பட் டிருக்கிறது. அசோக சாஸனங்களிற் காணப்படும் இவ்விருவகை லிபிகளைவிடப் புராதனமான லிபிகள் இந்தியாவில் இல்லையென்று சொல்லலாம்.

இந்தியாவிலுள்ள பாஷைகளுக்கு வெவ்வேறு லிபீ தற்காலத்தில் ஏற்பட்டிருந்தாலும் இந்த லிபிகள் அசோக சாஸனங்களிலுள்ள ப்ராம்மி லிபியிலிருந்து



ஸார்நாத் ஸ்தம்பத்தின் சிகரம்.

உற்பத்தியானவையே. இவ்வுண்மை இந்த லிபிகள் எல்லாவற்றையும் தாரதம்மியப்படுத்திப் படிக்கும் பக்ஷத்தில் எளிதில் விளங்கும். எழுத்தின் வடிவம் எழுதுவதற்கு உபயோகிக்கப்படும் ஸாதனங்களுக்குத் தக்கபடியும் கருவிகளுக்குத் தக்கபடியும் லேககன் சரீரஸ்திதிக்குத் தக்கபடியும் மாறுதல் அடைகின்றன. இக்காரணங்களால் எழுத்தின் வடிவம் காலதேசங்களை அநுஸரித்துப் பல மாறுதல்கள் அடைவதை நாம் சாஸன ஆராய்ச்சி மூலமாய் அறிந்துகொள்ளலாம். அசோகன் காலத்துக்கு நூறு வருஷங்களுக்குப்பின் ப்ராம்மி லிபியில் செங்குத்தான கோடுகள் மாறி வட்டங்களும் வளைவுகளும் ஏற்பட்டன. உதாரணமாக பட்டிப்ரோலு லிகிதத்தில் * இப்படிப்பட்ட வளைவுகளை நாம் அதிகமாய்க் காண்கிறோம். தமிழ், தெலுங்கு, கிரந்தம், மலையாளம், கன்னடம் என்ற தென்மொழிகளின் எழுத்துக்கள் ஷை லிகிதத்தில் காணப்படும் லிபியிலிருந்து உற்பத்தியானவை என்பதை தென் இந்தியாவில் வசிக்கும் நாம் கவனிக்கலாம்.

ப்ராம்மி லிபி இந்திய எழுத்துக்களுக்கு மூலாதாரம்

இந்தியாவின் பாஷைகள் அநேக ஆயிர வருஷங்களாக ஒருவித லிபியும் ஏற்படாமல் விர்த்தியடைந்து வந்தன. எல்லாவித கிரந்தங்களையும் சந்தை சொல்லி மனப்பாடம் செய்யும் வழக்கத்தால் இந்திய ஜனங்களுக்குத் தங்கள் பாஷையை எழுதுவதற்கு லிபி அவசியமில்லாமலிருந்தது. அப்படியாயின் இந்தியபாஷை

இந்திய பாஷைகளுக்கு லிபி ஏற்பட்ட விதம்

* பட்டிப்ரோலு கிருஷ்ணா நதியின் முகத்தில் குண்டூர் ஜில்லாவிலுள்ள ஊர். பட்டிப்ரோலு லிகிதம் Epigraphia Indica, Vol. II. பக்கம் 323-ல் கண்டுகொள்ளவும். இதன் காலம் கி. பி. 200.

களுக்கு எப்போது லிபி ஏற்பட்டது? இந்தக் கேள்விக்கு ஸ்ரீபூலர் என்ற புராதன வஸ்து சாஸ்திரியின் விடை பின் வருமாறு: சுமார் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவுக்கும், அதன் மேற்கிலுள்ள யூதரைப் போன்ற ஜாதியாருக்கும் வியாபாரவிஷயமாய்க் கடல்யாத்திரையும் சாமான்களின் போக்குவரவும் முன்னிலும் அதிகமாய் ஏற்பட்டன. இச் சாதியாரிடமிருந்தே இந்திய ஜனங்கள் எழுதும் வித்தையைக் கற்றுக்கொண்டனர். ஏனென்றால், இவர் எழுதிவந்த லிபியிலும் ப்ராம்மி லிபியிலும் சில எழுத்துக்கள் வடிவிலும் உச்சரிப்பிலும் ஒத்திருக்கின்றன.

ஆனால் ப்ராம்மியி லுள்ள எல்லா எழுத்துக்களும் கடனாகக் கிடைத்தவை யல்லவென்று ஸ்ரீபூலரும் ஒப்புக்கொள்ளுகிறார். இந்தியர் தங்களிடமிருந்த புது உச்சரிப்புக்கு அவசியமான குறிகளைத் தாமே ஏற்படுத்திக்கொண்டனர். வியாபாரிகள் தாம் கற்ற புது வித்தையை முதலில் ஞாபகக் குறிப்புகளுக்கு உபயோகப் படுத்தினார்கள். பனையோலையும் பூர்ஜபத்திரமும் செம்புபோன்ற லோகத் தகடுகளும் இந்நாட்டில் எழுதுவதற்கு ஸாதனங்களாயின. லிபி வழக்கத்தில் வந்த பிறகும் மதக் கிரந்தங்களை இப்படிப்பட்ட ஸாதனங்களில் எழுதிவைப்பதற்கு வேதியர் துணியவில்லை. காலக்கிரமத்தில் மதசம்பந்தமான கிரந்தங்களும் எழுதப்பட்டு மனிதன் ஞாபகசக்திக்கு ஏற்பட்டிருந்த அனாவசியமான பாரத்தை கொஞ்சங்கொஞ்சமாய் ஜனங்கள் குறைத்துக்கொண்டனர்.

கரோஷ்டி லிபி

கரோஷ்டி லிபி யூதஜாதியாரிடமிருந்து கிடைத்ததன்று. கி. மு. ஐந்தாம்நூற்றாண்டில் இந்தியாவின் வடமேற்கிலுள்ள பிரதேசங்கள் பெர்ஸியா தேசத்தாரின் ஆதீனத்திலிருந்தன. இந்தப் பிரதேசங்களில் ஆர்மேயிக்

என்ற பெர்ஸியாதேசத்து லிபி பரவிற்று. கரோஷ்டி இந்த லிபியிலிருந்து உற்பத்தியானது. கரோஷ்டி லிபி அசோகன் காலத்திலும் அதற்குப்பின் சில நூற்றுண்டுகள் வரையும் பஞ்சாபிலும் வடமேற்கு மாகாணத்திலும் ஸிந்துதேசத்திலும் பரவியிருநதபோதிலும் கடைசியில் இந்தியாவிலும் அதன் புறமும் முற்றிலும் மறைந்து போயிற்று. மத்திய ஆசியாவிலுள்ள கோட்டான் ஒரு காலத்தில் வளமையும் நாகரிகமும் தழைத்த தேசமாயிருந்ததென்று முன்னே கூறினோம். கரோஷ்டி லிபியில் எழுதப்பட்ட பௌத்தமதக் கிரந்தங்களும் மற்றக் கிரந்தங்களும் இத்தேசத்திலிருந்து சமீப காலத்தில் புதையலாய் அகப்பட்டிருக்கின்றன. இவை உலகத்துக்கு மிகவும் அருமையான செல்வமென்று வித்வான்களால் மதிக்கப்படுகின்றன.

## VII. பிரியதர்சி அரசன் கல்வெட்டுக்கள்

**இவற்றின் பாதுபாடு**

அசோகன் நாளில் நடந்த சம்பவங்களைத் தீர்மானிக்கவும் அரசன் காலத்தை நிர்ணயிக்கவும் அசோக சாஸனங்கள் எவ்வளவு முக்கிய ஆதாரங்களாயிருக்கின்றனவென்று நாம் நிரூபித்தாய்விட்டது. இனி இச் சாஸனங்களையே நோக்கவேண்டும். நமக்கு இதுவரையும் கிடைத்துள்ள அசோக லிகிதங்கள் முப்பத்துமூன்று. இவற்றில் பன்னிரண்டு லிகிதங்களில் அரசன் பட்டாபிஷேக வருஷம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இஃதன்றி வேறு சில லிகிதங்களிலும் கால நிர்ணயம் செய்வதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்தச் சாஸனங்கள் யாவும் ராஜீய அதிகாரிகளுடையவோ மந்திரிகளுடையவோ வாக்கியங்களாயிராமல் அரசன் நாவிலிருந்து வந்த வாக்கியங்கள் என்

பதில் ஐயமில்லை; ஏனென்றால் அரசனன்றி வேறெவரும், எவ்வளவு சுதந்திரமுடையவராயினும், எழுதத் துணியாத வாக்கியங்கள் பலவற்றை நாம் சாஸனங்களிற் காணலாம். பல லிகிதங்களும் "தேவர்களுக்குப் பிரியனை பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான்" தேவாணும் பியோ பியதஸி லாஜா ஏவம் ஆஹா என்றோ, அல்லது இவ்வாக்கியத்தைக் கொஞ்சம் மாற்றியோ தொடங்குகின்றன.

**இவற்றின் தன்மை**

அசோகனுடைய சாஸனங்கள் மிகப் புதுமையான தஸ்தாவேஜுகளாம். இந்தியாவிலுள்ள வேறு ஒரு அரசனும் இப்படிப்பட்ட சாஸனங்களை எழுதிவைத்திலன். இச் சாஸனங்களும் பலவகைப்பட்டன. சில, அரசன் தன் அதிகாரிகளுக்கு அனுப்பிய கட்டளைகளின் பிரதிகள் போலிருக்கின்றன. மற்றவை அரசன் ஜனங்களுக்கு அனுப்பும் விளம்பரங்களென்று தோன்றும். தர்மப் பிரசாரத்தில் அரசன் கொண்ட மிகுதியான உற்சாகத்தினால் பலசாஸனங்களில் அரசன் ஜனங்களுக்குத் தர்மத்தைப் போதிக்கிறான். இவற்றை அரசன் சட்டங்கள் என்று கொள்ளக்கூடாது. இப்போதனைகளைப் பிரஜைகள் மீறி நடக்கிறதைப்பற்றி அரசன் வியசனமடைந்தாலும் ஜனங்களைக் கட்டாயப்படுத்தவோ மீறுதலுக்குச் சிக்ஷைகள் விதிக்கவோ விரும்பினதாக நாம் எண்ண இடமில்லை.

**வாசகரீதி**

இந்த லிகிதங்களுடைய வாசகரீதி சிற்சில இடங்களிற் சுருக்கமாக அமைந்திருக்கிறதென்றும் மற்ற இடங்களில் விரிவாயிருக்கிறதென்றும் அசோகன் கூறுகிறான் (பதினான்காம் சாஸனம்). சுருக்கமாக அமைந்திருக்கிற பாகங்கள் இல்லையென்றே சொல்லலாம். மிக விரிந்து தளர்ந்த வாசகரீதியே இவற்றின் விசேஷகுணம். சுருங்கச்

சொல்லி விளங்கவைத்தலுக்கும் இந்த லிகிதங்களுக்கும் வெகு தூர முண்டு. ஆயினும் அசோகன், விஷயத்தினுடைய தேன் போன்ற மாதுரியத்தாலேயே இவ்விதம் விவரிக்கவும் திருப்பிச் சொல்லவும் தூண்டப்பட்டதாகச் சொல்வது நாமும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஸமரஸ பாவத்தைப்பற்றிய பன்னிரண்டாம் சாஸனம், தர்மத்தின் வெற்றியைப்பற்றிய பதின்மூன்றும் சாஸனம், அரசன் நற்செய்கைகள் பலவற்றை எடுத்துக்கூறும் ஏழாம் ஸ்தம்ப சாஸனம், இவற்றை நாம் வாசிக்கும்போது அரசனுடைய உயர் நோக்கங்களையே நாம் குறிப்பிடுகிறோம். இவைகளின் ஏற்றமானது வாசகரீதியின் குற்றங்களை மறக்கச் செய்கின்றது.

சாஸனங்கள் அல்லாத லிகிதங்கள்.

அசோகனால் எழுதப்பட்டவை யெல்லாம் சாஸனங்கள் அல்ல. உதாரணமாக, ரும்மின் தேயீயிலுள்ள கல்வெட்டுக்களும் குகைகளிலுள்ள கல்வெட்டுக்களும் சாஸனங்கள் என்ற பெயருக்கு உரியவையல்ல; அவற்றை லிகிதங்கள் என்று மட்டுமே சொல்லமுடியும்.

லிகிதங்களின் பிரிவு

அசோக லிகிதங்கள் எல்லா வகையும் எல்லாப் பிரதிகளும் சேர்ந்து 140 என்று கணக்கிடலாம். ஒவ்வொரு லிகிதத்துக்குமுள்ள பல பிரதிகளை வெவ்வேறாக எண்ணினால் இக்கணக்கு ஏற்படுகிறது. பிரத்தியேகமான தஸ்தாவேஜுகள் முப்பத்து மூன்று; அவற்றை ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

I. உப சாஸனங்கள். 2

இவை அரசன் பௌத்தமதத்தில் சேர்ந்ததன் பின் முதலில் பிரசுரம் செய்யப்பட்டவை. அகப்பட்டுள்ள அசோகக் கல்வெட்டுக்களுள் இவையே முந்தியவைபோலும்.

II. பாப்ரு சாஸனம். I

பௌத்த ஸங்கத்திலுள்ள தலைவருக்கு அசோகன் எழுதிய கடிதம். பாப்ருவில் அகப்பட்டிருப்பதால் பாப்ரு சாஸனம் என்று இதற்கு ஸ்ரீ வின்ஸென்ட் ஸ்மித் பெயர் வழங்குகின்றார்.

III. பதினான்கு முக்கிய சாஸனங்கள் 14

இவை அசோகன் தர்மத்தையும் அவனுடைய நோக்கங்களையும் விவரிக்கின்றன.

IV. கலிங்க சாஸனங்கள். 2

புதிதாகப் பிடிக்கப்பட்ட கலிங்க தேசத்து ஜனங்களுக்கும் அதன் பக்கத்திலுள்ள காட்டு ஜாதியாருக்கும் அபயதானம் செய்யும் சாஸனங்கள்.

V. ஸ்தம்ப சாஸனங்கள். 7

அரசனது அரசாட்சியின் தன்மையைப் பற்றியும் கொள்கைகளைப் பற்றியும் கடைசி முறையாக பிரசுரம் செய்யப்பட்டவை.

VI. ஸார்நாத் சாஸனம். I

பௌத்த ஸங்கத்தை உட்பகைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு இடப்பட்ட கட்டளை. ஸாஞ்சி ஸ்தம்பத்திலும் பிரயாகை ஸ்தம்பத்திலும் இச்சாஸனத்தின் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

VII. ஸ்மாரக லிகிதங்கள். 2

ரும்மின்தேயியிலும் நிக்லீவாவிலும் அசோகனது தீர்த்தயாத்திரையின் ஞாபகக்குறிப்பாக எழுதப்பட்டவை.

VIII. ராணி காருவாகியின் லிகிதம். 1

இங்கு அசோகன் ராணி காருவாகி, தனது தானங்களை விசேஷமாய்க் கவனிக்க வேண்டுமென்கிறான்.

IX. தானப்பிரமாண லிகிதங்கள் 3

இவை ஆஜீவகர் வாசம் செய்வதற்கு என்று குடையப்பட்ட குகைகளில் உள்ளவை.

மொத்தம் ... 33

இந்த லிகிதங்கள் தற்காலம் எவ்வளவு தூரம் கேடில்லாமல் இருக்கின்றன என்றும், எவ்விடங்களில் காணப்படுகின்றன என்றும், அவற்றின் காலம் இன்னதென்றும் காட்டும் குறிப்புக்கள் அந்தந்த லிகிதங்களின் தமிழ் மொழிபெயர்ப்புடன் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மொழிபெயர்க்கப்பட்ட பதத்திற்கு மூலத்தில் உள்ள சொல் இன்னதென்று அந்த லிகிதத்தின் முடிவில் வரும் குறிப்புக்களில் எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மூலத்தில் வரும் சொல்லையே பெயர்ப்பிலும் எழுதி அதன் கருத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் கீழுள்ள குறிப்புக்களில் எழுதப்பட்டிருக்கின்றன. சாஸனங்களுடைய பிரதிகள் யாவும் ஒன்றுபோல் இருக்கமாட்டா. பாஷைமட்டுமன்று, வேறு வித்தியாசங்களும் காணப்படும். இம் மொழிபெயர்ப்பில் அவ்வித்தியாசங்களை நாம் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. ஸார்நாத் சாஸனத்திலும் வேறு சில லிகிதங்களிலும் சில வரிகள் அழிந்திருக்கின்றன; அந்த வரிகளிலுள்ள சொற்கள் இன்னவை யென்று வித்வான்கள் அனுமானித்திருக்கின்றனர். இவையன்றி சாஸனங்களின் கருத்தை விளக்க உபயோகமென்று

கினைத்துச் சில சொற்கள் மூலத்தில் இல்லாவிடினும் மொழி பெயர்ப்பில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இவை ( ) இவ் வடையாளத்துக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன.

அசோக லிகிதங்களின் பாஷை

அசோகன் காலத்திலிருந்த இந்துஸ்தானத்து ஜனங்கள் தங்கள் வீட்டிலும் ராஜ்யகாரியங்களிலும் உபயோகித்துவந்த பாஷையை நாம் அசோகனுடைய சாஸனங்களிலும் பார்க்கிறோம். தற்காலத்தில் ஹிந்துஸ்தானத்திற் பேசப்படும் பாஷைகள் இந்தச் சாஸனங்களின் பாஷையிலிருந்து உண்டானவையே. அசோக சாஸனங்களின் பாஷையை ஒருமையில் குறிப்பிடுவதா பன்மையில் குறிப்பிடுவதா என்பது எளிதில் தீர்மானிக்கக் கூடியதன்று. சாஸனங்களின் மொழி, இடத்துக்கிடம் கொஞ்சம் வித்தியாசப்பட்டிருக்கிறது. இப்படி வித்தியாசப்பட்ட மொழிகள் மூன்று வகைப்படுமென்று சொல்லலாம். அவையாவன: கிர்நார் சாஸனத்தில் காணப்படும் மேற்குமொழி; தவுளியில் காணப்படும் கிழக்கு மொழி; ஷாபாஸ்கர்ஹியில் காணப்படும் வடமேற்கு மொழி. அக்காலத்திலேயே சம்ஸ்கிருதம் பேச்சுவழக்கில் இல்லாமல் இதிகாஸம், காவியம், நாடகம், வியாகரணம் முதலிய விஷயங்களைத் தெரிவிப்பதற்கும் நூல்கள் இயற்றுவதற்கும் மட்டுமே உபயோகிக்கப்பட்டு வந்தது. பேச்சுவழக்கிலுள்ள மொழிகளைப் பிராகிருதம் என்று நாம் சொல்லுவோம். பௌத்தமதம் பிரபலமான போது புத்தரின் வாக்கியங்களையும் கொள்கைகளையும் பிரதிபாதிப்பதற்கு அவர் சீஷர் ஸம்ஸ்கிருதத்தை உபயோகிக்கவில்லை. பாமரஜனங்கள் புத்தரின் உபதேசங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் கோசலதேசத்தில் அப்போது பேசப்பட்டுவந்த பிரா

கிருதத்தையே அவர் எல்லாக் காரியங்களுக்கும் உபயோகித்தனர். அதனால் பௌத்தமதக்கிரந்தங்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டன. விரைவில் இம் மொழி இலக்கிய இலக்கணமுடைய ஒரு புதுப்பாஷையாயிற்று. இதை நாம் பாலி என்று சொல்லுவோம். இந்தப் பாலி பாஷை இப்போது இலங்கை பர்மா முதலிய பௌத்த தேசங்களில் தெய்வபாஷையாகப் போற்றப்பட்டு வருகிறது. பாலி, ஸம்ஸ்கிருதத்துக்கு நெருங்கிய சம்பந்தமுடையது; ஆனால் அசோக சாஸனங்களின் பாஷை ஸம்ஸ்கிருதத்துக்குப் பாலியைவிட நெருங்கிய சம்பந்தமுடைத்தா யிருக்கிறது. தமிழ் மொழியில் பிராகிருத மூலமாக வந்துள்ள சொற்கள் பல உண்டு.

**இலக்கணக் குறிப்பு**

அசோக லிகிதங்களின் பாஷை ஸம்ஸ்கிருதத்திலிருந்து எவ்வித வேறுபாடு உடையது என்பதை விளக்குவது மிக உபயோகமா யிருப்பினும் இவ்விவரணம் ஒரு இலக்கண நூலாக முடியுமென்று அஞ்சி இக்குறிப்பைச் சுருக்கி எழுதுகிறோம்: சமீபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீபாண்டுரங்க தாமோதர குணே அவர்களால் எழுதப்பட்ட Introduction to Comparative Philology, (Poona, 1918) என்ற புஸ்தகத்தில் இவ்விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது. அதில் ஸம்ஸ்கிருதத்துக்கும் அசோக லிகிதங்களின் பாஷைக்கு முள்ள ஒற்றுமை வேற்றுமைகள் மூன்று வகையாகப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. I. சொற்களின் உச்சரிப்பில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்கள். அஃதாவது, சொற்களில் ஒலிகள் நீட்டப்பட்டிருத்தல், அல்லது சுருக்கப்பட்டிருத்தல், அல்லது மெய் எழுத்துக்களில் மாறுதல் முதலியன. II. வேற்றுமை உருபுகளிற் காணப்படும் வேறுபாடுகள். III. காலம் செயல் முதலியவற்றைக் காட்டும் பொருட்டு வினைசொற்களில் ஏற்படும் வித்தியாசங்கள். இவற்றிற்கு உதாரணங்கள் குறிப்புரைகளில் காணலாம்.

பாலிபாஷையைப் போலவே இந்த லிகிதங்களின் பாஷையி

லும் ௫, லு, ஐ, ஒள என்ற உயிர் ஒலிகள் கிடையா. ஐயும், ஔவும், ஏயும், ஓவாக மாறுகின்றன. ௫, லு க்கள் மழுங்கிப்போகின்றன. தமிழில், மோக்ஷம் என்ற சொல்லை மோக்கம் என்று எழுதுவதும் கிருஷ்ணன் என்பதை, கண்ணன் என்று எழுதுவதும் பிராகிருத மொழியின் உறவினால் ஏற்பட்டதே.

இடத்துக்கு இடம் அசோக லிகிதங்களின் பாஷை எவ்வித வேறுபாடுகளுடையது என்பது பதினான்கு முக்கிய சாஸனங்களின் ஆறு பாடங்களையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து விளங்கும். ஸம்ஸ்கிருதமே என்று சொல்லக் கூடிய சொற்களும் இலக்கண ரூபங்களும் எல்லா இடங்களிலுள்ள லிகிதங்களிலும் காணப்படுகின்றனவென்றாலும் ஷாபாஸ்கர்ஹியில் காணப்படும் லிகிதங்கள் பாஷையில் ஸம்ஸ்கிருதத்துக்கு மிகவும் அடுத்ததாயிருக்கின்றன. ஆனால் இங்குள்ள லிபியில் பல குறைவுகள் உள. உதாரணமாக குறில் நெடில் என்ற வித்தியாசங்களே இங்கு காணப்படவில்லை. ஆதலால் கிர்நார் பிரதியே வடமொழிப்பயிற்சி யுள்ளோருக்கு எளிதில் விளங்கக் கூடியதாயிருக்கிறது.

கிர்நாரிலும் ஷாபாஸ்கர்ஹியிலும் தவிர மற்றிடங்களில் ங, ஞ, ண, ந என்ற மூர்த்தன்னிய ஒலிகளைக் குறிப்பிடத் தனியான எழுத்துக்கள் கிடையா; எல்லாம் ந வாலேயே குறிப்பிடப்படுகின்றன. வடமேற்குப் பிரதிகளிற்போல கிர்நாரிலும் ர, ல என்ற இரு எழுத்துக்களும் உள; அதனால் இங்கு ராஜா என்ற சொல் லாஜா என்று எழுதப்படுவதில்லை. ஆயினும் கிர்நார் பிரதி வேறு அம்சங்களில் கீழ்த் திசை லிகிதங்களையும் தென் திசை லிகிதங்களையும் ஒத்திருக்கின்றது. உதாரணமாக, இவ்விடங்களிலுள்ள லிகிதங்களில் ச, ஷ, ஸ என்ற ஒலி வித்தியாசங்கள் கிடையா. வடக்குள்ள பாடங்களில் இவ்வுயிர்மெய்கள் உச்சரிக்கப்பட்டு பிரத்தியேகமாக எழுதப்பட் டிருக்கின்றன. இவைபோன்ற வேறுபாடுகளும், இலக்கண ரூபங்களில் சில வேறுபாடுகளும் இடத்துக்கு இடம் லிகிதங்களிற் காணப்படுகின்றன.


70
75
80
85
90
35
30
25
அசோக ராஜ்யம்
கி. மு. 250.
யவனர்
காம்போஜர்
உத்யானம்
காந்தாரம்
மான்ஸேரா
ஸ்ரீநகர்
தோப்ரா
மீரத்
பெய்ராத்
பாப்ரு
பரயாகை
கங்கை
யமுனை
ஸாரநாத்
ராம்பூர்வா
ருப்நாத்
உஜ்ஜயினி



ஸொப்பாரக்
கோதாவரி
ஆந்த்ரா
ஜொகாதா
கலிங்கம்
தவளி
ப்ரம்ஹகிரி
சத்யபுத்திரர்
சொழர்
காவிரி
பாண்டியர்
தாம்பபர்ணி
பதினாங்கு சாஸனங்கள்.....
உபசாஸனங்கள்.............
அசோக ஸ்தம்பங்கள்.........
சாஸனங்களில் கூறப்படும்
ஜனங்களும் தேசங்களும்
20
15
10
70
75
80
85
90

பிராம்மி எழுத்து



தெ வா னம் பி யோ பி ய உ ஸி லா ஜா எ வம் ஆ ஹ

கரோஷ்டி எழுத்து



ஹஅவம்எ ய ர ஸி ஆ ய ப்ரி ய ப்ரி ன வ தெ

**தேவர்களுக்குப் பிரியனை**
**பியதஸி அரசன்**
**இவ்விதம் கூறுகிருன்.**

# I. உப சாஸனங்கள்

இதுவரையில் நமக்குக் கிடைத்துள்ள அசோக சாஸனங்களில் உபசாஸனங்களே ஆதியானவையென்று ஊகிக்கப்படுகின்றன. இவை அரசன் முடிசூடிய பதின்மூன்றும் வருஷத்தில் பிரசுரமானவை. இந்தச் சாஸனங்கள் இரண்டு. முதல் லிகிதத்துக்கு மொத்தம் ஏழு பிரதிகள் கிடைத்திருக்கின்றன. இரண்டாவது லிகிதம் மைசூர் ஸம்ஸ்தானத்தினுள் மூன்று சமீபமான ஊர்களில் காணப்படுகிறது. முதல்உபசாஸனத்தில் பிரதிக்குப் பிரதி கொஞ்சம் வித்தியாசங்கள் காணப்படுகிறது. முதலாவது லிகிதம் காணப்படும் இடங்களாவன.

1. ரூபநாத். இது மத்திய மாகாணத்தில் ஜபல்பூரின் அருகிலுள்ள ஊர். லிகிதம் சுமாராக வாசிக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது.
2. ஸஹஸ்ராம். இது பிஹார் மாகாணத்தின் தெற்கேயுள்ள குன்று: லிகிதம் இதன் உச்சியிலுள்ள பாறையில் இருக்கிறது. லிகிதம் சிதைவுபட்டுள்ளது.
3. பெய்ராத். இது ராஜபுதனத்தில் ஜெயப்பூர் ஸம்ஸ்தானத்தில் உள்ள ஊர். பாப்ரூ என்ற ஊரும் இதற்குச் சமீபமுள்ளது; லிகிதம் சிதைவுபட்டுள்ளது.
4. ஸித்தாபுரம். மைசூரின் வடக்கு சித்தல்துர்க்கம் ஜில்லாவில் உள்ள ஊர்.
5. பிரம்மகிரி. ஷை ஊருக்கு ஸமீபமுள்ளது. இங்குள்ள லிகிதமும் ரூபநாத்திலுள்ள லிகிதமுமே வாசிக்கக் கூடிய நிலைமையிலுள்ளன.
6. ஜடிங்கராமேசுவரம். இதுவும் ஷை ஊருக்குச் சமீபமுள்ளது.
7. மாஸ்கி. ஹைதராபாத் ராஜ்யத்தில் ரெய்ச்சூர் ஜில்லாவில் உள்ளது. இங்குள்ள லிகிதம் ஏழு வருஷங்

களுக்கு முன் கண்டெடுக்கப்பட்டது. கடைசியாக அகப்பட்டிருக்கும் இந்த அசோக லிகிதத்தில் பியதஸி என்ற பெயருடன் அசோகன் என்ற பெயரும் காணப்பட்டிருக்கிறது. அவதாரிகை, 8-ம் பக்கம் பார்க்க.

இரண்டாவது உப-சாஸனம் 1, 2, 3, 7 ஊர்களில் காணப்படவில்லை. மைசூரிலுள்ள மூன்று இடங்களில் மட்டும் முதல் சாஸனத்துக்குப்பின் வரைந்து காணப்படுகிறது. ஆனால் இதற்கு ஓரிடத்தில் மட்டுமே சுத்தமான பிரதியுண்டு.

முதல் உப சாஸனம் பலவிதத்தில் அசோகனுடைய சரித்திரத்திற்கு முக்கியமான ஆதாரமாகின்றது. அவன் புத்தர் சமயத்தைச் சரணமடைந்தது திடீராகவல்லவென்றும் கொஞ்சங் கொஞ்சமாக அதில் ஈடுபட்டதாகவும் இச்சாஸனம் அறிவிக்கின்றது. புத்தர் மதத்தில் தான் முக்கியமாகக் கற்ற பாடங்கள் அறநெறியில் விசுவாசமும் உழைப்பும் ஊக்கமுமே யென்றும் இதிலிருந்து விளங்கும்.

"தேவர்களை அனுசரித்து ஒழுகாமனிதர் இப்போது தேவர்களை அனுசரித்து ஒழுகி வருகின்றனர்" என்ற வாக்கியம் அரசனுடைய ஆஸ்திக மதத்தை விளக்கும். ஆனால் இவ்வாக்கியத்தின் கருத்து இதுவேயென்று சாதிக்க முடியாது. "இது வரையும் உண்மையென்று கருதப்பட்ட தெய்வங்கள் இப்போது பொய்யென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது" என்றும் இவ்வாக்கியம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மூலத்திலுள்ள வாக்கியத்தில் மிஸா, அமிஸா என்ற சொற்களின் கருத்து விளங்காததால் மொழிபெயர்ப்பில் இங்ஙனம் விபரீதங்கள் ஏற்பட்டன எனலாம். 'மிஸம்' என்ற சொல் மிச்ரம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபாயின் முன்கூறிய உரையும் 'ம்ருஷா', பொய்ம்மை, என்ற சொல்லின் திரிபாயின் இரண்டாவது கருத்தும் ஏற்படும்.

முதல் உபசாஸனம்: உழைப்பின் பயன்

A. ஸுவர்ணகிரியிலுள்ள[1] இளவரசரும் மகாமாத்திரரும் சேர்ந்து இஸிலத்திலுள்ள[2] மகாமாத்திரருக்கு க்ஷேமம் வினவியபின் இக் கட்டளை யிடப்படுகின்றது. தேவர்களுக்குப் பிரியனானவன் இங்ஙனம் ஆக்ஞாபிக்கிறான். நற் காரியங்களில் விசேஷ ஊக்கம் செலுத்தாமல் இரண்டரை வருஷங்களுக்கு மேலளவும் நான் உபாஸகனாயிருந்தேன்3. இப்போது ஒருவருஷ மாக ஸங்கத்திற் சேர்ந்து மிகுந்த ஊக்கத்தோடு உழைத்துவர எனக்கு நேரிட்டிருக்கிறது. இது வரையும் தேவர்களை அனுசரித்து ஒழுகா மனிதர் இப்பொழுது ஜம்பூத்வீப முழுவதும் தேவர்களை அனுசரித்து ஒழுகிவருகின்றனர்4. இது எனது உழைப்பின் பயனாகும். இந்நன்மை பெருமுயற்சியின்றிக் கிடைக்கக்கூடியதன்று. ஆனால் சிறியோரும் தமது உழைப்பால் மறுமையின் க்ஷேமத்தை யடையலாம். இதனாலன்றோ "சிறியோரும் பெரியோரும் முயன்றுவரட்டும்" என்ற முதுமொழி ஏற்பட்டுள்ளது5. என் அயலாரும் இப்போதனையை உணர்ந்து இத்தகைய நன்முயற்சியை அழியாதபடி நிலைநாட்ட வேண்டும். இவ்வுத்தேசம் கட்டாயமாய் வளரும். இன்னுமின்னும் பல மடங்கு பயனளிக்கும். இப்போதனை 256 வ்யூதர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டது.

B. இக்கட்டளை கூடுமளவும் எங்கு சௌகரியப்படுமோ அங்கே கற்களிலும் ஸ்தம்பங்களிலும் எழுதி விளம்பரஞ்செய்யப்படவேண்டும். நீரும் இயன்ற அளவு உமது பிராந்தியத்தில்6 இக்கட்டளையை விளம்பரஞ் செய்ய வேண்டும். இருநூற்றைம்பத்தாறு, (256) வ்யூதர்களால்7 இப்புண்ணிய ஆக்ஞை கொண்டு வரப்பட்டது.

*மொத்தம் ஸித்தாபுர லிகிதத்தில் 13 வாக்கியங்கள். கடைசிப்பாராவிலுள்ள மூன்று அதிகப்படியான வாக்கியங்கள் ரூபநாத் பிரதியில் காணப்படுகின்றன. ஸஹஸ்ராம் பிரதியில் 256 என்ற எண் எழுத்திலும் இலக்கத்திலும் இருக்கிறது. முதலாவது வாக்கியம் வட இந்தியப்பிரதிகளிலில்லை.*

1. ஸுவர்ணகிரி. *இதுவே அசோகனுடைய தென்மாகாணத்தின் ராஜதானிபோலும். இளவரசர் இங்குத் தங்கியதாக இந்த லிகிதம் நமக்குத் தெரிவிக்கிறது.*

2. இஸிலம். *இது ஸுவர்ணகிரிக்குச் சமீபமுள்ள ஊராயிருக்க வேண்டும். மகாமாத்திரர் என்ற பெயர் பொதுப் பெயரானதால் இஸிலத்து மகாமாத்திரர் ஒரு ரஜுகனாகவாவது பிராதேசிகனாக வாவாது இருக்கலாம்.*

3. உபாஸகன். *இல்லறத்தில் ஒழுகும் பௌத்தமதத்தினன்.*

4. *ஸித்தா புரத்திலுள்ள மூலவாக்கியம்,* இமினுஉ காலேண அமிஸா ஸமாநு ஜம்பு தீபஸி மிஸா தேவேஹி.

5. ஸாவனே. *போதனை; முதுமொழி; "சிறியோரும் பெரியோரும் முயன்று வரட்டும்" என்பது அரசனுடைய ஆப்த வாக்கியமோ வென்று தோன்றுகிறது. ஏழாம் ஸ்தம்பசாஸனத்திலும் அரசன் இம்முதுமொழியைக் குறிப்பிடுகிறான்.*

6. ஆஹாலே. *தாலூக்கா அல்லது நாடு.*

7. வ்யூதர். *தர்மபோதகர் (?). முன் 55-ம் பக்கம் காண்க.*

இரண்டாம் உபசாஸனம்: தர்மத்தின் சாரம்

தேவர்களுக்குப் பிரியனானவன் இப்படிச் சொல்லுகிறான். தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்யவேண்டும். எல்லா ஜீவப் பிராணிகளுக்கும் அனுதாபம் ஸ்திரமாக ஏற்படவேண்டும். சத்தியமே பேசவேண்டும். தர்மத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள போதனைகள் இவையே மேலும் சிஷ்ஷன் ஆசாரியனைக் கண்ணியஞ்செய்யவேண்டும். உற்றார் உறவினருக்குத் தகுந்த மரியாதை செய்யவேண்டும். இது தீர்க்காயுளைத் தரும். இது பிராசீன சம்பிரதாயம். இதன்படி மனிதன் நடக்கவேண்டும்.[1]

பதன் என்ற லிபிகாரனால்[2] (எழுதப்பட்டது.)

மொத்தம் 8 வாக்கியங்கள் :—

1. இந்தச் சாஸனம் ஓர் உபநிஷத்தில் வரும் வாசகங்களுடைய தமிழ் மொழிபெயர்ப்போ என்று நம்மை பிரமிக்கச் செய்கிறது. தைத்தரீய உபநிஷத்து சிக்ஷாவல்லியின் முடிவு ஏறக்குறைய இப்படி இருக்கின்றது.

2. பதன் என்ற லிபிகரன் அல்லது குமாஸ்தா தான் வடநாட்டினன் என்று காட்டுவதற்குப்போலும் லிபிகரன் என்ற சொல்லை மட்டும் கரோஷ்டி லிபியில் எழுதிவைத்திருக்கிறான்.

## II. பாப்ரு சாஸனம்

இந்த லிகிதம் பிக்ஷுக்களுக்கென்று பிரத்தியேகமாக எழுதப்பட்டது. பாப்ரு என்ற ஊர் ராஜஸ்தானத்தில் ஜெய்ப்பூர் ஸம்ஸ்தானத்திலுள்ளது. பெய்ராத்துக்கு மிகவும் அருகிலுள்ளது. லிகிதம் வரைந்திருக்கும் கல் இப்போது கல்கத்தா ம்யூஸியத்தில் காப்பாற்றி வைக்கப் பட்டிருக்கிறது. பாப்ருவில் பழைய பௌத்த விஹாரம் ஒன்று இருந்து வந்தது. இச்சாஸனத்தின் காலம் எது என்னும் விஷயமாய் வித்வான்களுக்கிடையில் இன்னும் விவாதங்கள் நடந்து வருகின்றன. பொதுவான அபிப்பிராய மென்னவென்றால் இதுவும் மற்ற இரண்டு உப சாஸனங்களைப் போல அசோகனுடைய ஆதி லிகிதங்களில் ஒன்றென்றும். இச்சாஸனத்தின் ஆரம்பம் குறிப்பிடத்தக்கது.

மகதத்து அரசன் பியதஸி, ஸங்கத்தை நமஸ்கரித்து அவர்கள் சுகமும் ஆரோக்கியமும் அடையவேண்டுமென்று விரும்பிக் கூறுவதாவது. புண்ணியவான்களே! புத்தர், தர்மம், ஸங்கம் என்பனவற்றில் எனக்குள்ள விசுவாஸ வெகுமானமும் நம்பிக்கையும் எவ்வளவு அதிகமென்று உங்களுக்குத் தெரியும். புண்ணியவான்களே! பகவான் புத்தரால் கூறப்பட்டுள்ள யாவும் மிகச் சிரேஷ்டமாகவே கூறப்பட்டிருக்கின்றன. புண்ணியவான்களே, நான் உங்களுக்கு ஒரு வாக்கியத்தைச் சுட்டிக்காட்ட அனுமதி கொடுப்பீர்களானால் அது "ஸத் தர்மம், சாசுவதமாய் நிலைநிற்கும்" என்பதே. புண்ணியவான்களே! வேறு சில வாக்கியங்களையும் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

(1) வினய ஸமுகஸே[1].

(2) அலியவஸானி. (பெரியோரின் நடக்கை.)

(3) அநாமதஹயாநி. (வரப்போவதைக் குறித்துள்ள பயம்.)

(4) முனிகாதை (முனிவரின் கீதங்கள்.)

(5) உபதிஷ்யன் கேள்விகள்[2].

(6) மோனேயஸூதே (முனிவர்களின் வாழ்க்கையைப் பற்றிய சம்பாஷணை.)

(7) அநித்தியம் முதலிய கொள்கைகளைப் பற்றி ராஹுலனுக்குள்ள உபதேசம்.

பகவான் புத்தரால் கூறப்பட்டுள்ள இவைகள் எல்லாவற்றையும், புண்ணியவான்களே, பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் அடிக்கடி கேட்டு மனனம் செய்யவேண்டும் என்று என் விருப்பம்; அப்படியே இல்லறத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களும் இவற்றை அடிக்கடிக் கேட்டு மனனம் செய்யவேண்டும். புண்ணியவான்களே, இக்காரணம் பற்றியே—அஃதாவது, ஜனங்கள் எனது கோரிக்கையை அறியும் பொருட்டே—இதை நான் வரையச் செய்தேன்.

மொத்தம் 9 வாக்கியங்கள்.

புத்தரது சுயவாக்கியங்களுக்கு ஸத்தர்மம் என்று பெயர். "ஸத் தர்மம் சாசுவதமாய் நிலை நிற்கும்" என்பது பௌத்தர்களுக்கு மஹாவாக்கியம் போன்ற ஓர் வாக்கியம். அங்குத்தர நிகாய IV.

1. இவ்வேழு பெயர்களும் பௌத்தருடைய 'திரிபிடகம் என்ற பிரபந்தத் தொகுதியில் வரும் பாகங்களைக் குறிக்கின்றன.

இப்பாகங்கள் எவையென்று நிச்சயமாகத் தெரியவில்லை. வினய ஸ்முகஸே என்பது புத்தர் காசியில் செய்த முதல் உபதேசத்தைக் குறிப்பிடுகிறதென்று ஓர் அமெரிக்க வித்துவான் எழுதுகிறார். இதற்கு தர்ம சக்ரப் பிரவர்த்தன ஸூத்திரம் என்று பெயர். மற்ற உரைகள் எங்கெங்கு காணப்படுகின்றனவென்று இரண்டாம் அனுபந்தத்தில் கூறியிருக்கிறோம்.

2. உபதிஷ்யன் என்பவன் மதக்கிரந்தங்களில் ஸாரிபுத்திரன் என்ற பெயரால் குறிப்பிடப்பட்ட புத்தருடைய பிரதம சிஷ்யரில் ஒருவன். புத்தருடைய சம்பாஷணையிற் பல ஸாரிபுத்திரனின் கேள்விகளிலிருந்து உண்டாகின்றன.

## III. பதினான்கு முக்கிய சாஸனங்கள்.

இவை அசோகனின் 13. 14-வது ஆண்டுகளில் பிரசுரஞ் செய்யப்பட்டவை. இந்தப் பதினான்கு சாஸனங்களுக்கும் கருத்தில் ஒத்திருக்கின்றதும் பாஷையில் ஏறக்குறைய நெருங்கிய சம்பந்தமுள்ளதுமான ஆறு பிரதிகள் கிடைத்திருக்கின்றன. இவ்வாறு பிரதிகளைத் தவிர வேறு பல முற்காலங்களில் இருந்திருக்கலாம். பம்பாய்க்குசமீபமாயுள்ள ஸொப்பாரா என்ற பழைய துறைமுகப் பட்டணத்தில் ஒரு பிரதி இருந்ததற்கு நமக்கு நல்ல லக்ஷியம் மட்டும் கிடைத்திருக்கிறது. இப்போது அங்கே எட்டாவது சாஸனம் எழுதப்பட்டுள்ள பாறையின் துண்டிருக்கின்றது.

பதினான்கு சாஸனங்களுக்குப் பிரதிகள் உள்ள இடங்களாவன:—

1. இந்தியாவின் வடமேற்குக் கோடியில் ஸிந்துநதி காபூல் நதியோடு சங்கமமாகும் பிரதேசத்தின் அருகில் ஷாபாஸ்கர்ஹி. இங்குள்ள பிரதி நல்ல ஸ்திதியில் இருக்கிறது. சமரஸபாவத்தைப்பற்றிய 12-ம் சாஸனம் பாறையின் மற்றொரு பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லா சாஸனங்களும் ஒருமித்து அரசனின் 14-வது பட்டாபிஷேக வருஷத்தில் இங்கு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. பஞ்சாபில் ஜிலம் நதிக்கரையருகில் ஹஸாரா ஜில்லாவிலுள்ள மான்ஸரா. இவ்விடத்திலும் ஷாபாஸ்கர்ஹியிலும் உள்ள சாஸனங்கள் கரோஷ்டி லிபியில் எழுதப்பட்டவை. அசோகனுடைய மற்ற லிகிதங்கள் எல்லாம் ப்ராம்மி லிபியில் எழுதப்பட்டவை.

3. இமயமலைச் சாரலில் முஸ்ஸோரி என்ற சுகவாஸ ஸ்தலத்தின் அருகிலுள்ள காலஸீ. இங்குள்ள பிரதி சுமாராய் நல்ல ஸ்திதியில் இருக்கிறது. ஒரு யானையின் படம் லிகிதங்களுக்கு முன் வரையப்பட்டிருக்கிறது.

4. குஜரத்தில் கத்தயவாட் தீபகற்பத்தின் நடுவிலுள்ள கிர்நார். அசோகனின் லிகிதமும் மற்ற லிகிதங்களும் இங்குள்ள மலையில் எழுதப்பட் டிருக்கின்றன. இங்கே 5-வதும் 13.வதும் சாஸனங்கள் மிகச் சிதைந்திருக்கின்றன.

5. முன் காலங்களில் கலிங்கம் எனப்படும் உரியர் நாட்டில் இரண்டு பிரதிகள் இருக்கின்றன. வடக்கே மஹாநதியின் முகத்தில் தவுளீ என்ற ஊரில் ஒரு நகலும்,

6. ஷை உரியர் நாட்டில் தற்காலம் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த கஞ்சம் ஜில்லாவில் ஜௌகட என்ற மலைக்கோட்டையில் மற்ற நகலும் இருக்கின்றன. இவ்விரண்டு ஸ்தலங்களிலுள்ள அசோக சாஸனங்களில் சில விசேஷங்கள் காணப்படுகின்றன. 1 முதல் 10 வரையுமுள்ள சாஸனங்கள் இவ்விரண்டு ஸ்தலங்களிலும், மற்ற நான்கு ஸ்தலங்களில் காணப்படுவதுபோ லிருந்தாலும் 11, 12, 13-வது சாஸனங்களை விட்டுவிட்டு அவற்றிற்குப் பதிலாக இரண்டு புது சாஸனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கலிங்கப் பிரஜைகளுக்கு மட்டும் பிரத்யேகமானவை பற்றி அவை மற்ற நான்கு இடங்களிலும் விடப்பட்டன போலும். இவ்விர்ண்டு சாஸனங்களை நாம் கலிங்க சாஸனங்களென்போம்.

I. கொல்லாமை

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் ஆக்கினையாக இத்தர்மலிகிதம் வரையப்பட்டது. இங்கே (என் தலைநகரத்தில்) யாதொரு பிராணியையும் பலியாகங்களுக்காக வதை செய்யக் கூடாது. ஸமாஜங்களில்[1] நடக்கும் விருந்தும் தவிர்க்கப்படுகிறது. ஏனென்றால் ஸமாஜங்களில் பலவித தோஷங்களுண்டென்று தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசனுக்குத் தெரியும். ஆனால் சிற்சில ஸமாஜங்கள் நல்லவையென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். முன் தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசனின் மடப்பள்ளியில் லக்ஷக்கணக்காகப் பலவித உயிர்ப் பிராணிகள் கறிக்காக வதை செய்யப்பட்டு வந்தன. இக் கட்டளை இடப்படும் இச் சமயமும் தினமும் மூன்று பிராணிகள் கொல்லப் படுகின்றன. அவையாவன, இரண்டு மயில்களும் சிலவேளைகளில் அதிகப்படியாக ஒரு மானும். இனிமேல் இம்மூன்று பிராணிகள் கூட வதைசெய்யப்பட மாட்டா.

மொத்தம் 8 வாக்கியங்கள்.

I. ஸமாஜங்களைப்பற்றி கௌடலயம் என்ற அர்த்த சாஸ்திரத்தில் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. இவை பலகாலமாக ஏற்பட்ட ஜாதிமத ஸபைகள். விருந்துக்கச்சேரி, பாட்டு, கூத்துக்கள் இச் சபைகளில் அதிக மும்முரமாக நடந்துவந்தன, அரசன் இச்சபைகளைப்பற்றி மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று ஷை அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

2. பியதஸி ஜீவராசிகளுக்குச் செய்யும் பணிவிடை.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசனால் ஆளப்பட்ட ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களிலும், அதுமட்டுமல்ல, சோழர், பாண்டியர், ஸத்யபுத்திரர், கேரளபுத்திரர் போன்ற அயல் அரசர் நாட்டிலும், மிக அப்பாலுள்ள தாம்பபம்னி[1] யவன ராஜன் அன்டியோக்கன்,[2] மேல்சொல்லிய அன்டியோக்கனுக்கு அண்டை அரசர்கள்[3] நாடுகளிலும் எல்லா இடத்தும் தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் சிகித்ஸைக்காக இருவித ஏற்பாடுகள் செய்திருக்கிறான்; அவையாவன, மனிதருக்கு வைத்தியசாலை மிருகங்களுக்கு வைத்தியசாலை. மேலும் மனிதருக்கு உபயோகமானதும் மிருகங்களுக்கு உபயோகமானதுமான மருந்து மூலிகைகள் எவையோ அவை கிடைக்குமிடங்களிலிருந்து எங்கெங்கு கிடைக்கவில்லையோ அவ்விடங்களுக்குக் கொண்டுவரப்பட்டு பயிர் செய்யப்படுகின்றன. கனி காய் கிழங்கு வகைகளும் வரவழைக்கப்பட்டுப் பயிராகின்றன. மனிதருக்கும் மற்றப் பிராணிகளுக்கும் சௌக்கியத்தைக் கொடுப்பதற்காகப் பாதையோரங்களில் கிணறுகள் வெட்டவும் நிழல் கொடுக்கும் மரங்கள் வளர்க்கவும் செய்யப்படுகின்றன.

மொத்தம் 4 வாக்கியங்கள்.

1. இங்கு தாம்பபம்னி என்பது, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தாம்பிரபர்ணி நதியைக் குறிக்கவில்லையென்று தோன்று

கிறது. இது சிலோன் தீவின் வடபாகத்தின் பெயராயுமிருந்தது. மகாவம்சம். அத். 6. இத் தீவே சாஸனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது போலும். ஸ்ட்ராபோ முதலிய கிரேக்க ரோம யாத்திரிகர்கள் சிலோன் தீவுக்கு தாப்ரபோனெ என்று பெயர் கொடுத்திருக்கின்றனர். அதனுல் அசோகன் தாம்பபம்னி என்ற பெயரால் சிலோன் தீவையே குறிப்பிடுகின்றுன்போலும்.

2. அண்டியோக்கன் II (கி. பி. 261—246.) சந்திரகுப்த மௌரியனேடு போர்செய்து பின் சமாதானத்துக்கு வந்த ஸெல்யூக்கஸ்வினுடைய பேரன்.

3. அண்டியோக்கஸுக்கு நான்கு அண்டை அரசர்களைப் பற்றி 13-ம் சாஸனத்தில் காண்க.

### 3. அனுஸம்யானம்.

தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி அரசன் இப்படிச் சொல்லுகிருன். நான் பட்டம் சூடிய பன்னிரண்டு வருஷங்களுக்குப்பின் இந்த ஆணையைப் பிறப்பித்தேன். என்னுடைய ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களிலும் யுக்தரும்[1] ரஜுகரும் பிராதேசிகரும் ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை அனுஸம்யானம்[2] செய்யவேண்டும்; எதற்காகவென்ருல், தர்மத்தைப் போதிப்பதற்கும், தந்தம் வேலையைச் சரிவர முடிப்பதற்குமே. தாய் தந்தையரைக் கவனிப்பது மேன்மை.; சிநேகிதர், அறிமுகமானவர், உறவினர், பிராமணர், சமணர் இவர்களுக்கு ஈதல் மேன்மை; பிராணிகளைக் கொல்லாமை, செலவில் சிக்கனம், செல்வத்தைக் கருதாமை மேன்மை.

பரிஷத்து சபைகள்[3] கணனங்களைச் சார்ந்த யுக்தர்களை இக்கட்டளையை யனுசரித்து நடக்கும்படிச் செய்யவேண்டும்.4.

மொத்தம் 5 வாக்கியங்கள்.

1. முன் 54-ம் பக்கம் பார்க்க. கௌடல்யம் அர்த்த சாஸ்திரத்திலும் யுக்தரின் வேலையைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கிறது.

2. அனுஸம்யானம் என்ற சொல்லின் கருத்தைப் பற்றி அபிப்பிராய பேதமுண் டென்பதை, முன் 55-ம் பக்கம் காண்க.

3. ஐந்து வகை பௌத்த பிக்ஷுக்கள் சேர்ந்த சமூஹத்துக்குப் பரிஷத்துக்கள் என்று பெயர்.

4. பரிஸாபி யுதே ஆநபயிஸதி ம ண னு ய ம் ஹேது தோ வ வ்யஞ்ஜனதோ வ. வ்யஞ்னம் என்ருல் அசோகனுடைய ஆணை. வாக்கியத்தின் கருத்து நன்ருக விளங்கவில்லை. கணனு என்ருல் வரவு செலவு கணக்கு அதிகாரிகளென்று ஸ்ரீ. S. R. பந்தர்க்கர் கூறுகிருர். அவதாரிகை 56-ம். பக்கம் பார்க்கவும்.

4. தர்மத்தைப் பரவச் செய்தல்.

இதன்முன் பல வருடங்களாகப் பிராணி இம்சையும், பிராணிகளைப் பலியிடுதலும், சுற்றத்தாரை அசட்டைசெய்வதும், பிராமண சமணர்களை அவமதிப்பதும் அதிகரித்து வந்தன. இப்போது தேவர்களுக்குப் பிரியனுன பிரியதர்சி அரசன் தர்மத்தை வழிபட்டிருப்பதால் தர்மத்தின் ஜயபேரிகை முழங்குகின்றது. ஜனங்கள், யானைத் திருவிழா, தேர்த் திருவிழா, லக்ஷதீபம் முதலிய உற்சவங்களைக் கண்டு களிக்கின்றனர். பல ஆண்டுகளாக ஒருபோதும் சம்பவியாத விசேஷம் தேவர்களுக்குப் பிரியனுன பிரியதர்சி அரசன் தர்மத்தைத் தழுவியதால் சம்பவித்திருக்கின்றது. பிராணிகளைக் கொல்லாமை, ஜீவராசிகளிடம் அஹிம்சை, உறவினரிடம் அன்பு, பிராமண சமணர்களிடம் கௌரவம், தாய் தந்தையருக்குச் சுச்ருஷை, மந்திரக்கிழவருக்குச் சுச்ருஷை என்ற நற்குணங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. தேவர்களுக்குப் பிரியனுன பிரியதர்சி அரசனது புத்திரர்களும் பௌத்திரர்களும் பௌத்திரரின் பிள்ளைகளும் கல்பாந்த காலம் வரையும் தர்மத்திலும் சீலத்திலும் வழுவாது நிலைநின்று தர்மத்தைப் போதிக்கக் கடவர். தர்மத்தைக் கற்பிப்பது உயர்ந்த காரியமே. சீலமில்லாதவன் தர்மத்தைத் தழுவி ஒழுகுவது கஷ்டமாம். ஆயினும் இவ்விஷயத்தில் மனிதன் உள்ளம் சீர்திருந்து

வதும் முன்னிலும் கெடாமலிருப்பதும் இரண்டும் சிறந்ததே. மனிதர் தம் குணத்தை அதிகரிக்க முயல்வதற்கும் குணம் குன்றுவதைத் தடுப்பதற்குமே இது எழுதப் பட்டுள்ளது. தேவர்களுக்குப் பிரியமான பிரியதர்சி அரசன் முடிசூடி பன்னிரண்டு வருடங்களான பின் இங்ஙனம் வரையச் செய்தார்.

மொத்தம் 12 வாக்கியங்கள். பாஹியன் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் பாடலிபுரத்தில் மிக விமரிசையுடன் நடந்த இவ்வித திருவிழாக்களை வருணித்திருக்கிறுன்.

5. தர்மமகாத்திரரின் அலுவல்கள்.

தேவர்களுக்குப் பிரியனான பிரியதர்சி அரசன் இப்படிச் சொல்லுகிறான். நன்மைகள் செய்வது மிகக் கஷ்டம். நற்கருமங்களைத் தொடங்குகிறவன் வெகு சிரமமான காரியத்தைச் செய்கிறான். பல நற்கருமங்கள் என்னால் செய்யப் பட்டிருக்கின்றன.[1] என்னுடைய பிள்ளைகளும் பேரரும் யுகத்தின் முடிவுகாலம் வரையும் இவ் வண்ணமே நடப்பாராகில் சுகிருதம் செய்தவ ராவர். எவன் ஒருவன் தனது கடமையை அசட்டை செய்கிறானோ அவன் பாபத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான். பாபம் செய்வது நிரம்ப சுலபம்.

ஆதிமுதல் இதுவரையும் தர்மமகாமாத்திரர் என்ற அதிகாரிகள் கிடையா. நான் முடிசூடி பதின்மூன்று வருடங்கள் சென்ற பின் தர்மமகாமாத்திரரை நியமனஞ் செய்தேன். எல்லா மதத்தினருக்கும் தர்மத்தைப் போதித்து, தர்மத்தைச் சேர்ந்த விஷயங்களைக் கவனித்து மேற்கெல்லைப் புறமுள்ள யவனர் காம்போஜர் காந்தாரர் ராஷ்டிரிகர் பிதேனிகர் முதலியோரையும் நோக்கி, இவர் பிரவிர்த்தி செய்து வருகின்றனர். சேவகர் பிராமணர் பணக்காரர், அனாதைகள், கிழவர் முதலியோருக்குத் தர்மத்தை யனுசரித்து[2] உதவிகள் புரிந்து தர்மத்தை அனுசரித்தவர்களைக் கவலையிலிருந்து நீக்கி உதவுவதற்காகவும் இவர் பிரவிர்த்தி

செய்து வருகின்றனர். வயதுசென்றவராதலாலோ, அல்லது பிள்ளை குட்டிகளுடையவராதலாலோ, அல்லது குற்றமில்லாதவரென்று மதிக்கப்படுவதாலோ, கைதிகளையும் குற்றவாளிகளையும் விடுதலைசெய்ய சிபார்சு செய்து அவர்களைக் கவலைகளிலிருந்து நீக்கி இவர் பிரவிர்த்தித்து வருகின்றனர். பாடலிபுரத்திலும், புறமேயுள்ள பட்டணங்களிலும், அந்தப்புர ஜனங்களிடையும், சேவகரிடையும், சகோதர சகோதரிகளிடையும், மற்ற உறவினரிடையும் இவர் பிரவிர்த்தித்து வருகின்றனர். எனது ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களிலும் தர்ம காரியங்களை மேற் பார்க்கவும் தர்மத்தை ஸ்தாபிக்கவும் தர்ம விஷயங்களைக் கவனிக்கவும் [2] தானங்களை நடத்தவும் இவர் பிரவிர்த்தித்து வருகின்றனர். இவ்வேற்பாடு வெகுநாள் நீடித்து நிற்கவும் எனது பிரஜைகள் இந்த ஏற்பாட்டை எந்நாளும் பின்பற்றவும் இந்த தர்மலிகிதம் எழுதப் பட்டது.

மொத்தம் 15 வாக்கியங்கள். இச்சாஸனத்தில் பொருள் விளங்காத பல சொற்கள் வருகின்றன. 12-வது வாக்கியம் உள்ளவற்றில் மிகக் கடினமாயிருக்கிறது. அங்கு படிவியானுய (சிபார்சுசெய்ய?) கதாபிகாரேஸு (குற்றமற்றவர்பால்) முதலிய பதங்களுக்குச் சரியான கருத்து இனிமேல் தீர்மானமாகவேண்டும். பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும் கருத்தை மொழிப் பெயர்ப்பில் எழுதுகிறோம்.

1. அரசனால் செய்யப்பட்ட நற்கருமங்கள் ஏழாம் ஸ்தம்ப சாஸனத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன. தர்மமகாமாத்திரரின் வேலையைப்பற்றி இங்கும் கூறப்படுகிறது.

2. தர்மத்தைச் சேர்ந்த விஷயங்கள் என்ற சொற்றொடர் **தர்மயுதா** என்பதன் மொழி பெயர்ப்பு. இச்சொல் இச்சாஸனத்தில் மூன்று தடவை வெவ்வேறு வேற்றுமையிலும் நான்காம் சாஸனத்திலும் ஏழாம் ஸ்தம்ப சாஸனத்திலும் வருகிறது. ஸ்ரீ. வின்ஸெண்ட் ஸ்மித் வேறு வித்வான்களைப் பின்பற்றி இச் சொல்லுக்கு தர்மயுக்தர் எனப்படும் ஓர் வகை அதிகாரிகளென்று பொருள் கூறுகிறார். இந்த அதிகாரிகள் தர்மமகாமாத்திரரின் கீழ் தர்மகாரியங்களைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் போலும். இப் பெயர்ப்பு உசிதமென்று தோன்றவில்லை. தர்ம யுக்தமான, தர்மீயமான, தர்மத்தை யனுசரித்த, என்ற பொதுவான கருத்தே பொருந்துமென நமக்குத் தோன்றுகிறது.

6. ஊக்கமுடைமை.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் இப்படிச் சொல்லுகிறான். எல்லா வேளைகளிலும் ராஜகாரியங்களைக் கவனிப்பதும் விசாரணைகளைத் தானாக நடத்துவதும் வெகுகாலமாக நடைபெறவில்லை. இப்பொழுது எனது ஏற்பாடு பின்வருமாறு. எல்லா நேரங்களிலும் போஜன காலத்திலோ, அந்தப்புரத்திலோ சயன அறையிலோ, (யானை குதிரைகளின்) லாயங்களிலோ,ஸாரத்தியம்செய்துகொண்டிருக்கும்பொழுதோ, உத்தியான வனத்திலோ,எங்கும் ஜனங்களின் வழக்குகளை எனக்கு அறிவித்து நியாய விசாரணைசெய்ய பதிவேதகர் இருக்கின்றனர். சகல ஜனங்களுடைய காரியங்களையும் நான் கவனிக்கிறேன். வாய்மொழியாக அல்லது வேறு விதமாக நான் ஓர் உத்தர விட்டாலும், அல்லது அதிக அவசரமான செய்தியொன்று மகாமாத்திரருக்கு அனுப்பவேண்டுமென்றாலும், அதிகாரிகளின் பரிஷத்தால்(கூட்டத்தால்) தீர்மானிக்கப்பட்ட வழக்கொன்றை திரும்ப விசாரணை செய்யவேண்டுமென்றாலும் கொஞ்சமும் காலதாமதமின்றி விஷயங்களை உடனுக்குடன் எனக்கு அறிவிக்க வேண்டும். இதுவே எனது ஆக்ஞை. எனது ஜாக்கிரதையிலும் அரசாட்சி விஷயமான ஊக்கத்திலும் நான் ஒருபோதும் திருப்தி யடைகிறதில்லை. நான் சகல ஜனங்களுடையவும் நன்மையை

கருதக்கடவேன். இதற்கு மூலகாரணம் ஜாக்கிரதையும் ஊக்கமுடைமையுமே[2] சகல ஜனங்களுடையவும் நன்மையைக் கருதுவதைவிட மேன்மையான கருமமில்லை. எதற்காக நான் இங்ஙனம் பிரயாஸையுடன் முயன்றுவருகிறேன்? ஜீவராசிகளுக்கு நான் செலுத்தவேண்டிய கடன் செல்லாவதற்கும் சிலருக்கேனும் இம்மையில் சுகமும் மறுமையில் சுவர்க்கமும் கிடைப்பதற்குமேயாம். இதற்காகவே இந்த தர்மலிபி வரையப்பட்டிருக்கிறது. எதற்காக? என் கட்டளை நெடுங்காலம் நிலைபெறவும் என் புத்திரரும் பௌத்திரரும் இவ்விதமே உலகத்தின் க்ஷேமத்திற்காக உழைத்து வருவதற்குமே. விசேஷமான ஊக்கமிருந்தாலன்றி இது கஷ்டமான காரியம்.

மொத்தம் 17 வாக்கியங்கள். ஐந்தாம் சாஸனத்திற் போல் இங்கும் ஒரு வாக்கியம் கருத்து விளங்குவதற்குக் கஷ்டமாயிருக்கிறது. அது, 6-வது வாக்கியம்.

1. வினீதம் என்ற சொல்லுக்கு சிறுவண்டி யென்றும் கவாத்துப் பழகும் இடமென்றும் பழகின குதிரை யென்றும் பொருள் கூறப்படுகின்றன. "வினீதா : ஸாது வாஹிநः" அமரம் II. 8.44.

2. உத்யானம் ஜாக்கிரதை. அர்த்தஸந்தீரண அரசாட்சி விஷயமான ஊக்கம். கவனம்: கௌடல்யனுடைய அர்த்த சாஸ்திரத்திலும் இக்குணம் அரசருக்கு எவ்வளவு அவசியமென்று எழுதியிருக்கிறது (அதி. I. அத் 19.) ஆயினும் அரசனுடைய ஒவ்வொரு வேலைக்கும் நேரம் குறிப்பிட்டு அவனது தினசரியை மிக நுட்பமாக விளக்கப்பட்டிருக்கிறது. அசோகன் இவ்விஷயத்தில் பழைய வழக்கங்களின் நிபந்தனையை அங்கீகரிக்கவில்லையென்று இச்சாஸனத்திலிருந்து தெளிவாகும்.

7. தர்மத்தை முடியுமளவு அனுசரித்தல்.

தேவர்களுக்குப் பிரியனான பிரியதரிசி யரசன் எல்லா இடங்களிலும் சகல மதத்தோரும் சேர்ந்து வாழவேண்டுமென்று விரும்புகிறான். ஏனெனில், எல்லா மதங்களும் அடக்கமுடைமையும்[1] மனத்தூய்மையும் அவசியமென்று சொல்லுவதில் ஒத்திருக்கின்றன. ஆனால், மனிதர் தம் மனப் போக்கிலும் பலவிதமாயிருக்கின்றனர்; இச்சைகளிலும் பலவிதமா யிருக்கின்றனர். சில மதத்தினர் (என் கட்டளைகளை) முற்றிலும் பின்பற்றலாம். மற்ற வகுப்பார் சில பாகங்களைப் பின்பற்றலாம். அளவற்ற ஈகை எல்லோருக்கும் சாத்தியமில்லை; ஆனாலும் அடக்கமுடைமை, மனத்தூய்மை,[2] செய்ந்நன்றியறிதல், ஸ்திரபுத்தி இவை எக்காலத்தும் உயர்வைத் தருகின்றனவாம்.

மொத்தம் 5 வாக்கியங்கள்.

1. ஸயமம். — அடக்கமுடைமை,
ஹாவஶுத்தி — மனத்தூய்மை.

2. கிருதஜ்ஞதை. — செய்நன்றி யறிதல்.

8. அசோகன் பொழுதுபோக்கு.

முற்காலங்களில் அரசர்[1] வேடிக்கையாக யாத்திரைகள் போவதுண்டு. வேட்டையாடுதல் முதலிய பொழுதுபோக்குகள் இயல்பாயிருந்தன. ஆனால் தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் தான் முடிசூடிப் பத்து வருடங்களானபின் ஸம்போதியைப்[2] பின்பற்றினான். அதனால், தர்மீயமான யாத்திரைகள் ஏற்பட்டன. இவற்றையொட்டி பிராமணரையும் சமணரையும்தரிசனம் செய்வதும் வெகுமதிகள்[3] செய்வதும் பொற்காசுடன் ஞானச்சிரேஷ்டர்களைத் தரிசனம் செய்வதும் நாடுகளில் உள்ள குடி ஜனங்களைப் பார்ப்பதும் தர்மத்தை உபதேசம் செய்வதும் தர்மவிவாதம் செய்வதும் நடைபெற்று வருகின்றன. அதனால் தேவர்களுக்குப் பிரியனான பியதஸிக்கு சுகபோகங்களிற் கிடைக்கும் பங்கு முன்போன்றல்லாது இவ்விதமே ஆகும்.

6 வாக்கியங்கள்.

1. அசோகனுக்குமுன் ஆண்டுவந்த அரசர்களைத் தேவானாம் ப்ரிய அல்லது தேவர் பிரியர் என்னும் பதத்தால் வட இந்தியப் பிரதிகளில் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

2. ஸம்போயி.—பௌத்தமதக் கிரந்தங்களில் எட்டுப் படிகளுடைய ஞானமார்க்கத்தை வழிபடுகிறவனுக்கு 'ஸம்போய பராயணன்' என்று பெயர் வழங்குகின்றது. ஸம்போதி என்றால் பூர்ண ஞானத்தை அடைந்த நிலைமை. இச்சொல் கயையில் உள்ள போதி விருட்சத்தைக் குறிக்கிறதென்று ஸ்ரீமான் பந்தர்கர் அபிப்பிராயப்படுகிறார். இது பொருத்தமென்று தோன்றவில்லை.

3. தெயீரர், தேரர், ஸ்தாவீரர்—பௌத்த பிக்ஷுக்கள் வசித்துவரும் மடங்களின் தலைவருக்கும் இப்பெயர் உண்டு; ஆனால், இச்சாஸனங்கள் பொதுவான கருத்தே கொள்ளத்தக்கதென்று நினைத்து, ஞானச்சிரேஷ்டர்கள், மந்தரக்கிழவர் என்று மொழி பெயர்த்திருக்கிறோம்.

9. உண்மைச் சடங்கு.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான். மனிதர், மங்களம் I உண்டாகும் பொருட்டுச் சடங்குகள் செய்கிறார்கள். கஷ்டகாலங்களிலும் புத்திரரின் கலியாண காலங்களிலும் புத்திரிகளின் விவாககாலங்களிலும் மக்கட்பேறுற்ற காலங்களிலும் பிரயாணம் ஆரம்பம் செய்யும்போதும் இதுபோன்ற வேறு காலங்களிலும் ஜனங்கள் சடங்குகளைச் செய்கின்றனர். இவ் வேளைகளில், மகளிர், பலவும் பலவிதமுமானவும் இழிவும் உபயோகமில்லாததுமான சடங்குகளைச் செய்கிறார்கள். மங்கள கருமங்கள் (சடங்குகள்) அனுசரிக்கத் தக்கனவே. ஆனாலும், இப்படிப்பட்ட சடங்குகளினாற் சிறிதும் பயனில்லை. இதற்கு எதிராகத் தர்மம் என்ற சடங்கோ அத்யந்த லாபத்தை தருவதாக இருக்கிறது. அஃது என்னவெனில், அடிமைகளையும் சேவகர்களையும் அன்புடன் நடத்தல், குருமார்களைப் போற்றல், பிராணிகளிடத்தில் கருணைகாட்டல், பிராமணர் சமணர்களுக்குத் தானஞ்செய்தல்; இவை யாவும் மேன்மையாம். இவையே தர்மகருமங்கள் எனப்பெயர் பெறும். (எல்லாரும் தந்தம்) தந்தைக்கும் மகனுக்கும் சகோதரனுக்கும் நண்பனுக்கும் எஜமானனுக்கும் தோழனுக்கும் அயலானுக்கும் 'இதுவே புனிதமானது, இதுவே நன்மையை நிலைநாட்டுவது, இவ்வித மங்களமே செய்யத்

தக்கது’ எனப் போதிக்க வேண்டும்.

A. இது நான் செய்யத் தக்கது; ஏனென்ருல், இவ்வுலக விஷயமான சடங்குகளின் பிரயோஜனம் சம்சயமானது; அவற்ருல் நினைத்த காரியம் கைகூடினும் கூடலாம் பயனின்றியும் போகலாம். எப்படியாயினும் அவை இவ்வுலகத்திற்குரியனவே. ஆனுல், தர்மம் என்ற சடங்கோ அழிவுள்ளதன்று; அது இம்மையில் நினைத்த காரியங்களைக் கைகூடச் செய்யாவிடினும் பரலோகத்தில் அனந்தமான புண்ணியத்தை நிச்சயம் விளைவிக்கும். இகலோக உத்தேசங்களும் கைகூடுமாயின் தர்மம் என்ற சடங்குக்கு இரட்டைப் பங்கு லாபம் உண்டு. இம்மையில் காரிய சித்தியும் மறுமையில் எல்லையில்லாப் புண்ணியமும் தர்மச் சடங்கின் பயனுகின்றன.

B. ஈகை மிகவும் மேன்மை யென்று சொல்லப்படுகின்றது. தர்மத்தை தானஞ்செய்வதையும் தர்மத்தை அனுக்கிரகஞ் செய்வதையும் விடச் சிறந்த தானமும் அனுக்கிரகமும் கிடையா; அதனுல் சிநேகிதனுக்கும் அன்பனுக்கும் உறவினனுக்கும் உபகாரிக்கும் இதுவே செய்யத் தக்கது; இதுவே மேன்மை; இதுவே சுவர்க்கத்தை அளிக்கக் கூடியது என்று சொல்ல வேண்டும்; சுவர்க்கம் அடைய முயல்வதைக் காட்டிலும் உயர்ந்த கருமம் என்ன இருக்கின்றது?

இந்தச் சாஸனத்தில் வடநாட்டுப் பிரதிகளுக்கும் மற்றப் பிரதிகளுக்கும் முதல் ஒன்பது வாக்கியங்கள் பொது. (A) என்ற பாராவில் உள்ள வாக்கியங்கள் ஆறும் வடஇந்தியப் பிரதிகளில் உள்ளவை. (B) என்ற பாராவின் வாக்கியங்கள் மற்ற மூன்று பிரதிகளிலும் உள்ளவை.

I. மங்களமுண்டாகும் பொருட்டுச் செய்யப்படும் சடங்குகள், 'மங்களம்' என்றே மூலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

10 உண்மையான புகழ்.

தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி அரசன் புகழிலும் கீர்த்தியிலும் அதிகப் பிரயோஜனமுள்ளதாக நினைக்கவில்லையெனினும் என்னுடைய ஜனங்கள் நெடுங்காலமளவும் தர்மத்தைக் கற்பித்தும் கேட்டும் தர்மத்தை வழிபட்டும் வாழ்ந்துவரத் தூண்டும் புகழையும் கீர்த்தியையும் விரும்புகின்முன். இவ்வொன்றிற்காகவே தேவர் பிரியன் பியதஸி அரசன் புகழையும் கீர்த்தியையும் வேண்டுகின்முன். தேவர் பிரியன் பியதஸி அரசன் எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சிகள் யாவும் மறுமைக்காகவே. ஏன்? எல்லோரும் பயத்திலிருந்து விடுபட வேண்டும்.[1] அச்சமுடைமை புண்ணியத்திற்கு விரோதமானது.[2] பெரியோருக்காயினும் சரி சிறியோருக்காயினும் சரி, நீடித்த முயற்சியாலும் யாவற்றையும் துறப்பதாலுமே[3] இது கிடைக்கின்றது. பிரத்தியேகமாகப் பெரியோருக்கு இது மிக அரிதாம்.

8 வாக்கியங்கள்.

1. ஸகலே அப பரிஸ்ரவே அஸ: யாவரும் அல்பமான பயமுடையவராதல் வேண்டும். அப-அல்ப.

2. ஏஸ து பரிஸ்ரவே ய அபுண்ணம். அச்ச முடைத்தல் தீங்கென்று கருத்துபோலும்.

3. ஸவம் பரிசஜித்ப. ஸர்வம் பரித்யஜ்ய. வடமொழி.

11 தர்மத்தின் தானம்.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸீ அரசன் இவ்விதம் சொல்லுகிறான். தர்மத்தைத் தானஞ் செய்வதைவிடப் பெரிய தானமில்லை. அதுபோலவே தர்மத்தில் நேசமும் தர்மத்தில் உறவும் தர்மத்தில் உரிமையும். அவை பின்வருமாறும். தாய்தந்தையரைக் கௌரவித்தல், நண்பர் அயல்ார் உறவினர்களுக்கும் பிராமணர் சமணர்களுக்கும் ஈதல், பிராணிகளைக் கொல்லாமை, இவையே மேன்மை. 'இதுவே புனிதமானது; இதுவே செய்யக்கடவது' என்ற செய்தியை எல்லாரும் தந்தைக்கும் மகனுக்கும் சகோதரனுக்கும் எஜமானனுக்கும் நண்பர் அயலார் உறவினருக்குங்கூட தெரிவிக்கவேண்டும். இப்படிப்பட்ட தானமூலமாக ஒருவன் இம்மைப்பயனை யடைவதுடன் மறுமைக்கும் அனந்தமான புண்ணியத்தை யடைகிறான்.

7 வாக்கியங்கள்.

தவுளியிலும் ஜௌகடத்திலும் இச் சாஸனமும் பின்வரும் 12, 13-ம் சாஸனங்களும் கிடையா; ஆனால் ஒன்பதாம் சாஸனத்தினிறுதியில் 108-ம் பக்கத்தில் B என்ற பாராவிலுள்ள வாக்கியங்கள் ஆங்கு இச் சாஸனத்தின் கருத்தை ஒலிக்கச்செய்கின்றன.

12. சமரசபாவம்

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் எல்லாமதத்தினருக்கும் இல்லறத் தார் துறவிகள் எனப் பாராட்டாமல் கொடை கள் அளித்து பூஜை மரியாதைகள் செய்து வருகிறான். தேவர் பிரியன் வற்புறுத்துவது என்னவென்றால், தானம் முதலிய வெளி மரி யாதைகள் பாராட்டப்படவேண்டுமென் றல்ல, சகல மதங்களுக்கிடையிலும் சமரசபாவம்[1] உண்டாக வேண்டுமென்பதே. சமரசபாவம் என்பது பலவிதமாகும். அதற்கு மூலாதாரம் சொல்நெறியே[2]. அஃது எப்படிப்பட்டதென் றால், காரணமின்றிப் பிறர்மதங்களைத் தூஷணை செய்வதையும் சுயமதத்திற்குப் பக்ஷபாதமான கண்யஞ் செய்வதையும் தவிர்த்தலே. சகல மதங் களிலும் ஓர் விஷயத்தில் அல்லது மற்றோர் விஷயத்தில் மேன்மையிருப்பதால் புறமதங் களுக்கு எல்லோருடைய மரியாதையும் உரியது.

இப்படிப்பட்ட நடக்கையால் சுயமதத் திற்கு கண்யம் ஏற்படுவதோடுகூட, புறமதங்க ளுக்கும் கண்யம் ஏற்படுகிறது. இதற்கு நேர் எதிராக நடப்பவன் புறமதங்களை அகௌரவம் செய்வதோடுகூடத் தன் சொந்த மதத்திற்கும் கேடு விளைத்துக்கொள்கிறான். அது எப்படி என்றால், சுயமதத்தின்பேரிலுள்ள பற்றுதலி னால், 'நான் எனது சுயமதத்திற்குப் பெருமை

அளிப்பேன்' என்று கருதி ஒருவன் சுயமதத்தையே புகழ்ந்து மற்ற மதங்களைப் பழிக்கிருன். இவ்வித மனோபாவத்தால் தனது சுயமதத்திற்கே அவன் மிகுந்த கெடுதியைச் செய்து கொள்கிருன். ஆனால் சமதிருஷ்டி[3] மிகுந்த சிலாக்கியம் அது என்னவெனின், நம் கக்ஷியைச் சேராதாரின் மதபோதனைகளுக்குச் செவி கொடுத்து நாம் அவற்றை மதிக்கவும் வேண்டும். தேவர்பிரியன் விருப்பம் இதுவே: எல்லா மதத்தினரும் ஆழ்ந்த கல்வி கேள்வி யுடையோராய், பரஸ்பர அன்புடையோராய் வாழ்ந்துவர வேண்டும். இதுபற்றி எல்லா மதத்தினருக்கும் பின்வரும் அறிக்கை செய்யப்படுகின்றது. தேவர்பிரியன் வெளிவேஷமான தானமரியாதைகளைவிட சகல சமயங்களுக்குள்ளும் சமரச பாவமும் பக்திபகுமானமுமே[4] முக்கியமென நினைக்கின்ருன்.

இதற்காகவே தர்மமகாமாத்திரும் ஸ்திரீ மகாமாத்திரரும் வ்ருசபூமிகரும்[5] மற்ற அதிகார வர்க்கத்தினரும்[6] வேலைசெய்து வருகின்றனர். இதன் பயனாவது, சுயமதம் அபிவிர்த்தி அடைகின்றது, தர்மமும் பிரகாசமாகின்றது.

ஆக 17 வாக்கியங்கள். 1. ஸாரவிர்யி. 2. வசுமூதி.

3. ஸமவாய.

4. பஹுகா. பக்திபகுமானம்; லஹுகா. தூஷணைகள்.

5. வ்ருவஹூமிகர் என்ற சொல்லுக்குப் பசு மிருகங்கள் கட்டியிருக்கும் தொழுக்களைப் பரிசோதிக்கிற அதிகாரிகளென்று பொருள் கூறப்படுகிறது. ஸ்ரீ. ஜயஸ்வாலின் அபிப்பிராயப்படி இவர் ஓர் வகை தர்ம அதிகாரிகள் போலும். அலைந்து திரிகின்ற ஜனங்களிடையிலும் எல்லைப் பிரதேசங்களில் வசிக்கும் காட்டு ஜாதியாரிடையிலும் தர்மப் பிரசாரஞ்செய்ய நியமிக்கப்பட்டவர். (இந்தியன் ஆண்டிக்குயரி, ஜூ 1918, பக்கம் 55).

6. நிகாயா. மூன்று நாலு அதிகாரிகள் அடங்கிய கமிற்றிகள்

## 13. தர்மத்தின் வெற்றி.

முடிசூடி எட்டு வருடங்களானபின் தேவர்களுக்குப் பிரியனுன பிரியதர்சி அரசன் கலிங்கத்தை ஜயித்தான். அப்போது நூற்றைம்பதினுயிரம் ஜனங்கள் கைதி செய்யப்படவும் பதினுயிரம் ஜனங்கள் மாண்டுபோகவும் அதிலும் பல மடங்கு ஜனங்கள் வேறு விதத்தில் இறக்கவும் நேர்ந்தனபோலும். கலிங்கத்தைக் கைப்பற்றின பிறகு தேவர் பிரியன் தர்மத்தில் பற்றுள்ளவனுய், தர்மத்தை விரும்பி, தர்மத்தை வழிபட்டு வாழ்பவனுயினுன். இப்போது அவன் கலிங்கத்தை ஜயித்ததற்கு மிகவும் வியசனமடைகின்ருன். ஜயிக்கப்படாத ஒரு ராஜ்யத்தைக் கைப்பற்றுவதென்ருல் ஜனங்களுக்கு, கொலேயும் சாவும் சிறையும் ஏற்படுகின்றன. இவ்விஷயம் தேவர் பிரியனுக்கு அதிகமான வருத்தத்தையும் பச்சாத்தாபத்தையும் செய்திருக்கிறது.

தேவர் பிரியன் இன்னும் அதிகம் வியசனமடைவதற்குக் காரணமிருக்கிறது. இங்கேயும் (கலிங்கத்திலும்) பிராமணர், சமணர், மற்றும் பற்பல மதத்தினர், இல்லறத்தோர், எல்லோரும் வசித்து வருகின்றனர். பெரியோருக்குச் சுச்ரூஷை, தாய் தந்தையருக்கு சுச்ரூஷை, குருசுச்ரூஷை, நண்பர் அயலார் உற்ருர் உறவினரிடமும் அடிமை சேவகர்களிடமும் அன்பு, முதலிய குணங்கள் இவரிடையிலும் வேரூன்றிக்

காணப்படுகின்றன. இப்படிப்பட்டவர்களுக்குக் கொடுமையும் சாவும் அன்பரிட மிருந்து பிரிதலும் நேரிட் டிருக்கின்றன. சிலர் தப் பித்துக்கொண்டபோதிலும், தமது நண்பரோ, அயலாரோ, உற்ருரோ, உறவினரோ கொடிய துன்பத்தை அடைந்திருக்கின்றனர்; இவ்வித மும் மனிதருக்குக் கஷ்டம் நேர்ந்திருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் நேர்ந்துள்ள கஷ்டங்களுக் காக தேவர் பிரியன் மிகுந்த வருத்தத்தை அடைகின்ருன். ஏனென்ருல் ஏதாவது ஒரு மதத்தில் நம்பிக்கையில்லாத மனிதரே யில்லை.

கலிங்கத்தில் அப்போது ஜனங்களுக்கு நேர்ந்த சாவு, கொடுமை, சிறைப்பாடு முதலிய கஷ்டங்களில் நூறில் ஒரு பங்கு அல்லது ஆயி ரத்தி லொருபங்கு கஷ்டம் இப்போது நேரு மாகில் தேவர் பிரியன் மிகுந்த வியாகுலத்தை யடைவான். தேவர் பிரியன், தனக்குச் செய்த தீங்கையும் கூடுமளவும் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிருன். தேவர் பிரியன், ராஜ்யத்துக் குட்பட்டு வசித்துவரும் காட்டு ஜாதியாரை அன்புடன் நடத்திக் கடாக்ஷிக்கின் ருன். ஏனெனின், அப்படிச் செய்யாவிடின் மற்ெருரு சமயம் அவன் அதற்காகப் பச்சாத் தாபப்படும்படி நேரலாம். நான் அவருக்குச் சொல்வதென்ன? தீய வழிகளைத் தவிருங்கள், வருந்தாதேயுங்கள் என்பதே. சகல ஜீவராசி களுக்கும் அடக்கம், அமைதி, சமாதானம்,

சந்தோஷம் முதலியன கிடைக்கவேண்டுமென்பது தேவர் பிரியன் விருப்பமாம்.

தர்மம் மூலமாகவுள்ள வெற்றியே முக்கியமானவெற்றியென்பது தேவர்பிரியன் கொள்கை. இவ்வித ஜயம் தேவர் பிரியன் இங்கேயும்( தனது ராஜ்யத்திலும்), எல்லா இடத்தும், எல்லைப் புறமுள்ள ராஜ்யங்களிலும், அறுநூறு யோஜனைக் கப்பாலுள்ள அரசன் அந்தியோக்கன் நாட்டிலும், அந்தியோக்கனுக்கு அப்பாலுள்ள துலமாயன்[1], அந்தேகினன், மகன், அலக்ஸாந்தரன் என்ற பெயருடைய நால்வர் (4) ராஜ்யங்களிலும், தெற்கு, சோழர், பாண்டியர், தாம்பிரபர்ணி முதலிய பல நாடுகளிலும், இங்கே அரசனது ஏகாதிபத்தியத்து மாகாணங்களிலுள்ள யவனர்[2], காம்போஜர், நர்பக தேசத்து நாபபந்தியர், போஜர், பிதேனிகர், ஆந்திரர், புலிந்தர் முதலிய ஜனங்களிடையிலும் எங்கும், தேவர் பிரியனின் தர்மபோதனையைச் செவியுற்று மனிதர் அதைப் பின்பற்றி வருகிறார்கள். தேவர் பிரியனுடைய தூதர் பிரவேசியாத எல்லைப் பிரதேசங்களிலும் மனிதர் தர்மத்தின் போதனையைக்கேட்டு அதைப் பின்பற்றி நல்வழியை அடைகின்றனர்; இப்படியே இன்னுமடைந்து வரவும் செய்வர்.

இப்படிக் கிடைத்துள்ள எங்கும் பரந்த வெற்றி எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்

றது. தர்மத்தாலுள்ள வெற்றி திருப்தியையும் களிப்பையும் தருகின்றது. ஆனல், இச் சந்தோஷம் அற்பமே. மறுமை யின்பத்தை அளிக்கும் காரியமே முக்கிய மென்பது தேவர் பிரியன் கருத்தாகும். இத் தர்ம லிகிதத்திலுள்ள கட்டளை எதற்காகவென்ருல் எனக்குப் பின் வரும் புத்திரரும் பௌத்திரரும் 'நாடுகளைப் புதிதாகக் கைப்பற்றுவதே வெற்றி' யென்று நினையாமலிருப்பதற்காகவே. அவர்கள் வெற்றியை விரும்பினபோதிலும் பொறுமையையும் குறைந்த தண்டனைகளையும் உடையோராய், தர்மத்தின் வெற்றியையே வெற்றியெனக்கொள்பவராய் மாறவேண்டும். இது, இம்மை மறுமைகளுக்குப் பிரயோஜனமுள்ளது. எல்லோருக்கும் நன்முயற்சியும் சந்தோஷமும் உண்டாக வேண்டும். இம்மை மறுமைகளின் க்ஷேமத்தையும் அவர் தேடிக்கொள்வாராக.

இம் மொழிபெயர்ப்பு ஷாபாஸ்கெர்ஹி பாடத்தை அனுசரித்தது. இங்குள்ள 32 வாக்கியங்களில், 6 முதல் பாராவிலும், 7 இரண்டாவது பாராவிலும், 7 மூன்ருவது பாராவிலும், 3 நான்காவது பாராவிலும், மிகுதியான 9 கடைசிப் பாராவிலும் வந்துள்ளன.

1. அன்டியோக்கஸ்ஸைப்பற்றி 95-ம் பக்கம் காண்க. துலமாயனுக்கு ஆங்கிலத்தில் ப்டாலமி என்று உச்சரிப்பு. இவன் எகிப்துதேசத் தரசன். இவன் காலம் கி.-மு. (285-247) இவன் மிகப் பெருமையும் வீரமும் வாய்ந்த அரசன். இவனுடைய ஸதஸில் சாஸ்திரங்களும் காவ்யங்களும் மிகுதியாக பாராட்டப் பெற்றன. க்ஷேத்திர கணித ஆசிரியனை யூக்லிட்

என்ற பெயர்போன புலவன் இவனால் ஆதரிக்கப் பெற்றவன். அக்காலத்தில், செங்கடற் கரையோரத்தில் பல துறைமுகங்கள் ஏற்பட்டன. மகன் என்ற பெயர் ஆங்கிலத்தில் மகாஸ் என வழங்கும். அவன் எகிப்துக்கு மேற்குள்ள கைரினே தேசத்து அரசன்; தாய்வழியில் துலமாயன் சகோதரமுறையினன். காலம் கி.-மு.285-258. அலகஸுதரன், அலெக்ஸாந்தர்; கிரீக் தேசத்து எப்பைரஸ் என்ற நாட்டின் அரசன். இவன் அந்தியோக்கனுக்குப் பகைவன். அந்தியோக்கனைப்பற்றி இரண்டாம் சாசனக் குறிப்பிற் காண்க. அந்தேகினன் அந்திகோனஸ். காலம் 277-238; இவன் மாஸிடோனியா தேசத்து அரசன்.

2. யவனர், காம்போஜர். இவர் எங்கிருந்தவ ரென்பதையும் எப்பாகத்தில் வசித்து வந்தன ரென்பதையும் படத்திற் கண்டு கொள்க. சிலரைப்பற்றி நமக்கு ஒருவித தெளிவும் உண்டாகவில்லை. உ-ம். 'நாஹக தேசத்து நாஹபம்தியர்.'

"யவனர் நாடொன்று தவிர்த்து மற்ற நாடுகளுள் பிராமணர் சமணர் இல்லாத நாடே யில்லை" இந்த வாக்கியம் மான்ஸராவிலும், கால்ஸியிலும் 13-ம் வாக்கியத்தின்பின், அதாவது இரண்டாவது பாராவின் இறுதியில் வருகின்றது. யவனர் நாட்டில் அப்போது பிராமணர் சமணர் வசிக்கவில்லை என்ற சரித்திர உண்மை இதிலிருந்து கிடைக்கின்றது.

14. முடிவுரை.

தர்மத்தைப்பற்றிய இந்த லிகிதங்கள், தேவர்களுக்குப் பிரியனுன பிரியதரிசி அரசனுல் சில இடங்களில் சுருக்கமாயும் சில இடங்களில் (சுருக்கமும் பெருக்கமு மில்லாமல்) நடுத்தரமாயும் சில இடங்களில் விரிவாயும் வரையப்பட்டன. எல்லா விஷயங்களும் ஓரிடத்தில் திரட்டிச் சேர்க்கப்படவுமில்லை. இந்த இராஜ்யம் மிகவும் விரிந்துள்ளது; எழுதப்பட்ட லிகிதங்கள் பல; எழுதவேண்டுவனவும் பல. அவற்றின் மாதுரியத்தால் சில வாக்கியங்களை அடிக்கடி திரும்பத்திரும்பக் கூறியிருக்கிறோம். ஏனென்றால், இவற்றிற் கூறியபடி ஜனங்கள் ஒழுகவேண்டுமென்றே. ஆங்காங்கு எழுத்து சிதைந் திருத்தலாலோ அரை குறையா யிருப்பதாலோ வெட்டினவனுடைய தவறுதலாலோ லிகிதம் சரியில்லாமலிருக்கலாம்.

6 வாக்கியங்கள்.

நமக்குக் கிடைத்துள்ள அசோக லிகிதங்களில் எழுத்துப் பிழை, லிகிதம் அரைகுறையாக விடப்படுதல் முதலிய குற்றங்கள் இல்லையென்றே கூறலாம். ஷாபாஸ்கர்ஹியிலுள்ள ஆரும் சாஸனத்தில் ஒரு வாக்கியம் இரண்டு முறை எழுதப்பட் டிருத்தல் எழுதினவனுடைய குற்றமென்றே சொல்லவேண்டி யிருக்கிறது.

# IV. கலிங்க சாஸனங்கள்

இச்சாஸனங்கள் இரண்டும் தவுளி ஜவுகட என்ற இடங்களில் பதினான்கு சாஸனங்களின் பின் 11, 12, 13வது சாஸனங்களுக்குப் பதிலாக வரையப்பட் டிருக்கின்றன. இவை எழுதப்பட்ட காலமும் பதினான்கு சாஸனங்களின் காலமே எனலாம். தவுளி என்ற ஊர் பூரிக்கும் புவனேசுவர் என்ற பெரிய க்ஷேத்திரத்துக்கும் அருகிலுள்ளது. இங்குள்ள அசோக சாஸனங்கள் அச்வத்தாம மலை என்னும் பெயருடைய பாறையின் வடபாகத்தில் எழுதப்பட் டிருக்கின்றன. இவற்றை காப்பாற்றவோவென்று தோன்றும்படி ஒரு யானையின் பிரதிமை அப்பாறையின் மேல்புறத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது. ஜவுகட என்ற ஊர் நமது மாகாணத்தைச் சேர்ந்த கஞ்ஜம் ஜில்லாவில் உள்ளது. இங்கு லிகிதங்கள் உயரமான ஒரு மலையின் மேல் காணப்படுகிறது. இவ்விரு ஊர்களும் அசோகனின் காலத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரதேசங்களின் அதிகாரிகள் வசித்துவந்த நகரங்களாயிருந்தன. சாஸனங்களில் இவ் வூர்களுக்குத் தோஸாலி என்றும் ஸமாபா என்றும் முறையே பெயர் கொடுக்கப்படுகிறது.

கலிங்க சாஸனங்கள் புதிதாக ஜயித்த ஜனங்களுக்கும் அவர்களின் பக்கத்திலுள்ள காட்டு ஜாதியாருக்கும் 'பயப்படாதேயுங்கள்' என்று அபயதானஞ்செய்யும் கட்டளைகளாம். நோக்கம் ஒன்றானதால் இரண்டு சாஸனங்களுக்கும் பொதுவாக சில வாசகங்கள் காணப்படுகின்றன. இரண்டு வாசகங்கள், (16உம் 17உம்) பதின்மூன்றும் சாஸனத்திலும் சிறிது மாறி வந்திருக்கின்றன.

முதல் கலிங்க சாஸனத்தின் முடிவில் வேறு சாஸனம் என்று சொல்லும்படியான கட்டளை யொன்று அனுபந்தமாகச் சேர்க்கப்பட் டிருக்கிறது. இதன் கருத்து இரண்டாம் சாஸனத்திலுள்ளதுபோல அதிகாரிகள் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை அல்லது மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை அனுஸம்யானம் செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தலே. அனுஸம்யானம் என்பது என்னவென்று நமக்குத் தெரிந்ததை அவதாரிகையில் கூறியிருக்கிறோம்.

I. புதிதாக அடக்கிய ஜனங்களிடம் நடப்பதைப் பற்றி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை.

தேவர் பிரியன் சொற்படி தொஸாலி நகரத்தின் வியோஹாலகரான (நியாயாதிபதிகளான) மகாமாத்திரர் இங்ஙனம் கூறப்படுகின்றனர். எனது நோக்கம் எதுவாயினும் நீங்கள் அதை மனமார ஒப்புக்கொண்டு அதன்படி உடனே அனுஷ்டிக்கவேண்டுமென்பது என் விருப்பம். உங்களுக்கு அனுப்பப்படும் கட்டளைகளே அதற்கு முக்கியமான வழி. நீங்கள் பல்ஆயிரம் ஜனங்களைப் பரிபாலித்து நல்ல மனிதருடைய அன்பையும் சம்பாதிக்கக் கடவீர். எல்லா மனிதரும் எனது மக்கள்; என் குழந்தை குட்டிகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் எல்லாவித நன்மைகளும் சுகமும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திப்பதுபோலவே எல்லா மனிதருக்கும் நான் (அனுக்கிரகங்களை) விருப்புகிறேன். நீங்கள் இதன் கருத்தை முற்றிலும் உணரவில்லை. சிலர் ஒருவேளை இதைக் கவனித்திருக்கலாம்; ஆயினும் இதன் முழு உண்மையையும் தெரிந்துகொள்ளவில்லை. உங்களால் இஃது உணரத்தக்கது; இந்த நீதி மிக அழகாக அமைந்திருக்கிறது[1].

சில மனிதர் அகாரணமான சிறைக்கு அல்லது வேறு துன்பத்திற்கு[2] ஆளாகின்றனர். இவ்விதம் காரணமின்றிய சிறைப்பாட்டால் மற்ற

ஜனங்களும் வியசனமடைகின்றனர். இப்படிப் பட்ட நேரங்களில் நீங்கள் விரும்ப வேண்டியது என்னவெனின் நான் நடுவு நிலைமையைக் கைவிடாமல் காப்பாற்றக் கடவேன் என்றே. ஆனால் சில பிறவிகளுக்கு நியாயத்தில் ஐயம் என்பது அசாத்தியம்; அவர் (எவரெனின்) பொறுமையுடையோர், சோம்பலுற்றோர், அவசரமுடையோர், இரக்கமிலிகள், மனத்தளர்ச்சியுற்றோர், சோர்வுடையோர், கவனமற்றோர் போன்றவரே. நீங்கள் பிரார்த்திக்கவேண்டியது என்னவெனின், 'இக்குணங்கள் என்னை அணுகாம லிருக்கட்டும்' என்பதே. இந் நீதியைக் கைப்பற்றுவதிற் பொறுமையும் விடாமுயற்சியுமே எல்லாவற்றிற்கும் மூலகாரண மாகும். சோம்பலுற்றோர் தம்மைத் திருத்திக்கொள்ளப் பிரயாசப்படமாட்டார். ஆனால் எல்லாரும் ஊக்கத்துடன் முயன்று முன்னேற்ற மடைய வேண்டும்.

இதுபோலவே நீங்கள் (கடமையை) உணர்ந்து பின்வரும் வாக்கியங்களை சிந்திக்கவேண்டும். 'தேவர் பிரியன் இன்னின்ன விதம் கட்டளையிட்டிருக்கிறான். அவை நிறைவேற்ற வேண்டுவனவாம்.' நீர் இவ்வாணையை நிறைவேற்றுவீரேல் மிகுந்த பயனுண்டு; புறக்கணித்தால் பெரிய அபாயமாம். தம் கடமையில் தவறுகிறவர்கள் சுவர்க்கத்தையும் இழந்து

அரசனுடைய நன்மதிப்பையும் இழக்கின்றனர். எனது கட்டளைகளைச் சரியாகச் செய்கிறவன் சுவர்க்கத்தை அடைந்து எனக்கு செலுத்தக் கடவதான கடனையும் தீர்க்கின்ருன். இந்தச் சாஸனம் கேட்போன் ஒருவனுயிருந்தபோதிலும், ஒவ்வொரு பூச நக்ஷத்திரத்தன்றும் வேறு புண்ணிய தினங்களிலும் உரக்கப் படிக்கவேண்டும். இவ்விதம் பிரவிர்த்தித்து நீங்கள் என் நோக்கங்களை நிறைவேற்ற முயலுங்கள். நகரத்தின் வியோஹாலகர்3 அகாரணமாய் நகர ஜனங்களைச் சிறைசெய்தல், காரணமின்றி வருத்துதல் போன்ற வழக்கங்களைத் தவிர்ப்பதற்காக இந்தச் சாஸனம் வரையப்பட்டிருக்கிறது.

இதற்காகவே தர்மத்தை அனுசரித்து நான் ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை அனுஸம்யானம் என்ற ஏற்பாடு செய்திருக்கிறேன்; அதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் மகாமாத்திரர் கொடுமை யில்லாதவராயும் அன்புடையோராயும் கொல்லா விரதத்தை அனுஷ்டிக்கின்றவராயும் இருத்தல் வேண்டும். அவர்கள், என் நோக்கத்தை யறிந்து அதன்படி வேலைபார்ப்பவராயிருத்தல் வேண்டும். உஜ்ஜயினியிலுள்ள இளவரசனும் இவ்விதமே மூன்று வருஷத்துக்கு ஒரு முறை அதிகாரிகளை அனுப்பவேண்டும். இதுபோலவே தக்கசிலாவிலுள்ளவர்களும் மகாமாத்திரரைக் கொண்டு அனுஸம்யானம்

செய்யச் சொல்லவேண்டும். ஆனால் அவர்கள் தமக்கு எப்பொழுதும் சொந்தமாகவுள்ள அலுவல்களை கைவிடாது, அரசன் கட்டளைப் படி இவ்வேலையையும் செய்து வரவேண்டும்.

31 வாக்கியங்கள். இங்கு அதிகமாக தன்மையும் படர்க்கையும் முன்னிலையும் மாறி மாறி வந்து கருத்தை மறைக்கின்றன.

1. இந்த நீதி மிக அழகாக அமைந்திருக்கிறது. 'எல்லோரும் எனது மக்கள், நான் என் குடிகளை என் குழந்தைகளைப் போலவே கருதுகிறேன்' என்ற நீதி.

2. பரிக்லேசம். குற்றவாளியைச் சோதனை செய்வதற்காக ஏற்படும் தண்டனைகள் என்ற கருத்தில் இச்சொல் அர்த்த சாஸ்திரத்தில் வருகின்றது. இங்கு 'துன்பம்' என்று பொதுவாக மொழிபெயர்த்திருக்கிறோம்.

3 வியோஹாலகர். வியவகாரங்கள் அல்லது வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரிகள்.

கடைசிப் பாராவிலுள்ள வாக்கியங்கள் பிரத்தியேகமான ஒரு சாஸனம் போல் தோற்றுகின்றன. அவற்றின் உத்தேசம் அனுஸம்யானம் எங்கும் நடைபெற வேண்டுமென்பது. இச்சொல்லின் கருத்தைப்பற்றி அவதாரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

2. 'அந்தமனிதர்' பால் அதிகாரிகளுடைய கடமைகள்.

தேவர் பிரியன் இவ்விதம் சொல்லுகிறான் : ஸமாபா நகரத்திலுள்ள மகாமாத்திரருக்குப் பின்வரும் அரசனுடைய நிருப வசனங்களைக் கூறுவோம். 'எனது நோக்கம் எதுவாயினும் அதை மனமார ஒப்புக்கொண்டு அதன்படி உடனே அனுஷ்டிக்க வேண்டுமென்பது என் விருப்பம். உங்களுக்கு அனுப்பப்படும் கட்டளைகளே அதற்கு முக்கியமான வழி. எல்லா மனிதரும் எனது மக்கள் ; என் குழந்தை குட்டிகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் எல்லாவித நன்மைகளும் சுகமும் உண்டாகவேண்டுமென்று நான் பிரார்த்திப்பது போலவே எல்லா மனிதருக்கும் அவ்விதம் விரும்புகிறேன்.'

அடக்கப்படாத 'அந்தமனிதர் (எல்லைப் பிரதேசங்களில் வசித்துவரும் ஜாதியார்) விஷயமாய் அரசன் கட்டளை என்ன? அரசன் விருப்பம் இதுவே. எல்லைஜனங்களுக்கு என்னைப்பற்றிக் கொஞ்சமும் அச்சம் வேண்டாம் ; அவர்கள் என்னை நம்ப வேண்டும் ; நிச்சயமாய் அவர்களுக்கு என்னால் வியசன முண்டாகாது, சுகமே உண்டாகும். மேலும் அரசன் எதையும் கூடுமானவரையில் பொறுத்துக் கொள்ளும் சுபாவமுடையவன். என்பொருட்டாவது அவர்கள் தர்மத்தைப் பின்பற்றி இம்மையும் மறுமையும் அடைய வேண்டும்.

இதற்காகவே நான் உங்களுக்கு இக் கட்டளை யிடுகிறேன். என் விருப்பத்தை உங்களுக்கு அறிவித்து எனது ஸ்திரமான தீர்மானத்தையும் மாறாத நிச்சயத்தையும் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் உங்கள் கடமைகளை நிறைவேற்றி 'அந்தமனிதர்' என்னை நம்பவும், 'அரசன் ஜனங் களுக்குத் தந்தை போன்றவன், தந்தை தம் மக் களுக்கு இரங்குவதுபோலவே அரசன் நமக்காக இரங்குபவன்,' என்ற உண்மையை உணரவுஞ் செய்யவேண்டும். நான் உங்களுக்கு எனது ஸ்திரமான தீர்மானத்தையும் மாறாத நிச்சயத் தையும் அறிவித்து ஆயுக்தர் தமது வேலையில் விழிப்பாயிருக்கச் செய்கிறேன். இவ்விஷயத்தில் நீங்களே இம்மனிதர் என்னை நேசிக்கவும் அவருடைய இகபர க்ஷேமத்தை உறுதிசெய் யவும் கூடிய நிலைமையில் இருக்கிறீர்கள். இப் படிச் செய்வதால் நீங்களும் சுவர்க்கத்தை அடைவதோடுகூட எனக்குச் செலுத்தக் கடவ தான கடனையும் செலுத்துகின்றீர்கள். மகா மாத்திரர் இடைவிடாமல் எல்லைமனிதருடைய நன்மதிப்பை அடைய முயலவேண்டுமென்றும் அவர் தர்மத்தை வழிபடவேண்டுமென்றுமே இந்த லிகிதம் வரைந்திருக்கிறது. இச் சாஸனம் சாதுர்மாஸ்ய புண்ணிய காலங்களிற்[1] படிக்கப் படவேண்டும்; பூச நக்ஷத்திரத்தன்றும் படிக்கப் படவேண்டும். இந்நாட்களுக் கிடையிலும், தகுந்த அவசரங்களிற் கேட்பவன் ஒருவனே

யெனினும் இதைப் படிக்கவேண்டும். இவ்விதம் பிரவிர்த்தித்து எனது கட்டளையை நிறைவேற்றுங்கள்.

20 வாக்கியங்கள். தவுளிப் பிரதியில் முதல் வாக்கியம் தொஸாலியிலுள்ள ராஜகுமாரனைக் குறிப்பிடுகின்றது. இச்சாஸனத்திலும் தன்மையும் முன்னிலையும் படர்க்கையும் வாக்கியங்களில் மாறிமாறி வருகின்றமையால் பலவிடங்களில் பொருள் தெளிவாயில்லை.

I. **சாதுர்மாஸியம்** என்பது நான்கு மாதங்கள் கொண்ட ஒரு பருவகாலம். முற்காலங்களில் ஒரு வருஷம், குளிர், வேனில், மழை என மூன்று பருவகாலங்கள் அடங்கியதாகக் கருதப்பட்டு வந்தன. தை, வைகாசி, புரட்டாசி மாதங்களின் ஆரம்ப நாட்களே சாதுர்மாஸிய புண்ணிய காலங்கள். வருஷங்களின் கணக்கு சாந்திரமானமா யிருந்ததனால் மாதங்கள் அமாவாசையின் பின்னுள்ள பிரதமையிலிருந்து கணக்கிடப்பட்டன. ஒரு அமாவாசையிலிருந்து அடுத்த அமாவாசைவரையிலும் ஒரு மாதமாயிற்று. ஐந்தாம் ஸ்தம்ப சாஸனத்திலும் அசோகன் காலத்தில் சாதாரணமாய் எந்நாட்கள் புண்ணிய நாட்களென்று மதிக்கப்பட்டனவென்பதும் எவை நோன்பு நாட்களென்பதும் விளக்கப்பட்டிருக்கின்றன.

# V. ஸ்தம்ப சாஸனங்கள்

ஸ்தம்ப சாஸனங்கள் என்பவை ஏழு பிரத்தியேக மான லிகிதங்கள். இவை அசோகனின் இருபத்தேழா வதும் இருபத்தெட்டாவதும் பட்டாபிஷேகவருஷங்களில் பிரசுரமானவை. ஸார்நாத் சாஸனம் ஒன்றைத்தவிர இச் சாஸனங்களே கடைசியாகப் பிரசுரஞ்செய்யப் பட்டவை. முன் அரசன் பிரசுரஞ்செய்த பல கட்டளைகளை உறுதி செய்ய இவை பிரசுரஞ்செய்யப்பட்டன போலும். தனது அரசாட்சியின் தன்மை எதுவென்பதும், அரசன் எல்லா மனிதருக்கும் ஒரே மாதிரியாக நடந்து வருகிறனென் பதும், எல்லோருக்கும் அடக்கமுடைமை அவசியமென் பதும், ரஜுகரின் வேலையும், பிராணி இம்ஸை நிரவாணச் சட்டங்களும், ஸமரஸபாவத்தின் அவசியமும், முதல் ஆறு சாஸனங்களின் விஷயங்களாம். ஏழாவது சாஸ னம் அசோகன் செய்ததான சீர்திருத்தங்களின் மதிப் புரை யெனலாம். அரசன் கடைசியாக தனது ஜனங் களிடம் விடைபெற்றுக் கொள்வதுபோலத் தோன்று கின்றது இச்சாஸனம்.

முதல் ஆறு ஸ்தம்பசாஸனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆறு பிரதிகள் கிடைத்திருக்கின்றன. இச் சாஸனங்கள் எழுதப்பட்டுள்ள ஸ்தம்பங்களாவன :—

1. டில்லி தோப்ரா **ஸ்தம்பம்.** இது முன்காலங் களில் ஸிவாலிக் மலைச்சாரலில் தோப்ரா என்ற ஊரில் ஸ்தா பிக்கப்பட்டிருந்தது. பிரோஸ்ஷா (கி. பி. 1351-1388) என்ற துக்லக் அரசன் மிகுந்த பிரயாசையுடன் இதை டில்லிக்குக் கொண்டுபோய் அங்கே நாட்டினன். இந்த ஸ்தம்பத்திலுள்ள பிரதி ஏறக்குறைய நல்ல ஸ்திதியிலிருக் கிறது.

2. டில்லி மீரத் ஸ்தம்பம். இதுவும் ஷை பிரோஸ்ஷா மீரத்தி லிருந்து டில்லிக்கு மாற்றியது. லிகிதங்கள் சிதைவுபட் டிருக்கின்றன.

3. பிரயாகை ஸ்தம்பம். இதுவும் அதன் பூர்வ ஸ்தானத்தி லிருந்து பெயர்க்கப்பட் டிருக்கிறது. முன் இது கௌசாம்பியில் நின்றிருக்க வேண்டு மென்று இதி லுள்ள லிகிதம் ஒன்று தெரிவிக்கிறது. ஸ்தம்ப சாஸ னங்க ளன்றி வேறு இரண்டு லிகிதங்களும் இந்த ஸ்தம்பத் தில் இருக்கின்றன.

4. லௌரியா அரராஜ் ஸ்தம்பம். இதிலுள்ள லிகி தங்கள் மிகச் சுத்தமாகவும் அழகாகவு மிருக்கின்றன. லௌரியா, என்றால் சிவலிங்கமென்று கருத்து.

5. லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம். இந்த ஸ்தம்பத் தின் படம் 66-ம் பக்கத்தில் சேர்க்கப்பட் டிருக்கிறது. லிகிதங்கள் மிகச் சுத்தமா யிருக்கின்றன.

6. ராம்பூர்வா ஸ்தம்பம். இந்த ஸ்தம்பத்திலுள்ள லிகிதங்கள் சுமாராக வாசிக்கக்கூடியனவாம். இவ்வூரில் லிகிதம் ஒன்று மில்லாத ஸ்தம்பமும் ஒன்றிருக்கின்றது. இதுவும் அசோகனுடைய வேலைப்பாடென்று அனுமா னிக்கப்படுகிறது.

கடைசியாகக் கூறப்பட்ட மூன்று ஊர்களும் பிகார் மாகாணத்தில் சாம்பரான் ஜில்லாவிலுள்ளவை. ஊர்கள் ஒன்றுக்கொன்று சமீபமாக உள்ளவையே.

ஏழாவது ஸ்தம்ப சாஸனத்துக்கு ஒரே பிரதிதான் கிடைத் திருக்கிறது. முதலாவது கூறப்பட்ட டில்லி தோப்ரா ஸ்தம்பத்தில் இந்த லிகிதம் மற்ற ஆறு லிகிதங் களின் முடிவில் வரையப்பட் டிருக்கிறது. இது மற்ற எல்லா அசோக லிகிதங்களையும்விட நீண்டது; இதைப் பத்து பிரத்தியேக சாஸனங்களின் தொகுதி யென்றும் கூறலாம்.

I. அரசன் ஆளுகையின் தன்மை.

தேவர்களுக்குப் பிரியனை பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான். நான் முடி சூடி இருபத்தாறு வருஷங்களானபின் இந்தத் தர்ம லிகிதத்தை எழுதச்செய்தேன். தருமத்தில் மிக்க பக்தியும், மிக்க ஆத்ம சோதனையும், மிக்க பணிவும், (பாவத்தினிடம்) மிக்க பயமும், மிக்க முயற்சியும் இருந்தாலன்றி இம்மை மறுமைப் பயன்களை யடைத லரிது. ஆயினும், என் போதனையால் தர்மத்தில் விருப்பமும், அன்பும் நாடோறும் மிகுதியாக வளர்ந்துவருகின்றன; இனியும் வளர்ச்சியடையும். எனது காரிய தரிசிகள்[1] யாவரும், உத்தம, அதம மத்திமர் எவராயினும், என் போதனைப்படி பிறரையும் நன்னெறியில் திருப்ப வேண்டும். சஞ்சல புத்தியுள்ளோருக்கு நன்னெறியைப் பற்றின போதனை அவசியம். அந்த மகாமாத்திரரும் இவ்விதமே (தருமோபதேசஞ் செய்து வர வேண்டும்). ஏனென்றால், தர்மத்தினாலேதான் பரிபாலனமுள்ளது; தர்மத்தினாலேதான் ஒழுங்குண்டு; தர்மத்தினாலேதான் சௌக்கியமடையலாம்; தர்மத்தினாலேதான் காவல் (உள்ளது). இதுவே சட்டம்.

9 வாக்கியங்கள்.

(1) அந்த மகாமாத்திரரைப் பற்றியும் காரியதரிசிகள் அல்லது புலிஸர் அல்லது புருஷர்களைப்பற்றியும் அவதாரிகையில் விளக்கியிருக்கிறோம்.

பொருள் விளங்குவதற்காக ஏழாம் வாக்கியம் எட்டாவதாக எழுதப்பட்டிருக்கிறது.

2. அரசனே எல்லோருக்கும் நிதர்சனம்.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான். தர்மமே மேலானது. தருமம் என்பது யாது? பாவமின்மை[1], நற்செயல், இரக்கம், ஈகை, வாய்மை, பரிசுத்தம் என்பனவே. நான் பல மனிதருக்குப் பலவகையால் அகக்கண்ணை[2] அளித்திருக்கிறேன். இருகாற்பிராணி, நாற்காற்பிராணி, பறவைகள், நீர்வாழ்வன முதலியவற்றிற்குப் பலவகையால் அனுக்கிரகங்களைச் செய்திருக்கிறேன். தண்ணீர்ப்பந்தலும் வேறு பல நற்செயல்களும் என்னால் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் அறநெறியைப் பின்பற்றி நடக்கவும் இம்மார்க்கம் நிலைத்திருக்கவும் நான் இத் தர்மலிகிதத்தை வரையச் செய்தேன்; இந்தப் போதனையை அனுசரிப்பவன் சுகிர்தத்தை அடைவன்.

9 வாக்கியங்கள்.

1. அப ஆஸினவம். அல்ப ஆஸினவம். ஆஸினவம் என்பது பெருந்தீங்கு என்னும் பொருளில் வழங்கும் பௌத்தர் பரிபாஷை. இதன் கருத்து அடுத்த சாஸனத்திலிருந்தும் விளங்குகின்றது.

2. சக்ஷு-தானம்: தர்மபோதனை மூலமாக அகக்கண்ணையளித்தல்.

3 ஆத்மபரிசோதனை.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் இப்படிச் சொல்லுகிறான். மனிதன் தன் நற் செய்கைகளையே சிந்தித்து, ‘இந் நற்கருமங்கள் என்னால் செய்யப்பட்டவை’ என்று நினைத் துப் பெருமை யடைகிறான். ஆனால் ஒரு போதும் தன் தீச்செயல்களை நினைத்து ‘மிகத் தீங்காகக் கருதப்படும் இப்பாவச்செயலைச் செய் தேனே’ யென்று நினைப்பதில்லை. இவ்வித ஆத்மபரிசீலனை[1] மிகவும் அரிது. ஆயினும் மனிதன் இவ்விஷயத்தைச் சிந்திக்கவேண்டும். கொடுமை[2], கயமை, கோபம்[3], அகம்பாவம்[4], பொறாமை பெருங் கெடுதலுக்குக் கொண்டு செல்லுவனவாம். ‘நான் நன்னெறியில் நிற்க வேண்டுமே’ யென்று கருதி மனிதன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். இவ் வுண்மை நன்கு உணரவேண்டுவதாம். அதாவது, ஒருவழி இம்மைக்கு ஏற்றது, மற்றொன்று மறுமைக்கு ஏற்றது.

8 வாக்கியங்கள்.

1. படிவேவம். ஆத்மபரிசோதனை.

2. 3. 4. மூலத்திலுள்ள சொற்களுக்குச் சரியான வடசொற்க ளாவன ; சண்டி, நிஷ்டூரம், க்ரோதம், மானம், ஈர்ஷ்யை.

4. ரஜுகொின் வேலை

தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி அரசன் இப்படிச் சொல்லுகிருன். நான் முடிசூடி இருபத்தாறு ஆண்டுகளானபின் இத்தர்மலிகிதத்தை வரையச் செய்தேன். பல நூருயிரம் ஜனத் தொகையையுடைய ஜனபதத்தை (நாட்டை) ஆளுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் எனது ரஜுகரை நான் தண்டனைக்கும் வெகுமதிக்கும் அதிபதிகளாகச் செய்திருக்கிறேன். எதற்காகவென்ருல், ரஜுகர் தம் வேலையைத் தைரியமாயும், சமாதானமாயும் நடத்தித் தமது நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு நன்மையையும் சுகத்தையும் உபதேசஞ்செய்து அவர்களை அனுக்கிரகிப்பதற்காகவேயாம். அவர்கள் சுகத்தினுடையவும் துக்கத்தினுடையவும் தன்மையை உணர்ந்து நாட்டிலுள்ள குடி ஜனங்களுக்குத் தர்மீயமான நியாய விசாரணையை அவர் செய்யவேண்டும். ஏனெனில், இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் சம்பாதித்துக் கொள்வதற்கே. ரஜுகர் என்னுடைய நன்மதிப்பை அடைய எண்ணி என்னைச் சேவிக்கின்றனர். பிரஜைகளுக்கு நியாயம் நடத்தி அதன் மூலமாகவும் ரஜுகர் என் பிரியத்தைச் சம்பாதிக்கக் கடவர். ஒருவன் தன் குழந்தையை நல்ல செவிலித் தாயிடம் ஒப்பித்தவுடன் 'இவள் என் குழந்தையை நன்ருகப்

பாதுகாத்து வருகிருள்' என்று சமாதானமடை வதுபோல ரஜுகர் அவர்களுக்குட்பட்ட நாட்டின் நன்மையையும் சுகத்தையும் பாதுகாத்து வருகின்றன ரென்று நான் சமாதானமடைகிறேன். அவர் அச்சமில்லாமலும், அமைதியுடனும் வித்தியாசமில்லாமலும் தமது கடமையை நடத்திவர வேண்டும். இதற்காகவே நான் ரஜுகரை, தண்டனைக்கும் வெகுமதிக்கும் அதிபதிகளாகச் செய்திருக்கிறேன். நியாயவிசாரணை செய்வதிலும்[1] தண்டனை விதிப்பதிலும் சமத்துவம் விரும்பத்தக்கதன்ருே? அதனுல் தற்காலம் முதல் இச்சட்டம் செய்யப்பட் டிருக்கிறது. மரண தண்டனை தீர்ப்பாய் சாவை எதிர்பார்த்துச் சிறையிலிருக்கும் குற்றவாளிகளுக்கு, என்னுல் மூன்று நாட்கள் அவகாசம் கொடுக்கப்படும். இந்நாட்களில் அவருடைய உறவினர் சிறையிலுள்ளோரின் விடுதலைக்காக மறுவிசாரணை ஏற்பாடு செய்யவோ (அல்லது) அவருக்கு மன்னிப்புக் கிடைப்பதற்கும், அவர்களுடைய மறுமையின் நன்மைக்காகவும் தாங்களே தானங்களைச் செய்து பட்டினிவிரதங்கள் அனுஷ்டிக்கவோ செய்யலாம். என் விருப்ப மென்னவெனின், சிறைவாஸத்தின் பொழுதும் இம்மனிதர் சீர்திருந்தி மறுமையின் பயனை அடையவேண்டு மென்பதும், தர்மத்தை அனுசரித்

1. வியோஹால.. நியாய விசாரணைசெய்தல்.

தல், அடக்கம், தானங்களைப் பங்கிடுதல், முதலி யன பற்பலவிதம் ஜனங்களிடையில் வளர்ந்து வரவேண்டும் என்பதுமே.

15 வாக்கியங்கள். இச் சாஸனத்தில் கஷ்டமான பல சொற்களும் வாக்கியங்களும் இருக்கின்றன. விசேஷமாக 14-வது வாக்கியத்தின் கருத்து மயக்கமா யிருக்கிறது. **நிஜபயிஸந்தி நிஜபயிதா** என்ற **வினை**ச்சொற்களுக்குத் திரும்பி விசாரணை செய்வது, மன்னிப்புக்கொடுப்பது, என்று பொருள்கொண்டு இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றது.

5. பிராணி இம்சை நிவாரணம்

தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி அரசன் இவ்விதம் கூறுகிறுன். நான் முடிசூடி இருபத்தாறு வருடங்களான பிறகு இந்த ஜீவ ஜந்துக்கள் வதையிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கின்றன. அவை யாவன :— சுகம் (கிளி), சாரிகை, அருணம் (யானை), சக்கரவாகம், ஹம்ஸம் (அன்னம்), நந்திமுகம், கெலாடம், ஜதூகம் (வௌவால்), அம்பாகபீலிகம் (சினை எறும்பு), துடி (ஆமை), அனஸ்திகமச்சம் (எலும்பில்லாத மீன்), வேதவேயகம், கங்காபுபூடகம், ஸங்குஜமச்சம், கபடஸயகம் (ஆற்று ஆமை), பம்னஸஸம் (முள்ளம்பன்றி), ஸ்ரிமரம் ஸண்டகம், ஓகபிண்டம் (குரங்கு) பரஸதம் (காண்டா மிருகம்), ச்வேதகபோதம் (வெள்ளைப் புரு), கிராமகபோதம் (மாடப்புரு). உணவிற்காகாதனவும் வேறுவித உபயோகமல்லாதவையுமான நாற்கால் பிராணிகள் ஒன்றையும் கொலை செய்யக்கூடாது. பெண்ணுடு பெண்பன்றி போன்ற ஜந்துக்களை அவை சினையாயிருக்கும் போதும், பால் ஊட்டி வரும்போதும் கொல்லக் கூடாது; அவற்றின் குட்டிகளையும் ஆறு மாசம் வரையில் கொல்லக்கூடாது. சேவல்களை வருத்துதல் கூடாது. பதரை அத்துடன் சேர்ந்துள்ள ஜீவ ஜந்துக்களுடன் எரித்துவிடக் கூடாது. காடுகளில் சும்மாவாவது அல்லது

பிராணிகளைக் கொல்லவாவது நெருப்புவைத்து விடக் கூடாது. ஜீவப் பிராணிகளுக்கு மற்ற ஜீவப் பிராணிகளை இரையாகக் கொடுத்து வளர்த்தல் கூடாது. மூன்று சாதுர்மாஸிய தினங்களிலும், தை மாதத்துப் பௌர்ணமியிலும், மற்ற மாதங்களில் மூன்று தினங்களிலும், அஃதாவது, சுக்லபக்ஷத்து சதுர்த்தசி, பௌர்ணமியை யடுத்த பிரதமையன்றும் மற்ற நோன்பு நாட்களிலும், மீன்பிடித்தல் மீன்விற்றல் தவிர்க்கப்படுகின்றன. இந்நாட்களில் யானைக்காவிலோ மீன் குட்டையிலோ இவைபோன்ற மற்ற ஜீவப்பிராணிகளின் நிலயங்களிலோ ஒன்றையும் கொலைசெய்யக்கூடாது. அஷ்டமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமாவாசை நாட்களன்றும் பூச புனர்பூச நக்ஷத்திரங்களன்றும் மூன்று சாதுர்மாஸிய தினங்கள்ன்றும் மற்ற சுபதினங்களிலும் மாடுகளுக்கு விதையடித்தல் கூடாது; அது போலவே, வெள்ளாடு செம்மறியாடு பன்றி முதலிய பிராணிகளுக்கும் இவை போன்ற மற்றப் பிராணிகளுக்கும் விதையடித்தல்[1] கூடாது. பூச புனர்பூச நாட்களன்றும் சாதுர்மாஸிய காலத்தில் சாதுர்மாஸ பக்ஷங்களில்[2] குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் சூடுபோடுதல் கூடாது. நான் முடிசூடிய இருபத்தாறும் ஆண்டுவரை இருபத்தைந்து முறை சிறை விடுதலை நடந்திருக்கிறது.

14 வாக்கியங்கள். மூன்ருவது வாக்கியத்தில் இருபத்திரண்டு வகைப் பிராணிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில பிராணிகளுடைய தமிழ்ப்பெயர் நிச்சயமாய்த் தெரியாமையால் மூலத்திலுள்ள பெயரையும் எழுதியிருக்கிறோம்.

கௌடல்யனுடைய அர்த்தசாஸ்திரத்திலும் (அதிக. II. அத். 26) பிராணி இம்சையைப்பற்றி இன்னும் விரிந்த சட்டங்கள் காணப்படுகின்றன.

(1) நோ நீலக்ஷிதவியே. வடமொழி, ந நிற்லக்ஷிதவ்யம். லக்ஷியமில்லாமற் செய்தல் கூடாது.

(2) சாதுர்மாததினம் என்பது சாதுர்மாதத்தின் முதல் நாள் என்று முன் 127ம் பக்கத்தில் கூறியுள்ளோம். சாதுர்மாத பக்ஷம் என்பது முதற் பதினைந்து நாட்களென்று தோன்றுகிறது.

6. சுய மதத்தில் நம்பிக்கை.

தேவர்களுக்குப் பிரியனான பியதஸி அரசன் இவ்விதம் கூறுகின்றான். நான் முடி சூடி பன்னிரண்டு வருடங்களானபின் உலகம் யாவும் நன்மையையும் சுகத்தையும் அடையும் பொருட்டு இந்தத் தர்ம லிகிதங்களை[1] வரையச் செய்தேன். அவரவர் தம் தம் பண்டைய வழிகளைக் களைந்து தம்தம் தர்மத்தை வழிபட்டு அபிவிர்த்தியடைவாராக. உலகத்திலுள்ள மனிதவர்க்கம் யாவும் நன்மையையும் சுகத்தையும் அடையும்பொருட்டு நான் முயன்றுவருகிறேன்; எனது சுற்றத்தாரை மட்டுமல்ல, தூரத்திலுள்ளவர்களையும் சமீபத்தில் வசிப்பவர்களையும் கவனித்து வருகிறேன். ஏனென்றால், சில மனிதருடைய க்ஷேமத்தையாவது நான் காப்பாற்றியவனாக நேரலாமன்றோ. இவ்வுத்தேசத்துடன் நான் எல்லாக் கூட்டத்தாருக்காகவும் வேலை செய்து வருகிறேன். எல்லா சமயங்களும் பலவித்ப் பூஜை மரியாதைகளோடுகூடிய எனது பணிவிடையைப் பெறுகின்றன. ஆனபோதிலும், யாவருக்கும் சுயமத நம்பிக்கையே முக்கியமென்பது எனது எண்ணம். நான் முடிசூடி இருபத்தாறு வருடங்களுக்குப்பின் இந்தத் தர்மலிகிதம் எழுதப்பட்டது.

10 வாக்கியங்கள்.

1. தர்மலிகிதங்கள் என்பதால் பதினன்கு சாஸனங்கள், உபசாஸனங்கள் கலிங்க சாஸனங்கள் யாவும் குறிப்பிடப்படுகின்றனபோலும். இவை அரசனது பதின்மூன்றும் பட்டாபிஷேக வருஷத்தில் பிரசுரஞ் செய்யப்பட்டனவென்று இந்த லிகிதத்தினின்று ஏற்படுகிறது.

## 7. அசோகன் தன் ஆட்சியின்பொழுது தர்மத்தின் பொருட்டுச் செய்ததான காரியங்களின் மதிப்புரை.

சுருக்கம். இதில் பத்து உட்பிரிவுள்ளன. இவற்றை I, II, என்று குறிப்பிடுகிறோம். முதற் பிரிவில், முன்னிருந்த அரசர்கள் செய்த தர்மப்பிரவிர்த்திகள் பயனளிக்கவில்லையென்றும், இரண்டாவது பிரிவில் இன்னும் தீவ்ரமாய் முயற்சிசெய்து தர்மத்தில் வெற்றி யடையவேண்டு மென்ற அசோகனுடைய தீர்மானமும், மூன்றாவது பிரிவில் தர்மப்பிரசாரஞ் செய்வதற்கு அரசனால் செய்யப்பட்ட ஏற்பாடுகளும், நாலாவது பிரிவில் அரசன் ஸ்தம்பங்களை நாட்டி மகாமாத்திரர்களை நியமித்ததும், ஐந்தாவது பிரிவில் பிரயாணிகள் பிரயாணத்தின்போது சௌக்கியமடைவதற்கான ஏற்பாடுகளும், ஆறாவது பிரிவில் தர்ம மகாமாத்திரரின் வேலையும், ஏழாவது பிரிவில் ஷை அதிகாரிகள் அரசனுடையவும் அரண்மனையிலுள்ள மற்றோருடையவும் தானதர்மங்களை நடத்தவேண்டு மென்றும், எட்டாவது பிரிவில் நன்னடக்கையைப்பற்றியும், ஒன்பதாவது பிரிவில் கண்ணோட்டத்தின் பயனைப்பற்றியும், கடைசியில் இக்கட்டளை எங்கும் விளம்பரம் செய்யப்படவேண்டு மென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

I. தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான். முற்காலங்களிலிருந்த அரசர்கள் தர்மத்தின் அபிவிர்த்தியோடு மனிதருடைய அபிவிர்த்தியும் இசைந்துபோகச்செய்வது எப்படி யென்று விரும்பினார்கள். ஆனால் மனிதரோ தர்மத்தின் அபிவிர்த்திக்குச் சரியாய் வளரவில்லை.

II. அதனால் தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான்.

எனக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று. முற் காலங்களில் அரசர்கள் தர்மத்தின் அபிவிர்த்தி யோடு மனிதருடைய அபிவிர்த்தியும் இசைந்து செய்வது எவ்விதம் கைகூடுமென்று விரும்பி ஞர்கள்? மனிதனே தர்மத்தின் அபிவிர்த்திக்குச் சரியாய் வளரவில்லை. எவ்விதம் மனிதர் என் நோக்கத்தை அனுசரிப்பர்? தர்மத்தில் மனிதருடைய அபிவிர்த்தியானது நான் நினைக் கும்வண்ணம் திருப்திகரமாய் இருக்கும்படி செய்வதெப்படி? தர்மத்தின் வளர்ச்சியினுல் நான் சிலரையாவது நல்வழிக்குக் கொண்டுவர லாமன்றே.

III. தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிருன். இப்படி என்னுல் நிச்சயிக்கப்பட்டது. 'தர்மத்தின் கொள்கைகளை நான் பரவச்செய்வேன்; ஜனங் களுக்குத் தர்மத்தைப்பற்றிய ஞானத்தைப் புகட்டுவேன். இதைக் கேட்போர் நல்வழிப் பட்டுத் தாமும் அபிவிர்த்தியடைந்து தர்மத்தை யும் வளரச் செய்வார்களன்றே.' இதற்காகவே தர்மத்தின் கொள்கைகள் உபதேசிக்கப்படுகின் றன. என் காரியதரிசிகள் (புலிஷர்) என் பிரஜை களைக் கவனித்து அவர்களுக்கு என் போதனை யைப்பற்றி விரிவாக உரைப்பார்கள். பல நூறு யிரம் ஜனத்தொகையுடைய ஜனபதங்களின் தலைவராகிய ரஜூகரும் இவ்விஷயத்தில் என் கட்டளையைப் பெற்றிருக்கின்றனர். அவர் என் கட்டளை இன்னவையென்று என்னிடத்தில் விசுவாஸமுள்ள என் பிரஜைகளுக்குச் சொல்ல வேண்டும்.

IV. தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி இப்படிச் சொல்லுகிருன். இதே உத்தேசத்துடன் தர்ம ஸ்தம்பங்களை நான் நாட்டி யிருக்கிறேன்; தர்ம மகாமாத்திரரை நியமித்திருக்கிறேன்; தர்மத்தின் சாரத்தை நான் போதித்து வருகிறேன்.

V. தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிருன். மிருகங்களுக்கும் மனிதருக்கும் நிழல் கொடுக்கப் பாதைகளில் ஆலமரங்களை நான் நட்டு வளர்த்திருக்கிறேன். மாந்தோப்புக்களை உண்டுபண்ணி யிருக்கிறேன். அரைக் கோசத்துக்கு[1] ஒருதடவை கிணறுகள் வெட்டிச் சாவடிகள் கட்டப்பட் டிருக்கின்றன. மிருகங்களுக்கும் மனிதருக்கும் சுகத்தைக் கொடுக்கும்பொருட்டு நான் பற்பல தண்ணீர்ப் பந்தர்களை[2] வைத்திருக்கிறேன். ஆனுல் சுகானுபவம் என்பது அல்ப விஷயம். என் பிரஜைகளுக்கு நான் செய்திருப்பதுபோலவே பண்டை அரசர்களும் மனிதருக்குப் பல நன்மைகள் செய்திருக்கிருர்கள். ஆனுல் என்னுடைய உத்தேசம் உலகமானது தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பதே.

VI. தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி இப்படிச் சொல்லுகிருன். என் தர்ம மகாமாத்திரரிடம் பல நற்காரியங்களை நான் ஒப்பித்திருக்கிறேன். கிருகஸ்தர்களுக்கும் துறவிகளுக்கும் பற்பல மதஸ்தர்களுக்கும் வேண்டிய உபகாரங்களை அவர் செய்துவருகின்றனர். மேலும் (பௌத்த) ஸங்கத்தின் காரியங்களையும்

அவரிடம் சேர்ப்பித்திருக்கிறேன். அதுபோலவே பிராமணர் ஆஜீவகர்களுடைய காரியங்களையும் அவரிடம் ஒப்புவித் திருக்கிறேன். அதுபோலவே நிர்கிரந்திகளின் (ஜெயினரின்) காரியங்களையும் அவரிடம் ஒப்புவித்திருக்கிறேன். எல்லா மதத்தாரின் காரியங்களையும் அவர் கவனித்து வரவேண்டும். சாதாரண மகாமாத்திரர் தந்தம் வேலையை மட்டும் பார்ப்பார்கள். தர்ம மகாமாத்திரரோ எல்லா மதங்களின் காரியங்களையும் பார்வையிட வேண்டும்.

VII. தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறான். முன் கூறப்பட்ட தர்ம மகாமாத்திரரும் மற்ற மகாமாத்திரர்களும் எனது தானங்களையும் என் ராணியாரின் தானங்களையும் நடத்திவரவேண்டும். இங்கேயும் (பாடலிபுரத்திலும்) மாகாணங்களிலு முள்ள ராஜக் கிருகங்களில் வசிப்போருடைய தானங்களுக்குத் தகுதியான வழிகளைக் காண்பிப்பதும் இவ்வதிகாரிகளின் அலுவலாம். என் புத்திரர், ராஜகுமாரர்கள், ராணியின் புத்திரர் செய்யும் தானங்களையும் இந்த அதிகாரிகளே நடத்தவேண்டும். இப்படிச் செய்வதால் தர்மகாரியங்களும் தர்மத்தின் அனுஸரணையும் விர்த்தியடைகின்றன. தர்மத்தின் அனுஸரணை எப்படிப்பட்டதென்றால் அது பின் வருமாறு. இரக்கம் ஔதாரியம் சத்தியம் தூய்மை வணக்கம் பரிசுத்தம் என்றவையே தர்மத்தின் அனுஸரணை. இவை மனிதருள் வளர்ந்து வரும்.

VIII. தேவர்களுக்குப் பிரியனான பியதஸி

ராஜன் இப்படிச் சொல்லுகிறுன். என்னுல் என் னென்ன நற்காரியங்கள் செய்யப்பட் டிருக்கின் றனவோ அவற்றை யெல்லாம் என் பிரஜை களும் பின்பற்றி யிருக்கிறுர்கள். இனிமேலும் பின்பற்றி நடப்பார்கள். தாய்தந்தையருக்குச் சுச்ரூஷை வயோதிகரிடத்தும் உபாத்தியாயர் களிடத்தும் பணிவு, பிராமணர் சமணர்களுக்கு ஈகை, ஏழை அனுதை முதலிய தாழ்ந்தோரை இரக்கத்துடன் நடத்தல், அடிமை வேலைக்கா ரர்களிடம் பக்ஷம் முதலிய குணங்கள் ஜனங்க ளிடத்தில் வளர்ந்திருக்கின்றன; இக்குணங்கள் இன்னும் அதிகமாய் விர்த்தியடையும்.

IX. தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி ராஜன் இப்படிச் சொல்லுகிறுன். இங்கு சொல்லப்படும் தர்மத்தின் அபிவிர்த்தி ஜனங் களிடத்தில் அதிகமாகக் காணும்போது அதற்கு இரண்டுவித காரணங்கள் சொல்லலாம். முதலாவது தர்மீயமான சட்டங்கள். இரண்டா வது கண்ணேட்டம்[3]. இவ்விரண்டில் தர்மீய மான சட்டங்கள் அவ்வளவு பிரயோஜன முள்ளனவல்ல. கண்ணேட்டமே மேன்மை யானது; ஆனபோதிலும், நான் பலதர்மீயமான சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறேன். இன் னின்ன பிராணிகளை வதை செய்யக்கூடாதென் றும் வேறு பற்பல தர்மநியமங்களும் என்னுல் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கின்றன. ஆனுல் தர்மத்தில் பிரியம் ஜனங்களிடம் வளர்ந்து காணப்படுவதும், ஜீவ ஜந்துக்களின் வதை கிரமமாக நின்றுவருவதும், பலியிடுதல் குறைந் திருப்பதும் என் கண்ணேட்டத்தின் பயனின்றி

வேறன்று. என் புத்திரரும் பௌத்திரரும் அவர் பின்வரும் சந்ததியார் எல்லாரும் இதைப் பின் பற்றுவதற்கும் எனது நோக்கம் சந்திரசூரியர் உள்ளவரையில் நிலைநிற்பதற்கும் இச்சாஸனம் எழுதப்பட்டது. இப்படி அவர்கள் என் கருத்தைக் காப்பாற்றுவாரானால் அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் சுகம் கிடைப்பது நிச்சயம். நான் முடிசூடி இருபத்தேழு வருடங்களுக்குப்பின் இந்தத் தர்ம லிகிதம் வரையப்பட்டது.

X. இதைப் பற்றி தேவர் பிரியன் சொல்லுகிறான். எங்கெங்கெல்லாம் ஸ்தம்பங்கள் அல்லது பாறைகள் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் இந்தத் தர்மலிகிதத்தை என்றென்றைக்கும் நிலைநிற்கும்வண்ணம் எழுதவேண்டும்4.

41 வாக்கியங்கள். இம்மொழிபெயர்ப்பு மூலத்தை வாக்கியம் வாக்கியமாக அனுசரிக்கவில்லை.

(1) கோசம் அல்லது குரோசம் ஒரு யோஜனை தூரத்தின் கால்பாகம். ஒரு யோஜனை கிட்டத்தட்ட எட்டு மைல். அதனால் ஒரு கோசம் இரண்டு மைல். அரைக்கோசத்துக்கு ஒரு கல் வீதம் ஒவ்வொரு மைலுக்கும் ஒருகல் ஆகிறது.

(2) ஆபானா. தண்ணீர்பந்தல்.

(3) நிஸபதி, நிஜ்ஹதி, என்பதற்கு கண்ணோட்டம், மன்னிப் பளித்தல், என்று பொருள் கூறலாம். இச் சொல்லின் வினை உருபுகளை நான்காம் ஸ்தம்ப சாஸனத்தின் உரையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

(4) அசோகன் காலத்தில் இந்த சாஸனத்துக்குப் பலபிரதிகள் இருந்திருக்க வேண்டுமென்று இதிலிருந்து தெளிவாகின்றது.

## VI ஸார்நாத் சாஸனம்

காசியின் அருகாமையிலுள்ள ஸார்நாத் முன் ஒரு பெரிய பெளத்தக்ஷேத்திரமாயிருந்தது. புத்தரின் தர்மப் பிரசாரம் ஆரம்பித்தது இவ்விடத்திலேயே. 1905-06ம் வருஷத்தில் இவ்விடத்திலுள்ள புராதன வஸ்துக்களைத் தேட ஆரம்பித்தபோது இங்கு பற்பல அபூர்வ வஸ்துக்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் மிகவும் அற்புதமானது ஸார்நாத் ஸ்தம்பம். இதன் மேல்புறம் இன்னும் இரத்தினம் இழைத்தாற்போல பளபளப்பாயிருக்கிறது. ஸ்தம்பம் முதலில் அசோகனுடைய தீர்த்த யாத்திரையின்போது ஸ்தாபிக்கப்பட்டதாயிருக்கலாம். இதன் சிகரத்தைப்பற்றி அவதாரிகையில் கூறியிருக்கிறோம். இந்த லிகிதம் மற்ற அசோக லிகிதங்களின் கருத்தை விளக்க நிரம்ப உபகாரமாயிருந்தது. ஸார்நாத் சாஸனத்தின் சில வாக்கியங்கள் 1904ஆடக்கு முன்னேயே சாஸன பரிசோதனைக்காரர்களுக்குத் தெரியும். ஏனென்றால், ஸார்நாத் சாஸனத்தின் முதற்பாகம் மட்டும் பிரயாகை ஸ்தம்பத்தின் ஓர் மூலையிலும் ஸாஞ்சி ஸ்தம்பத்திலும் எழுதப்பட்டிருந்தன. ஆயினும், இந்த லிகிதங்களில் பல சிதைவுகளிருந்தமையினாலும் வேறு சிறு வித்தியாசங்கள் இருந்தமையினாலும், இவற்றின் கருத்து சரியாய் விளங்கவில்லை. ஸார்நாத் சாஸனம் கிடைத்தபின் மற்ற இரு லிகிதங்களும் இச்சாஸனத்தின் கட்டளையை விளம்பரஞ் செய்யவே என்பது விளங்கிற்று.

பாப்ரு சாஸனத்தைப்போல இந்த ஸார்நாத் சாஸனமும் அசோகன் சார்வபெளமனாக இருந்ததோடுகூட, பெளத்த ஸங்கத்தின் தலைவனாகவும் விளங்கினானென்று தெரிவிக்கின்றது. இந்தத் தலைமை ஸ்தானம் சட்டத்திட்டங்களின்றி ஆசாரணையையும் வழக்கத்தையும் மட்டுமே அனுஸரித்ததா யிருந்திருக்கலாம். சாஸனத்தின் ஆரம்பத்தில் ஓர் வரி அழிந்திருக்கிறது. நஷ்டமான

வரிசை மற்றப் பாகத்தின் நோக்கத்திலிருந்து அனுமானித்து பூர்த்திசெய்திருக்கிறது.

ஸார்நாத் லிகிதம் ஒருவேளை அசோகன் கூட்டிய மூன்ருவது பௌத்தமத சபையையொட்டியதாயிருக்கலாமென்று நாம் ஊகிக்கிரோம். இச் சாஸனம் அந்த சபையின் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்குள்ள கட்டளைபோலும். இச் சாஸனம் அரசனின் கடைசி வருஷங்கள் ஒன்றில், அதாவது சுமார் கி.மு. 240-ல் எழுதப்பட் டிருக்கலாம். மகாசபையும் அதே வருஷத்திலேயே நடந்திருக்கவேண்டும்.

சாஸனத்தில் உபோஸதம் என்று கூறப்பட்டிருப்பது சுக்லபக்ஷத்துச் சதுர்த்தசியன்று அல்லது பௌர்ணமியன்று இரவு நடைபெற்று வந்த சடங்கு ஒன்ரும். இந்த நாட்களில் பௌத்த பிக்ஷுக்கள் பகல் முழுதும் உபவாஸமாயிருந்து இரவில் தங்கள் விஹாரத்தில் அல்லது மற்ரேரிடத்தில் ஒன்றுகூடி தந்தம் சரியையில் நேர்ந்த குற்றங் குறைவுகளைச் சொல்லிப் பிராயச்சித்தம் செய்துகொள்ளுவது வழக்கம். நாம் முன் கூறியுள்ள பாடிமோக்ஹம் என்பது இச் சடங்கில் உபயோகிக்கப்படும் வாக்கியங்களே. இச் சடங்கு மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டதென்று பௌத்தப் பிரபந்தத் திரட்டிலிருந்து நாம் அறிகிரோம். இல்லறத்தில் ஒழுகும் உபாஸகரும் இச்சடங்கின்போது வந்திருக்கவேண்டுமென்பது அசோகனுடைய விருப்பம் போலும்

தேவர் பிரியன் (இங்ஙனம் கூறுகிருன்......
......) பாட (லிபுரத்திலுள்ள மகாமாத்திரரும் மற்ற மாகாணங்களிலுள்ள மகாமாத்திரரும் இவ்விதம் ஆக்ஞாபிக்கப்படுகின்றனர்.)

ஒன்ருயுள்ள ஸங்கத்தில் பிளவுகளைச்

செய்தல் கூடாது. ஏதாவது பிக்ஷு அல்லது பிக்ஷுணி சங்கத்தைப் பிளவு செய்வாராயின் அவரை வெள்ளை வஸ்திரம் அணியச் செய்து மற்றவரோடு சேராமல் தனியாக வசிக்கச் செய்வோம். இக்கட்டளை பிக்ஷு சங்கங்களுக்கும் பிக்ஷுணி சங்கங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்கிறேன்.

தேவர் பிரியன் இவ்விதம் கூறுகிறான். இந்த லிகிதத்தின் ஒரு நகல் நமது உபயோகத்துக்காக உம்முடைய கார்யாலயத்தில்[1] எழுதப்பட்டிருக்கிறது. மற்றொரு நகல் உபாஸகருக்கு உபயோகமாகும் பொருட்டு அவர் (வீடுகளுக்கு) அருகில் எழுதவேண்டும். உபோஸததினந்தோறும் (நோன்புநாட்கள்தோறும்) எல்லா மகாமாத்திரரும் இந்நோன்பு நாட்களில் நடைபெறும் உபோஸதச் சடங்கின்போது வந்திருந்து இவ்வாணையைக் கேட்டு உணர்ந்து, இதை மற்றோருக்கும் ஆக்ஞாபிக்க வேண்டும். உமது எல்லைக்குட்பட்ட எல்லா ஊர்களுக்கும் பிரதேசங்களுக்கும் நீர் இவ்வுத்தரவின்படி (ஆசாரவேறுபாடுடையோரை) நீக்குதல் வேண்டும். கோட்டை நகரங்களிலும் நாடுகளிலும் எங்கும் இதுபோலவே நீக்குதல்[2] நடைபெற வேண்டும்.

முதலிரண்டு வாக்கியங்கள் மாய்ந்திருக்கின்றன. அவை போக மீதியுள்ளவை 9. (1) ஸம்ஸலன. கார்யாலயம். (2) விவாஸ. குற்றமுள்ள துறவிகளை நீக்குதல்.

## VII. ஸ்மாரக லிகிதங்கள்

### *நிக்லீவா லிகிதம்*

இந்த ஸ்தம்பம் உடைந்துபோனது; லிகிதமும் பல சிதைவுகளுடையது. ஸ்தம்பம் அதன் பூர்வ ஸ்தானத்திலிருந்து மாற்றப்பட்டிருக்கிறது என்பது தெளிவு. லிகிதத்தில் கூறப்படும் ஸ்தூபம் தேடியும் இன்னும் கிடைக்கவில்லை. கொனகை முனிவர் பூர்வ புத்தர்களில் ஒருவர். மொத்தம் புத்தர்கள் இருபத்தைவர் என்பர். அவருள் எழுவர் பிரதானமானவரென்று பௌத்த நூல்கள் கூறும். அவர், விபஸ்ஸீ, சிகீ, வெஸ்ஸபூ, ககுஸந்தர், கொனகமனர், காச்யபர், கௌதம சாக்கிய முனிவர். புத்தவம்சம் என்ற நூலில் பூர்வ புத்தரின் கதைக ளிருக்கின்றன.

அசோகன் பூர்வபுத்தர்களைச் சேர்ந்த மற்ற க்ஷேத்திரங்களையும் தரிசனஞ்செய்து அங்கும் பூஜைமரியாதைகளைச் செய்திருக்கலாம். காலத்தைக் காட்டும் சொற்கள் மாய்ந்திருக்கின்றபோதிலும், நிக்லீவா லிகிதம் ரும்மின்தேயீ லிகிதத்துடனே எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று வாசக ரீதியிலிருந்து அனுமானிக்கலாம்.

**தேவர்களுக்குப் பிரியனான பியதஸி ராஜன் முடிசூடிய பதினான்கு வருஷங்களுக்குப் பின் கொனகமன புத்தரின் ஸ்தூபத்தை இரண்டாந்தரம் விசாலமாகக் கட்டினார். தான் முடிசூடி (இருபது வருஷங்கள்) ஆனபின் அவர் நேராக வந்து இந்த புத்தருக்குப் பூசைசெய்து (கல் ஸ்தம்பத்தையும்) நாட்டினார்.**



ரும்மின்தேயீ லிகிதம்.

1. தெவான பியேன பியதஸின லாஜின வீஸதி
   வஸாபிஸிதேன
2. அதன ஆகாவ மஹீயிதே ஹித புதெ
   ஜாதே ஸக்யமுனீதி
3. ஸிலாவிகடபீசா காலாபித
   ஸிலாதபேச உஸபாபிதே
4. ஹித பகவம் ஜாதேதி லும்மினிகாமே
   உபலிகேகடே
5. அடபாகியேச.

ரும்மின்தேயீ லிகிதம்.

இது வெகுகாலம் பூமியில் புதைந்து கிடந்து 1896 ஹூல் தெரியவந்தது. ஸ்தம்பம் உடைந்திருக்கிற போதி லும் அதிலுள்ள லிகிதம் சிறிதும் சிதைவின்றி இன்றைக்கு எழுதியதுபோல மிகத்தெளிவா யிருக்கிறது. அசோக லிபியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புவோ ருக்கு இந்த லிகிதம் இப்பக்கத்துக்கு எதிரில் அச்சிட் டிருப்பது உபகாரமாயிருக்கும். அசோகன் காலத்தில் இவ்வூருக்கு லும்பினிக் கிராமம் என்று பெயர். அவன் இந்த ஸ்தம்பத்தை ஸ்தாபித்ததும் லிகிதத்தில் சொல்லப் பட்டிருக்கும் இருபத்தொன்றும் ஆண்டிலிருக்கலாம்.

தேவர்களுக்குப் பிரியனுன பியதஸி ராஜன் முடிசூடிய இருபது வருடங்களுக்குப் பின் நேராகவே இங்கே வந்து வணங்கி, சாக்கிய முனிவராகிய புத்தர் பிறந்தது இங்கே[1] யாத லால், இங்கு ஒரு கல்வேலியும்[2] ஒரு கல்ஸ்தம் பமும் கட்டினுன். பகவான் பிறந்தது இவ் விடத்தி லாதலால் லும்பினிக் கிராமம் ஒருவித வரியின்றியும்[3] விளைவில் எட்டில் ஒரு பங்குக்கு[4] தீர்வையுடையதாகவும் செய்யப்பட் டிருக்கிறது.

(1) "சாக்கிய முனிவராகிய புத்தர் பிறந்தது இங்கே" என்ற வாசகம் உபகுப்தன் அரசனிடம் சொன்ன வாக்கியமென்று திவ்யாவதானத்திலுள்ள கதையில் சொல்லியிருக்கிறது.

(2) சிலாவிகடவீஹா என்ற சொற்ருெடருக்கு கல்சுவர் அல்லது கல்வேலி என்று பொருள் கூறப்படுகிறது. பர்ஹூத் ஸாஞ்சி முதலிய இடங்களில் உள்ள கல்வேலிபோல இங்கும் ஒன்றிருந்தது போலும். குதிரை யுருவம் அமைந்த சிலே என்றும் இதற்குப் பொருள் கூறப்படுகிறது.

(3) உபலிகே.—தீர்வையின்றி.

(4) அஷ்டஹாகும். கௌடல்யனது அர்த்த சாஸ்திரத்தில் பாகம் என்ற சொல்லுக்கு நிலத்தீர்வை என்று கருத்து. அதனுல் அஷ்டபாக மாவது விளைவில் எட்டில் ஒருபங்கு அரசனுக்குக் கொடுத்தல்.

## VIII. ராணி காருவாகியின் லிகிதம்

இது பிரயாகை ஸ்தம்பத்தில் ஆறு ஸ்தம்பசாஸனங்களில் நகலின்பின் எழுதப்பட்டிருக்கிறது. லிகிதத்தின் ஸ்தானத்திலிருந்து இது இருபத்தேழாம் பட்டாபிஷேக வருஷத்திற்குப் பின் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று நாம் அனுமானிக்கலாம். அசோகன் குடும்ப சமாசாரங்களைப்பற்றிப் பல விரிந்த கதைகள் ஐதிஹ்யங்களில் இருக்கின்றபோதிலும் சாஸனங்களில் அதிகமாக ஒன்றும் கூறப்படவில்லை. ஏழாம் ஸ்தம்ப சாஸனத்தில் அரசனுடைய பிள்ளைகளும் ராஜகுமாரர்களும் ராணியின் குமாரர்களும் வெவ்வேறுகக் கூறப்பட்டிருக்கின்றனர். பக்கம் 143. அசோகனும் பல பூர்விக அரசரைப்போல பல மனைவிகளை உடையவனுயிருந்தான். வட ஐதிஹ்யங்களில் அரசனுக்கு அஸந்தமித்திரை யென்றும் அவள் இறந்தபின் திஷ்யரக்ஷிதை யென்றும் பெயருடைய இரு மனைவிமார் இருந்தனரென்று சொல்லப்படுகிறது. திஷ்யரக்ஷிதையின் தீய சுபாவத்தைப் பற்றிக் கதைகள் சொல்லப்பட் டிருக்கின்றன. இந்த லிகிதத்திலுள்ள இரண்டாவது ராணி காருவாகியின் பெயரோ அல்லது அவள் மகன் தீவரனின் பெயரோ ஐதிஹ்யங்களில் வரவில்லை.

தேவர் பிரியன் ஆக்ஞைப்படி எல்லா இடங்களிலுமுள்ள மகாமாத்திரருக்கு இவ்வாறு தெரியப்படுத்துகிறேம். இரண்டாவது ராணியால் செய்யப்பட்ட எல்லா நன்கொடைகளையும், மாந்தோட்டம், உத்தியானவனம், சத்திரம், அல்லது வேறு எவ்விஷயமாயினும் சரி அவற்றை, அத்தேவியினது தானமென்று கணிப்பது அவசியம். தீவரன் தாயும் இரண்டாவது ராணியுமாகிய காருவாகி செய்யும் காரியங்கள் இவை.

## IX தானப்பிரமாண லிகிதங்கள்

நமக்குக் கிடைத்துள்ள அசோகனது தானப்பிரமாணங்கள் மூன்றும் அரசன் ஆஜீவகர்களுக்கென்று செய்த தானங்களைப் பற்றியன. மற்ற மதத்தினருக்குச் செய்த தானங்களின் அறிகுறி நமக்குக் கிடைக்காமலிருப்பதற்குக் காரணம் ஒருவேளை அவை குடைந்த குகைகளாயிராமல் கட்டப்பட்ட வீடுகளாயிருந்தன என்பதாயிருக்கலாம். அதனால் சில நூற்றாண்டுகளுக்குள் அவை இடிந்து முற்றிலும் ஜீர்ணமாயிருக்கும்.

கயையின் அருகாமையில் பராபர்மலை யென்றும் நாகார்ஜுனி மலை யென்றும் இரண்டுமலைகளுண்டு. இங்கே அசோகனாலும் அவனுக்குப்பின் பாடலிபுரத்தில் ஆண்ட தசரதனாலும் செய்யப்பட்ட ஆறு விசாலமான குகைகள் இருக்கின்றன. இவற்றின் வேலைப்பாட்டில் உறுதியும் வலிமையும் காணப்படுகிறபோதிலும் சிற்ப அலங்காரம் விசேஷமா யொன்றுமில்லை. உட்புறம் கண்ணாடியின் புறம்போல இழைக்கப்பட்டிருக்கிறது.

ஆஜீவகர் அக்காலத்துள்ள பிரபலமான துறவிகள். பௌத்தக் கிரந்தங்களில் இவரது ஆடையற்ற கோலத்தையும் கோரமான காயக்கிலேசங்களையும் பரிகசித்து எழுதியிருக்கிறது. ஆயினும், அசோகன் சகல மதங்களிலும் “ஒரு விஷயத்தில் அல்லது மற்றொரு விஷயத்தில் மேன்மையுண்டு” என்று நம்பினதினால் அவன் ஆஜீவகர்களையும் காப்பாற்றி வெகுமானஞ் செய்தான்.

மொத்தமாய் ஆறு குகைகள் உள்ளத்தில் மூன்று அசோகனால் குடையப்பட்டவை. அவனுடைய லிகிதங்கள் உட்புறத்துச் சுவரில் எழுதப்பட் டிருக்கின்றன. இக்குகைகளாவன—I நியக்ரோத அல்லது ஆலமரக்குகை.

II கலதிக மலையிலுள்ள 'விசுவஜோப்ரி குகை. III கலதிக மலையிலுள்ள ஸுபியா குகை.

I. இந்த நியக்ரோத குகை ஆஜீவகர்க்கென்று ராஜனுன பியதஸியால் தான் முடிசூடிப் பன்னிரண்டு வருடங்களானபின் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

II. கலதிக மலையிலுள்ள இந்தக் குகை ஆஜீவகர்களுக்கென்று ராஜனுன பியதஸியால் தான் முடிசூடிப் பன்னிரண்டு வருடங்களான பிறகு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

III. ராஜனுன பியதஸி முடிசூடிப் பத்தொன்பது வருடங்களானபின் ஸுபியா குகையை (ஆஜீவகருக்கு) சந்திர சூரியருள்ள வரையிலும் நிலைநிற்கும்படித் தானஞ் செய்திருக்கிறுன்.

# அனுபந்தங்கள்

# அனுபந்தம் I

## கால அட்டவணை

| கி. மு. ஆண்டு. | அசோகன் பட்டாபிஷேக வருஷம். | விவரங்கள். |
|---|---|---|
| 277 | ... | மாஸிடோனியா அரசன் அன்டிகோனஸ் ஆட்சி தொடங்கிற்று. |
| 273 | ... | அசோகன் இளவரசன் ஆனான் |
| 272 | ... | எப்பைரஸ் தேசத்து அலக்ஸாந்தரின் ஆட்சி தொடங்கிற்று. |
| 269 | 1 | அசோகனுடைய பட்டாபிஷேகம். |
| 261 | 9 | அசோகன் கலிங்கம் சென்று யுத்தம் ஆரம்பித்தான். அவன் பௌத்த மதத்தை ஆச்ரயித்து உபாஸகன் ஆனான். ஸிரியாவில் இரண்டாம் ஆன்டியோக்கஸ் ஆட்சி தொடங்கிற்று. |
| 259 | 11 | அசோகன் வேட்டையாடுதலைத் தவிர்த்தான். தர்மப் பிரயாணங்கள் ஆரம்பமாயின. தர்மத்தைப் போதிக்கத் தூதர் தூரதேசங்களுக்குப் போயினர். |
| 258 | 12 | கைரீனே தேசத்து மகஸ், (மகாஸ்) எப்பைரஸ் தேசத்து அலக்ஸாந்தர் ஆகிய இருவரும் இறந்தனர். |
| 257 | 13 | முதலாம் உபசாஸனம் பிரசுரஞ் செய்யப்பட்டன. } 3-வது சாஸனம். 4-வது சாஸனம். |
| | | அனுஸம்யானம் ஐந்து வருஷங்களுக்கொருமுறை அவசியம் என்ற சட்டம் உண்டாயிற்று. |
| | | பராபரில் ஆஜீவகருக்கு இரண்டு குகைகள் செய்யப்பட்டன. |
| 256 | 14 | பதினான்கு சாஸனங்களும் மொத்தத்தில் பிரசுரஞ் செய்யப்பட்டன. |
| | | தர்மமகாமாத்திரரின் நியமனம். |
| | | முதலாவது கலிங்க சாஸனம் எழுதப்பட்டது. |

| கி. மு. ஆண்டு. | அசோகன் பட்டாபிஷேக வருஷம். | விவரங்கள். |
| --- | --- | --- |
| 255 | 15 | கொனகமன புத்தரின் ஸ்தூபம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. |
| 254 | 16 | இரண்டாவது கலிங்க சாஸனம் எழுதப்பட்டது. |
| 250 | 20 | ஆஜீவகருக்குப் பராபரிலுள்ள மூன்றாவது குகை குடையப்பட்டது. |
| 249 | 21 | புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்க அரசன் தன் பெரிய யாத்திரையை ஆரம்பித்தான். ரும்மின்தேயீ ஸ்தம்பமும் கொனகமன முனிவரின் ஸ்தம்பமும் நாட்டப்பட்டன. நேப்பாளத்துக்குப் பிரயாணம். லலிதாபட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. |
| 248 | 22 | பாக்டிரியாவும் பார்த்தியாவும் சுதந்திரத்தை அடைந்தன. |
| 247 | 23 | எகிப்து அரசன் டாலமி இறந்தான். |
| 246 | 24 | ஸிரியா தேசத்து அரசன் அன்டியாக்கஸ் இறந்தான். |
| 243 | 27 | ஸ்தம்ப சாஸனங்கள் பிரசுரமாயின. |
| 242 | 28 | 7-ம் ஸ்தம்ப சாஸனம். மாஸிடோணியா தேசத்து அன்டிகோனஸ் இறந்தான். |
| 240 | 30 | மூன்றாவது பௌத்த மஹாஸபை கூடிற்று. |
| 240-232 | 30-37 | ஸார்நாத் சாஸனமும் இதைச் சேர்ந்த மற்றச் சாஸனங்களும் பிரசுரமான காலம் (உத்தேசம்). |
| 232 | 37 | அசோகன் மரணம். தசரதன் ஆட்சி பாடலிபுரத்தில் ஆரம்பித்தது. நாகார்ஜுனி மலையிலுள்ள குகைகள் குடையப்பட்டன. |
| 185 | | பிருகத்ரதன் என்ற கடைசி மௌரிய அரசன் புஷ்யமித்திர சுங்கன் என்ற தன் சேனாதிபதியின் கையால் இறந்தான். |

## II

## பௌத்தமறை நூல்கள்

அசோக சாஸனங்களிலும் இப் புஸ்தகத்தின் அவதாரிகையிலும் கூறப்பெற்ற பௌத்தநூல்களைப் பற்றிச் சுருங்க விளக்குவது இவ்வனுபந்தத்தின் நோக்கமாகும். பௌத்த சமயத்தைச் சேர்ந்த நூல்கள் எண்ணிறந்தன என்று கூறுவது மிகையல்ல. பௌத்தமதமானது கால அளவில் செழித்தோங்கிப் பல கப்பும் கவறுகளுமுடைய அரும்பெரும் விருக்ஷமாக வளர, அதன் சமய நூல்களும் அவ்விதமே பலவாறாகவும் பற்பல பாஷைகளிலும் தோன்றின. ஸம்ஸ்கிருத மொழியில் பல பௌத்த நூல்கள் உண்டு. திபெத், சீனா, இலங்கை முதலிய தேச பாஷைகளிலும் பல உள. அவற்றில் சில நூல்கள் பகவத்கீதை, கடோபனிஷத்து முதலிய நூல்களைப்போல உலகத்தின் மதிப்புக்கும் சாசுவதமான புகழுக்கும் உரியவை. ஆனால் நாம் இங்குக் கூறப்போவது அந்நூல்களைப்பற்றி அல்ல; பௌத்த சமயத்தின் மூலநூல்கள் என்று கணிக்கக் கூடியவை த்ரிபிடக என்று சொல்லப்படுகிற கிரந்தங்களாம். இங்கு அவற்றில் அடங்கினவும் 'பௌத்தர்கள் திருமறை' என்று சொல்லத்தகுந்தனவுமான நூல்களை விவரிப்போம்.

கௌதம புத்தரும் அவருடைய சீஷர்களும் தங்களுடைய மதவிஷயமான சம்பாஷணைகளுக்கு அவ்வப்போது வட இந்தியாவில் வழங்கிவந்த பிராகிருத மொழிகளையே உபயோகித்தனர். அதனால் ஆதி பௌத்த நூல்களின் பாஷை பிராகிருதமொழியாயிருந்தது. இப்பாஷை தற்காலம் பாலி என்று கூறப்படுகிறது. இலங்கை, பர்மா முதலிய தென் நாடுகளில் பாலி புண்ணியபாஷை எனக் கருதப்பட்டு அந்நாட்டுப் பண்டிதர்களால் போற்றப்பட்டு வருகிறது. மூன்று பிடகங்களில் அடங்கிய கிரந்தங்களுக்கு

உரையாகவும் வியாக்கியானங்களாகவும் வேறு பல நூல்கள் பாலியில் எழுதப்பட்டிருக்கின்றன.

பிடகம் என்ற சொல் கூடை என்னும் பொருளுடையது. த்ரிபிடக என்றால் மூன்று முக்கியமான பௌத்தப் பிரபந்தத் திரட்டுகளாம். இது பாலியில் எழுதப்பட்டுள்ளது. இஃது அச்சில் இந்நூலின் பக்கங்களைப்போல பதினாயிரம் பக்கங்களுக்கு மேற்படும்; 'பைபிள்' என்ற கிறிஸ்துவர்களுடைய சத்தியவேதப் புத்தகத்தைவிட மும்மடங்கு விரிவானது. இதில் அடங்கிய கிரந்தங்கள் இருபத்தொன்பது என்று சொல்லலாம். இந்த இருபத்தொன்பதில் பல கிரந்தங்கள் சிறு உரைகளின் தொகுதியேயாம்.

மூன்று பிடகங்களில் அடங்கிய இருபத்தொன்பது நூல்களையும் பௌத்த சமயத்தின் மூல நூல்கள் எனலாம். அவற்றிற் கூறப்படும் சமயக்கொள்கைகளே தேரவாதம் (ஸம்ஸ்கிருதம்: ஸ்தவிர வாதம்) அல்லது பெரியோரின் மதம் என்று கருதப்படுபவை. கௌதம புத்தர் நிர்வாணத்தை அடைந்த சிறிது காலத்திற்குள்ளேயே பௌத்த ஸங்கத்தின் கொள்கையில் வேறுபாடுகள் பல உண்டாயின. சிலர் தேரவாதக் கக்ஷிக்கு எதிராக நின்றனர். அசோகசக்கரவர்த்தியின் காலம்வரையும், பௌத்தர்களுக்கிடையில் எந்தச் சமய நூல்கள் தமது மறைக்குப் புறம் என்றும், எவை உட்பட்டவை என்றும் தீர்மானம் பெறாமல் வாதங்கள் நடந்து வந்தன. மூன்றாவது பௌத்த மகாஸபையில் இவ்விஷயம் ஒருவாறு முடிவு செய்யப்பட்டது. சமய நூல்கள் திரட்டப்பட்டு வரிசைப்படுத்தப் பட்டன. இவ்விவரங்களை அவதாரிகையில் 37-ம் பக்கத்தில் கூறியுள்ளோம்.

அனேக பௌத்தர்கள் அம் மகாஸபையில் தேர்ந்

தெடுக்கப்பட்ட எல்லாச் சமய நூல்களையும் ஒப்புக் கொள்ளவில்லையாயினும் பொதுவாக அவை சாக்கிய முனிவருடைய தர்மோபதேசங்களை விளக்குகின்றவையே என்பதுமட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வபிப் பிராயத்தை உறுதிப்படுத்த புராதன வஸ்து ஆராய்ச்சி அத்தாட்சியைத் தருகின்றது. கி. மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தனவும் பர்ஹூத் என்ற விடத்திலிருந்து அகப்பட்டுள்ளனவுமான சில கல்வெட்டு களில் 'பஞ்சநிகாயிகன்' (ஐந்து நிகாயங்களையும் கற்றுத் தேர்ந்தவன்), பேடகி (பிடகங்களைக் கற்ற வித்துவான்) என்ற பட்டங்கள் பௌத்த பிக்ஷூக்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. பிடகம் என்ற பதம் சமயநூல்களைத் தொகுப்பதற்குமுன் ஏற்பட்டிருக்க முடியாது. புத்த ருடைய வாக்கியங்களை ஐந்து நிகாயங்களாக வகுத்ததும் ஆதியில் ஏற்பட்டதன்று. மூன்றாவது மகாஸபையில் மறை நூல்கள் நிச்சயிக்கப்பட்ட பின்பே இச்சொற்கள் வழக்கில் வந்திருக்க இடமுண்டு. ஆதலால், இம் மகாஸபையில் நிர்ணயிக்கப்பட்ட நூல்கள் அக்காலம் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டவை என்பது தெளிவாகும். தென் பௌத்தமதம், வட பௌத்தமதம் என்ற வித்தியாசங்கள் அப்போது பிரபலமாகவில்லை.

மூன்று பிடகங்களில் அடங்கிய பௌத்தப் பிரபந் தங்களை வேதத்தின் ஞானகாண்டத்திற்கு ஒப்பிடலாமாயி னும் அவை இரண்டிற்கும் நிரம்ப வேறுபாடுகளும் உள. ஆரண்யகங்கள் உபநிஷத்துகள் முதலிய மறைநூல்கள் வெவ்வேறு காலத்தவை; பற்பல ரிஷிகளின் மதங்கள் அடங்கியவை; பலவிதக் கொள்கைகளைப் பிரதிபாதிப் பவை. பிடகங்களில் அடங்கிய நூல்களோ, கௌதம புத்தர் கொள்கைகளை மட்டில் விளக்குவன வாகும்.

இவற்றை, விசேஷமாக இரண்டாவது பிடகத்திலடங்கிய நூல்களை, கிறிஸ்தவர்களின் சத்தியவேதத்தில் அடங்கிய புஸ்தகங்களுக்கு ஒப்பிடுவது சற்று பொருந்தும். பைபிளின் 'புது ஏற்பாடு' என்ற பகுதியில் கிறிஸ்து முனிவரின் வரலாறும் அவர் உபதேசங்களும் இருக்கின்றன. இவை யாவும் கிறிஸ்து முனிவர் காலஞ்சென்ற பிறகு அவருடைய சிஷர்கள் தம் ஞாபகத்திலிருந்து திரட்டிய வையே. அதுபோலவே சாக்கிய முனிவருடைய உபதேச மொழிகளும் பிற்காலத்தில் திரட்டப்பட்டவையே. பௌத்தரின் மறைநூல்களைப் போலவே கிறிஸ்தவரின் மறைநூல்களும் ஒரே மதசித்தாந்தத்தை வற்புறுத்துவது. இரண்டு மதங்களும் ஒரு மகாபுருஷனை கடவுளாகக் கொள்கின்றது. ஆயினும், பௌத்த மறைநூல்களில் கௌதம சாக்கியமுனிவரைவிட அவர் போதித்த தர்மமே முனைத்திருக்கிறது; கிறிஸ்தவ மறைநூல்களிலோ கிறிஸ்துவே முனைத்திருக்கிறார். உதாரணமாக, புது ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் சரிதை நான்கு ஞானிகளால் உரைக்கப்படுகிறது. பிடகங்களில் ஓரிடத்திலும் சாக்கிய முனிவருடைய சரிதை தொடர்ச்சியாக உரைக்கப்படவில்லை. ஆனால் பல இடங்களில் அவருக்குப் பூர்ண ஞானோதயம் உண்டாவதற்கு முன்னும் பின்னுமுள்ள பல செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் கௌதம புத்தருடைய ஜீவ சரித்திரத்தை உணர்ந்துகொள்ளலாமாயினும் புத்தருடைய வரலாற்றை உரைப்பதை விட அவருடைய தர்மோபதேசங்களை விளக்குவதே பிடகங்களின் உத்தேசம்.

தர்மத்தின் கொள்கைகளை விளக்கும் உரைகளுக்கு ஸுத்த அல்லது சூத்திரங்கள் என்று பெயர். இந்த சூத்திரங்களின் நடையைப்பற்றிப் பொதுவாக ஒரு அபிப்

பிராயம் கூறலாம். சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்ற மேன்மை இவற்றின் நடையில் காணமுடியாது. இதற்கு எதிராக, ஒரே அடுக்கான வாசகங்களும் சொற்றொடர்களும் திரும்பத் திரும்ப வருவது இச்சூத்திரங்களுக்கு இயல்பாயிருக்கிறது. முன் 75-ம் பக்கத்தில் கூறியுள்ளபடி அசோக சாஸனங்களின் நடையும் ஏறக்குறைய இப்படியே இருக்கின்றது. சூத்திரங்கள் புத்தருடைய ஜீவகாலத்தில் தோன்றிய முதலுரைக்கு உண்மையான பிரதியாயிருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதப்பட்டமையே இவ்வித நடைக்கு காரணமாதல் வேண்டும்.

அனேக சூத்திரங்கள் புத்தருக்கும் அவரைத் தரிசிக்க வந்தோருக்கும் ஏற்பட்ட வினா விடை ரூபமாக இருக்கின்றன. இப் பகுதியை ஐரோப்பாவில் பெயர்போன "ப்ளேட்டோ"வின் சம்பாஷணைகளுக்கு ஒப்பாகக் கூறலாம். தம்மைக் கேள்விகள் கேட்கவந்தோனுடைய வாக்கியங்களையே பெரும்பாலும் உபயோகித்து பதில் உரைப்பதும், எதிர்வினவுவதும் இயற்கையல்லவா? இப்பகுதிகளுக்கு சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்ற சிரேஷ்ட குணம் அமையாதெனினும் இவற்றில் சொல்வன்மையும் அணியழகும் மிகுதியாய்க் காணப்படுகின்றன. இயற்கையின் தோற்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உருவங்களும் உபமானங்களும், சமயோசிதமான மேற்கோள்களும், கதைகளும், வரிசையான நியாய வாதங்களும், கேட்போர் மனத்தைப் பல சந்தர்ப்பங்களில் கவரக் கூடியனவாயிருக்கின்றன. ஒரே தர்மபோதனை சொற்ப மாறுதலுடன் த்ரிபிடகத்தின் வேறொரு பாகத்தில் வருதலும் உண்டு.

மூன்று பிடகங்களாவன :— 1 வினயபிடகம், 2 ஸூத்தபிடகம். 3 அபிதர்ம பிடகம்.

## 1. வினய பிடகம்

பௌத்த பிக்ஷுக்களுடைய ஒழுக்க முறையையும் நித்திய நியமங்களையும் உரைக்கும் கிரந்தங்களின் தொகுதியாம். இப்பிடகத்தில் அடங்கிய நூல்கள் பின்வருமாறு:—

| வினயத்தில் அடங்கிய நூல்களின் பெயர் | விவரங்கள் |
|---|---|
| 1. பாடிமோக்கம் | பிக்ஷுக்கள் அனுஸரிக்க வேண்டிய 227 விதிகள் கூறப்படுகின்றன. |
| ஸுத்த விபங்க | பாடிமோக்கம் என்ற ஸூத்திரத்தின் ஒரு பழைய வியாக்கியானம். இஃது இருவகைப்படும். |
| A. பாராஜிக. | உரையின் முதற்பாகம். ஸங்கத்திலிருந்து விலக்குதலுக் குற்ற குற்றங்களைப் பற்றிக் கூறுவது. |
| B. பாசித்திய | இரண்டாம்பாகம் பிராயச்சித்த நோன்புகளால் தீர்க்கக்கூடிய குற்றங்களைப் பற்றிக் கூறுவது. |
| 2. கந்தக | ஸங்கத்தில் பிரவேசித்தல், பிக்ஷுக்களின் ஊண், உடை முதலியவற்றைப்பற்றிக் கூறுவது. |
| A. மஹாவர்கம் | இதன் பெரும்பகுதி 20. அத். |
| B. சுல்லவர்கம் | ,, சிறுபகுதி 12. அத். |
| 3. பரிவாரபாத | அனுபந்தங்களும் சுருக்கமும், 25 அத். |

வினய பிடகத்தில் சாதாரணமாகத் தர்மபோதனைகள் இல்லாவிடினும் கௌதமர் போதிவிருக்ஷத்தின் அடியில் பலகாலம் வீற்றிருந்து தவஞ்செய்து, கடைசியில் பூர்ண ஞானத்தை அடைந்து, தமக்குக் கிடைத்த மிக அரிதான உண்மையை உலகத்துக்கு உரைத்து யாவரையும் ஈடேற்ற வேண்டுமென்ற எண்ணங் கொண்டு, காசியை நோக்கிச் சென்று, அங்கே முன்னொருகால் தமது சீடராயிருந்த ஐந்து துறவிகளைக் கண்டு, அவர்களுக்கு முதன்முதலாகத் தாம் கண்டெடுத்த தர்மத்தைப் போதித்த விவரங்கள் மஹாவர்கத்தில் கூறப்படுகின்றன.

புத்தர் உலகத்தாருக்கு முதலிற் செய்த பிரசங்கமும் இப் பாகத்தில் சேர்க்கப்பட் டிருக்கிறது. தர்ம சக்கரப் பிரவர்த்தன சூத்திரம் (மஹாவர்கம் 6-ம் அத்.) என்னும் நூலில் இந்த முதல் உபதேசம் செய்யப்பட்ட வரலாறும் அதன் கருத்தும் விவரிக்கப்பட் டிருக்கின்றன. புத்தருடைய தர்மத்தை நன்கு உணர அவரது முதல் உபதேசமாகிய 'தர்ம சக்கரப் பிரவர்த்தன சூத்திரம்' மிகவும் ஏற்ற ஆதாரமாம். அசோகனும் இவ்விதமே கூறுகிறான் போலும். அவன் தனது பாப்ரு சாஸனத்தில் எல்லோரும் அவசியம் மனனம் செய்யவேண்டிய ஏழு சூத்திரங்களைக் குறிப்பிடுகிறான். அவற்றில் முதலாவதாகக் கூறப்படுவது 'வினய ஸமுத்கர்ஷம்' என்பது. இது, தர்மசக்கரப் பிரவர்த்தன சூத்திரத்தின் மறுபெயரேயென்று சில வித்வான்கள் சொல்லுகின்றனர். இது, திரும்பவும் இரண்டு முறை ஸுத்தபிடகத்தில் வெவ்வேறு தொகுதிகளில் வருகின்றது.

## 2. ஸுத்த பிடகம்

ஸுத்த பிடகம் அல்லது சூத்திர பிடகம், தர்மத்தை விளக்குவதற்கான சம்பாஷணைகளும் வாதங்களும் பிரசங்கங்களும் அடங்கியதாகும். இதுவே பௌத்த மறைத் தொகுதியில் மிகவும் முக்கியமான பாகம். இதில் 'ஐந்து நிகாயங்கள்' என்ற பிரிவுகள் உண்டு. இவ்வைந்து நிகாயங்களாவன. :—

| | | |
|---|---|---|
| I. | தீர்க நிகாய ... | 34 நீண்ட சூத்திரங்கள். |
| II. | மஜ்ஜிம நிகாய ... | 152 நடுத்தரமான சூத்திரங்கள். |
| III. | ஸம்யுத்த நிகாய ... | 55 "ஸம்யுத்தங்கள்" கொண்டது. |
| IV. | அங்குத்தர நிகாய .. | 11 பிரிவுகளாகத் தொகுக்கப்பட்ட சூத்திரங்கள். |

V. குத்தக நிகாய ... பின்வரும் பதினைந்து நூல்களின் தொகுதி.

A. குத்தக பத ... இதில் பல கதைகளும் நீதி வாக்கியங்களும் கீதங்களும் உள்ளன.

B. தம்மபத ... விவரம் கீழே காண்க.

C. உதான ... புத்தருடைய சில சந்தோஷ வசனங்கள்.

D. இதிவுத்தக ... புத்தருடைய சில உரைகள்.

E. ஸுத்தநிபாத ... விவரம் கீழே காண்க.

F. விமானவஸ்து ... சுவர்க்க நிலையங்களைப்பற்றி.

G. ப்ரேதவஸ்து ... மரணத்துக்குப்பின் உள்ள நிலைகளைப்பற்றி.

H. தேரகாதா ... விவரம் கீழே காண்க.

I. தேரிகாதா ... ஷை

J. ஜாதக ... ஷை

K. நித்தேஸ ... சில சூத்திரங்களுக்கு ஸாரிபுத்திரனால் செய்யப்பட்ட வியாக்கியானங்கள்.

L. படிஸ்மபிதா மார்க ... விவேகம் அடையும் வழி.

M. அபதான ... புண்ணிய கதைகள்.

N. புத்தவம்ச ... பூர்வ புத்தர்களைப்பற்றிய கதைகள்.

O. சரிய பிடக ... முன் ஜன்மங்களில் புத்தருடைய அபூர்வச் செயல்கள்.

i. தீர்க நிகாயத்தில் அடங்கியவற்றுள் மிகக் கியாதி பெற்ற சூத்திரங்களைச் சுட்டிக் காட்டுவோம். புத்தருடைய அந்திய காலத்தைப்பற்றிய விவரங்களும் அவர் சிஷர்களுக்குச் செய்த சரமோபதேசமும் அடங்கியது மஹா பரிநிர்வாண சூத்திரம். இதுவே பௌத்த மறைத் தொகுதியில் மிகவும் தொன்மையுடையது எனலாம்.

பிரம்மம், ஆன்மா, ஈசுவரன் முதலிய கொள்கைகளை ஆராய்ச்சி செய்யும் பிரஹ்ம ஜால சூத்திரம்; இல்வாழ்ப வரின் கடமைகளைக் கூறுவது ஸ்ருகால வாத சூத்திரம்; துறவறத்தின் பெருமையை விளக்குவன ஸமண்ண பல சூத்திரமும், பப்பஜ்ஜ சூத்திரமும்; நான்கு பாவனைகளைக் கூறும் தேவிஜ்ஜ சூத்திரம்.

ii. மஜ்ஜிம அல்லது மத்தியம நிகாயம் தீர்க நிகாயத்தில் உட்பட்ட சூத்திரங்களைவிடக் குறுகிய சூத்திரங்களின் தொகுதியாம். சில உரைகள் ஸம்புத்தாந்தம் என்றும் வாதம் என்றும் பெயருடையனவா யிருக்கின்றன. அசோக னுடைய உள்ளம் திடீரென மாறினதற்குக் காரணத்தை ரட்டபால சூத்திரம் என்பது விளக்குகிறது என்று சொல்லலாம். அயல் நாடுகளைக் கைப்பற்ற வேண்டு மென்ற அரசருக்குரிய பேராசை மற்றப் பேராசைகளைப் போலவே இழிவு என்று இங்கு விளக்கப்படுகிறது.

iii. விஷயத்தின் ஒற்றுமைபற்றித் தொகுக்கப் பட்டது ஸம்யுக்த நிகாயம் என்பது. ஒரே விஷயத்தைப் பற்றிய பல உரைகளுக்கு அல்லது ஒரே ஒருவனுக்காகச் செய்யப்பட்ட பல உபதேசங்களுக்கு ஸம்யுக்தம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் இந்த நிகாயத்தில் ஐம்பத்தைந்து ஸம்யுத்தங்கள் உண்டு. உதாரணமாக, இந்த நிகாயத்தில் நான்காவது ஸம்யுத்தத் திற்கு மாரஸம்யுத்தம் என்று பெயர். அஃதாவது, மாரனைப் பற்றிக் கூறும் சூத்திரங்கள். இவ்விதமே ஐந்தாவது பிக்குணி ஸம்யுத்தம்; பிக்குணிகளை அஃதாவது பெண் துறவியரைப்பற்றிக் கூறுவது.

iv. அங்குத்தர நிகாயம் த்ரிபிடகத்துள் மிகவும் விரிந்த பாகம். இதில் 2308 சூத்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த நிகாயம் பதினொரு அத்தியாயங்களாகப் பிரிக்கப்

பட்டிருக்கின்றது. பௌத்தர்களுடைய தத்துவஞானத்தின்படி எல்லாப் பொருள்களும் விஷயங்களும் ஒவ்வொரு எண்களால் குறிக்கப்படும். புத்தர்கள் இரண்டுவகைப் படுவர். பிரத்தியேக புத்தர்கள், ஸம்யக் ஸம் புத்தர்கள். இதுபோலவே, மூன்றுவகைத் துறவிகள், நான்குவகை நன் முயற்சிகள், ஐந்துவகைப் பாவனைகள் (அல்லது தியானங்கள்) ஆறுவித ஸித்திகள், உண்மை ஞானத்தைத் தரும் ஏழுவிதக் கருவிகள்,. நிர்வாணத்தை அடைவதற்கான எட்டுவித படிகள், பாரமிதை எனப்படும் புத்தரது பத்து அரும் பெரும் குணங்கள் — இவ்வாறு பல சங்கதிகளும் எண்களைக்கொண்டு குறிப்பிடப்படுகின்றன. ஆதலால் சூத்திரங்களும் இம் முறைப்படி அங்குத்தர நிகாயத்தில் அடுக்கப்படுகின்றன. முதலாவது அத்தியாயத்தில் ஒருமைத் தன்மையுடைய விஷயங்களையும், இரண்டாவது அத்தியாயத்தில் இரட்டைத் தன்மையுடையனவற்றையும், மூன்ருவது அத்தியாயத்தில் முத்தன்மையுடையனவற்றையும், இங்ஙனமே மற்ற அத்தியாயங்களில் அவ்வவ்வத்தியாயங்களின் எண்ணுல் குறிப்பிடப்படும் விஷயங்களையும் இம்மறைத் தொகுதியின் ஆசிரியர் கூறுகின்ருர்.

அசோகனுடைய பாப்ருசாஸனத்தில் வரும் அலியவஸானி (= ஆரியரின் ஸித்திகள்), அனுகதபயானி (= வரப்போவதைப்பற்றிய அச்சம்) என்ற இரண்டும் இந்த நிகாயத்தில் வரும் சூத்திரங்களேயாம்.

V. குத்தக நிகாயம் என்பது பதினைந்து பிரத்தியேகமான நூல்கள் அடங்கிய தொகுதி. இதில் அடங்கிய சில நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை; சில மிகவும் பழமையானவை. சில மிக அழகிய இலக்கியங்களென மதிக்கத் தக்கவை. ஆயினும், ஸகல பௌத்தர்களும் ஒப்புக்கொள்ளா

தனவும் பிற்காலத்தில் தோன்றியனவுமாகிய நூல்களும் இத்தொகுதியில் இருக்கின்றன. இதில் அடங்கிய பதினைந்து நூல்களையும் ஒன்றுபோல விவரிக்கவேண்டியது அவசியமில்லை. முக்கியமானவற்றைக் கீழே குறிப்பிடுவோம்.

B. தம்மபத. இந்நூல் ஐரோப்பாவிலுள்ள பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள 423 நீதிவாக்கியங்கள் திருவள்ளுவர் செய்த குறட்பாக்களைப்போலவும் பர்த்ருஹரியின் நீதிசுலோகங்களைப் போலவும் மிக இனிமையாகவும் அழகாகவும் திகழ்கின்றன.

E. ஸுத்த நிபாத. இதில் 71 சிறு சூத்திரங்கள் இருக்கின்றன. இதில் அடங்கிய சூத்திரங்கள் மிகப் புராதனமானவை யென்று அறிஞர்களால் கருதப்படுகிறது. அசோகனுடைய பாப்ரு சாஸனத்தில் சொல்லப்படும் "உபதிஷ்யன் கேள்விகள்" என்ற உரை இந்நூல் 54-வதாகிய சாரிபுத்திர சூத்திரம் என்று கருதப்படுகிறது. மோனேய ஸுத்திரமும் இந்நூலில் உள்ளதே. அது 12-வது உரை. ராஹுல சூத்திரம் என்ற பெயருடைய உரை ஒன்றும் இந்நூலில் காணப்படுகிறது (23-வது சூத்.). இது பாப்ரு சாஸனத்தில் குறிப்பிடப்படும் உபதேசமே என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. மஜ்ஜிம நிகாயத்திலும் ராஹுல வாதம் என்ற ஒரு சூத்திரம் இருக்கிறது.

H & I. தேரகாதை, தேரிகாதை. பாப்ரு சாஸனத்தில் முனிகாதா அல்லது முனிகளின் கீதங்கள் என்று கூறப்பட்ட உரை தேரகாதை என்று நமக்குத் தோன்றுகிறது. பௌத்த மதத்தின் அறிவு வளரவளர தேரகாதை, தேரிகாதை என்ற நூல்கள் அதிகமாகப் புகழ்பெறும். ஏனென்

ருல், இந்நூல்களில் அடங்கிய பாடல்களில் எல்லோருடைய இதயத்தையும் உருக்கக் கூடிய மனோபாவங்கள் காணப்படுகின்றன. தேரகாதை என்பது தமது வாழ்நாட்களிலேயே விடுதலைப் பதவியை அடைந்த மஹான்களுடைய கீதங்களாம். தேரிகாதை என்பது முன்கூறிய உயர் நிலையை அடைந்த ஸ்திரீகளால் இசைக்கப்பட்ட பாடல்கள். இவ்விரு புஸ்தகங்களிலுள்ள கீதங்களில் துறவறத்தில் திருப்தியும், மகிழ்ச்சியும், சாந்தமும், அமைதியும், சுற்றத்தாரிடம் அன்பும் அனுதாபமும், உயிர்ப்பிராணிகளிடம் ஈவும், இரக்கமும், இயற்கை வனப்பில் ஈடுபடும் பரிசுத்த மனமும் மிக மேன்மையாக விளங்குகின்றன.

J. ஜாதக. இக் கதைகளைப்பற்றி அவதாரிகையில் 62-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளோம். புத்தர் போதி விருக்ஷத்தின் அடியில் பூர்ண ஞானத்தை அடைந்ததும் அவருக்குப் பூர்வ ஜன்மங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் யாவும் அகக்கண்ணில் விளங்கினவாம். அவருடைய தர்மோபதேசங்களில் அவர் தம்மையே திருஷ்டாந்தமாகக் கூறுவது வழக்கம். தாம் முன்னொரு காலம் புலியாயிருந்ததாகவும், யானையா யிருந்ததாகவும், ஓர் ஏழை விறகுவெட்டியா யிருந்ததாகவும் கூறி, ஓர் ரசமான கதையைச் சொல்லி அவர் தாம் வற்புறுத்த எண்ணங்கொண்ட நீதியை விளக்குவார். இம் முறை அவருடைய தர்ம போதனைக்கு ஏற்றதாயிருந்தது. பிற்காலங்களில் புத்தர் தமது பூர்வ ஜன்ம நிகழ்ச்சிகள் என்று கூறிய கதைகள் திரட்டப்பட்டன. ஜாதக என்ற நூல் இக்கதைகளே. இங்கு 449 ஜாதகக்கதைகள் அடங்கி யிருக்கின்றன. "சிங்கத்தின் தோலைப் போர்த்துத் திரிந்த கழுதை" போன்ற கதைகள் பல ஜாதகங்களில் உண்டு. இக் கதைகளின்

உரையில் பல வித்தியாசங்களையும் நாம் காணலாம்.

குத்தக நிகாயத்தில் அடங்கிய மற்ற நூல்களைப்பற்றி அந்நூல்களின் பெயருக்கு எதிராகவே சிறு குறிப்புகள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டுகொள்ளவும்.

## 3. அபிதர்மபிடகம்

ஸூத்தபிடகத்தில் பிரதிபாதிக்கப்படும் தர்மங்களும் தத்துவங்களும் இன்னும் விரிவாக இங்குக் கூறப்படுகின்றனவேயன்றி புது விஷயங்கள் கிடையா. பெரும்பாலும் இப் பிடகத்தில் அடங்கிய நூல்கள் பிற்காலங்களில் எழுதப்பட்டனவும் ஒரு சாராரின் தத்துவ ஞானத்தை மாத்திரம் விளக்குவனவுமான கிரந்தங்களாம். இவற்றை இங்கு விவரித்துக் கூறுவது அவ்வளவு அவசியமாகத் தோன்றவில்லை.

1. தர்மஸங்கானி - ஜீவிதத்தின் நிலைமைகளைப்பற்றி.
2. விபங்க - சம்பாஷணைகள்.
3. கதாவஸ்துப் பிரகரண - 1000 தவறான கொள்கைகளுக்கு மறுப்புரை.
4. புத்கல ப்ரக்ஞத்தி - ஆன்மாவைப் பற்றிய அறிவு.
5. தாது கதா - மானிட குணங்களின் விவரம்.
6. யமக - பத்து இரட்டைகள்.
7. ப்ரஸ்தானப் பிரகரண - காரிய காரணங்களின் விளக்கம்.

கதாவஸ்து என்ற நூல் இயற்றப்பட்ட அவசரத்தைப்பற்றி முன்னே 37-ம் பக்கத்தில் கூறியுள்ளோம். வினய பிடகத்தில் அடங்கிய மூன்று கிரந்தங்களும் ஸூத்த பிடகத்தில் அடங்கிய முதல் நான்கு நிகாயங்

களும், குத்தக நிகாயத்தில் அடங்கிய பதினைந்து நூல்களும், அபிதர்ம பிடகத்தில் அடங்கிய ஏழு நூல்களும் சேர்ந்து இருபத்தொன்பது கிரந்தங்க ளாகின்றன. இவற்றைத் தென்பௌத்தர்களுடைய திருமறை என்று கூறுதல் தகும். வடக்கிலுள்ள பௌத்தர்களிடத்தில் இந் நூல்கள் யாவும் கிடையா. இங்குக் காணப்படாத வேறு பல நூல்களும் அவர்களிடம் இருக்கின்றன. இவை பல வெகு மேன்மையானவை யென்றாலும் அசோகனுக்குப் பிற்காலத்தில் உண்டானவை. இலங்கை, பர்மா முதலிய தென் பௌத்த நாடுகளிலும் பிடகங்களில் அடங்கிய நூல்களுக்கு உரையாகவும் வியாக்கியானமாகவும் சங்கிரகமாகவும் மற்றும் பல நூல்கள் பாலிபாஷையில் ஏற்பட்டன. மொத்தமாக பௌத்தமத நூல்கள் எவ்வளவு என்பதைக் கூறுதலும் எளிதல்ல.

அசோகனுடைய சகோதரனை மஹேந்திரனும் சகோதரி சங்கமித்திரையும் சேர்ந்து போதி விருக்ஷத்தின் கிளையை சிங்களத்திற் கொண்டுபோய் நாட்டியதை விட முக்கியமான செய்தி உலகசரித்திரத்தில் இல்லை. இதுவே, தற்காலத்தோருக்கும் எதிர்காலத்தோருக்கும் உபயோகப்படுமாறு முற்காலத்திய பௌத்த சமய நூல்கள் ஏடுகளிற் பதிந்து காப்பாற்றப்பட்டதற்கு ஏதுவாயிற்று. பலகாரணங்களால் இந்துஸ்தானத்தின் போதி விருக்ஷம் செழித்து வளரவில்லை. உபநிஷத்துகள் என்ற உயர் மரங்களின் அடர்ந்த நிழலானது அவற்றின் அடியில் தோன்றிய போதிமரத்தைச் செழித்து வளரவிடவில்லைபோலும். தென்தீவில் நாட்டப்பெற்ற விருக்ஷமோ, தழைத்து ஓங்கி வளர்ந்து தனது தாயாகிய இந்துஸ்தானத்துப் போதி விருக்ஷம் க்ஷீணதசை அடைந்த காலத்தில் அவளுக்குப் பக்கபலமா யிருந்து, இன்னும் பல

விதத்தில் உதவி, தற்காலத்தில் தனது கன்றை உலகத்தில எல்லோருக்கும் நிழல்கொடுத்து உதவத்தக்க விருக்ஷமாக வளரச்செய்திருக்கிறது. ஏனென்றால், இன்னும் ஐரோப்பாவிலுள்ள பல தத்துவஞானிகள் க்ஷணிகவாதம் முதலிய பழைய பௌத்தக் கொள்கைகளைப் புதிய விதத்தில் உரைத்து வருகின்றார்கள். பண்டைத் தமிழர் பலரும் பௌத்தசமயமானது மேன்மையான சத்தியமென்றும், எல்லோருக்கும் பொதுவென்றும் நம்பினவராவர் என்பதும் நாம் உணரத்தக்கது. அது கீழ்வரும் மேற்கோள்களால் விளங்கும்.

"ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்
மாதுயர் எவ்வம் மக்களை நீக்கி,
'விலங்கும் தம்முள் வெரூஉம்பகை நீக்கி
உடங்கு உயிர் வாழ்க' என்று உள்ளம் கசிந்துக,
தொன்றுகாலத்து நின்று அறம் உரைத்த
குன்றம்; மருங்கில் குற்றங் கெடுக்கும்
பாதபங்கயம்."

மணிமேகலை. 11-61-66.

திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
உருமேவி அவதரித்த உயிரனைத்தும் உயக்கொள்வான்,
இவ்வுலகும் கீழுலகும் இசை உலகும் இருள் நீங்க,
எவ்வுலகும் தொழுதேத்த, எழுந்த செழும் சுடரென்ன
இலங்குகதிர் ஓரிரண்டும் விலங்கிவலம் கொண்டுலவ,
வலங்குசினைப் போதியின்கீழ் அறம் அமர்ந்த பெரியோய் நீ.

வீரசோழியம் (மணிமேகலை, பக்கம், 306ல் வரும் மேற்கோள்.)

## III

இதர பாஷைகளில் அசோக சாஸனங்களின் பதிப்புகள்.

| | |
|---|---|
| ராய்பஹாதூர் கௌரீசங்கர் ஓஜா; ச்யாம் ஸுந்தர் தாஸ். | அசோக கி தர்மலிபியன். மூலமும் ஹிந்திபாஷைமொழிபெயர்ப்புமுடைய பதிப்பு. ஸம்வத் 1980. விலை ரூ. 3. |
| பண்டித ராமாவதார் சர்மா. | அசோக பிரசஸ்தய. மூலமும் இங்கிலீஷ் சம்ஸ்கிருத மொழிபெயர்ப்புகளும் கூடியது. மொரத்பூர், பாட்ணு, 1915. |
| சாருசந்திர பாஸு; லளித மோஹன்கர். | அசோக அனுசாஸன். மூலமும் பெங்காளி மொழி பெயர்ப்பும். |
| D. R. பந்தர்க்கர்; ஸுரேந்திரநாத் மஜூம்தார் சாஸ்திரி. | Inscriptions of Asoka. ஆங்கில எழுத்தில். மூலம் மட்டும் எல்லாப் பாடங்களுடனும் கல்கத்தா யூனிவெர்ஸிட்டியால் பிரசுரஞ்செய்யப்பட்டது. 1920 விலை ரூ. 4. |
| டாக்டர் வின்ஸென்ட் விஸ்மித். | Asoka Clarendon Press, Oxford. 3rd edition, 1920. எல்லா சாஸனங்களுடையவும் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு உண்டு. மிகுதியாக வழங்குவது. |
| பூலர் (G. Buhler) | Asoka Inschriften. ஜெர்மன் பாஷையில் Strassburg 1909. சாஸனங்களின் இலக்கணத்தை விளக்குவது. |

E. ஸெனர்ட். — Les Inscriptions de Piadasi. Paris 1888. (ப்ரெஞ்சு பாஷையில்) இந்தியன் ஆன்டிக்குவரி XIX, XX, XXII வால்யும்களில் இவ்வரிய புத்தகம் இங்கிலீஷில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பூலர் முதலானோர். — எப்பிக்ராபியா இந்திக்கா I, II, III, V, VIII வால்யும்களில் அசோக சாஸனங்களின் பல பாடங்களும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு உள்ளன.

ஏ. கன்னிங்ஹாம். — The Inscriptions of Asoka. Vol. I of Corpus Inscriptionum Indicaram. Calcutta; Government of India Publication. 1877. இதுவே அசோக சாஸனங்களின் முதற் பிரசுரம். பல சாஸனங்களின் கல்வெட்டுப் பிரதிகள் உள்ளன.

Printed at the "Caxton Press," Madras. — 1925. (A)

# அட்டவணை

அக்பர் 28, 44
அகக்கண் 131, 170
அகநானூறு 8
அகம்பாவம் 132
அங்குத்தர நிகாயம் 89, 165, 167, 168
அசுவத்தாம மலை 120
அசோக சாசனங்கள் 2, 73, 159, 163
அசோக சாசனங்களின் கருத்தை விளக்கிய ஆராய்ச்சி 4
அசோகப் பிரதிமை 19
அசோகர் கல்வெட்டுக்கள் 8
அசோக லிகிதம் 146
அசோக ஸ்தம்பங்களின் விவரணம் 65
அசோக ஸ்தம்பம் 4
அசோகன் 1, 10, 11—33, 40, 43, 45—7, 49, 50, 73, 84, 86, 88, 91, 92, 128, 147, 149, 153, 167, 168, 169, 172
அசோகன் அரண்மனை 68
அசோகன் இளவரசுப் பட்டம் 157
அசோகன் எழுத்து 69
அசோகன் எழுதிய கடிதம் 88, 76
அசோகன், கலிங்கம் சென்று யுத்தஞ் செய்தல் 157
அசோகன் குடும்பச்செய்தி 152
அசோகன் சரிதை 8
அசோகன், சார்வ பௌமன் 146
அசோகன், தன்னாட்சியின் பொழுது தர்மத்தின் பொருட்டுச்செய்த தான காரியங்களின் மதிப்புரை 140
அசோகன் பட்டாபிஷேகம் 14, 157
அசோகன் மரணம் 158
அசோகன் லிகிதங்களின் பாஷை 78
அசோகனுடைய தீர்த்த யாத்திரை 146
அசோகாராமம் 52
அடக்கம் 115, 135
அடக்கமுடைமை 104, 128
அடிமைகளிடம் அன்பு 107, 114, 144
அண்டிகோனன் அல்லது அண்டிகோனஸ் 23, 95, 157, 158
அண்டியோக்கன் அல்லது அண்டியாக்கஸ், 23, 95, 157, 158
அதிகார வர்க்கத்தினர் 113
அந்தப்புரஜனம் 100
அந்தப்புரம் 102
அந்தமகாமாத்திரர் 53, 130
அந்திகோனஸ் 118
அந்தியோக்கஸ் 116, 118

அந்நிய நாட்டார், இந்தியாவைப்பற்றித் தத்தம் பாஷைகளில் எழுதி வைத்தவை 3
அநாஹுதஹயாநி 89, 168
அநாதை 144
அநுக்கிரகம் 108
அப்கானிஸ்தானம் 57
அபிதர்ம பிடகம் 163, 171, 172
அம்பாகபீலிகம் — சினை எறும்பு 136
அமாவாசை 137
அமைதி 115
அயலார் 107, 114, 115
அர்த்த சாஸ்திரம் 9, 20, 43, 44, 53, 93, 103, 123, 138, 151
அரசன் ஆளுகையின் தன்மை 130
அரசன், ஜனங்களுக்குத் தந்தை போன்றவன் 126
அரசனே எல்லோருக்கும் நிதர்சனம் 131
அரியவஸானி 89
அருணம்—யானை 136
அலகஸாந்தரன் அலெக்ஸாந்தர் 23, 3, 22 — 4, 116, 118
அலியவஸானி (ஆரியரின் வித்தி) 168
அலுவல் 123, 118, 157
அவசரமுடையோர் 122
அவசிஷ்டம் 62
அறவாழியாள்வோன் 173
அன்டியோக்கஸ் 23, 157, 158
அன்பரிடமிருந்து பிரிதல் 115
அன்பன் 108
அன்பு 97, 130
அன்னங்கள் 67
அனஸ்திக மச்சம் — எலும்பில்லாத மீன் 136
அனுஸம்யானம் 55, 96, 97, 120, 123, 157
அனுமானம் 129, 147, 151
அஷ்டபாகம் 151
அஷ்டமி 137
அஸ்ஸாம் 57
அஸ்ஸிரியா 58
அஸந்த மித்திரை 152
அஹிம்ஸை 40, 97
ஆசரணை 146
ஆசியா 22, 25, 57, 73
ஆஜீவகர் 26, 77, 142, 153, 154, 157, 158
ஆடையற்ற கோலம் 153
ஆண்டியாக்கஸ் (தியாஸ்) 23
ஆத்ம சோதனை 130
ஆத்ம பரிசீலனை 132
ஆதி முதல்வன் 173
ஆந்திரர் 20, 57, 116
ஆப்பிரிக்கா 22
ஆயீன் — இ — அக்பரீ 44
ஆயுக்தர் 53, 55, 126
ஆர்மேயிக் எழுத்து 72
ஆரண்யகங்கள் 161
ஆலமரக் குகை 153
ஆலமரம் 142
ஆன்மா 167
ஆஹாலே—ஜில்லா; நாடு 86
இகபரம் 126
இத்விங் 3, 19
இதிகாசம் 3, 78
இதிவுத்தக 166
இந்திய சரித்திரம் 24, 28, 44
இந்திய சிற்பி 68

இந்திய பாஷை 69
இந்திய பாஷைகளுக்கு லிபி ஏற்பட்ட விதம் 71
இந்திய லிபி 6, 69
இந்திய விவரணம் 43
இந்தியன் ஆண்டிக்குவரி 113
இந்தியா 9, 16, 19, 21, 22, 24, 25, 33, 42
இந்தியாவின் பூர்வ சரித்திர ஆராய்ச்சி 1
இந்துஸ்தானம் 78, 172
இம்மை மறுமை 125, 130, 132, 145
இம்மை மறுமைப் பயன் 133
இமயமலை 14, 21
இயேசு கிறிஸ்து 25, 162
இரக்கம் 131, 143
இரக்கமிலிகள் 122
இருகாற் பிராணி 131
இருவித புராதன லிபிகள் 69
இல்லறத்தார் 112, 114
இல்வாழ்பவர் 167
இலக்கணக்குறிப்பு 79
இலக்கியவிலக்கணம் 79
இலங்கை 79, 159, 172
இவிலம் 85, 86
ஈகை 108, 131, 144
ஈசுவரவாதம் 42, 167
ஈர்ஷ்யை 132
உடங்கு 173
உண்மைஞானம் 168
உத்தம அதம மத்திமர் 130
உத்யானம் 102, 152
உதான 165
உபகாரி 108
உபகுப்தன் 15, 17
உபசாசனங்கள் 76, 83, 84, 85, 88, 157
உபதிஷ்யன் கேள்விகள் 89, 90, 169
உபநிஷத் 161, 172
உபராஜன் 17
உபவாசம் 141
உபாஸகர் 16, 85, 86, 157, 147, 148
உபோஸதச் சடங்கு 148
உபோஸததினம் 148
உருவம் 163
உற்ரூர் 114, 115
உறவினர் 108, 114, 115, 134
உஜ்ஜயினி 11, 45, 55, 123
ஊக்கமுடைமை 20, 102
எகிப்து 23, 25, 117, 118, 158
எப்பைரஸ் 23, 118, 157
எவ்வம்—துன்பம் 173
எழுத்தின் வடிவம் 71
எஜமானன் 107
ஏழை 144
ஐந்து அரசர் 22, 23
ஐரோப்பா 22, 23, 163, 169, 173
ஒலி வித்தியாசங்கள் 80
ஓக பிண்டம்—குரங்கு 136
ஔதார்யம் 143
ஔரங்கஸீப் 65
க்ரீக் லிபி 5
க்ரீக் வரலாறு 10
க்ரீட் 53
க்ரோதம் 139
ககுஸந்தர் 142
கங்காபுஷ்டகம் 136
கஞ்சம் ஜில்லா 92, 120
கட்டிடங்கள் 52
கடமையில் தவறுகின்ற வர்கள் 122
கடோபநிஷத் 159

கண்ணன்—கிருஷ்ணன் 80
கண்டுேட்டம் 144
கணனம், கணனு 96
கத்தியவாட் 5
கதாவஸ்து 37, 171
கந்தக 164
கபடஸயகம்—ஆற்றுமை 136
கபில வஸ்து 17
கயமை 132
கயை ஸ்தூபம் 62
கர்னல் டாட் 6
கருணை காட்டல் 107
கருவிகள், ஏழு 168
கரோஷ்டி லிபி 67, 69, 72, 73, 81, 87, 91
கல்கத்தா மியூஸியம் 88
கல் தச்சர் 67
கல்பாந்தகாலம் 97
கல் வெட்டு 3
கல் வெட்டுக்களும் சிற்பங்களும் 9
கல் வேலி 151
கல் ஸ்தம்பம் 149, 151
கலதிகமலை 154
கலிங்க சாஸனம் 50, 76, 92, 120, 139, 157, 158
கலிங்கம் 14, 15, 45, 46, 92, 114, 115
கவனமற்றோர் 122
கவாத்து பழகுமிடம் 103
கன்று 173
கன்னிங்ஹாம் 7, 21, 175
காச்மீரம் 11, 58, 59
காச்யபர் 149
காசி 90, 146, 164
காசியபகோத்திரன் சாம்பல் 21
காட்டு ஜாதியார் 76, 115, 120
காடு 136
காத்மாண்டு 18
காந்தாரர் 20, 99
காபூல் நதி 91
காம்போஜர் 20, 99, 116, 118
காயக்கிலேசம் 153
கார்யாலயம் 148
காரியதரிசி 130, 141
காருவாகி 152
கால்ஸி 118, 91
காலம் செயல் முதலியவற்றைக் காட்டும்பொருட்டு வினைச்சொற்களில் ஏற்படும் வித்தியாசங்கள் 79
கிணறு 142
கிர்நார் 6, 51, 78, 80, 92
கிரந்தங்களின் தொகுதி 164
கிராமகபோதம் — மாடப்புறு 136
கிரீஸ் 22, 24, 118, 58
கிருகஸ்தர் 142
கிருஷ்ணு நதி 71
கிரேக்க ரோம யாத்திரிகர் 95
கிறிஸ்தவமதம் 25
கிறிஸ்தவர் 42, 160
கிறிஸ்து முனிவர் வரலாறு 162
கின்னர ஜாதகம் 62
கின்னரர் 59
கீர்த்தி 110
குக்குட ஜாதகம் 62
குகைகள் 26, 63, 153, 157, 158
குசிநகரம் 18
குண்டூர் ஜில்லா 71
குத்தகபத 166
குத்தக நிகாயங்கள் 172
குத்தக நிகாயம் 17, 168, 166
குதிரை யுருவமைந்த சிலை 151
குப்தன் 15

குரு சுச்ருஷை 107, 114
குரோசம் 49, 145
குனலன் 57
குஜராத்தில் கத்தியவாட்
தீபகற்பம் 92
கேலாடம் 136
கேரள புத்திரர் 21, 94
கைரீனே—ஒருதேசம் 23, 118
கோடுமை 115, 132
கொல்லாமை 93, 97, 111, 157
கொனகமனபுத்தரின்
ஸ்தூபம் 158
கொனகமனன் — ஒரு
புத்தன் 18, 149
கோசம் (குரோசம்) 142, 145
கோசல தேசம் 78
கோட்டான்(ஒருதேசம்)73, 57
கோடவிஸவ—கோட்டை
யைச் சார்ந்த நாடு 148
கோபம் 132
கோபிப் பாலேவனம் 57
கோயிற் கற்சுவர் 4
கௌசாம்பி 129
கௌடல்ய அர்த்த சாஸ்
திரம் 96
கௌடல்யன் } 8, 9, 20, 41, 43,
கௌடில்யன் } 44, 53, 103, 138,
151
கௌடல்யம் 93
கௌதம சாக்கியமுனி 149
கௌதம புத்தர் 34, 41, 159,
160, 162, 164
ச்வேத கபோதம்—
வெள்ளைப்புரு 136
சக்கரவாகம் 136
சகோதரன் 107
சங்கம் 148
சங்க மித்திரை 21, 172
சஞ்சல புத்தியுள்ளோர் 130
சட்டதிட்டம் 146
சடங்கு 147
சடங்கு இயற்றல் 107
சத்தியம் 143
சத்திய வேதம் 160, 162
சத்திரம் 152
சதுர்த்தசி 137, 147
சந்திரகிரி 9
சந்திரகுப்தன் (மௌரி
யன்) 8, 9, 24, 31, 43, 44
சந்திரசூரியர் 145, 154
சந்தை சொல்லி மனப்பா
டம் செய்யும் வழக்கு 71
சந்தோஷம் 116
சமணர் 39, 96, 144
சமதிருஷ்டி 113
சமரஸ பாவம் 91, 112, 113, 128
சமாதானம் 115, 133
சயன அறை 102
சரமோபதேசம் 166
சரித்திர அறிவின்வளர்ச்சி 2
சரிய பிடக 166
சன்னூர் மலே 7, 67
சாக்கிய முனிவராகிய புத்
தர் 151, 161, 162
சாசனங்கள் 10, 11, 13,
14, 15, 17, 152
சாசன பரிசோதனே 146
சாசனமல்லாத லிகிதங்கள் 75
சாணக்கியன் 8, 43
சாதுர் மாதபக்ஷம் 137, 138
சாதுமாஸீ } 137
சாதுர்மாஸ்யம் }
சாதுர்மாஸிய புண்ணிய
காலம் 120, 127
சாம்பரான் ஜில்லா 129
சாம்பல் 21

சாரத்தியம் 102
சாரிகை 136
சாரிபுத்திர சூத்திரம் 169
சாருமதி 18
சாவடி 142
சாவு 115
சீசீ 149
சிங்கம் 67
சிங்களத்தீவு 172
சித்தல்துர்க் 83
சித்திரம் 67
சிநேகிதன் 108
சிலாசாசனம் 51
சிலோன் 10,16,20,21,22,43,95
சிவலிங்கம் 129
சிற்பம் 68
சிற்ப வேறுபாடுகளாலுண்டாகும் அறிவு 4
சிற்பாலங்காரம் 153
சிற்பிகள் 67
சிறுவண்டி 103
சிறைப்பாடு 115
சிறைவாசம் 134
சிறைவிடுதல் 137
சீப்பு 5
சீலம் 97
சீன துர்க்கிஸ்தானம் 57
சீனயாத்திரிகர் 3,16,19,52,58
சீனா 42,159
சீக்ஷாவல்லி 87
சுக்லபட்சம் 137,147
சுகம்-கிளி 136
சுகிருதம் 99,131
சுங்க வம்சம் 31
சுச்ரூஷை 97,114,144
சுதர்சன ஏரி 51
சுய மதத்தில் நம்பிக்கை 139
சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் 74,163
சுல்லவர்க்கம் 163
சுவர்க்கத்தில் நம்பிக்கை 41
சுவர்க்கம் 108,122
சுற்றத்தாரை அசட்டை செயல் 97
சூடுபோடுதல் 137
சூத்திரங்கள் 163
சூத்திர பிடகம் 165
செங்கடல் 118
செப்புப்பட்டையம் 3, 4
செம்மறியாடு 137
செய்ந்நன்றி யறிதல் 104
செவிலித்தாய் 133
சென்னை மாகாணம் 92
சேவகர் 100,107,114
சேவல்கள் 136
சைத்தியம், பள்ளி 63
சொல்வன்மை 163
தசரதன் 30,153
சொற்களின் உச்சரிப்பில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்கள் 79
சோம்பலுற்றோர் 122
சோழர் 21, 94, 116
ஞானகாண்டம் 161
ஞானச் சிரேஷ்டர் 105, 106
ஞானம் அடைந்த புத்தர் 164, 170
ஞானிகள் 162
டாக்டர் மார்ஷல்துரை 68
டாட் (கர்னல்) 6
டாட்டா வம்சம் 59
டில்லி 128
டில்லி தோப்ராஸ்தம்பம் 64,128
டில்லி மீரத் ஸ்தம்பம் 64, 128

த்ரிபிடகம் 37, 89, 159, 160, 163, 167
த்விபாஷை நாணயங்கள் 5, 6
தக்கசிலா 11, 45, 52, 55, 123
தக்கணம் 45, 57
தஞ்சாவூர் 44
தண்ணீர்ப் பந்தல் 131, 142, 145
தத்துவஞானம் 168, 171, 173
தம்மபத 166, 169
தமிழ்நாட்டு மூவேந்தர் 57, 94
தர்மசக்ரப்பிரவர்த்தன சூத்திரம் 165, 90
தர்மசக்கரம் 67
தர்மசங்கானி 171
தர்மத்தில் உரிமை 111
தர்மத்தில் உறவு 111
தர்மத்தில் விருப்பம் 130
தர்மத்தின் சாரம் 87
தர்மத்தின் தானம் 111
தர்மத்தின் வெற்றி 114
தர்மத்தை முடியுமளவு அநுசரித்தல் 104, 134
தர்மத்தைப் பரவச் செய்தல் 97
தர்ம நியமம் 144
தர்மப் பிரசாரம் 20, 74, 146
தர்மப் பிரவிர்த்தி 140
தர்மபோதனை 161, 163, 164
தர்மம், அசோகனுடைய 31
தர்மமகாமாத்திரர் 52, 99, 100, 101, 113, 142, 143, 157
தர்மமகாமாத்திரர் அலுவல்கள் 99
தர்மயுக்தர் 101
தர்ம லிகிதம் 100, 117, 130, 131, 133, 139, 145
தர்ம லிபி 103
தர்ம விவாதம் 17, 105
தர்ம ஸ்தம்பம் 142
தர்மீயமான யாத்திரை 105
தர்மமே மேலானது 135
தருமத்தில் மிக்க பக்தி 130
தவுளி 78, 92, 111, 120, 127
தவுளி லிகிதம் 78
தக்ஷசிலா 11, 45, 52, 55, 123
தாதுகதா 171
தாம்பபம்னி (தாம்பிரபர்ணி) 94
தாய்தந்தையர் 114
தாழ்ந்தோரை இரக்கத்துடன் நடத்தல் 144
தானங்களைப் பங்கிடுதல் 135
தானஞ் செய்தல் 107
தானப் பிரமாண லிகிதங்கள் 77, 153
தானம் 108, 134, 143
திபெத் 42, 159
திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தாம்பிரபர்ணி 94
திருவள்ளுவர் 169
திருஷ்டாந்தம் 170
திவ்யாவதானம் 10, 151
திஸ்ஸன் 16, 22, 37
திஷ்ய ரக்ஷிதை 152
தீப வம்சம் 10
தீர்க்க நிகாயம் 165, 166, 167
தீயவழிகளைத் தவிருங்கள் 115
தீவரன் 152
துக்லக் அரசன் 128
துடி — ஆமை 136
துலமாயன் (ப்டாலமி) 23, 116, 117
துறவறம் 167, 170
துறவி 112, 142, 153, 164, 168
துஷாஸ்பன் 51
தூண்கள் 26
தூதர் 53

தூய்மை 143
தேய்ரர் 106
தெவிஜ்ஜ சூத்திரம் 167
தேசாந்திரிகள் 3
தேர்த்திருவிழா 97
தேரகாதை 166, 169, 170
தேரர் 106
தேரவாதம் 160
தேரிகாதை 166, 169
தேவர்களுக்குப் பிரியன் 85, 87, 115, 116, 117, 122, 147, 148, 152
தேவர்களுக்குப் பிரியனை பியதஸி 74, 81, 97, 98, 99, 102, 104, 105, 107, 110, 111, 112, 114, 119, 121, 125, 131, 132, 133, 136, 139, 140, 141, 144, 149, 151
தேவானும் பியோபியதஸி லாஜா எவம் ஆஹா 6, 7, 29, 74, 81
தைத்தரியோபநிஷத் 87
தைமாதம் 137
தைரியம் 133
தோஸாலி 45, 56, 20, 121, 127
தோப்ரா 128
தோரணம் 61
தோழன் 107
நடுநிலைமை 122
நண்பர் 107, 114, 115
நந்தர் 8
நந்தீமுகம் 136
நற்செயல் 131
நன்கொடை 152
நன்மதிப்பு 122
நன்முயற்சி நான்கு 168
நன்மையை நிலை நாட்டுவது 107
நாகஜாதகம் 62
நாகவனம், யானைக்காவு 137
நாகார்ஜுனிமலை 153, 158
நாணய சோதனை 3, 4
நாபகதேசம் } 20, 116, 118
நாபபந்தியர் }
நாலந்தா 59
நாற்கால் பிராணிகள் 136
நிச்லீவா 77
நிக்லீவா லிகிதம் 149
நிச்லீவா ஸ்தம்பம் 55
நிகாயங்கள் 161, 165, 167, 171
நிகாயா 56
நித்திய நியமங்கள் 164
நித்தேஸ 166
நியக்ரோத குகை 154, 155
நியாய வாதம் 103
நியாயாதிபதி 121
நிர்க்கிரந்திகள் (ஜயினர்) 143
நிர்வாணம் 41, 160, 168
நிருப வசனம் 125
நிலத்தீர்வை 151
நிலயம் 137
நிஷ்டூரம் 132
நீர்வாழ்வன 131
நேபாளம் 18, 57, 59, 158
நோன்பு நாள் 137, 148
ப்டாலமியாஸ் (பைலாடெல் பாஸ்) 23
ப்டாலமி 158
ப்ரஸ்தானப்பிரகரணம் 171
ப்ராம்மி லிபி 69, 72, 81, 91
ப்ராம்மி லிபி இந்திய எழுத்துக்களுக்கு மூலாதாரம் 71
ப்ரேதவஸ்து 166
ப்ளேட்டோ 163
பக்கிரா ஸ்தம்பம் 65
பக்தி பகுமானம் 113
பகவத்கீதை 19, 159

பகவன் லால் இந்திராஜி 7
பகவான் புத்தர் 89
பச்சாத்தாபம் 114, 115
பஞ்சநிகாயிகன் 161
பஞ்சாப் 73, 91
பட்டிப்ரோலுக் கல்வெட்டின் எழுத்து 71
படிகள் எட்டு 168
படிஸ்மபிதாமார்க்க 166
பண்டைத் தமிழர் 173
பணிவு 130, 144
பத்திரபாகு முனிவர் 9
பதர் 136
பதன் என்ற லிபிகரன் 87
பதிவேதகர் 53, 102
பதுமம் 173
பந்தர்க்கர் 7, 96, 174
பப்பஜ்ஜ சூத்திரம் 167
பம்பாய்க்குச் சமீபமாயுள்ள சொப்பாரா 91
பம்னஸஸம் — மூள்ளம் பன்றி 136
பர்த்ருஹரி 169
பர்மா 21, 43, 57, 79, 159, 172
பர்ஜெஸ் 7
பர்ஹூத் 61, 62, 161
பரஸதம்-காண்டாமிருகம் 136
பராபர் மலை 153, 157, 158
பரிக்லேசம் 124
பரிசுத்தம் 131, 143
பரிநிர்வாணம் 18, 35
பரிவாரபாத 164
பரிஷத் 56, 96, 102
பலியிடுதல்குறைந்திருத்தல் 144
பலூசிஸ்தானம் 57
பழம்பொருள்கள் 58
பள்ளி 63
பறவைகள் 131
பன்றி 137
பனையோலை 72
பாக்டிரியா 158
பாசித்யா 164
பாடலீபுரம் 11, 17, 31, 37, 45, 55, 98, 100, 143, 147, 153, 158
பாடிமோக்கம் 34, 36, 147, 164
பாண்டியர் 21, 94, 316
பாதபங்கயம் 176
பாதைகளில் ஆலமரங்கள் 143
பாப்ருசாஸனம் 32, 76, 82, 83, 88, 148, 165, 168, 169
பார்த்தியா 158
பாரமிதை 168
பாரஸீக தேசம் 59
பாராஜிக 164
பாலஸ்தீன் 25
பாலாறு 14
பாலிபாஷை 7, 79, 159, 160, 172
பாவத்தினிடம் பயம் 130
பாவமின்மை 131
பாவனையைந்து 168
பாஹியன் 3, 52, 98
பிக்குணி சம்யுத்தம் 167
பிடகம் 160, 162, 164, 171, 172
பிதேனிகர் 20, 57, 99, 116
பிந்துசாரன் 9, 10, 11
பியதஸி 6, 7, 14, 33, 49, 84, 88, 96, 154
பியதஸி அரசன் 93
பியதஸி ஜீவராசிகளுக்குச் செய்யும் பணிவிடை 94
பிரஹ்மஜால சூத்திரம் 167
பிரத்யேக புத்தர் 168
பிரதமை 137
பிரமம் 167
பிரமகிரி 83

பிரயாகை 38,64
பிரயாகை ஸ்தம்பம் 76, 129, 146, 151
பிரயாணம் 107
பிரவிர்த்தி 99, 123, 127
பிராகிருதம் 78
பிராகிருதமொழி 80, 159
பிராசீன சம்பிரதாயம் 87
பிராணி இம்சை 97
பிராணி இம்சை நிவாரணச் சட்டங்கள் 128
பிராணிகளை வதை செய்தல் கூடாது 144
பிராதேசிகர் 54, 84, 96
பிராந்தியம் 85
பிராமணர் 39, 97
பிராயச்சித்த நோன்பு 147, 164
பிரியதர்ஸி-எல்லோரிடமும் அன்பு காட்டுபவன் 73
பிரியதர்ஸி அரசன் கல்வெட்டுக்கள் 96
பிருகத்ரதன் 158
பிரோஸ்ஷா,துக்லக் அரசன் 128
பிஹார் மாகாணம் 59, 83, 129
பிக்ஷு 19, 89, 148
பிக்ஷுக்கள் அனுசரிக்க வேண்டிய விதிகள் 29, 164
பிக்ஷுக்களின் ஊண் உடை 164
பிக்ஷுக்களின் ஒழுக்க முறை 164
பிக்ஷுணி 89,148
புகழ் 110
புண்ணியதினம் 123
புத்கல ப்ரக்ஞத்தி 171
புத்த கயா 17
புத்தபகவான் 13, 16, 17, 18, 31, 32, 33, 35, 39, 41, 42, 43, 62
புத்தர் 88, 90, 146, 163, 165, 166, 170
புத்தர் இருபத்தைவர் 149
புத்தர் சமயம் 35, 84
புத்தரின் பெருங்குணங்கள் பத்து 168
புத்தவம்சம் 149, 166
புத்திரர் 145
புராதனவஸ்துக்கள் 3, 146
புராதன வஸ்து சாஸ்திரம் 3, 4
புராதனவஸ்து சாஸ்திரி 2, 68, 72
புதிதாக அடக்கிய ஜனங்களிடம் நடப்பதைப் பற்றி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை 121
புலிந்தர் 20, 57, 116
புலிஸர் 53, 130, 141
புவனேசுவரர் கோயில் 120
புறக்கணித்தல் 122
புனர்பூசம் 137
புஷ்யமித்திர சுங்கன் 31, 158
பூசநக்ஷத்திரம் 123, 126, 137
பூர்வ இந்திய சரித்திரத்தின் ஆதாரங்கள் 3
பூர்வ புத்தர் 18, 149
பூர்ஜபத்திரம் 72
பூரி 120
பூலர் ஸ்ரீ 7, 72, 175
பெண்ணுடு 136
பெண்பன்றி 136
பெய்ராத் 83, 88
பெர்ஸியா 67, 72
பெரியோரின் மதம் 160

பேடகி — பிடகங்களைக் கற்றவன் 161
பைபிள் 160, 162
போர்நாப் 7
பொற்காசு 105
பொறாமை 132
பொறாமையுடையோர் 122
பொறுமை 122
போதிமரம் 22, 164, 170, 172
போபால் 60
போஜர் 20, 116
பௌத்தஐதிஹ்யங்கள் 11
பௌத்தக்கிரந்தங்கள் 9, 73, 153
பௌத்த சங்கத்தலைவர் 76
பௌத்த சங்கத்தை அசோகன் சரணம் அடைந்தது 16, 85
பௌத்த சங்கம் 16, 19, 21, 22, 25, 27, 29, 35, 36, 37, 42, 52, 57, 60, 142, 146, 160
பௌத்த சமயம் 159, 173
பௌத்ததேசங்கள் 79
பௌத்த பிக்ஷு 96, 106, 146, 147, 161
பௌத்தமகா சபைகள் 27, 147 158
பௌத்தமத நூல்கள் 149, 159, 172
பௌத்தமதம் 157
பௌத்தமதம் இருபிரிவு 151
பௌத்த மறை 159
பௌத்த மறைத்தொகுதி 165, 166
பௌத்த மறைநூல் 162
பௌத்தர்கள் 168
பௌத்தர் ப்ரபந்தத் திரட்டு 147, 160
பௌத்தர் பரிபாஷை 131
பௌத்தவிஹாரம் 88
பௌத்த க்ஷேத்திரம் 146
பௌர்ணமி 147
பௌர்ணிமை 137
மக்கட்பேறு 107
மக (மகாஸ்) 23
மகத அரசன் பியதஸி 88
மகததேசத்தின் பெருமை 8
மகன்-மகாஸ் 23, 107, 118, 157
மகஜாதகம் 62
மகாதேவ ஜாதகம் 62
மகாமாத்திரர் 52, 54, 85, 86, 121, 123, 125, 126, 130, 140, 142, 143, 147, 148, 152
மகாயான பௌத்த மதம் 38, 43, 63
மகாவம்சம் 10, 21, 95
மகுடம் 67
மங்களம் 107
மஜ்ஜிம நிகாய 165, 167, 169
மஜ்ஜிமன் சாம்பல் 21
மடப்பள்ளி 93
மணிமேகலை, மேற்கோள் 173
மத்திம நிகாயம் 167
மத்திய ஆசியா 73
மத்தியமாகாணம் 83
மந்திரக்கிழவர் 97, 106
மறைத் தொகுதியின் ஆசிரியர் 168
மறைநூல்கள் 161
மனத்தூய்மை 104
மனனம் 89
மஹாநதி 92
மஹாபரிநிர்வாண சூத்திரம் 166
மஹா வர்க்கம் 164, 165
மஹேந்திரன் 21, 172
மாடுகளுக்குவிதையடித்தல் 137
மாதுரியம் 119

மாந்தோட்டம் 152
மாந்தோப்புக்கள் 142
மார்க்ஸ் ஒளரெலியஸ் 29
மார்ஷல் துரை 68
மார ஸம்யுக்தம் 167
மாளவதேசம் 45
மான்ஸ்ரா 91, 118
மானம் 132
மாஸ்கி 8, 83
மாஸிடோனியா 22, 23, 157, 158
மிச்ரம் - ம்ருஷம் 84
மிருகங்கள் 142
மிஸா } அமிஸா 84
மிஸம் } அமிஸா 84
மீரத் 128
மீன்குட்டை 137
மீன்பிடித்தல் 137
மீன் விற்றல் 137
முகம்மதியர் 1, 42
முத்திரா ராக்ஷஸம் 24
முழ்மணிகள் 32, 88
முயற்சி 130
முனி ஞாதை 89, 169
முஸ்ஸோரி 91
மெகாஸ்தனிஸ் 43, 44, 56
மைசூர் ஸம்ஸ்தானம் 9, 83, 84
மோக்கம்—மோக்ஷம் 80
மோகலீ புத்திர திஸ்ஸன் 16, 37
மோரிய அரசாட்சி 43
மோரியர், மெளரியர் 23
மோரிய வம்சம் 24
மோனேய ஸூத்திரம் 169
மோனேய ஸூதே 89
மெளரியர் 31, 43
மெளரிய அரசன் 8, 158
மெளரியவம்சத்தினர் 8, 9, 30, 31
யமக 171
யவனர், 3, 10, 20, 23, 43, 99, 116, 118
யவன அரசன் அண்டியோக்கன் 94
யக்ஷர் 59
யானை 170
யானைக்காவு 137
யானைத் திருவிழா 97
யானையின் பிரதிமை 120
யுக்தர் 53, 55, 90
யுகத்தின் முடிவு 99
யுவன்சுவங் 3, 16, 22
யூக்லிட் 117
யூதர் 72
ரட்டபால ஸூத்திரம் 167
ரஜுகர் 52, 54, 86, 96, 128, 134, 141
ரஜுகரின் வேலை 133
ராகுலன் 89
ராணிகள், அரசனுடைய 143, 152
ராணி காருவாகி லிகிதம் 64, 77, 152
ராம்பூர்வா ஸ்தம்பம் (லிகிதமுள்ளது) 65, 129
ராம்பூர்வா ஸ்தம்பம்(லிகிதமில்லாதது) 65
ராஜக்ருஹம் 35, 143
ராஜ குமாரர் 143, 151
ராஜதரங்கிணி 10
ராஜபுத்திர சரித்திரம் 6
ராஜ ஸ்தான் (ராஜபுதனம்) 83, 88
ராஜா (லாஜா) 80
ராஜீய அதிகாரி 70
ராஜேந்திர லால்மித்திரர் 7
ராஷ்டிரிகர் 20, 57, 99

ராஹுல சூத்திரம் 169
ராஹுல வாதம் 89, 169
ருத்ரதாமன் 51
ரும்மின்தேயீ 18, 19, 75, 77
ரும்மின்தேயீ லிகிதம் 75, 149, 150, 151
ரும்மின்தேயீ ஸ்தம்பம் 65, 158
ரூபநாத் 83
ரூபநாத் பிரதி } 64, 86
ரூபநாத் லிகிதம் }
ரேய்ச்சூர் 8, 83
ரோம் 29
லலிதா பட்டணம் 15, 59
லக்ஷதீபம் 97
லாயம் 102
லிகிதங்கள் 26, 73, 119, 120, 128, 129, 146, 149, 152
லிகிதங்களின் பிரிவு 75
லும்பினி 17, 18
லும்பினிக் கிராமம் 151
லேககன் 71
லௌரியா அரராஜ் ஸ்தம்பம் 65, 66, 129
லௌரியா நந்தன்கர் ஸ்தம்பம் 65, 129
வ்யூதர் 53, 55, 85, 86
வ்ருச பூமிகர் 55, 113
வ்ருக்ஷம், போதி 173
வட இந்தியப் பிரதி 86
வட நாட்டுப் பிரதி 109
வட மதுரை 16
வட மேற்கு மாகாணம் 73
வணக்கம் 143
வதை 144
'வருந்தாதேயுங்கள்' 115
வழக்குக்களை விசாரணை செய்யும் அதிகாரிகள் 124
வாசகரீதி 149
வாய்மை 131
விசுவஜோப்ரி குகை 154
விடாமுயற்சி 122
விநய பிடகம் 163, 164, 1·1
விநய ஸமுத்கர்ஷம் 165
விபங்க 171
விபஸ்ஸீ 149
விமான வஸ்து 166
வியாக்யானங்கள் 172
வியாகரணம் 78
வியாகுலம் 115
வியாபார விஷயமாய்க் கடல் யாத்திரை 72
வியாயாமம் 13
வியோஹாலகர் 53, 121, 123
விருசபூமிகர் 53
வின்ஸெண்ட் ஸ்மித் 28, 76
வினயத்தில் அடங்கிய நூல்களின் பெயர் 164
வினயஸமுகஸே 89, 90
விஷ்ணு குப்தன் 8, 43
விஹாரம் 16, 21, 58, 147
வீரசோழியம் 173
வெய்சாலி 36
வெள்ளாடு 137
வெஸ்ஸபூ 149
வேதம் 161
வேதவேயகம் 136
வேதாங்கம் 3
வேதியர் 72
வேற்றுமையுருபுகளிற் காணப்படும் வேறுபாடுகள் 77
ஸ்தம்பங்கள் 3, 5, 64, 145
ஸ்தம்பங்களின் சிற்பத் திறமை 65
ஸ்தம்ப சாசனங்கள், 76, 128, 129, 151, 158

ஸ்தம்பம் 146, 149, 151
ஸ்தவிர வாதம் 160
ஸ்தாவீரர் 106
ஸ்தானிகர் 54
ஸ்திரபுத்தி 104
ஸ்திரீமகாமாத்திரர் 53, 113
ஸ்தூபம் 18, 149
ஸ்மாரக லிகிதம் 77, 149, 151
ஸ்மித் 28, 76, 174
ஸ்மிருதி முதலியன 3
ஸ்ரீமரம் 136
ஸ்ருகாலவாத சூத்திரம் 167
ஸகஸ்ராம் லிகிதம் 83, 186
ஸங்கத்திற் பிரவேசித்தல் 164
ஸங்கம் 88, 147, 164
ஸங்கமித்திரை 21
ஸங்குசமச்சம் 136
ஸட்ராபோ 795
ஸண்டகம் 136
'ஸத்தர்மம் சாச்வதமாய் நிலை நிற்கும்' 88
ஸத்தியபுத்திரர் 21, 94
ஸதுஸ் 117
ஸந்திரகோட்டஸ் 24
ஸந்தேசம் - தூது 21
ஸம்பிரதி 31
ஸம்போதி 32, 105
ஸம்யக் ஸம் புத்தர் 165
ஸம்யுக்த நிகாய 168, 167
ஸம்ஸ்க்ருத இலக்கியம் 1
ஸம்ஸ்க்ருத மொழி 24, 78, 159
ஸம்ஸலன - கார்யாலயம் 148
ஸமகாலத்துவம் 24
ஸமண்ண பல சூத்திரம் 167
ஸமாபா நகரம் 120, 125
ஸமாஜம் 93
ஸஹஸ்ராம் 83
ஸஹஸ்ராம் பிரதி 86
ஸாஞ்சி 21 - 2, 38, 60 - 63, 76
ஸாஞ்சி ஸ்தம்பம் 65, 76, 146
ஸார்நாத் 17, 36, 58, 62, 65, 76, 146
ஸார்நாத் ஸ்தம்ப சிகரம் 70
ஸார்நாத் ஸ்தம்பம் 67, 68, 146
ஸார்நாத் சாசனம் 76, 128, 146, 158
ஸார்நாத் லிகிதம் 147
ஸாரவிர்த்தி ...
ஸாரி புத்திரன் 90, 166
ஸாவனே 86
ஸித்தாபுரம் 83, 86
ஸித்தாபுர லிகிதம் 86
ஸித்தி அறுவகை 168
ஸிந்து நதி 16, 73, 91
ஸிரியா 9, 10, 23, 25, 157 - 8
ஸிவாலிக் மலைச்சாரல் 128
ஸுதர்சன ஏரி 51
ஸுதர்சனலிகிதம் ...
ஸுபீயா குகை 154
ஸுவர்ணகிரி 45, 85 - 6
ஸுத்தங்கள்-சூத்திரங்கள் 162
ஸுத்த நிபாத 166, 169
ஸுத்த பிடகம் 165, 171
ஸுத்த விபங்க 164
ஸுத்தாந்தம் 167
ஸேல்யூகஸ் 95
ஸெனுர்ட் 7, 175
ஸோப்பாரா லிகிதம் ...
ஸோவன பூமி 21
ஜடிங்க ராமேசுவரம் 83
ஜதூகம்-வௌவால் 136
ஜப்பான் 42
ஜபல்பூர் 33
ஜம்பூத்வீபம் 85
ஜயபேரிகை 97
ஜயினநூல்கள் 9

ஜயினமதம் 31
ஜயினர் 143
ஜவுகட என்றமலை 120
ஜனகராஜ ஜாதகம் 62
ஜனங்கள் நன்மையைக் கருதுவதை விட மேன்மையான கருமம் இல்லை 103
ஜனபதம் - நாடு 54, 133, 141
ஜாதகக் கதைகள் 62, 166, 170
ஜாதிமதசபைகள் 93
ஜீலம்நதி 91
ஜீவஜந்துக்கள் 136, 144
ஜெயப்பூர் ஸம்ஸ்தானம் 88
ஜேம்ஸ் பிரின்ஸெப் 5
...டமலை 92, 111
...்தி 18
ஸ்ரீபாண்டுரங்க தாமோதர குணே 79
ஸ்ரீபூலர் 72, 175
ஸ்ரீமான் பந்தர்கர் 105, 174
ஸ்ரீராம கிருஷ்ணபந்தர்க்கர் 7
ஸ்ரீவின்ஸெண்ட் ஸ்மித் 76, 101, 174
ஸ்ரீஜயஸ்வால் 113
ஷட் தந்தி ஜாதகம் 62
ஷாபாஸ் கர்ஹி 78, 80, 91, 117, 119
ஹம்ஸம் - அன்னம் 136
ஹஸாரா 91
ஹிந்துஸ்தானி 69
ஹைதராபாத் 83
க்ஷணிகவாதம் 173
க்ஷேத்திரகணித நூல் 117